
உயிர்நிழல்

அரேபியர்கள் இரண்டுபட்டால்
அமெரிக்காவுக்கு கொண்டாட்டம்
கலையரசன்


மலையகத்தமிழ் இலக்கியமும்
அதன் சித்தாந்த நிலைப்பாடுகளும்
லெனின் மதிவானம்

எளிமை என்பது அறிவுஜீவிதத்திற்கு
ஆசுவாசம் தருவது
- யஸ்மினா ரேஸா -
மாளவிகா



அம்பை

Uyirnizhal
VOL VI N°4 -ISSUE-25
October - December 2006



Art by Karuna



Uyirnizhal
VOL VI - N°4 ISSUE 25
October-December 2006

கலைச்செல்வனோடு...	இரா. றஜீன்குமார்	05
வெள்ளெலிகளுடன் வாழ்தல்	துவாரகன்	07
கைலாசம்	அம்பை	08
தந்தையர் நிலம்	சந்துஸ்	16
அரேபியர்கள் இரண்டுபட்டால் அமெரிக்காவுக்குக் கொண்டாட்டம்	கலையரசன்	18
மலையகத் தமிழ் இலக்கியமும் அதன் சித்தாந்த நிலைப்பாடுகளும்	லெனின் மதிவானம்	29
யஸ்மினா ரேஸா	மாளவிகா	38
தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் எதை நோக்கி...?	வி. சிவலிங்கம்	51
விமுக்தி ஜயசுந்தரவின் The Forsaken Land	பிரதீபன்	59
அய்ரோப்பிய அவதானிப்புகள்	சச்சிதானந்தன் சுகிர்தராஜா	62
ஒமேகாப் புள்ளி	கதி	66
புதியவனின் 'மண்'	ரதன்	75
நினைவில் நிறுத்தப்படுபவர்களாக...		
தோழர் மகாஉத்தமன்	வைத்தி	77
தோழர் ரட்ணசபாபதி	பி. ஏ. காதர்	78
ஏ. ஜே. கனகரட்ணா	சி. ஜெயசங்கர்	80
கவிஞர் சு. வில்வரத்தினம்	ந. சுசீந்திரன்	82
நடராஜா ரவிராஜ் (எம்.பி.)	எஸ். எம். எம். பஷீர்	84
கறுப்பாலான வெளி	பாலைநகர் ஜிப்ரி	86
பிரத்தியேக நாட்குறிப்பொன்றில் இருந்து..	லக்ஷ்மி	87
மரணத்தின் வாசலில் வாழ்வின் குரல்	மமியா அபு-ஜமால்	90
25 வருடங்கள் சிறையில்...	ராகவன் (பேர்லின்)	90
புகலிட நிகழ்வுகள்	தெருக்கூத்தன்	94

ஓவியர் சஜிதா :

கேரளாவைப் பிறப்பிடமாகக் கொண்ட சஜிதா ரவிஷங்கர் ஓவியப் பட்டப்படிப்பு மேற்கொண்டவர். இவர் பல்வேறு நாடுகளில் தனது ஓவியக் கண்காட்சிகளை நடத்தி இருக்கின்றார். ஓவியப் பட்டறைகளில் பங்கு கொண்டிருக்கின்றார். கேரளாவினதும் தமிழ்நாட்டினதும் அரச விருதுகள் இவரது படைப்புகளுக்கு கிடைத்திருக்கின்றன. ஏற்கனவே சமூகத்தினால் மனித மூளைகளுக்குள் இறுக்கப்பட்டு வைத்திருக்கும் ஆண்-பெண் சமனின்மை பற்றிய பிரக்ஞையுடன் பெண்ணைப் பல பரிமாணங்களிலும் பிரதானப்படுத்தும் ஓவியங்கள் இவருடையவை. இவரது ஓவியக் கண்காட்சியொன்று 08.02.2007 - 17.02.2007வரை பாரிஸில் நடைபெறுகின்றது. இதனையொட்டி இவர் தற்போது பாரிஸில் தங்கி இருக்கின்றார்.

அம்பையின் 'கைலாசம்' சிறுகதைக்கான ஓவியங்கள் : சஜிதா

ஓவியர் கருணா:

ஈழத் தமிழ் நவீன ஓவியத் துறையின் பிதாமகரான மாற்கு அவர்களிடம் ஓவியம் பயின்றவர் கருணா (யூஜின் வின்சென்ட்). டிஜிட்டல் ஓவியத் துறையில் முன்னோடியானவர். 500க்கும் மேற்பட்ட நூல்களுக்கு அட்டைப் படங்கள் வரைந்துள்ளார். இவரது ஓவியங்களின் கண்காட்சி இலங்கையிலும் கனடாவிலும் இடம்பெற்றிருக்கின்றது. தற்போது கனடாவில் இருக்கின்றார்.

உள்ளட்டை ஓவியங்கள்: கருணா

அன்புடன் உங்களுக்கு!

தவிர்க்க முடியாததும் தவிர்க்கப்பட வேண்டியதுமான காரணங்களால் இந்த இதழும் சிறிது தாமதத்தைச் சந்தித்திருக்கின்றது. இனிவரும் காலங்களில் இதை நிவர்த்தி செய்வதற்கான பிரயத்தனங்களில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதை உங்களுக்கு அறியத் தருகின்றோம்.
இனி இணையத்திலும் உயிர்நிழலைப் பார்வையிடலாம்.

உயிர்நிழல்

Uyirnizhal

25

Vol. VI No. 4

October - December 2006

அட்டை வடிவமைப்பு: பிரதீபன்

உள் வடிவமைப்பு: லக்ஷ்மி, பிரதீபன்

தொகுப்பாசிரியர்கள்: லக்ஷ்மி, கலைச்செல்வன்

தயாரிப்பில் உதவி: பிரியதர்ஷினி, தயாநிதி, ஜெயந்தி

தொடர்புகளுக்கு:

EXIL
27 Rue Jean Moulin
92400 Courbevoie
France.

e-mail: uyirnizhal.exil@wanadoo.fr

இணையத்தில் உயிர்நிழல்

www.uyirnizhal.com

அன்பளிப்பு: வருட சந்தா - 15 euros
(4 பிரதிகள்: தபாற் செலவு உட்பட)

N° d'enregistrement de l'association : 13023204

வெளியீடு: எக்ஸில்



கலைச்செல்வனோடு...

இரா. றஜீன்குமார்

கலையும் கலைஞனும் காலமாகுதலும்

நெஞ்சிருத்தி
நெஞ்சிலுன் முகமிருத்தி
முகத்திலுன் முத்தாரச் சிரிப்பிருத்தி
நினைக்க நினைவெரிதல் கொடுமையடா!

பச்சை இலுப்பை வெட்டி
பால் வடியத் தொட்டில் கட்டி
தொட்டிலுமோ பொன்னாலே
தொடுகயிறோ முத்தாலே

காலத் தொட்டிலிலே
கண்மணியே கண்வளராய்!

நாமெல்லாம் உறவுச் சிக்கல்களிலேயே வாழ்வின் பெரும்பகுதியைக் கழித்து விடுகின்றோம். அடுகிடை-படுகிடையான உறவுகள் கிட்டாவிடினும் ஒரு சிலரிடம் மாத்திரம் நமக்கு ஒருவித ஆத்மார்த்த லயிப்பு ஏற்பட்டு விடுகிறது. என்னைப் பொறுத்தவரையில் அப்படித்தான் கலைச்செல்வன். அதனால்தான் கலைச்செல்வன் இறந்துவிட்டான் என்ற செய்தி கிடைத்தபோது அதை நம்பாதிருப்பதற்குரிய சமாதானச் சமன்பாடுகளை எல்லாம் நானும் ராகவனும் போட்டுப் பார்த்தோம் எனக் கருதுகிறேன்.

எண்பதுகளில் புரட்சிக் கனவுகளைச் சூல் கொண்ட ஆயிரமாயிரம் இளைஞர்களில் ஒருவனாக அவன். இலக்கியச் சந்திப்புகளில் தான் அவன் அறிமுகமானான்.

நிலத்தில் இருந்து வேரோடு பிடுங்கி தொட்டிகளில் நாட்டப்பட்ட தொட்டிச் செடிகளாய், நிலத்தையும் மறக்காது இருப்பையும் ஒத்துக் கொள்ளாத ஒருவித அபத்த வாழ்வில் தேடலையும் சுவாசித்தோரில் அவனும் ஒருவன். பள்ளம் சஞ்சிகை, எக்ஸில் வெளியீட்டகம், எக்ஸில் சஞ்சிகை, உயிர்நிழல் சஞ்சிகைகளின் தோற்றுவிப்பாளர்களில் முக்கியமானவனாகவும் இரண்டு குறும்படங்களில் முக்கிய பாத்திரமாகவும், புலம்பெயர் இலக்கியச் சூழலில் அவனாற்றிய காத்திரமான பங்கு மறக்கவோ இருட்டடிப்புச் செய்யப்படவோ முடியாதது.

"உனது செயற்பாட்டால் அசௌகரியப்படுபவர்கள் யார் என்பதை வைத்து நீ எந்தத் திசையில் இயங்கிக் கொண்டிருக்கிறாய் என்பதை அறிந்துகொள்ள முடியும்" என்று கூறுவார்கள்.

புதிய வீச்சுக்களின் அதிர்வுகளைத் தாங்கிக் கொள்ள முடியாத, சமூக, அரசியல், கலையாச்சார நீச்சர்களால் பாரிஸில் உடல் வதைக்காளாக்கப்பட்ட கலைச்செல்வனை அந்த உபாதைகள் தொடர்ந்தன.

உயிரோடு இருக்கும்போது உறவுகளை ஒட்டத் தெரியாத நாம் அவர்களது மரணத்தின்போது அழுது அரற்றுதல் வேடிக்கையானதுதான். உண்மையில் நாம் இன்னொருவரின் மரணத்துக்காக அழும் மனம் வாய்க்கப் பெற்றிருக்கிறோமா?

கலைச்செல்வனின் ஸ்தூல இழப்பு அவனை நேசித்தவர்களுக்கும், அவனால் நேசிக்கப்

பட்டவர்களுக்கும் பேரிழப்புத்தான்.

கடிகார முட்களும் காலண்டர்களும் தாம்தாம் காலம் என்ற பிரகடனங்களை உமிழும்போது, காலம் ஒரு தொடர் நிகழாய் எல்லாவற்றையும் உள்வாங்கி காலகாலமாய் இருக்கிறது.

வாழ்வினதும் மரணத்தினதும் சூக்குமத் திலிருந்து விடுபடுவதற்குத்தான் போலும் நமது முன்னோர்கள் மரணத்தை 'காலமாகுதல்' என்றும் இருத்தலை 'உள்ளல்' என்றும் கண்டடைந்தார்கள்.

நிகழைக் குறிக்கும் 'உள்ளல்' எனும் சொல்லை இறந்த காலத்திலோ, எதிர் காலத்திலோ பிரயோகிக்க முடியாது. 'உள்ளான்' என்பதை 'உள்ளினான்' என்றோ 'உள்ளுவான்' என்றோ பிரயோகிக்க முடியாது.

அப்படித்தான் கலைச்செல்வனும் எம்மிடையே உள்ளான். எனது கவிதைகளில் தன்னை மிகவும் பாதித்த கவிதையாகக் கலைச்செல்வன் கூறிய கவிதையை அவனது நினைவுகளுடன் சமர்ப்பிக்கிறேன்.



றஜீன்குமார் - கலைச்செல்வன்



கலைச்செல்வன் - றஜீன்குமார்

பள்ளி எழுமின்! பள்ளி எழுமின்!

என்றோ ஒரு நாள் எழுமெனத்தானோ
இத்தனை காலம் தூங்கிக் கழிக்கின்றோம்

என்றோ ஒரு நாள் எழுமெனத்தானோ
பூகோளத்தின் எல்லாத் திக்கிலும்
தூசிப்படலமாய்-
அந்தந்த நாட்டினர் முகத்தைச் சுழிக்கும்
அகதிப் பிண்டமாய்-
மிதந்தலைகின்றோம்.

எப்போ எழுமென
நாளுமறிகிலோம்
எப்படி எழுமென
குறியுமறிகிலோம்
இப்படி எழுமென
நுண்மான் நுழைபுலம் எதுவுமறிகிலோம்

எப்படி ஆயினும்
நாங்கள் மக்கள்!
திடமாய் இருக்க உறுதி பூண்டனம்!

எல்லாவற்றையும் மறந்து பேசியும்
எல்லாவற்றையும் மறைத்துப் பேசியும்
எல்லாவற்றையும் திரித்துப் பேசியும்
எல்லாவற்றையும் பேசாதிருந்தும்
திடமாய் இருக்க உறுதி பூண்டனம்
திடமெனப்படுகிற ஜடத்தொடு ஜடமாய்.

எங்கெங்கு காணினும்
வரலாறென்பது இரண்டாய் உள்ளது
வார்த்தை கொண்டு எழுதப்படுவதும்
வாழ்வுகொண்டு எழுதப்படுவதும்

வாழ்வுகொண்டு எழுதப்படுவதால்
ஆழ்மன அழியை ஆள்பவன் கவிஞன்.
என்றோ வேண்டாம் இன்றே எழுக!

மானுட விழுமிய கூறுகளனைத்தும்.

வெள்ளெலிகளுடன் வாழ்தல்

துவாரகன்

நாயுருவியும் ஆமணக்கும்
சடைத்து நின்ற
பற்றை மண்மேட்டில் வாழும்
வெள்ளெலியை ஒருமுறை சந்தித்தேன்

எனக்குப் பிடித்த
இரத்தநிற நாகதாளிப் பழத்தை
முள் நீக்கி,
நட்சத்திரக் கொட்டை நீக்கி
சாப்பிட்ட நேரம்
அந்த வெள்ளெலி என்னை
தன் வளைக்கு அழைத்துச் சென்றது.
நானும் ஓர் எலியாகிச் சென்றேன்.


அழகான வளைகள்.
சேமித்த தானியங்கள்.
புசிப்பதற்கு கொட்டைகள் கிழங்குகள்.
கூடிக்குலாவ பெட்டை எலிகள்.
ஒரு சோலியும் இல்லை.
எனக்கும்கூட
பல்லாந்திப் பழம், கோரைக்கிழங்கு
கோவைப்பழம், நன்னாரி வேர்
எல்லாமே பிடிக்கும்.
வசதியென்றால்
பக்கத்துத் தோட்டங்களில்,
மரவள்ளிக் கிழங்குகள் தோண்டியும்
தின்னலாம் வா என்றது.
மனிதர்களும் பாம்புகளும் வந்தால்
ஒளிந்திருக்க வேறு வளைகளும்
உண்டென்று கூறியது.

நான் இனி,
வெளியில் வாழ்வதைவிட
வெள்ளெலிகளுடன் வாழப் போகிறேன்

பழங்கள்.
கொட்டைகள்.
கிழங்குகள்
வளைகள்
வெள்ளெலிகள்.
எல்லாமே எனக்கு
பிடித்துப் போயிற்று

கைலாசம்

அம்பை



Sajitha R.Shankhar

மோகம் புரிவது எளிது. காதல் அப்படியல்ல. பெண்—ஆண் உறவு மிகவும் சிக்கலானது. அதில்தான் எத்தனை நெருக்கம், எத்தனை விலகல்? எத்தனை மர்மம், எத்தனை வெளிப்படை? எத்தனை வன்முறை, எத்தனை மென்மை? எத்தனை இறுக்கம், எத்தனை குழைவு? எத்தனை ஆதுரம், எத்தனை ஆவேசம்? காதலிக்கும் நபரையே விஷம் வைத்துக் கொல்லலாம் என்று ஆத்திரம் வருகிறது. தணிகிறது. பந்தம் போல் கட்டிப் போடுகிறது. கூடுபோல் ஆசுவாசம் தருகிறது. தகிக்கிறது. குளிர்விக்கிறது.

பேய்த் தொடர் ஒன்றை டி. வி. யில் பார்க்கத் தொடங்கியதுமே கைலாசம் கிடுகிடுவென்று ஆட ஆரம்பித்தது. 'டிகுடிகுதக், டிகுடிகுதக்' என்று சத்தம் வேறு கூடவே. சலித்துக் கொண்டே எழுந்து ரப்பர் செருப்பை அணிந்து கொண்டு கைலாசத்தைத் தொட்டாள். தடவித் தந்தாள். அடங்குவதாக இல்லை கைலாசம். பேய்த் தொடரில் சவப்பெட்டியின் மூடி திறந்து பேய் எழுந்து உட்கார்ந்து கொண்டு விழித்தது. ஆண் பேய். பெரிய கிறிஸ்டாபர் லீ என்று நினைப்பு நடிகனுக்கு. மொட்டைத் தலையும் மஞ்சள் ஒளிவிட்ட கண்களுமாய் பேய் முழி முழித்தான். கைலாசம் விடாமல் ஆடியது. இரு பக்கமும் கைகளைப் போட்டு அணைத்துக் கொண்டாள். "கைலாசம், கைலாசம்" என்றாள் மென்குரலில். சன்னதம் வந்தது போல் மீண்டும் ஆடியது. கன்னத்தை வைத்தாள் அதன் மேல். "அடங்கு கைலாசம், போதுமே" என்றாள். 'தக்தக்தக்'கென்று ஒலியைக் குறைத்துக்கொண்டே வந்து ஓய்ந்தது. செல்லமாக ஓர் அடி வைத்து விட்டு மீண்டும் பேய்த் தொடர் பார்க்க அமர்ந்தாள். அழகற்ற ஆண் பேய் உலவிக் கொண்டிருந்தது அங்கும் இங்கும், பெண்களின் ரத்தத்தை உறிஞ்ச.

அலட்சியமாகப் பார்த்தாள் தொடரை. கொஞ்சம் இள வயதுப் பேயாக இருக்கக் கூடாதா? வழுக்கைத் தலையும் தொந்தியும் தொப்பையுமாய் இது என்ன பேய்? பெண் பேயாக இருந்தால் மட்டும் அழகாய், இளம் வயதாய், மெல்லிய வெள்ளைப் புடவையுடன், உள்ளாடை தெரிய, கொலுசு குலுங்க நடந்து பாட்டு வேறு பாடும் பெண் பேய்.

கைலாசத்திடமிருந்து ஓசையில்லை. கைலாசம் அவளுடைய குளிர் பதனப் பெட்டி. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தைந்தில் வாங்கியது. ஆரம்ப காலத்தில் ஒரு தொல்லையுமில்லை. அப்போது அதற்குப் பெயரில்லை. கடந்த பத்து வருடங்களாக உறைபனிப் பெட்டியில் இமாலயமே வந்து நிற்பதுபோல் பனி உறைய ஆரம்பித்தது. அந்தப் பக்கம் எல்லாம் யாத்திரை போனதில்லை அவள். மும்பாயில் இடிந்து விழுவதுபோல் நிற்கும் ஒரு கட்டிடத்தின் மூன்றாம் மாடியில், இமயமலைப் பக்கத்து யாத்திரை ஸ்தலங்களை எல்லாம் நினைவுபடுத்தும்படி பனி உறைந்தது குளிர் பதனப் பெட்டியில். சில சமயம் நெட்டுக்குத்தாய் நடுவில் நிற்கும் இறுக உறைந்த ஓர் ஐஸ் கட்டி. சிவலிங்கம் போல். எத்தனை முறை மின்சாரப் பொத்தானை அமுக்கி அணைத்தாலும் உருகாது லிங்கம். சிலசமயம் பெயர்த்தெடுக்க வேண்டிவரும். பெயர்த்தெடுத்துக் கழுவும் தொட்டியில் போட்ட பின்பு கூட அது உருக நேரம் பிடிக்கும். உருக மறுக்கும் லிங்கம். அதன் பிறகுதான் 'கைலாசம்' என்ற நாமகரணம்.

வீட்டில் உள்ள அனைத்துப் பொருட்களுக்கும் பெயர் உண்டு. தனஞ் செயன் தந்த முள்ளுச் செடிக்குப் பெயர் தனுஷ். சிறுசிறு தட்டை இலைகளாய்ப் பரவும் செடிக்குப் பெயர் மேகா. தான் மரம் என்று நினைத்துக்கொண்டு வெட வெடவென்று உயரத் தொடங்கி காலை எழுந்ததும் கண்ணில் படும் செடியின் பெயர் உஷா. கோணலும்மாணலுமாய் வளர முற்பட்டுக் கொண்டிருக்கும் செடியின் பெயர் வக்கிரன். செயன் கேலி செய்தான் ஒரு நாள். "அது என்ன முள்ளுச் செடிகளுக்கும் கோணல் செடிகளுக்கும் மட்டும் ஆண் பெயர்?"

பெயரிடுவது அவ்வளவு தற் செயலான செயல் அல்ல என்று தோன்றியது. குளிர் பதனப் பெட்டி கைலாசத்துக்கும் இன்னொரு கைலாசத்துக்கும் தொடர்புண்டோ ஒரு வேளை? பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தபோது மாணவர்கள் விடுதி இரு பாகங்களாக இருந்தது. வார்டன் வீட்டை ஒட்டியிருந்த அறைகள் பெண்களுடையது. எதிர்ப்புறம் ஆண்கள். இடையே சாப்பாட்டு ஹால், டி.வி வைத்த பொது ஹால், புல்வெளி. ஆராய்ச்சி செய்யும் சோர்வைப் போக்கிக் கொள்ளத்தான் அவளும் தோழிகளும் ஆண்களுக்கு நாமகரணம் செய்யும் வேலையை ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் 'ஒட்டடைக்




கொம்பு', 'தீப்பெட்டி' என்று நேரிடை நாமகரணங்களாகவே அவை இருந்தன. போகப்போக அவை சிக்கலான உட்பொருள் உடையநாமகரணங்களாகமாறின. பல்லாயிரம் அர்த்தங்கள் உள்ள நாமகரணப்படலத்தை ஆரம்பித்து வைத்தது பேராசிரியர் குலாட்டி தான். புதிதாகத் திருமணம் செய்து கொண்டவர். குன்வந்த் கவர்தான் அந்தச் செய்தியைக் கொண்டு வந்தாள். பேராசிரியரின் மனைவி திருப்தியாக இல்லையாம். எதுவும் நடக்கும் முன்பே பேராசிரியர் அவசரமாக முடிந்து போய்விடு கிறாராம். பேராசிரியர் சென்று பார்த்த டாக்டர் குன்வந்தின் சித்தப்பாவின் தூரத்து உறவாம். அன்றிரவு பேராசிரியருக்குவைத்த நாமகரணம் 'கொட்டும் அருவி'.

தீபிகாவின் காதலன் சிகந்தர் ஒன்றாம் மாடியில் பெண்கள் விடு தியை நோக்கிய அறையில் இருந்தான். அங்கிருந்து அவன் இரண்டாம் மாடியில் இருந்த தீபிகா வுக்கு சமிக்ஞைகள் அனுப்புவது வழக்கம். பெண்கள் விடுதியின் சன்னல்கள் பெரும்பாலும் திரை மூடப்பட்டோ, சன்னல் கதவுகள் மூடப்பட்டோதான் இருக்கும். ஒரு நாள் விடிகாலை சுதா சன்னல் கதவைப் படபடவென்று தட்டி னாள். இவள் திறந்ததும் "சன்ன லைத் திற சீக்கிரம்" என்று பரபரத் தாள். இவள் திறக்கும் முன் அவளே திறந்து "பாரு" என்றாள். கீழே ஒன் றாம் மாடியில் சிகந்தரின் சன்னல் கதவு திறந்து கிடந்தது. கட்டிலில் சிகந்தர் நிர்வாணமாகக் கிடந் தான். போர்வை காலடியில் கிடந் தது. அவன் நீண்ட குறி ஒரு பக்கம் மடங்கி விழுந்திருந்தது. அவள் பார்க்கும் முதல் ஆண் குறி. சுன்னத்து செய்த குறி. சுதாவுக்கும் அது முதல் முறையாம். சுதா ஓடிப்போய் தன் பைனாகுலரை எடுத்து வந்தாள். இருவரும் வெகு அக்கறையுடன் அந்தக் குறியைப் பார்த்தனர். அதை மட்டும் பெரி தாக்கிப் பார்த்தபோது, அவன் உடலிலிருந்து விலகிய ஒன்றாய், ஒரு குட்டிப் பாம்பாய் அது பட்டது. சாதுப்பாம்பு அவன் உடல் அசைவு களுக்கு ஏற்ப அங்கும் இங்கும் மடங்கி விழுந்த பாம்பு.

விரைவில் ஒவ்வொருவராய், தீபிகாவைத் தவிர, நின்று பார்த்து விட்டுப் போயினர். தான் ஒரு தரி சனப் பொருளாய்க் கிடக்கிறோம் என்று தெரியாமல் நல்ல உறக் கத்தில் இருந்தான் சிகந்தர். சிகந்தருக்குப் 'பாம்பு' என்று பெயரிட்டனர். சுதா நன்றாகப் பாடுவாள். சிகந்தர் எங்காவது அருகில் தென்பட்டால் "நாதர் முடி மேலிருக்கும் நாகப்பாம்பே..." என்று முனக ஆரம்பித்துவிடுவாள். "ஆடு பாம்பே விளையாடு பாம்பே..." என்று பன்னப்பன்னப் பாடுவாள். "நல்ல பாட்டு சுதா. ஒரு நாள் நீ முழுப் பாட்டையும் எனக்குப் பாடிக் காட்ட வேண்டும்" என்பான் சிகந்தர். "கட்டாயம், கட்டாயம்" என்பாள்.

இப்படி நாமகரணப் படலத்தில் இருந்தபோது வைத்த பெயர்தான் கைலாசம். கைலாசத்தின் இயற்



பெயர் சிவஞானம். அவனுடைய கால்சராய்கள் அவனுடைய குடும்பத் தையற்காரர் தைத்ததாம். இவனுடைய சிறு வயதிலிருந்து அவர்தான் உடைகள் தைப்பாராம். கால்சராயை வெட்டும் முறையை அவர் மாற்ற மறுத்ததாலோ என்னவோ அவன் சாய்ந்து உட்காரும்போதோ, கால் நீட்டி உட்காரும் போதோ, அவன் தொடை இடுக்கில் கால்சராய் துணி கூம்பி நிற்கும். 'கைலாஷ் பர்பத்' என்று குன்வந்த் கவர் கைலாச பர்வதத்தின் ஹிந்திப் பெயரை அவனுக்கு இட்டாள். இவளும் சுதாவும் 'கைலாசம்' என்று அதைக் குறுக்கினர்.

நாமகரணப் படலம் வெகு நாட்கள் நீடித்தது. பிறகு அந்த உத்வேகம் வந்த வேகத்திலேயே மறைந்து போனது. அவர்கள் வைத்த பெயர்கள் அவர்களின் பாலுணர்வின் வெளிப்பாடுதான் என்று விவாதிப்பார்கள். உடல் அப்போது ஒரு பிரம்மாண்டம்.

அதன் ஒவ்வொரு துளையும், ஒவ்வொரு மேடும், ஒவ்வொரு இடுக்கும், ஒவ்வொரு நெளிவும் ஒரு விடுபடும் ரகசியம். உடலே உல காய் விச்வரூபம் எடுத்த காலமது. அதன் ஒரு சிறு இழைதான் கைலாசம்.

* * *

அவர்கள் எல்லோரையும் விடச் சற்றுப் பெரியவன் கைலாசம். கல்லூரியில் விரிவுரையாளராக ஐந்தாண்டு வேலை பார்த்தபின் ஆராய்ச்சி செய்ய வந்தவன். கல கலப்பானவன் இல்லை. சட்டென்று சிரிக்க மாட்டான். சற்று இறுகிய முகம். ஒட்ட வெட்டிய முடி. மழிக்கப்பட்ட முகம். கறுப்புச் சட்டமிட்ட கண்ணாடி. இவர்கள் முதிர்ச்சி இல்லாமல் இருக்கிறார்கள் என்று அவன் கணிப்பு. எதற்கெடுத்தாலும் 'பக்'கென்று சிரிக்கும் அவர்களைப் பார்த்து சில சமயம் "பி சீரியஸ்" என்று அதட்டுவான். அவனைச் சுற்றி இவர்கள் வட்டமிட்டதற்குக் காரணம் அவன் வீட்டிலிருந்து தொடர்ந்து வந்தபடி இருந்த நெய், பருப்புப் பொடி, ஊறுகாய், முறுக்கு, பணியாரங்கள், பழங்கள் இவற்றின் மேலிருந்த ஆசையால்தான். அவனுக்கும் அது தெரியும் என்றே நினைத்தனர்.

ஒரு நாள் அவன் ஊரிலிருந்து வந்திருந்த மலைப்பழத்தைப் பொது அறையில் உட்கார்ந்தபடி இவள் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது கைலாசம் அங்கு வந்தான். பொது அறையில் அப்போது வேறு யாரும் இல்லை. அவன் கையில் இலையில் கட்டிய மல்லிகைப் பூ மணத்தது.

சட்டென்று அவளருகில் அமர்ந்து மல்லிகைப் பூவைத் தந்தான்.

"பூவே நீ வெக்கறதில்லையே? வெச்சுக்க" என்றான்.

சற்று ஆச்சரியமடைந்தாள்.

"எதுக்கு இதெல்லாம்?" என்றாள்.

"உனக்கு நல்ல நீள முடி. மத்த வங்க மாதிரி நீ வெட்டிக்கல. அதுல பூ வெச்சா அழகா இருக்கும்" என்றான்.

இப்படிப் பேசுபவன் இல்லை அவன்.

கொஞ்சம் அதிர்ந்துபோனாள். பூவை மறுக்கவில்லை. பூவை அலட்சியமாகத் தலையில் செருகிக் கொண்டபோது, "மெல்ல மெல்ல. வலிக்காம" என்றான்.

பல நாட்கள் மனப்பாடம் செய்து ஒப்பிப்பவன்போல் அவன் பேச ஆரம்பித்தான்.

"கமலம், உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு. உன்னை நெருங்கித் தொடணும்னுட்டு இருக்குது. பொம்பளைனா என்னானுட்டு எனக்குத் தெரியாது. உன்னை என்னோட அப்படியே சேர்த்துக்கணம்னுட்டுத் தோணுது. ராத்திரி பகலெல்லாம் உடம்பு பகபகன்னுட்டு எரியுது. என்னைக் கட்டிக்கச் சம்மதமா?" என்றான்.

"என்ன இது சிவம்?" என்றாள் முற்றிலும் அதிர்ந்தபடி.

"ஏன், நான் கேட்டது தப்பா? நீ என்னோட நடந்து வரபோது உன் கை என் மேல இடிக்குது. உன் மார்பு சில சமயம் உரசுது. அது அப்பிடியே தீ மாதிரி தகிக்குது கமலம். பூ மாதிரி மெத்துன்னுட்டு அது பட்டாலும் அது தீ கமலம்." என்று அரற்றியபடி அவளை முத்தமிட முயன்றான்.

"சிவம், ப்ளீஸ். இது நல்லா யில்ல. எனக்கு இது பிடிக்கல." என்றாள் அவனைத் தள்ளியபடி.

அவன் உடல் நடுங்கியபடி இருந்தது. கண்கள் நிறைந்து விட்டன.

"மன்னிச்சுக்க" என்றான். அறையை விட்டு வெளியேறினான்.

அதன் பின் அவன் சற்று விலகியே இருந்தான். கள ஆராய்ச்சிக் காக லண்டன் போகும் முன் ஊருக்குப் போய் வந்தான். திருமணம் புரிந்துகொண்டு வந்தான். மனைவி டாக்டராம். அவன் லண்டன் செல்லும் முன் மனைவி வந்தாள். விருந்தினர் விடுதியில் இடமில்லாதலால் தாழ்வாரத்தின் முனையில் இருந்த இவளுடைய பெரிய அறையில் அவள் தங்கலாமா என்று வார்டன் கேட்டபோது இவள் மறுக்கவில்லை. அவர்கள் இருவரும் ஏதாவது ஹோட்டலில் அறையெடுத்துத் தங்கியிருக்கலாமே என்று தோன்றியது.

டாக்டர் தேன்மொழி கலகலப்பாகப் பழகினாள். ஓர் ஆஸ்பத்திரியில் பெரிய பதவியில் இருந்ததால் கம்பீரமும் கமையும் மிடுக்கும் அவளிடம் இருந்தது.

ஒரு நாள் இரவு இவளும் சுதாவும் பேசியபடி படுத்திருந்தபோது தேன்மொழி உள்ளே வந்து புடவையைக் களைந்து இரவு உடையை அணியலானாள்.

"டாக்டர், சாப்பாடு எங்க சாப்பிட்டீங்க?" என்றாள் சுதா.

"கனாட் ப்ளேஸ்ல ஒரு ஹோட்டல்ல" என்று அசட்டையாகப் பதில் வந்தது.

"நிருலாஸறி?"

"மெட்றாஸ் கபே. மீல்ஸ். இன்றைய ஸ்பெஷல் ஜவ்வரிசி பாயசம்." என்று கூறியபடி படுக்கையில் அமர்ந்தாள்.

சுதா இவளைப் பார்த்தாள். எழுந்து போக முற்பட்டாள்.

"உட்காரேன்" என்று அவள் கைகளைப் பற்றி அவளை உட்கார வைத்தாள் தேன்மொழி.

"நீங்க சாப்பிட்டீங்களா?" என்று கேட்டாள்.

இருவரையும் பார்த்துச் சிரித்தாள். பேச்சுத் தொடங்கியது.

தேன்மொழி சிவத்தின் தூரத்து உறவு. நன்கு படித்தவன், அவள் தொழிலை மதிப்பவன் கணவனாக வர வேண்டும் என்று காத்திருந்ததால் திருமணம் தள்ளிப் போயிற்று. குடும்ப நண்பர் ஒருவர்

தான் சிவம் பற்றிக் கூறினார். சிவத்தின் அப்பாதான் திருமணத்தைப் பேசி முடித்தது. அவனுக்கு அம்மா இல்லை. அத்தைதான் அவனை வளர்த்தாள். உடன் பிறந்தவரும் இல்லை. அவன் மெத்தப் படித்தவன் என்பது தேன்மொழிக்கு மிகவும் பிடித்த விஷயமாக இருந்தது. புகைப்படத்தில் தான் பார்த்தாள். திருமணத்தின் போதுதான் நேரில் பார்த்தது.

"சிவம் எப்படிப்பட்டவர்?" என்று கேட்டாள்.

"நீங்கதானே கட்டியிருக்கீங்க? உங்களுக்குத் தெரியாதா?" என்றாள் சுதா.

"இல்ல சுதா. அவர் யாருன்னே தெரியல. அவர் நல்லபடிதான் நடந்துக்கறாரு. ஒரு கோபமோ தாபமோ இல்ல. ஆனா என்ன அவர் தொடல இன்னும். நடக்கறப்போ கூட என் மேல அவர் கை படல. தோளுல கை போட்டு அணைக்கல. இன்னும் கல்யாணம் கட்டாத உங்ககிட்ட சொல்றேன் இதையெல்லாம். தப்பா நினைக்காதீங்க. உடம்பு பத்தின மோகம், வெறி, ஆவேசம் எதுவுமே இல்லாம வெறும் பொம்மையா இருக்காரு. நல்ல மனுஷந்தான். கடிஞ்சு ஒரு வார்த்தை பேசல. ஹோட்டல்ல இருக்கலாமேன்னுட்டு எவ்வளவோ சொன்னேன். கேக்கல. இப்பிடி உங்க ரூம்ல உங்களுக்குத் தொல்லையா... ஏதோ ஒரு காலகட்டத்தில அவர் உறைஞ்சுபோயிட்டாருன்னு படுது. எப்ப இளகப் போறாரோ யாருக்குத் தெரியும்...?

தேன்மொழி தலை குனிந்தபடி தன் இரு கைகளையும் பிசைந்தபடி அமர்ந்திருந்தாள்.

* * *

பெண்ணுடலின் ரகசியங்கள் என்ன? அவள் அல்குல் எப்படி அமைகிறது? அதன் மேலுள்ள ஐது மயிர் தொடும்போது பட்டுப்போல் இருக்குமா அலல்து கம்பளிபோல் முரடாய் இருக்குமா? அது படமெடுக்கும் பாம்பின் தலைபோல் இருப்பதாகக் கூறியிருக்கிறது ஒரு பழங்கவிதையில். கமலத்துடையது எப்படி இருக்கும்?

*

மோகம் என்பது கூட ஒரு போதையா? 'கிறுகிறுக்குதடி' என்று சொல்லிவிட்டு 'மொந்தை பழைய கள்ளு போலே' என்றாரே பாரதி? மொந்தை பழைய கள்ளுக்கு இங்கே எங்கே போவது? வாட்ச்மேனிடம் பேசி இங்கே தயாராகும் சரக்கைக் குடித்தேன். அந்தக் கிறுகிறுப்பு வேறு. உடலை ஆட்டுவிப்பது அது. நான் உணர்வது வேறு. ஒரு முறை கமலம் குனிந்து, எட்டி எதையோ எடுக்க முனைந்தபோது அவள் முலை என்மேல் பட்டது. ஜிவ்வென்று ஒர் உணர்வு. மிகவும் லேசாகிப் பறப்பதுபோல். அதே சமயம் உலகத்தின் அத்தனை கனமும் என் குறியின் மேல் கவிந்து விட்டது போல் தோன்றியது. ஒரு பக்கம் கனம் கூட இன்னொரு பக்கம் கனமின்மை. தத்தளிப்பு. கிறுகிறுப்பு. மூச்சு முட்டியது.

இதுதானா மோகம்? இச்சையின் இலக்கணம் தெரிய.

*

மோகமானேன்.

*

கமலம் என்மேல் இரும்புக் குண்டு போல் உருள வேண்டும். என்னை அழுத்த வேண்டும். நான் அவள் மேல் பூப்பந்து போல் புரள வேண்டும். நோகாமல் நசுக்காமல்

*

அவளை நான் இறுக்கும்போது அவள் முலைகள் நசுங்கவேண்டும் என் மார்பில். முலைக் காம்புகள் விடைத்து நிற்க வேண்டும். அவளுள் நான் உறைந்துபோய்விட வேண்டும்.

*

இத்தனை மோகத்திலும் அவள் உடல் வெறும் உறுப்புகள் கொண்ட ஒன்றாக மட்டுமே படவில்லை. சுழித்துக்கொண்டு ஓடும் ஆறாக, பறவைகளுக்கு உறைவிடமாகும் ஏரியாக, கொந்தளிக்கும் கடலாக உருப்பெற்றவாறு இருக்கிறது அவள் உடல் என் கற்பனையில். அதில் நான் மூழ்க வேண்டும்.

*

பொது அறையில் காலணிகளைக் கழற்றிவிட்டு அமர்ந்திருந்தாள் ஒரு மாலை. கால்களை மடித்து சோபா மேல் வைத்து



முகத்தை முட்டின் மேல் கவித்து, கண்களை மூடியிருந்தாள். பச்சைப் புடவையில் அழகான சிறு குன்று மாதிரி இருந்தாள். கரும் அருவி யாய் முதுகெல்லாம் ஓடியது முடி. அப்போதுதான் துளிர்த்த பசும் இலைகளாய்ப் பாதங்கள்.

*

பெண்ணின் அங்கங்களை திராட்சை விழிகள், ஆப்பிள் கன்னங்கள், கன இதழ்கள் என்று உட்கொள்ளவேண்டிய ஒன்றாகவே பார்க்கிறார்கள். என்னை கற்களும் முட்களும் உள்ள கரடுமுரடான நிலமாகவே உணர்கிறேன். கமலம் என்னை உழ வேண்டும். விதை நிலமாக மாற்ற வேண்டும். கமலம் ஒரு சதுப்பு நிலம். எங்கே கால் வைத்தால் இழுக்கும் என்று தெரியாத மர்ம நிலம். அதில் நான் கால் பதிக்க வேண்டும். அதன் சேற்றைப் பூசிக்கொள்ள வேண்டும். அதன் குமிழ்களில் அமிழ வேண்டும். அதைச் செழிப்பாக்க வேண்டும்.

கமலம் என்னை ஆட்கொள்ள வேண்டும்.

அவள் உடலின் நுழைவாயிலை என் குறி தொடுமா? அந்தத் தொடல் எப்படி இருக்கும்? பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம் ஆண்டு காத்திருந்துவிட்டுப் பெய்த மழையின் முதல் துளி பட்டதும் ஏற்படும் சிலிர்ப்பு அதில் இருக்குமா? அல்லது அது தீயைத் தீண்டும் இன்பமா?

பகல் பொழுதில்தான் தொலை பேசி ஒலித்தது. எதிர் முனையில் ஒரு பெண் குரல்.

"கமலம் இருக்காங்களா?"

"நான் கமலம்தான் பேசறேன்."

"நான் டாக்டர் தேன்மொழி கமலம். ஞாபகம் இருக்குதா?"

"சிவத்தோட மனைவிதானே?"

"ஆமாம். பரவாயில்லையே நெனப்பு இருக்குதே?"

"எப்படி இவ்வளவு நாள் கழிச்சு? என் நம்பர் எப்படி கிடைச்சிச்சு?"

"வந்து சொல்றேன். நானும் என் கணவரும் குழந்தைகளும் உங்க பில்டிங் கேட்டுலதான் நிக்கறோம். இப்ப மேல வரலாமா?"

"வாங்க தேன்மொழி. என்ன இப்பிடி கேக்கறீங்க?"

வாயில் மணி ஒலித்தது. நான்கு பேர்கள் உள்ளே வந்தனர். தேன்மொழியுடன் இருந்த நபர் சிவம் இல்லை.

"கமலம், இது என் கணவர் டாக்டர் குமாரசாமி. இது என் பையன் அருண். அமெரிக்கால டாக்டரா இருக்கான். இது என் பொண்ணு அருள்மொழி. இவளும் டாக்டர் தான். சொந்த ஹாஸ்பிடல் கட்டத் திட்டம் போட்டிருக்கா. இப்ப பெங்களூர்ல வேலை" என்று அறிமுகம் செய்தாள் தேன்மொழி.

அனைவரும் உட்கார்ந்து கொண்டு தேநீர் பருகியபடி பேச ஆரம்பித்தனர். சிறிது நேரத்துக்குப் பின் தேன்மொழி மெல்லக் கூறலானாள்.

"கமலம், நானும் சிவமும் ஒரு வருஷத்துக்குள்ளயே பிரிஞ் சிட்டோம். எந்தச் சண்டையும் இல்ல. அவர் ஒரு வெறும் ஜடமா இருந்தார். அவரே என்னைப் பிரியச் சொல்லிட்டாரு. நான் மேல் படிப்புக் காக லண்டன் போனபோதுதான் குமாரசாமியச் சந்திச்சேன். சிவத் தோட நான் ஒரேயடியா முறிச் சுக்கல. இவங்கள்லாம் அவரப் பெரியப்பான்னுதான் கூப்பிடு வாங்க. அவர் அப்பா போன பிறகு நாங்கதான் அவர் குடும்பம். குமாரசாமியும் அவரும் நல்ல நண்பர்களா இருந்தாங்க. இங்க கோயம்புத்தூர்லதான் புரொபசரா இருந்தாரு. அவர் ஆராய்ச்சிக் கட்டுரை எல்லாம் எழுதிட்டே அப்பிடியே இருந்துட்டாரு. இன் னொரு கல்யாணமே கட்டல. லீவு நாள்ல எங்க கிட்ட வருவாரு. இருப்பாரு. இப்பிடியே போயிட்டுது காலம்...."

அவள் பேச்சு ஒரு நீண்ட முன்னுரை என்று தோன்றியது அவளுக்கு. சிவத்தைக் கடந்த காலத்தில் இருத்திப் பேசியது போல் பட்டது.

தேன்மொழி தொடர்ந்தாள்.

"அருள்மொழிக்கு சொந்த ஹாஸ்பிடல் கட்டுறதுக்கு ஏற்பாடு செய்ய பெங்களூரு வந்தவருதான். காலையில நடக்கப் போனவரு வரலை. நல்ல பனிக்காலம். குளிர் தாங்க மாட்டாரு அவரு. கிளம்பற போதே இவ, "வேண்டாம் பெரியப்பா. இன்னிக்குக் குளிர் அதிகம்"ன்னு சொல்லியிருக்கா. கேக்கல. மப் ளரை தலையில சுத்திட்டு போயி ருக்காரு. அப்புறமா ஸறிங்க்கி டான்க் ஏரியில உடல் கிடைச்சுது. ஏன், என்னனுட்டு புரியல. ரிடயர் ஆனதுனால கொஞ்சம் ஏங்கிப் போயிட்டாரா என்னன்னே தெரியல. அவரோட வீட்டைக் காலி பண் ணினபோது ஒரு நோட்டுப் புத்தகம் கிடச்சுது. அது மேல இதுவரை நீங்க இருந்த முகவரி, போன் நம்பர் எல்லாம் இருந்துது. கடைசியா இந்த முகவரி, போன் நம்பர் எல்லாம் எழுதி இருந்துது. அந்த நோட்டுப் புத்தகத்தை அப்படியே பிரிக்காம எடுத்திட்டு வந்தேன். அவரு உங்களோட எப்பவாவது பேசினாரா?"

"இல்லயே. பல சிநேகிதங்க ளோட இப்பவும் தொடர்பு இருக்கு. சுதா கூட போன வாரம் போன்ல பேசினா. இவரோட தொடர்பு விட்டுப் போச்சுது."

மௌனம் நிலவியது.

தேன்மொழி தன் கைப்பையி லிருந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்தாள். பிளாஸ்டிக் தாளில் பொதிந்திருந்த நோட்டுப் புத்தகம்.

கமலத்தை நோக்கி நோட்டுப் புத்தகத்தை நீட்டினாள். "இதை நீங்க வெச்சுக்குங்க. உங்க பேரு இருக்குது மேல. அவருக்கு எப்பிடி யாவது சாந்தி உண்டாகணும். நீங்க தப்பா நினைக்காதீங்க. அவருடைய புத்தகம் எல்லாம் காலேஜ் லைப்ரரிக்குக் குடுத்திட் டோம். வேற அதிகம் எதுவும் இல்ல. அத்தனை சொத்தையும் என் பிள்ளைங்களுக்கு எழுதி வெச்சி ருக்காரு. ஒரு சன்னியாசி மாதிரி இருந்தாரு. இப்ப போயிட்டாரு. என்னன்னு சொல்ல? இதுல உங்க பேரு இருக்கறதால..."

கைநீட்டி நோட்டுப்புத்தகத்தை வாங்கிக் கொண்டாள்.

பிளாஸ்டிக் தாள் கையில் பட்ட தும் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. பக்கத்திலிருந்த மேசை மேல் வைத்தாள்.

வந்தவர்கள் சிறிது நேரம் அமர்ந்து பேசிவிட்டுச் சென்றனர்.

மேசைமேல் பிளாஸ்டிக் தாளி னால் சுற்றப்பட்ட நோட்டுப் புத்தகம்

கிடந்தது.

* * *

பிளாஸ்டிக் தாளை மெல்ல அகற்றினாள். இயந்திரங்களால் தயாரிக்கப்படாத கனத்த தாள் அட்டை. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தி நாலு, எழுபத்தைந்து என்று தேதி போட்டு சில குறிப்புகள் இருந்தன. மற்ற பக்கங்கள் வெறுமையாக இருந்தன.

*

ஏரியினடியே ஓர் உடல். சேதிகள் எதுவும் சொல்லாத உடல். அத்தனை ரகசியங்களையும் தன்னுள் உறையவைத்த உடல்.

*

குளிர் பதனப் பெட்டி அருகே இருந்த முக்காலியில் அமர்ந்து அதன் மேல் சாய்ந்துகொண்டாள்.

கைலாசம், உனக்குள்ளே இவ்வளவு தாபம் இருந்தது என்பதை நான் உணரவில்லை. அப்போது என் உடலே எனக்கு ஒரு விடுபடுத்தவேண்டிய மர்மமாக, புதிராகத்தான் இருந்தது. என் உடலை நான் சமாளித்துக்கொண்டிருந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். உடல் எனும் பிரம்மாண்டத்தை நான் எதிர்கொண்டது பிறகுதான். அதன் மேடு பள்ளங்களை, குழிகளை, செதில்களை, மடல்களை, இதழ்களை அறிந்து கொண்டது மெல்லமெல்லத்தான். உடலில் முங்கி, மூச்சுமுட்டி எழுந்தது உடனடியாக நேரவில்லை. மெல்லத் தொடங்கி, இடியுடன் கூடிய பெருமழையாவது போல் அது நேர்ந்தது. மென்மையாக ஒலிக்கத் தொடங்கி, பிறகு வேகமும் தாளமுமாக உச்சத்தை எட்டும் பாடல் போல் அது எழும்பியது.

நீ என்னை அணுகியபோது நான் அங்கில்லை. வேறு எத்தனையோ கவலைகளில் மூழ்கி இருந்தேன். ஆராய்ச்சி பற்றிய கவலைகள். எதிர்காலம் பற்றிய கவலைகள். ஆணுடல் பற்றிய ஆர்வமும், குறுகுறுப்பும் இல்லாமல் இல்லை. அது அவ்வப்போது, ஓடும் மேகங்கள்போல் வந்து போய்க் கொண்டிருந்தது. ஆழமாக உள்ளிறங்கவில்லை.

அல்குல் பற்றி எழுதியிருக்கிறாய். என் அல்குல் எனக்கே புரிபடாத ஒன்றாகத்தான் இருந்தது. அதன் ஐதுமயிர் பற்றியோ, இதழ்கள் பற்றியோ எந்தத் தியானமும் இல்லை. மாதவிடாயின் போது சில சமயம் குருதி படர்ந்து இருக்கும் ஐதுமயிரைச் சுத்தப் படுத்தியதுகூட அலட்சியத்தோடுதான். ஏதோ ஒரு பாவத்தைச் சுமப்பதுபோல் உடலைச் சுமந்தோம் என்னைப் போன்றவர்கள். உடல் ஒரு குரிசு. கற்றுக்கொடுக்கப்பட்டது அதுதான். படுகுழியில் வீழ்த்திவிடும் உடல். உடலை மிதிக்க வேண்டும். நசுக்க வேண்டும். அடக்க வேண்டும்.

எங்கள் வீட்டில் தங்கம் என்றொரு பெண் வேலை செய்து கொண்டிருந்தாள். சமையல் வேலை. அப்பாவின் காரியாலயத்திலிருந்து இரண்டு பியூன்கள் வீட்டு வேலைக்கு வந்து போவார்கள். ராமன் நாயர் மற்றும் வெங்கடப்பா. துணி துவைக்கும் போது தங்கம் மரத்தடியே நின்றுகொண்டிருந்த ராமன் நாயரைப் பார்த்ததாகவும் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்றதாகவும் வீட்டு வேலை செய்யும் நரசம்மா புகார் செய்ய அவர்களைக் "கையும் களவுமாகப் பிடித்ததாக" அம்மா கூறினாள். ராமன் நாயர் அதன் பின் வரவில்லை. தங்கமும் வேலையை விட்டு நீக்கப்பட்டாள். அம்மாவிடம் கேட்டபோது இல்லாவிட்டால் ஏதாவது விபரீதம் நேர்ந்துவிடும் என்றாள். சில மாதங்களுக்குப் பிறகு தங்கத்தை ஒரு பாட்டுக் கச்சேரியில் சந்திக்க நேர்ந்த போது, "தங்கம், ராமன் நாயரைப் பார்த்தா என்ன விபரீதம் நடக்கும்?" என்று கேட்டேன்.

"யார் சொன்னாங்க?" என்றாள்.

"அம்மாதான்."

"ஒரு விபரீதமும் நடக்கல. சும்மா அவனைப் பார்த்தேன். அவ்வளவுதான்." என்றுவிட்டுச் சிரித்தாள். தலையைத் தடவித்தந்தாள்.

விபரீதம் என்பது என் உடலில் இருக்கிறது என்ற கவலை மட்டும் நீங்கவில்லை. என் உடல் எனும் உண்மை வெளிப்படத் தொடங்கியது நான் வீட்டை விட்டு வெளியே வந்த பிறகுதான்.

என் உடலை என்னைத் தரிசிக்கப் பயில்வித்தது ட்ரினடாடி



லிருந்து வந்திருந்த நரைன்சிங் தான். கலைஞன். அவனுடன் இருந்தபோது ஓர் இயற்கைக் காட்சியாகப் பரிமளித்தது என்னுடல். அதன் மேடுகள் மலையாகவும், அதன் ஆழங்கள் பள்ளத்தாக்குகளாகவும், அதன் அந்தரங்கங்கள் சலசலக்கும் நீரோடையாகவும் மாறின. அவன் உடலும் அதே இயற்கைக்காட்சியின் வேறு ரூபங்களாகப் பட்டது. கொடியாகவும், மண்ணாகவும் அவன் உடலும் வளைந்து குழைந்தது. உழப்படாத நிலமாய் முறுக்கிக் கொண்டது. இறுகிக் கொண்டது. புதைகுழியாய் இழுத்தது.

அதுதான் காதல் என்று நினைத்தேன். அவன் ஓர் அமெரிக்கப் பெண்ணுடன் போக ஆரம்பித்த போது வலித்தது. பிறகு வேறு வேலைகளில் மூழ்கிப்போனேன். இரண்டொரு ஆண்டுகளுக்குப் பின் அவனைச் சந்தித்தபோது சோர்ந்திருந்தான். அமெரிக்கப்பெண் அவனுடன் இல்லை. மிகவும் தனிமையில் இருப்பதாகக் கூறினான். அவன் வீட்டுக்கு அன்று நானும் இன்னும் சிலரும் போனோம். அன்றிரவு அவன் என்னை நெருங்கிய போது நான் அனுமதித்தேன். காலையில் மற்றவர்கள் உறங்கிய படி இருக்க நான் கிளம்பிவிட்டேன். நரைன் பேருந்து நிறுத்தம் வரை வந்தான்.

"மறுபடியும் எப்போ?" என்றான்.

"எப்போதும் இல்லை நரைன். நேற்று உன்னைப் பார்த்து பரிதாபப் பட்டேன். அதனால்தான் இணங்கினேன்...." என்றேன்.

தீ மிதித்ததுபோல் திடுக்கிட்டான்.

"பரிதாபப்பட்டாயா?"

"வேறு என்ன காரணம் இருக்க முடியும் நரைன்?"

"நீ மாறிவிட்டாய்" என்றான்.

பேருந்து வந்தது. ஏறிக்கொண்டேன். சன்னல் வழியாகப் பார்த்து கை அசைத்தேன். "வாழ்க்கை ஒரு நல்ல ஆசிரியர்" என்றேன்.

என் உடலைக் கொடுத்து மீட்டுக் கொள்ள முடிந்தது என்னால். அதை என்னுடைய தாக்கிக் கொள்ள முடிந்தது.

எந்த மிகையும் எந்த மட்டுப் படுத்தலும் இல்லாமல் என் உடலை அதன் அத்தனை குறைகளோடும் நிறைகளோடும் ஏற்க முடிந்தது தனஞ்செயனுடன்தான். அவன் என் உடலைப் பறக்கவிட்டான். மீண்டும் என்னிடமே ஒப்படைத்தான். நான் அவன் உடலை அறியாத பிரதேசங்களுக்கு இட்டுச் சென்றதாகவும், திரும்பி வர வழி அமைத்துத் தந்ததாகவும் கூறினான். ஆணுடல் பற்றி இருந்த அவன் கர்வத்தை நான் சமனப்படுத்தினேன் என்றான். விறைத்த குறிதான் ஆணுடலின் உண்மை என்று நினைத்தது எவ்வளவு தவறு என்றான். கலவி செய்யாதபோது படுத்தபடி இருக்கும் அவன் குறி எவ்வளவு அழகு என்றபோது உடலுக்குத்தான் எத்தனை அர்த்தங்கள் என்று வியந்தான்.

அவனை மணந்துகொண்டு இருபத்தைந்து ஆண்டுகளாகி விட்டன. இன்னும் காதல் புரிய வில்லை, கைலாசம். மோகம் புரிவது எளிது. காதல் அப்படியல்ல. பெண்-ஆண் உறவு மிகவும் சிக்கலானது. அதில்தான் எத்தனை நெருக்கம், எத்தனை விலகல்? எத்தனை மர்மம், எத்தனை வெளிப்படை? எத்தனை வன்முறை, எத்தனை மென்மை? எத்தனை இறுக்கம், எத்தனை குழைவு? எத்தனை ஆதுரம், எத்தனை ஆவேசம்? காதலிக்கும் நபரையே விஷம் வைத்துக் கொல்லலாம் என்று ஆத்திரம் வருகிறது. தணிகிறது. பந்தம் போல் கட்டிப் போடுகிறது. கூடுபோல் ஆசுவாசம் தருகிறது. தகிக்கிறது. குளிர்விக்கிறது.

என் உடலை ஒரு பிரதியாகப் பார்க்கும்போது அது ஒரு நிலைத்த பிரதியாக இல்லை, கைலாசம். அது மாறியபடி இருக்கிறது. அதன் தோற்றமும் அர்த்தங்களும் மாறிய படி உள்ளன. என் முலைகள் தளர்ந்து, சற்றே கீழிறங்கி உள்ளன. என் தொடைகளில் பச்சை நரம்போடுகிறது. கால்களிலும் கைகளிலும் கூட. என் அல்குல் ஒரு பழுத்த இலை போல் இப்போது இருக்கிறது. என் ஐதுமயிர் முன் போல் அடர்த்தியாக இல்லை. கருமையாகவும் இல்லை. நரைத்து இருக்கிறது. ஈரமில்லாமல் உலர்ந்து இருக்கிறது.

செயனின் உடலிலும் பல மாற்றங்கள். முறுக்கிக் கட்டியது போல் இருந்த அவன் உடல் இப்போது சில சமயம் நனைத்து வைக்கப்பட்ட துணிபோல் இருக்கிறது. குளித்து விட்டு அவன் வரும்போது ஈரம் உலராத அவன் குறி நத்தைபோல் சுருங்கி உள்ளது. அவன் முடி முற்றிலும் நரைத்துவிட்டது. என்னுடையதும். அவன் முதுகில் முலைகள் பட சாய்ந்துகொண்டு பின் கழுத்தில் இன்னமும் முத்தம் தருகிறேன். சிலிர்ப்பதாகக் கூறுகிறான். அவன் என்னை வருடும்போது இதமாக இருக்கிறது. குறுகுறுக்கிறது.

இப்படியாக உடல் பல தடங்களில் ஓடியபடி.

நீ ஏன் தொடர்பே கொள்ளவில்லை, கைலாசம்? தேன்மொழியைத் தோழியாக்கிக் கொண்டது போல் என்னையும் தோழியாக நினைத்திருக்கக் கூடாதா? வேறு ஒரு காலகட்டத்தில் நீ கேட்டிருந்தால் நான் இணங்கியிருப்பேனா என்று தெரியவில்லை. ஆனால் உன்னை நான் ஒதுக்கியிருக்க மாட்டேன் என்றே நினைக்கிறேன்.

ஏரியின் அடியே கிடந்த உன்னுடலை எரித்தாகிவிட்டது. அதன் சாம்பலை ஆற்று நீரில் கரைத்தாகி விட்டது. உன் சாம்பல் கரைக்கப் பட்ட அந்த ஆற்று நீர் வறண்ட பிரதேசத்தில் பாயட்டும். அதில் பசுமைப் புல்லாய் முளைக்கட்டும். பசித்த இளம் ஆடோ மாடோ அதைப் புசிக்கட்டும். அதன் உடலில் பாலூறட்டும். ஏதாவது மகவின் வாயில் அந்தப் பால் இனிக்கட்டும்.

மேலும் அந்த ஆற்று நீர் வெள்ளமாய்ப் பெருகி எங்கும் கரைபுரண்டோடட்டும். மண்ணிலும், கல்லிலும், சகதியிலும் பாய்ந்தோடி காய்ந்ததை எல்லாம் உயிர்ப்பிக்கட்டும். வளமை கூட்டட்டும். சாம்பலின் ஒரு துளி விதையாகி, அது செடியாகி, பழங்கள் தொங்கும் மரமாகட்டும். அதன் கிளைகள் வானை நோக்கட்டும்.

* * *

வாயில் மணி ஒலித்தது. கமலம் எண்ணங்களிலிருந்து மீண்டபோது உறைபனிப் பெட்டி உருகி பெரு ஆற்றிலிருந்து பிரிந்து வந்த சின்னஞ் சிறு கிளையாறுபோல் காலடியே ஓடிக்கொண்டிருந்தது.

* * *

தந்தையர் நிலம்

சந்துஸ்

ஒரு நுளம்புக்கு
எலிக்கு எறும்புக்கு
விசர் நாய்க்கு
நலமடித்த மாட்டுக்கு
மின் கம்பக் கம்பிகளுக்கிடையில் வௌவாலுக்கு

இருப்பதை விடவும்
முட்டுப்படக் கிட்டவாய்
என் சனங்களுக்கு மிக அருகில்
மரணம் அமர்ந்திருக்கு.

புள்ளி விபரங்களைத் தூக்கிக் குப்பையிற் போடு!

சீவித்திருப்பதற்கு முன் நிபந்தனை
சாப்பாடா? தண்ணியா?
மருந்தா? அடையாளஅட்டையா?
மண்ணெண்ணையா? மண்ணாங்கட்டியா?

அதுக்கு முதல்

ஆயுதம் ஏந்தியோர் ஏந்தாதார்
இடையிலுள்ள பிரதான வித்தியாசத்தின்
நீளமென்ன?
அகலமென்ன?

முதலில் அதைக் கண்டு பிடி.

யார் சீவிக்கலாம்
யார் சாகலாம்
என்பதன் அடிப்படை
தற்சமயம் அதுக்குள்ள தானிருக்கு.

இலங்கைத் தீவின் மேலே கிடக்கும்
வானத்தின் கீழும்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
பூரண அதிகாரம் அமுலிலிருக்கும்
நிலப் பரப்பெங்கிலும்
சுடப்படக் கடத்தப்பட
கைது செய்யப்பட வன்புணரப்பட
குண்டு வீசப்பட
பட்டினியாற் சாக மருந்தில்லாமற் சாக
தமிழர் என்ற தகுதி மட்டும் போதுமானது.

தனித் தமிழில் அதிகாரம் நடக்கும்
தமிழீழ தேசிய அடையாள அட்டை அமுலில் இருக்கும்
காற்று நுழையா இடத்திலும் De Facto ஆட்சி நடக்கும்
முத்திரை சேர்ப்போர் சங்கத் தலைவரும்
கண்காணிப்பின் பின்பே
இயங்க அனுமதிக்கப்படும்
தமிழீழ நிலப்பரப்பில்

நகர பிதா ஆவதற்கும் உபவேந்தர் ஆவதற்கும்
பாடசாலை அதிபராய் கனகாலம் (உயிருடன்) இருக்கவும்
தமிழர் என்ற தகுதி மட்டும் போதாது.
(எந்த அடையாள அட்டை கொண்டு நிரூபித்தாலும்)

மாடேறி மிதியாத மகிழம் பூப்புட்டியிலே
மண்ணேறி மடி குழித்தாலும்

அந்த மண் முட்டியை ஏறிக்கட்டிய
கைகளும் கால்களும்
பனைக்கும் வீட்டுக்குமாய்
வழித்தடம் விலகாமலிருக்கக்
கண்காணித்த அதே கண்கள்
இன்று துப்பாக்கியின் கோட்டிடை வழியே.

காகமிருக்கப் பனம்பழம்
ஒருக்கால் விழுந்தால் தற்செயல்.
நெடுக விழுந்தால் சந்தேகங் கொள்.

குண்டு விழ
எல்லோரும் சிதறியோடும்
தெருவின் நடுவில்
வாய் பிளந்து கிடக்கும் பாழுங்கிணறு
கனவில் வரும்போது மட்டும் ஏன்
விடுதலையின் விமோசனத்தின்
வாசல் போல் தெரிகிறது ?????

அரேபியர்கள் இரண்டுபட்டால் அமெரிக்காவுக்கு கொண்டாட்டம்

இலையுதிர்காலன்

ஜோர்டான் மன்னர் அப்துல்லா அமெரிக்கத் தொலைக்காட்சி ABCக்கு அளித்த பேட்டியில் மத்திய கிழக்கில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வராவிட்டால் ஈராக், லெபனான், பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் உள்நாட்டுப் போர்கள் ஏற்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜோர்டான் உளவுத்துறை சேகரித்த தகவல்களின் அடிப்படையிலேயே மன்னரின் மேற்படி உரை அமைந்துள்ளதை மறுப்பதற்கில்லை.

இந்தப் போர்கள் மத்திய கிழக்கின் பூகோள அரசியல் எதிர்காலத்தை மாற்றிவிடக் கூடாது என்ற கவலையில் (அமெரிக்க ஆதரவு) அப்துல்லாவின் உரை அமைந்துள்ளது.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் தாயான இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்றும் அப்துல்லா கூறியுள்ளார். இதே கருத்தை ஐ. நா. ஆய்வுக்குழுவின் அறிக்கையும் தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் போர்களின் அபாயம் பற்றிய எச்சரிக்கை காலம் கடந்து வந்துள்ளது.

ஏற்கனவே, ஈராக் உள்நாட்டுப் போருக்குள் சிக்கிக்கொண்டு மீளமுடியாமல் தவிக்கின்றது.

பாலஸ்தீனத்தில் அதன் அறிகுறிகள் காணப் பட்டாலும் புயலுக்கு முன்னான அமைதியே தற்போது நிலவுகின்றது.

லெபனானில் சரித்திரம் திரும்பி வர எத்தனிக்கிறது. வழக்கம் போலவே வல்லரசுகள் உள்நாட்டுப் போர் களால் தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகின்றன.

மக்களைப் பிரித்து ஆளும் சூழ்ச்சி அன்று மட்டு மல்ல, இன்றைக்கும் நடைமுறைப்படுத்தக்கூடிய அரசியல் சாணக்கியம்தான்.

இனி, இம் மூன்று உள்நாட்டுப் போர்களின் தோற்றம் வளர்ச்சி குறித்து விரிவாகப் பார்ப்போம்.

ஈராக்:

எண்ணைக் கிணறு வெட்ட வகுப்புவாத பூதம் கிளம்பியது

"எனக்குத் தெரிந்த ஒரு ஈராக்கிய **வாலிபர்** பொலிஸ் படையில் புதிதாகச் சேர்ந்தபொழுது ஏதோ ஒரு அமெரிக்கத் தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்று பயிற்சியளித்தது. பெரும்பாலான பயிற்சி நேரங்களை அந்த வாலிபர் ஜீப் வண்டி ஓட்டுவதிலும் ஆயுதங்களைக் கையாள்வதிலும் செலவிட்டார். பயிற்சி முடிந்த பின்பு ஒரு நாள் வேலைக்கு நியமித்துள்ளதாக அழைப்பு வந்தது. அவரிடம் ஒரு ஜீப்வண்டியைக் கொடுத்து பாக்தாத்தின் சன நெருக்கடி மிக்க சந்தைப் பகுதி ஒன்றில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுமாறும் அங்கிருந்து அவருக்குத் தரப்பட்ட கைத்தொலை பேசியில் தொடர்பு கொள்ளும்படியும் தெரிவிக்கப் பட்டது. குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற வாலிபர் ஜீப் பில் இருந்தபடியே கைத்தொலைபேசியை இயக்கிய பொழுது சிக்னல் கிடைக்கவில்லை. பின்னர் இறங்கி சிறிது தூரம் சென்று சிக்னல் கிடைத்துத் தொடர்பு கொண்டபோது... ஜீப் வெடித்துச் சிதறியது"

-சிரிய பாதுகாப்பு அதிகாரி ஒருவரின் தகவல்
(Independent 26.04.06)

"பாக்தாத்தில் ஒதுக்குப்புறமான இடத்தில் 14 வாலிபர்களின் இறந்த உடல்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டன. அந்த 14 பேருக் கும் ஒரு ஒற்றுமை இருந்தது. அனைவரும் 'ஒமார்' என்ற பிரத்தியேகமாக சுன்னி முஸ்லிம்களுக்கேயுரிய பெயரைக் கொண்டவர்கள். அச்சமடைந்த உறவினர் கள் பிணங்களைப் பொறுப்பெடுக்க வரவில்லை. அவை தெரு நாய்களுக்கு உணவாகின."


- (Guardian 04.08.06)

"யூலை, ஓகஸ்ட் மாதங்களில் இடம்பெற்ற

வகுப்புவாதக் கலவரங்களில் மட்டும் 7000 சுன்னி அல்லது ஷியா முஸ்லிம்கள் இறந்துள்ளனர். இரு தரப்பிலும் 3 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். நாளொன்றிற்கு 3000 பேராவது அகதிகளாகப் பிற நாடுகளுக்கு ஓடியுள்ளனர்"

- ஐ. நா. சபையின் விசேட அறிக்கை

இவ்வளவு நடந்தும் புஷ் நிர்வாகம் ஈராக்கில் உள்நாட்டுப் போர் அல்லது வகுப்புவாதக் கலவரம் நடப்பதாக ஒப்புக் கொள்ளவில்லை. அவர்களைப் பொறுத்தவரை ஷியா முஸ்லிம்களைப் பெரும்தொகையாகக் கொல்லும் குண்டு வெடிப்புகள் எல்லாம் சில வெறிபிடித்த பயங்கரவாதிகளின் செயல் (சுன்னி முஸ்லிம் மக்களை) படுகொலை செய்யும் அரசு சார்ந்த கொலைகாரக் கும்பல் யாவும் இனம் தெரியாதவர்கள்.



இவ்வாறுதான் சர்வதேச செய்தி ஊடகங்கள் எமக்குத் தெரிவித்து வந்தன. உலக மக்களும் அப்படியே நம்ப வைக்கப்பட்டனர். அதேநேரம், ஈராக் பொது மக்கள், 'அமெரிக்க ஆட்சியைவிட சதாமின் ஆட்சி மேல்' என்று கூறுமளவிற்கு அங்கே நிலைமை மோசமடைந்துள்ளது.

ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே சுன்னி-ஷியா என்ற இரு முஸ்லிம் பிரிவுகள் மார்க்க அடிப்படையில் பிரிந்திருந்தபோதும் இரு சமூக மக்களும் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டதில்லை. சுன்னி இஸ்லாம் பிரிவைச் சேர்ந்த சதாம் ஹுசைனின் ஆட்சியில் ஷியா முஸ்லிம்கள் அடக்கப்பட்டதாக மேற்கத்தைய ஊடகங்கள் ஒரு பக்கச் சார்பான செய்திகளைக் கூறி வந்தன. உண்மையில் சதாம் தனக்கு எதிரான அரசியல் சக்திகளாக இனம் கண்ட ஷியா மதத் தலைவர்களையே கைது செய்து சிறையிலடைத்தார். சாதர் குழு அல்லது மஹ்தி குழு போன்ற ஆயுதமேந்திய ஈரான் ஆயத்துல்லாக்கள் வழியில் நடக்கும் மத அடிப்படைவாத இயக்கங்கள் முழு ஷியாக்களினதும் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. இவர்களின் சதாம் அரசுக்கெதிரான சில தாக்குதல்கள் பலமுறை தோல்வியடைந்த போதிலும் சந்தேகத்தின் பேரில் பல ஷியா மக்கள் கைது செய்யப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். ஈராக்கில் ஷியாக்கள் இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதான ஆதங்கம் அந்த மக்களுக்கு இருந்தபோதும், அதற்காக ஒரு போதும் அவர்கள் ஆதிக்கப்பிரிவான சுன்னி முஸ்லிம்களை வெறுக்கவில்லை. ஈரான் - ஈராக் யுத்தத்தின்போதுகூட ஷியா மக்கள் சதாம் அரசுக்கு விசுவாசமாகவே நடந்து கொண்டார்கள். ஈரானியர்களும் ஷியாக்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் தமது தாய்நாட்டைக் காட்டிக் கொடுக்கவில்லை. 1990ம் ஆண்டு இடம்பெற்ற குவைத் மீதான ஆக்கிரமிப்பும் அதைத் தொடர்ந்த வளைகுடாப் போரும் ஈராக்கின் எதிர்காலத்தைத் தீர்மானித்தது. போரால் தோற்ற ஈராக்மீது ஐ. நா. சபை நாடுகள் (அமெரிக்க அழுத்தத்தால்) பொருளாதாரத் தடை விதித்தன. வடக்கு ஈராக்கில் குர்திய பிரதேசத்தின்மீதும், தெற்கு ஈராக்கில் ஷியா பிரதேசத்தின்மீதும் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் கண்காணிப்புப் பணியை மேற்கொண்டதால் சதாமின் அரசு மத்திய ஈராக்கினுள் முடக்கி வைக்கப்பட்டது. சில ஆண்டுகளின்பின் பொருளாதாரத் தடை காரணமாக ஈராக் மக்கள் பட்டினி கிடந்து சாவதாக சர்வதேசக் கண்டனங்கள் எழுந்ததால் ஐ.நா. சபை 'எண்ணைக்குப் பதிலாக உணவு' என்ற திட்டத்தைக் கொண்டு வந்தது. இந்தத் திட்டத்தின்படி ஈராக் அரசு சர்வதேசச் சந்தையில் தான் விற்கும் எண்ணையின் பெறுமதிக்குச் சமமான உணவுப் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். ஆனால், அதைக்கூட ஈராக் அரசு தான் விரும்பியபடி செய்ய முடியாது. எந்தெந்த உணவுப் பொருட்களை, எங்கே வாங்க வேண்டும் அதை ஈராக்கிற்கு எப்படிக் கொண்டு போவது யாருக்குப் பங்கிட்டுக் கொடுப்பது போன்றவற்றை ஐ.நா சபையே தீர்மானித்தது. அதிலும் பல ஐ. நா. அதிகாரிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் (தலைவர் கோபி அனானின் மகன் உட்பட) முறைகேடுகளில் ஈடுபட்டு கோடிக்கணக்கில் சுருட்டியவை வேறு கதை.

இந்த எண்ணை - உணவுப்பொருள் பண்டமாற்று நியாயமாக நடத்தப்படவும் இல்லை; அதன் பலனெல்லாம் மக்களுக்குப் போய்ச் சேரவும் இல்லை. குறிப்பாக, ஈராக்கின் மொத்த சனத்தொகையில் 13வீதமேயுள்ள குர்திய மக்களுக்கு மொத்த வர்த்தகத்தின் 43வீத வருமானம் போய்ச் சேர்ந்தது. குர்தியப் பிரதேசத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த இரு ஆயுதமேந்திய இயக்கங்கள் சட்டவிரோதமாக எண்ணை கடத்தி விற்றுக் கிடைத்த வருமானம் இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை. ஐ. நா. தயவில் சுயதாதீனமாக இயங்கக்கூடிய நிலையில் (இன்றுவரை எவராலும்

அங்கீகரிக்கப்படாத) 'குர்திஸ்தான்' என்ற தனிநாடே உருவாகிவிட்டது. எண்ணை கடத்தலால் அங்கே பெற்ற வருமானம் யப்பானில் இருந்து இறக்குமதி செய்த எலக்ட்ரோனிக் பொருட்கள் சொகுசு வாகனங்கள் என்று செலவு செய்யப்பட்டு பொருளாதாரம் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில் ஈராக்கின் பிறபகுதிகளில் வாழ்ந்த அரபுமக்கள் சாப்பாடு தேடி அலைந்து கொண்டிருந்தனர். தெற்கு ஈராக் ஷியா மக்கள் வான்வெளிக் கண்காணிப்புக்குள் அடங்கியதால் ஓரளவுக்குப் பாதுகாக்கப்பட்டபோதும் அவர்களும் பட்டினிச்சாவில் இருந்து தப்பவில்லை.


புஷ் நிர்வாகம் ஈராக் மீதான படையெடுப்பை ஆரம்பித்தபோது சி. ஐ. ஏ. யும் அமெரிக்க இராணுவமும் குர்திய ஆயுதக் குழுக்களின் உதவியோடு முன்னேறின. அரபுமக்களையும் குர்திய மக்களையும் மேற்குறிப்



பிட்ட சம்பவங்கள் நிரந்தரமாகப் பிரித்துவிட்டன. அரபுக்கள் குர்தியரை ஏகாதிபத்தியத்தின் அடியாட்களாகப் பார்த்தனர். குர்திய ஆயுதக் குழுக்களுக்கு இஸ்ரேல் இராணுவப் பயிற்சி அளித்ததாக வந்த தகவல்கள் தற்போது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளன. இன்றுள்ள ஈராக்கின் புதிய இராணுவத்திலும் பொலிஸிலும் கணிசமான அளவு குர்தியர்கள் பணிபுரிகின்றனர்.

அமெரிக்க இராணுவம் ஈராக் முழுவதையும் பிடித்த பின்பு செய்த முதல் வேலை சதாம் ஆட்சியின் கீழ் பணிபுரிந்த அனைத்து இராணுவ வீரர்களையும் வீட்டிற்கு அனுப்பியதுதான். அந்தப் பழைய இராணுவத்தில் பெருமளவு சதாம் விசுவாசிகளும் பாத் ஆதரவாளர்களும் சுன்னி முஸ்லிம்களும் அங்கம் வகித்தமை உண்மைதான். இருப்பினும் இராணுவத் தொழிலைத் தவிர வேறெதுவும் தெரியாத வீரர்கள் தொழிலிழந்தவர்களாய்த் தமது குடும்பத்தைக் காப்பாற்றும் வழி தெரியாது திண்டாடினர். இந்த அவலங்களை எள்ளளவும் கவனத்திற்கெடுக்காத அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் சதாம் புதிதாக உருவாக்கிய ஈராக் இராணுவத்தில் ஷியா முஸ்லிம்களைப் பெருமளவில் சேர்த்தனர். நாட்டின் பொருளாதாரம் ஸ்தம்பித்து வேலையற்றோர் எண்ணிக்கை 80வீதமாக இருந்த காலத்தில் இராணுவ-பொலிஸ் வேலைகளுக்காக ஷியா இளைஞர்கள் முண்டியடித்ததில் வியப்பில்லை. ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட 'பாத்' கட்சியினரும் வேலையிழந்த இராணுவ வீரர்களும் ஒன்று சேர்ந்து கிளர்ச்சிக் குழுக்களை அமைத்தனர். இந்தக் குழுக்கள் தேசியவாத அடிப்படையைக் கொண்டிருந்த போதிலும் அவற்றின் உறுப்பினர்கள் சுன்னி முஸ்லிம் பிரிவில் இருந்தே வந்தனர். புதிதாக உருவாக்கப்படும் இராணுவமும் பொலிசும் நாளை தம்மை அடக்க ஏவிவிடப்படும் அரச இயந்திரங்களாக மாறும் என்ற நியாயமான அச்சம் காரணமாக பாதுகாப்புப் படைகளில் வேலை தேடிச் சென்ற பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை கிளர்ச்சிக்காரர்கள் குண்டு வைத்துக் கொன்றனர். துரதிர்ஷ்டவசமாக இவ்வாறு கொல்லப்பட்ட இளைஞர்கள் அனைவரும் ஷியா முஸ்லிம்கள் என்பதால் வகுப்புவாதப் பிரிவினை அப்பொழுதே வேர்விடத் தொடங்கியது. பல தசாப்தங்களாக இரண்டாம் தரப் பிரஜைகளாக அரசு அதிகாரமற்றிருந்த ஷியாக்களைப் பொறுத்தவரை தற்போது கிடைத்துள்ளது ஒரு பொன்னான வாய்ப்பு. புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கம் இராணுவம் பொலிஸ் ஆகிய அதிகார அமைப்புகளில் தமது பிரதிநிதித்துவத்தை ஸ்திரப்படுத்துவதன்மூலம் ஷியா முஸ்லிம்கள் ஈராக்கின் ஆளும் பரம்பரையாக விரும்பின. பொம்மைகளைக்

கொலு வைப்பதைப்போல ஈராக்கியரைத் தன்னிஷ்டப்படி ஆட்டிப் படைத்த அமெரிக்காவும் ஷியா முஸ்லிம்களின் கைகளில் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தது. இதனால் ஷியா மத அடிப்படைவாத சக்திகள் புத்துயிர் பெற்றன. "ஈராக்கில் இஸ்லாமிய புரட்சிக்கான தலைமைக்குழு என்ற கட்சி அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அந்தக் கட்சியைச் சேர்ந்த அமைச்சரின் பொறுப்பில் உள்துறை அமைச்சு உள்ளதும் பாதுகாப்புப் படைகள் அந்த அமைச்சின் கீழ் வருவதும் இங்கே சுட்டிக் காட்டப்படவேண்டும். மேற் குறிப்பிட்ட மதஅடிப்படைவாதக் கட்சியின் தொண்டர்கள் பொலிஸ்காரர்களாகவும் இராணுவவீரர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள். 'மஹ்தி இராணுவம்' என்ற இன்னொரு ஷியா ஆயுதக்குழு ஈராக் பொதுத் தேர்தல்கள் நடத்தப்படும் வரையில் தமக்கென கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை அமைத்து தனிக்காட்டு



ராஜாக்களாக ஆதிக்கம் செலுத்தி வந்தன. அந்தப் பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் மஹ்தி இராணுவத்தின் ஆயுதங்களைக் களையவும் அமெரிக்க இராணுவம் பல தடவை முயற்சி செய்தபோதும் தோல்வியுற்று, இறுதியில் சமரசமாகப் போனது. மஹ்தி இராணுவ வீரர்கள் பலரை தேசிய இராணுவத்திலும் பொலிஸ் படையிலும் இணைத்ததன் மூலம் அந்தச் சமரசம் எட்டப்பட்டது.

மேலே குறிப்பிட்ட அரசியல் மாற்றங்கள் யாவும், ஒரு பக்கத்தில் அமெரிக்கா ஈராக்கில் புதிய ஆளும் வர்க்கத்தை நிலைநாட்ட உதவியபோதும், மறுபக்கத்தில் சுன்னி- ஷியா முஸ்லிம் பிரிவுகளுக்கிடையில் வெறுப்பையும் அவநம்பிக்கையையும் உருவாக்கி அவர்களை எதிரிகளாக்கிவிட்டது. இந்தப் பிரச்சினையை நிரந்தரமாக்கும் கைங்கரியத்தை ஆற்ற எங்கிருந்தோ வந்தார்கள் சர்காவி தலைமையிலான அல்கைதா குழுவினர். ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை தமது சண்டைப் பயிற்சிக்குப் புதிய களம் கிடைத்ததாகக் கருதிய அல்கைதாவினர் சுன்னி முஸ்லிம்களைத் தம் பக்கம் கவர்ந்தனர். அல்கைதா சவுதி அரேபியாவின் வாஹபி என்ற இஸ்லாமியக் கடும் போக்காளரின் கொள்கைகளை தன்னகத்தே கொண்டிருப்பதால் ஷியா முஸ்லிம்கள் ஆதரவளிக்கவில்லை. வாஹபிஸ்ட்டுக்களைப் பொறுத்தவரை சியாக்கள் முஸ்லிம்கள் அல்லர். ஆகவே, 'ஷியா என்ற போலி முஸ்லிம்கள்' மீது வெறுப்புக் கொண்ட ஈராக்கிய அல்கைதா (அல்லது உள்ளூர் மக்கள் பார்வையில் வாஹபிஸ்டுக்கள்) ஷியா முஸ்லிம்களின் புனிதத் தலங்களைத் தாக்குவதன்மூலம் தமது மதவாத அதிகாரத்தை சுன்னி முஸ்லிம்கள் மத்தியில் நிலைநிறுத்த விரும்பியது. ஷியா ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவது என்ற பெயரில் அப்பாவி ஷியா முஸ்லிம்களை கொன்று குவித்தது. அவர்களது தொலைநோக்கற்ற குறுகிய மதவாதம் தற்காலிகமாகச் சில சுன்னி முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றுத் தந்தது. இருப்பினும் ஒரு கட்டத்தில் இப்படியான செயல்கள் தமக்குத் தீமையே அன்றி நன்மையைத் தரா எனப் புரிந்து கொண்ட ஈராக்கிய சுன்னி முஸ்லிம் மக்கள் அல்கைதாவை ஒதுக்க ஆரம்பித்தனர். ஆனால் அப்போது காலம் கடந்துவிட்டது.

ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான ஆயுதம் ஏந்திய கிளர்ச்சியில் இஸ்லாமிய வாதிகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் நாடளாவிய அமைப்பாக ஒழுங்குபடுத்தக்கூடிய பலமான தலைவர் இல்லாமல் இருந்த கிளர்ச்சிக் குழுக்கள் சர்காலியின் வரவுக்குப் பின் உற்சாகமடைந்தன. இருப்பினும் சர்காலியின் குறுகிய மதவாத அரசியல் அழிவுப்பாதையில் கொண்டு செல்லும் பிழையான சித்தாந்தம் என்பதைப் புரிந்து கொண்ட போராளிகளும் ஆதரவாளர்களும் மெல்ல விலகிக் கொண்டனர். ஒரு சில இடங்களில் உள்ளூர் நிலப் பிரபுக்களால் ஆதரிக்கப்பட்ட, ஈராக் அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்ட பிரதேசவாதக் குழுக்கள் அல்கைதாவை எதிர்த்துப் போராடி விரட்டி அடித்தனர். அல்கைதா ஆதரவாளர்கள் தற்போது ஈராக் எல்லையோரம் இருந்த அன்பர் மாகாணத்தை மட்டும் தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ளனர். அமெரிக்க இராணுவம் இருந்த மாகாணத்தைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியடைந்து பின்வாங்கியுள்ளது.

இன்றுள்ள ஈராக் அரசியல் நிலவரத்தைச் சுருக்கமாகப் பார்ப்போம். வடக்கே குர்திஸ்தான் பிரதேசத்தில் முன்பு ஒரு காலத்தில் ஒன்றோடொன்று எதிர்த்து சகோதர சண்டையிட்டுக் கொண்டிருந்த பர்சானி மற்றும் தலபானி தலைமையிலான இரு குர்திய இயக்கங்கள் தற்போது தமக்குள் உடன்பாடு கண்டு சமாதானமாகி உள்ளன. குர்திஸ்தான் (பிராந்திய) பாராளுமன்றத்தில் இரு கட்சிகளும் அங்கம் வகித்தன. இருப்பினும் அவ்விரு கட்சிகளினதும் ஆயுதமேந்திய உறுப்பினர்கள் தத்தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். தெற்கே ஷியா முஸ்லிம் அரேபியர்கள் வாழும் பிரதேசத்தில் SCIRI,

மஹ்தி இராணுவம் ஆகிய இயக்கங்களும் தமக்கென சில கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஆயுதமேந்திய உறுப்பினர்களையும் நிறுத்தி வைத்துள்ளனர். ஆங்காங்கே காவலரண்கள் அமைத்து பொதுமக்களைச் சோதனையிடுகின்றனர். சில நேரம் ஒரே வீதியில் பொலிஸ் சோதனைச் சாவடியும், சில கிலோமீற்றர்கள் தள்ளி ஆயுதக்குழுக்களின் சோதனைச் சாவடியும் காணப்படுவதால் மக்கள் யாருக்குத் தப்புவது என்று தெரியாமல் திண்டாடுகின்றனர். முழுக்க முழுக்க ஷியா முஸ்லிம்களையே உறுப்பினர்களாகக் கொண்ட அதேநேரம், அப்பாவி ஷியா பொதுமக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் இந்த ஆயுதமேந்திய இயக்கங்கள் கடுமையான இஸ்லாமிய மதச் சட்டங்களை அமுல்

அமைச்சு அலுவலகங்கள், பிற அதிகாரமையங்கள் வெளிநாட்டுத் தூதுவராலயங்கள், ராஜதந்திரிகளின் வாசஸ்தலங்கள் மற்றும் அமெரிக்க இராணுவத்தின் கட்டளைத் தலைமையகம், ஊடகவியலாளர்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் தலைமையகங்கள், இவற்றுடன் மேற்படி நிறுவனங்களில் தொழில் புரியும் பணியாளர்களின் குடும்பங்கள் எல்லாமே உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அடங்குகின்றன. இந்த உயர்பாதுகாப்பு வலயம் நாலாபுறமும் கோட்டை மதில்களால் சூழப்பட்ட தனியான பிரதேசம். அதாவது பாக்தாத் நகரத்தினுள் இன்னொரு நகரம்.

நிச்சயமாக இந்த உயர்பாதுகாப்பு வலயத்தினுள் வசிப்பவர்களுக்கு வெளியில் என்ன நடக்கிறதென்று



படுத்தி வருகின்றனர். இத்தகைய மத அடிப்படைவாத அரசியல் சக்திகளின் ஆதரவு தமக்கு அவசியம் என்பதால் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் இவற்றைக் கண்டு கொள்ளாமல் மறு பக்கம் பார்த்துக்கொண்டு போகின்றன. தலைநகர் பாக்தாத்தைக் கொண்டிருக்கும் மத்திய ஈராக்கைச் சேர்ந்த சுன்னி முஸ்லிம் அராபியர்கள் வாழும் எழுச்சி மிக்க பூமி. அங்கே யாரும் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக அறிவிக்க முடியாது. ∴பலூஜா போன்ற வீரகாவியம் படைத்த மண்ணுக்குச் சொந்த மானவர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து நிற்கின்றனர். அதிர்ஷ்டவசமாக, களத்தில் நிற்கும் பாத் தலைமையிலான தேசியவாதக் குழுக்களுக்கும் பிற இஸ்லாமியவாதக் குழுக்களுக்கும் இடையில் கொள்கை வேறுபாடு இருந்தபோதிலும் சகோதரச் சண்டை இதுவரை இல்லை. அமெரிக்கா இதுவரை வெளியே சொல்லாவிட்டாலும் பாக்தாத் நகரம் மட்டும் தான் ஈராக் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

தெரியாது. சர்வதேச ஊடகவியலாளர் உட்பட, இந்த வலயத்தில் மட்டுமே கிடைக்கும் ஆடம்பரங்களான 24 மணிநேர மின்சாரம், எரிபொருள், உணவுப் பொருட்கள் மற்றும் இறக்குமதிப் பொருட்கள் என்பன வெளியில் வாழும் சாதாரண ஈராக்கிய மக்களுக்கு அரிதாகவே கிடைக்கின்றன. இந்த ஏற்றத்தாழ்வான பொருளாதார நிலையால் மக்கள் தீவிரவாத இயக்கங்களை நோக்கி இலகுவில் கவர்ந்திழுக்கப்படுகின்றனர். பாதுகாப்பின்மை, பொருளாதார நெருக்கடி என்பன புதிய தீவிரவாதிகளை உருவாக்கும் காரணிகளாக இருக்கின்றன. இதுவரை கூறப்பட்ட தகவல்களின்படி ஈராக்கில் அராஜகம் கோலோச்சுவது தெளிவாகும். அங்கே ஜனநாயக முறைப்படி தெரிவான அரசாங்கம் பேரளவில் தான் ஆட்சியில் உள்ளது. இந்த இலட்சணத்தில்தான் ஈராக் பிரச்சினைக்குத் தீர் வென்ன என்று கேட்டு அமெரிக்காவில் புஷ் ஒரு ஆய்வுக்குழுவை அமைத்துள்ளார். இதுபோன்ற எத்தனையோ ஆய்வுக்குழுக்கள்



கடந்த காலத்தில் செய்த எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தாது மமதையால் தன்னிஷ்டப்படி நடந்து கொண்ட உலகின் அதிசக்தி வாய்ந்த நாட்டின் ஜனாதிபதி புஷ்ஷிற்கு காலம் கடந்த பின்பு ஞானம் பிறந்திருக்கின்றது. "சதாமைத் தூக்கிலிட்டோம்; ஜனநாயகத்தை மீட்டோம்" என்பது போன்ற வாய்ச்சவடால்கள் யாருக்கும் உதவவில்லை. சாதாரண ஈராக்கிய மக்களோ "எமக்கு பாதுகாப்பே முதல் முக்கியம். உயிர்போன பின்பு ஜனநாயகம் என்ன தேவைக்கு?" என்று கேட்கிறார்கள்.

தற்போது படிப்படியாக தனது இராணுவத்தை விலத்திக்கொள்ள அமெரிக்க அரசு முன்வந்தபோதும் ஈராக்கின் எதிர்காலம் குறித்து பல கேள்விகள் எழுகின்றன. அமெரிக்க இராணுவம் நாட்டை விட்டுப்போன உடனேயே ஆயுதமேந்திய கிளர்ச்சிக் குழுக்கள் பாக்தாத்தில் இருக்கும் அதிகாரமற்ற பொம்மை அரசைக் கவிழ்த்துவிட்டு தமக்குள் சண்டையிட்டு ஆட்சியதிகாரத்திற்காக போட்டி போடுவார்கள். நிச்சயமாக பலமானதே வெல்லப்போகிறது. அதைவிட ஈராக் மூன்று துண்டாக உடையும் அபாயமும் உள்ளது.

அப்படி உருவாகும் புதிய தேசங்கள் பிராந்திய வல்லரசுகளின் தயவிலேயே தங்கி இருக்க வேண்டி இருக்கும். குர்திஸ்தான் என்ற புதிய நாடு உருவாவதைத் துருக்கி ஏற்றுக்கொள்ளாது. துருக்கியிலும் தனிநாடு கோரும் குர்தியருக்கு இது உந்து சக்தியாக இருக்கும் என்பது மட்டுமல்ல, ஈராக்கின் சிறிய சிறுபான்மையினரான துருக்கி மொழி பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது என்ற பெயரில் அடிக்கடி தலையிடவேண்டி இருக்கும் தெற்கு ஈராக்கில் ஏற்படப் போகும் ஷியா இஸ்லாமியக் குடியரசுக்கு ஈரான் பக்க பலமாக இருக்கும். ஷியா முஸ்லிம்களின் அரசியல் அதிகாரத்தை அரபுலகில் விரிவு படுத்த தனக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன் படுத்தும். அதற்குப் பதிலடியாக சவுதிஅரேபியாவும் ஜோர்டானும் மத்திய ஈராக்கில் சுன்னி முஸ்லிம் அதிகாரத்தை நிலைநாட்டப் பாடுபடும். சவுதி அரேபியாவில் கணிசமான அளவு ஷியா முஸ்லிம்கள் வாழ்வதும் அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் எழுச்சிக்குத் தயாராவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் முதன்முறையாக வளைகுடாக் கடலின் சிறிய தீவான பாஹ்ரெயினில் ஷியாக்களின் கட்சி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுள்ளமை ஆட்சியாளரை மகிழ்ச்சிப்படுத்தவில்லை.

அமெரிக்காவைப் பொறுத்தவரை அன்று தாம் செய்த பிரச்சாரத்தைத் தாமே நம்பியதன் பலனைத் தற்போது அனுபவிக்கின்றனர். சதாமின் சர்வாதிகாரத்தில் இருந்து தம்மை விடுதலை செய்ததன் நன்றியாக ஈராக்கிய மக்கள் புதிய அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பார்கள் என்ற நம்பிக்கை பொய்த்து விட்டது. அதனால் பின்னரும் தீவிர வாதக் குழுக்களுடன் பேசும் நிலைக்குத் தள்ளப்பட்டது. முதலில் அமெரிக்கா குர்திய ஆயுதபாணிக் குழுக்களுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு அரேபியர்களை (சுன்னி - ஷியா முஸ்லிம்கள்) எதிர்த்துப் போரிட்டது. இரண்டாவதாக, ஷியா ஆயுதபாணிக் குழுக்களுடன் சேர்ந்துகொண்டு சுன்னி முஸ்லிம்களை எதிர்த்துப் போரிட்டது. கடைசியாக, சுன்னி முஸ்லிம் ஆதிக்கத்தில் இருக்கும் சில முன்னாள் பாத் கட்சித் தலைவர்களுடன் சில உடன்பாடுகளுக்கு வர உள்ளது. அரசியல் அதிகாரத்தை நிலை நாட்ட யாருடனும் கூட்டுச் சேரலாம். யாரோடும் எதிர்த்துப் போரிடலாம். ஈராக்கில் எதிர்காலத்தில் எந்த அரசியல் சக்தி ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேச பொருளாதார சமூகத்தில் சேராமல் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. அப்போது அமெரிக்காவுடன் நல்லுறவைப் பேணுதல் தவிர்க்க முடியாதது. பொருளாதார வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கின் சதாமின் காலம் ஒரு பொற்காலம். தேசிய மயமாக்கப்பட்ட எண்ணை உற்பத்தியால் கிடைத்த வருமானம் அபிவிருத்திக்குச் செலவிடப் பயன்பட்டதால் தனிநபர் வருமானமும் அதிகரித்திருந்தது. அப்போது ஈராக் டினாரின் பெறுமதி அமெரிக்க டொலருக்குச் சமமாக இருந்தது. ஈராக்கின் சபிக்கப்பட்ட நாளைய தலைமுறை இவற்றையெல்லாம் பழங்கதைகளாக மறந்து போகலாம்.

பாலஸ்தீனம்:
ஜனநாயக நாடுகள் திணிக்கும் சர்வாதிகாரம்

மறைந்த தலைவர் யாசீர் அரபாத் காலத்தில் இருந்தே பாலஸ்தீன விடுதலைக்காகப் போராடப் புறப்பட்ட போராளிகளுக்கிடையே சகோதரச் சண்டை நடைபெற்று வந்துள்ளது. அரபாத்தின் .'.பதா இயக்கம் பெருந்தொகையான உறுப்பினர்களையும் நிதிவளங்களையும் கொண்டிருந்ததால் பாலஸ்தீன விடுதலை இயக்கம் என்ற அகில்சாவழியில் இயங்கிய உதவி நிறுவனத்தைக் கைப்பற்றி முழு பாலஸ்தீனர்களுக்குமான பிரதிநிதிகளாகத் தம்மை நிலை நிறுத்திக் கொண்டனர். பிற விடுதலை இயக்கங்கள் வேறுபட்ட

கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் அளவில் சிறியதாக இருந்ததால் .'.பதாவின் தலைமையின் கீழ் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினுள் (PLO) உள் வாங்கப்பட்டனர். இந்த நிறுவனமயமாக்கலுக்குள் வர மறுத்தவர்கள் வேட்டையாடப்பட்டு ஒழிக்கப்பட்டனர்.

பாலஸ்தீன விடுதலையை மொத்தக் குத்தகைக்கு எடுத்துக்கொண்ட .'.பதா இஸ்ரேலுடன் சமரசப் போக்கையே நாடியது. அதாவது, உண்மையான இறுதி இலக்கு பாலஸ்தீனம் என்ற தனிநாடு அல்ல. இஸ்ரேலுக்குள் சுயநிர்ணய உரிமைகளைக் கொண்ட சுயாட்சிப் பிரதேசம். அரபாத்தின் சமரசப் போக்கை பல சுயாதீனப் பத்திரிகையாளர்கள் ஏற்கனவே அம்பலப் படுத்தி உள்ளனர் இஸ்ரேலிய அரசுக்குத்தான் இதனைப் புரிந்துகொள்ள நீண்டகாலம் எடுத்தது அல்லது பாலஸ்தீன தேசியவாதம் என்ற சித்தாந்தமே தனது இருப்புக்கு ஆபத்து என்று அஞ்சியதால் PLO வை பலவீனப்படுத்தும் நோக்கோடு இஸ்லாமிய மத அடிப்படைவாத ஹமாசிற்கு மறைமுக ஆதரவு அளித்தது. அதாவது விடுதலைப் போராட்டத்தினுள் மதத்தைப் புகுத்துவதன்மூலம் கிறிஸ்தவ மற்றும் மதச்சார்பற்ற பாலஸ்தீனர்களை அந்நியப்படுத்திப் பார்த்தது. அந்த நோக்கம் கணிசமானளவு வெற்றி பெற்றுள்ளதைக் கண்கூடாகக் காணலாம்.

சமாதான ஒப்பந்தத்தின் பிரகாரம் பாலஸ்தீன அதிகாரசபை அமைக்கப்பட்ட பின்னர் கூட யாசீர் அரபாத் இஸ்ரேலிடம் எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கவில்லை. குறிப்பாக, அயல்நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் பாலஸ்தீன அகதிகளின் நாடு திரும்பு வதற்கான உரிமையை அரபாத் வலியுறுத்தி வந்தார். இஸ்ரேலோ அந்த உரிமையை மறுத்தது. அதை ஏற்றுக்கொள்ளும் பாலஸ்தீனத் தலைமையை விரும்



பியது. அதற்கு ஏற்ற ஆளாகத் தற்போது அப்பாஸ் கிடைத்துள்ளார். அரபாத் எப்போது சாவார் என்று இஸ்ரேல் மட்டுமல்லாது அப்பாஸ் போன்ற .'.பதா தலைவர்களும் எதிர்பார்த்ததை, "தனது கணவனை உயிரோடு குழியில் போட்டு மூட காத்திருப்பதாக" அரபாத்தின் மனைவி சுஹாமளவுக்கு வெளிப்படையாகத் தெரிந்தது. பாலஸ்தீனப் பிரதேசங்களின் ஜனாதிபதியாக அப்பாஸ் தெரிவானதும் இனித்தான் நினைத்தபடி ஆட்டுவிக்கலாம் என்று இஸ்ரேலும் பெருமூச்சு விட்டது. ஆனால், ஹமாஸ் வடிவில் வந்தது சோதனை.

பாலஸ்தீன அதிகாரசபை நிறுவப்பட்டு செயல்பட தொடங்கியபிறகுதான் .'.பதா எதற்காக இவ்வளவு தூரம் இறங்கி வந்தது என்பது மக்களுக்குப் புரிந்தது. அரசாங்கம் மட்டுமல்லாது அரசு சார்ந்த நிறுவனங்களிலெல்லாம் .'.பதா ஆட்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களின் நண்பர்கள் வர்த்தக நிறுவனங்களை ஸ்தாபித்தனர். வர்த்தகர்கள் கொடுத்த லஞ்சத்தில் அரசு அதிகாரிகள் கொழுத்தனர். இதனால் மொத்த அதிகார சபையும் ஊழல் மயமாகி, சாதாரண பொது மக்களை வறுமைக்குள் தள்ளியது. மக்களின் உள்ளக் குமுறலை வாக்குகளாக மாற்றிக் கொண்ட ஹமாஸ் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றது.

இதில் அதிசயம் என்னவென்றால் .'.பதாவின் ஊழலாட்சி நடந்தபோது கண்ணை மூடிக்கொண்டிருந்த சர்வதேச சமூகம் ஹமாஸ் அமைத்த புதிய அரசாங்கம் இயங்கவிடாமல் தடுத்தது. பாலஸ்தீன அதிகார சபைக்கு வழங்கிக் கொண்டிருந்த நிதியுதவிகளை ரத்து செய்தது. பாலஸ்தீனப் பகுதிகளில் இருந்து வரும் வரித்தொகையை இஸ்ரேலுக்குத் திருப்பிக் கொடுக்க மறுத்தது. இதனால் பாலஸ்தீன அரசாங்கத்திற்கு எந்த ஒரு வருமானமும் இல்லாமல் போக அரச நிறுவனங்களில் தொழில் புரியும் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் போனது. மாதக் கணக்காக வழங்கப்படாத சம்பளத்தைக் கேட்டு அரச ஊழியர்கள் போராடியபோது ஹமாசிடம் போய் வாங்குமாறு கூறி விரட்டியது .'.பதா. உண்மையில் தொழிலாளர்களின் கஷ்டத்தை .'.பதா தனது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொண்டது. பாடசாலை ஆசிரியர்களை வேலைநிறுத்தம் செய்யுமாறும் ஹமாஸ் அரசாங்கத்திற்கு எதிராகப் போராடுமாறும் தூண்டியது. ஏகே 47 சகிதம் சென்ற பொலிசார் ஹமாஸ் அரச அலுவலகங்களுக்குள் நுழைந்து நாசம் விளைவித்தனர். தெருக்களில் (.'.பதா ஆதரவு) பொலிஸ்காரர்கள் ஆயுதமேந்திய ஹமாஸ் உறுப்பினர்களை வலுச் சண்டைக்கு இழுத்தனர். இது .'.பதா - ஹமாசிற்கு இடையிலான சகோதர யுத்தமாகப் பரிணமித்தது.

பாலஸ்தீனத்தினுள் உண்மையில் என்ன நடக்கிறது? அங்கே ஒரு சதிப் புரட்சிக்கு ஒத்திகை பார்க்கப் படுகின்றது! அமெரிக்கா, ஐரோப்பா, இஸ்ரேல் ஆகிய பாலஸ்தீன விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்தும் சக்திகள் .'.பதா போன்று தம்மோடு ஒத்துழைக்கக் கூடியவர்களையே எவ்வழியிலும் ஆட்சியிலிருத்த விரும்புகின்றனர். பெரும்பான்மை மக்கள் ஹமாஸ் போன்ற எதிர்க்கட்சிகளைத் தெரிவு செய்தாலும் அந்த



ஜனநாயகத்திற்கு மதிப்புக் கொடுப்பதில்லை. இருப்பினும் ∴பதா நண்பர்களுக்கு பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஆதரவு இல்லாவிட்டால், வேறுவழியில்லாமல் சதிப்புரட்சி மூலம் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். அதற்கான அடிப்படையை உருவாக்கும் பொருட்டு ஹமாஸ் ஆட்சி மக்களுக்கு பொருளாதாரக் கஷ்டங்களையும் கலவரங்களையும் இன்னபிற இன்னல்களையும் மட்டுமே கொடுக்க முடியும் என்ற கருத்து திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றது. இறுதியில் தனது கையாலாகாத்தனத்தை உணர்ந்த ஹமாஸ் அரசாங்கம் மக்கள் நலன் கருதி பதவி துறக்கவும் ∴பதாவுடன் தேசிய ஐக்கிய முன்னணிக்கு உடன்பட்டதையிட்டு நிலைமையின் தீவிரத்தைப் புரிந்துகொள்ளலாம்.

ஹமாஸ் அரசாங்கத்தை இயங்கவிடாமல் தடுக்கும் பொருட்டு ஏற்கனவே இஸ்ரேலிய படைகள் ஹமாஸ் அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் பயங்கரவாதத் தொடர்பு குற்றம் சாட்டி சிறையில் அடைத்தும், அது போதாதென்று மீதமிருந்த ஹமாஸ் அரச அதிகாரிகளின் வீடுகள், அலுவலகங்கள், வாகனங்கள் யாவும் ∴பதா குண்டர்களால் தாக்கி நாசமாக்கப்பட்டன. அவ்வதிகாரிகளுக்கு கொலைப் பயமுறுத்தல்கள் வந்த வண்ணம் உள்ளன. இதைவிட, ஒருமுறை பாப்பரசர் முஸ்லிம்களுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்து பிரச்சினை எழுந்த காலத்தில் சில பாலஸ்தீன கிறிஸ்தவ தேவாலயங்கள் இனந்தெரியாதவர்களால் தீயிடப்பட்டன. அந்த இனந்தெரியாதவர்கள் ∴பதா குண்டர்களாக இருக்கலாம் என்றும் கிறிஸ்தவர்களை ஹமாசிற்கு எதிராகத் திருப்பிவிடும் நோக்கோடு செய்யப்பட்டிருக்கலாம் என்றும் மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

இதற்கிடையில் மிக இரகசியமாகப் பல திட்டங்கள் தீட்டப்படுகின்றன. பாலஸ்தீன அதிகாரமையம் இருக்கும் ரமலா நகரம் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்படுகின்றது. அந் நகரத்தில் பாராளுமன்றம், அமைச்சுகள் ஆகியவற்றோடு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் பாலஸ்தீன மத்தியதர வர்க்கத்தின் வசிப்பிடங்களும் அமைந்துள்ளன. சுருக்கமாக, வசதி படைத்தவர்கள் மட்டும் வாழும் நகரத்தில் ஆடம்பரப் பொருட்களை விற்கும் விற்பனை நிலையங்கள் உள்ளன. ரமலாவிற்கு சிறிது தூரத்தில் இரகசியமான இடத்தில் ஜனாதிபதி அப்பாஸிற்கு விசுவாசமான சிறப்புப் பாதுகாப்புப்படை முகாமிட்டுள்ளது. இந்த முகாமில் அமெரிக்க, எகிப்து, ஜோர்தானிய இராணுவ ஆலோசகர்கள் பயிற்சியளிக்கின்றனர். இந்தச் சிறப்புப் படைக்கென மேற்குறிப்பிட்ட நாடுகளில் இருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்து கொள்ள இஸ்ரேலும் அனுமதியளித்துள்ளது.

இன்றைய நிலையில் ஹமாஸ் பல பின்னடைவுகளைச் சந்தித்தபோதும் அதன் பலம் குறையவில்லை. பல ஆயுதங்களை ஹமாஸ் இன்னமும் பயன்படுத்தாமல் பதுக்கி வைத்துள்ளது. இதனைக் கவனத்தில் எடுத்துத் தான் அப்பாஸின் சிறப்புப் பாதுகாப்புப் படைக்கு புதிய ஆயுதங்கள் தருவிக்கப்பட்டுள்ளன. சர்வதேச நாடுகளின் ஆசியுடன் வன்முறையில் ஈடுபடும் ∴பதா குண்டர்கள் ஹமாஸை வலுச்சண்டைக்கு இழுப்பதன்மூலம் சதிப்புரட்சிக்கான திட்டத்தை நிறைவேற்ற முயல்கின்றன. இந்த விடயம் ஹமாஸிற்கு நன்றாகவே தெரியும். அதனால் எல்லா வகையான சீண்டலுக்கும் அசாத்தியமான அமைதி காக்கிறது. பொறுமை இழந்த ∴பதா என்றைக்கு சதிப்புரட்சிமூலம் ஆட்சிக்கு வருகின்றதோ அன்றைக்கு பாலஸ்தீனத்தில் உள்நாட்டு யுத்தம் வெடிக்கும். அண்மையில் காசா பகுதியில் பரபரப்பாகப் பேசப்பட்ட ஹமாஸ் தலைவர் ஹனியா மீதான கொலை முயற்சியில் டஹ்லன் என்ற ∴பதா தலைவரின் பெயர் அடிபட்டது.

யார் இந்த டஹ்லன்? இஸ்ரேலுக்கு வக்காலத்து வாங்குபவராகப் பரவலாக அறியப்பட்டவர். ஜெனீவா ஒப்பந்தத்திற்கு பாடுபட்டவர். தற்போது அமெரிக்க - இஸ்ரேல் ஆதரவில் சதிப்புரட்சிக்குத் தயாராகும் இராணுவத் தந்திரோபாய வாதி. எதிர்காலத்தில் பிரபலமாகப்போகும் இவரைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

லெபனான்:
கொலையுதிர்காலம்

"மாளிகைக்குள் ஒளிந்து கொண்டிருப்பவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். உங்கள் கண்களையும் காதுகளையும் திறந்து இக்காட்சியைப் பாருங்கள். சர்வதேச ஆதரவைத் தேடியபோதும், அமெரிக்காவோ அல்லது பிற மேலைத்தேய நாடுகளோ உங்களுக்கு உதவப் போவதில்லை. ஏனெனில் லெபனான் மக்கள் தங்கள் தேசத்தை திரும்பக் கேட்கிறார்கள். ஷியா-சுன்னி முஸ்லிம்களுடன் கிறிஸ்தவர்கள், டுரூசியர்கள் அனைவரும் இணைந்துள்ளனர். உங்களுக்கு அதிகாரம் வேண்டும். எங்களுக்கு சகோதரத்துவம் வேண்டும். நீங்கள் நாட்டைத் துண்டாடி அதிகாரத்தை நிலை

நாட்ட விரும்புகிறீர்கள். நாங்கள் மக்களுக்கு சேவை செய்ய விரும்புகிறோம். நீங்கள் அமெரிக்கர்களைக் கூட்டி வருகிறீர்கள். நாங்கள் அவர்களை விரட்டி அடிக்கிறோம்"

- பெய்ரூட் நகர மத்தியில் அரசுக்கெதிரான ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு முன்பு ஹிஸ்புல்லா கட்சியின் பிரதித் தலைவர் ஷேக் நய்ம் ஹாசிமின் உரையின் ஒரு பகுதி


(டெய்லி ஸ்ரார் லெபனான் - 11.12.06)

மேற்குறிப்பிட்ட செய்திகளை நீங்கள் எந்த ஒரு சர்வதேச ஊடகத்தின் மூலமும் கேட்டிருக்க முடியாது. சுதந்திரமாகச் செய்தி வழங்குவதாக பீற்றிக் கொள்ளும் இந்த ஊடகங்கள் எல்லாம் செய்வதெல்லாம் ஒரு பக்கச் சார்பான பிரச்சாரம்தான். அவர்களின் 'அப்பா வித்தனமான செய்தியறிக்கைகளில்' எவ்வாறு அரசியல் வாடையடிக்கின்றது என்பதைச் சாதாரண மக்கள் புரிந்து கொள்வது கடினம். "ஈரானின் சொற்கேட்டு நடக்கும் சிரிய ஆதரவு ஹிஸ்புல்லா லெபனான் அரசாங்கத்தை சதிப்புரட்சி மூலம் கவிழ்க்கப் பார்க்கின்றது" என்று புஷ் சொன்ன தேவ வாக்கை மெய்ப் பிக்கும் பொருட்டு ஊடகங்கள் வழங்கிவரும் சேவை அளப்பரியது.

நீண்ட காலமாகப் பாரிய மாற்றங்களற்று நகர்ந்து கொண்டிருந்த லெபனான் அரசியல் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரீரியின் அகால மரணத்திற்குப் பின்னர் எதிர் பாராத திருப்புமுனையைச் சந்தித்தது. 2005ம் ஆண்டு தொடக்கத்தில் இடம்பெற்ற இந்தப் படுகொலைக்குக் காரணமானவர்கள் எவரும் இதுவரை சரியாக இனம் காணப்படவில்லை. இருப்பினும் அமெரிக்காவும் பிற மேற்குலக நாடுகளும் அவர்களின் ஆதரவு லெபனான் கட்சிகளும் சிரியாவைக் குற்றம் சாட்டின. இவர்களின் கூட்டு முயற்சியால் பெய்ரூத்தில் மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் செய்து ஒரு மாதிரியாக லெபனானில் இருந்து சிரிய இராணுவத்தை விரட்டி விட்டனர். அந்தப் போராட்டத்தை சிரியாவிற்கு எதிரான லெபனான் மக்களின் எழுச்சியாக, அமைதிப் புரட்சியாகக் காட்டி மகிழ்ந்தன மேற்குலக நாடுகள். சிரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின்போது பிரசன்னமாகி இருந்த சர்வ தேச ஊடகவியலாளர்கள் புரட்சியின் முன்னேற்றம் குறித்து, கிரிக்கெட் போட்டிக்கு வர்ணனை செய்வது போல செய்தி வழங்கிக் கொண்டிருந்தனர். இளைஞர் களாகப் பார்த்து விரட்டிப் பிடித்துப் பேட்டி எடுத்து அவர் களின் மனதில் இருந்த சிரியா மீதான வெறுப்பை உலகறியச் செய்தனர். சிரியா தானாகவே படை களை விலத்திக் கொள்ள முன்வந்ததும் இந்த 'மக்கள் புரட்சி' சப்பென்றாகிவிட்டது.

அந்தப் புரட்சியை நடத்துவதற்கு சில அரசியற் கட்சிகள் பெருந்தொகை பணம் செலவளித்து ஆட்களைச் சேர்த்ததையும் அது தன்னிச்சையான மக்கள் எழுச்சியாகவல்லாமல் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்த ஒன்று என்பதையும் மேற்குலக நாடுகளின் தலையீட்டையும் பற்றி எதுவும் கூறாமல் ஊடகங்கள் மறைத்துவிட்டன. அதைவிட, அந்த ஆர்ப்பாட்டங் களில் அனைத்து லெபனான் மக்கள் சமூகங்களும் பங்குபற்றவில்லை என்பதையும், குறிப்பாக, சுன்னி முஸ்லிம் சமூகமும் கிறிஸ்தவர்களும் மட்டுமே பங்கு பற்றியதென்ற உண்மையையும் கூறவில்லை. அது போகட்டும், சிரிய இராணுவம் இல்லாத சூழ்நிலையில் நடந்த பொதுத் தேர்தலில் சிரிய எதிர்ப்புக் கட்சிகள் அமோக வெற்றி பெறும் என்ற எதிர்பார்ப்பும் பொய்த்து விட்டது. பகிரங்கமாக சிரியாவை ஆதரிக்கும் ஹிஸ் புல்லா அமல் போன்ற கட்சிகள் ஆதரவுடன் கூட்டணி ஆட்சி அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

2006ம் ஆண்டு கோடைகாலத்தில் தெற்கு லெப னான்மீது இஸ்ரேல் படையெடுத்து ஹிஸ்புல்லாவை அழிக்கிறேன் என்று சொல்லி விமானக்குண்டுகளை வீசி லெபனான் பொதுமக்களையும் பொருளாதாரத் தையும் அழித்த ஒரு மாதகால யுத்தம் ஓய்ந்து இஸ்ரேல் பின்வாங்கிய பின்பு, எதிர்பார்த்ததுபோல அரசியல் களத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டன. போர் நடந்த காலத்தில் காணாமல் போயிருந்த பிரதமர் சினியோ ராவும் சாட் ஹரீரி தலைமை தாங்கும் (சுன்னி முஸ்லிம்









களை மட்டும் கொண்ட) கட்சியும், தமது வழக்கமான மேற்குலக சார்பு அரசியலைக் காட்ட ஆரம்பித்தனர். அமெரிக்க ஆலோசனையின்படி தமது ஆதரவாளர்களை மட்டும் கொண்ட அரசாங்கத்தை அமைக்க திட்டம் தீட்டினர். இதற்கிடையில் ரபீக் ஹரீரி படுகொலையில் சிரியாவை மாட்டிவிட ஐ.நா. விசாரணைக் குழு அமைக்கவிருக்கும் நீதிமன்றத்திற்கு பச்சைக் கொடி காட்டினர். பிறகட்சிகளை கலந்தாலோசிக்காமல் நடந்த இந்த இரகசிய ஏற்பாடுகளின் விளைவுகளை முன்கூட்டியே புரிந்துகொண்ட ஷியா முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஹிஸ்புல்லா மற்றும் அமல் ஆகிய கட்சிகளின் அமைச்சர்கள் பதவி விலகினர். இதனால் சினியோராவின் அரசாங்கம் கவிழும் அபாயத்தை எட்டியது. இந்தக் கட்டத்தில்தான் ஹிஸ்புல்லா தலைமையிலான அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பெய்ரூத்தில் இடம் பெற்றன.

அந்த ஆர்ப்பாட்டங்களில் நாடுமுழுவதும் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட போதும் ஹிஸ்புல்லா மட்டுமல்லாது 'அமல்' கட்சியின் ஆதரவாளர்களுடன் அவுன் தலைமை தாங்கும் 'சுதந்திர தேசாபிமான இயக்கம்' என்ற கிறிஸ்தவ கட்சியின் ஆதரவாளர்களும் பங்குபற்றிய போதும் சர்வதேச ஊடகங்களின் கண்களுக்கு ஹிஸ்புல்லா மட்டுமே தென்பட்டது. மேலும் அவை இதனை சிரிய ஆதரவு சதிப்புரட்சிக்கான தயார்ப்படுத்தலாக பார்த்தன. 2005ம் ஆண்டு மேற்குலக ஆதரவாளர்களின் போராட்டம் 'மக்கள் புரட்சி' யாகத் தெரிந்தது. 2006ம் ஆண்டு மேற்குலக எதிர்ப்பாளர்களின் போராட்டம் 'சதிப் புரட்சி'யாக தெரிகின்றது! இதுவன்றோ ஊடக தர்மம்.

லெபனானின் அரசியல் சக்திகளை ஊடகங்கள் சிரிய ஆதரவு, சிரிய எதிர்ப்பு என்று வகைப்படுத்திக் காட்டிய போதும், நாம் அதனை மேற்குலக சார்பு, மேற்குலக எதிர்ப்பு என்றே புரிந்து கொள்ள வேண்டும். லெபனான் மட்டுமல்லாது ஈராக், பாலஸ்தீனம் ஆகிய நாடுகளில் நடக்கும் சகோதர யுத்தங்கள், உள்நாட்டுப் போர்கள் ஆகிய கலைச்சொற்களின் அர்த்தமும் அதுதான்.

லெபனானில் இதுவரை ஜனநாயகத்தை மதித்து அமைதியாக நடந்த மக்கள் போராட்டங்கள் விரைவில் ஆயுதப் போராட்டமாக மாறி வன்முறை பெருகும் என்ற அச்சம் தற்போது பொதுமக்கள் மனதில் ஏற்பட்டுள்ளது. எழுபதுகளில் இருந்த லெபனான் போல, ஒவ்வொரு சமூகமும் தமக்கென ஆயுதக்குழுக்களை வைத்துக் கொண்டு அரசியல் அதிகாரத்திற்காக கடுமையான யுத்தம் புரிந்த காலம் மீண்டும் வருகின்றது என்பதை பலர் நினைத்துப் பார்க்கவே விரும்புவதில்லை. இருப்பினும் பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படாமல் இவ்விரு துருவங்களுக்கிடையிலான இடைவெளி விரியுமாயின், யாரும் விரும்பாத உள்நாட்டுப்போர் மீண்டும் ஏற்படலாம்.


லெபனானின் உள்நாட்டு விவகாரமாயினும் சிரியாவின் நலன்களும் அடங்கியுள்ளன. இனிவரப்போகும் போர் சிரியாவையும் இஸ்ரேலோடு மோத வைக்கலாம் அல்லது அப்படி நடக்கலாம் என்று இஸ்ரேலிய இராணுவம் எதிர்பார்க்கின்றது. கோலான் குன்றுப் பகுதியில் சிரியா படைக்குவிப்புகளையும் ஆர்ட்டிலெறி பீரங்கிகளையும் நகர்த்தி வருவதாக இஸ்ரேலிய இராணுவப் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் போர் மூளுமாயின் சிரியாவின் நட்பு நாடு ரஷ்யாவிலிருந்து வரும் ஆயுத விநியோகத்தை தடை செய்ய இப்போதே இஸ்ரேல் சர்வதேச மட்டத்தில் முயற்சி செய்கின்றது. சிரியாவிடம் உள்ள யுத்த விமானங்கள், ஆயுதத் தளபாடங்கள் என்பன சோவியத் காலத்தில் வாங்கப்பட்டவை என்பதும், பழசாகிக் கொண்டிருக்கும் இந்தத் தளபாடங்கள் தற்போதுள்ள நவீன ஆயுதங்கள் முன்னால் அதிகளவு பயனைத் தரப்போவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. லெபனானில் இருந்து சிரியப் படைகள் வெளியேறினால் அங்கு உள்நாட்டுப்போர் மீண்டும் வரும் என்ற அச்சம் முன்பிருந்தது. இன்றைய நிலையில் அப்படியொரு போர் ஏற்படாவிட்டால் சிரியா அதனை உருவாக்கும். அரசியற்படுகொலைகள் அதனைக் கட்டியம் கூறி

நிற்கின்றன.

போர் தவிர்க்கவியலாதது என்று சிரியாவும் உணர்ந்துள்ளது. தற்போது பலதரப்பட்ட இராஜதந்திர நடவடிக்கைகளால் வன்முறையைத் தவிர்த்து வந்தாலும், சர்வதேச அங்கீகாரத்தைத் தேடினாலும் வளைகுடாப் போர் போன்ற தருணங்களில் அமெரிக்கா பக்கம் நின்றாலும் பொருளாதாரத்தில் தாராளவாதத்தைப் புகுத்தினாலும் சிரியாவின்மீதான அமெரிக்காவின் சந்தேகம் தீரவில்லை. சிரியா இஸ்ரேலுடன் நட்புறவு ஒப்பந்தம் செய்யாததாலும் இஸ்ரேலை எதிர்க்கும் தீவிரவாத இயக்கங்களுக்கு அடைக்கலமும் ஆதரவும் அளித்து வருவதாலும் அமெரிக்கா இன்னமும் சிரியாவை ஒதுக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இருந்து எடுக்கவில்லை. மறுபக்கத்தில் அந்த நிபந்தனைகளுக்கெல்லாம் உடன்பட்டால், கோலான் குன்று போன்ற இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை நிரந்தரமாக விட்டுக் கொடுக்கவேண்டியிருக்கும். லெபனானில் எந்தச் செல்வாக்கும் செலுத்த முடியாது. அவற்றைவிட இஸ்ரேல் இறுதியில் தானே வென்றதாக அகங்காரத்துடன் நடந்து கொள்ளும். 2006இன் யூலை மாத லெபனான் யுத்தத்தில், முதல்முறையாக ஒரு அரபு கெரில்லாக் குழு, பன்மடங்கு பலசாலியான இஸ்ரேலை ஒரு மாதமாக எதிர்த்து நின்று வெற்றிவாகை சூடியதாக ஹிஸ்புல்லா மார்தட்டிக் கொள்வதும், அந்த வெற்றிக் களிப்பில் சிரியா தனக்கும் பங்கிருப்பதாக பெருமிதமடைவதும், எதிர்காலத்தில் இஸ்ரேலுக்குப் பயந்து மண்டியிடத் தேவையில்லை என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

மத்திய கிழக்கின் பலமான இராணுவத்தைக் கொண்டுள்ள இஸ்ரேலை எதிர்த்து போரிடுவதற்கு ஹிஸ்புல்லா, ஹமாஸ் போன்ற கெரில்லாக் குழுக்கள் பிரயோசனமாக இருக்கும் என்று சிரியா கணக்குப் போட்டுள்ளது. இவ்வியக்கங்கள் இஸ்ரேலிய களநிலவரங்களால் ஏற்கனவே பரிச்சயமானவர்கள் என்பதும், சர்வதேச மட்டத்தில் தேவையற்ற பிரச்சினை எழுவதைத் தவிர்க்கும் பொருட்டு, சிரியா இதுவரை அவ்வியக்கங்களுக்கான அரசியல் ஆதரவுக்கப்பால் நகரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. லெபனானிற்குள் இன்னொரு இஸ்ரேலிய எதிர்ப்புச் சக்தி இதுவரை செயலாக்கமற்று உறங்கிக் கிடக்கின்றது. லெபனானில் பல்வேறு இடங்களில் நிரந்தரமாகி விட்ட பாலஸ்தீன அகதி முகாம்களும், அங்கே வாழும் பல்லாயிரக் கணக்கான, இழப்பதற்கு எதுவுமற்ற அகதிகளும்தான் அந்த சக்தி.

பெரும்பாலான அகதி முகாம்கள் ∴பதா அல்லது PLFP போன்ற பாரம்பரிய பாலஸ்தீன இயக்கங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. அந்த இயக்கங்களின் பயிற்சி பெற்ற போராளிகளும் ஆயிரக் கணக்கான ஆயுதங்களும் நீண்ட காலமாக அமைதியாக ஓய்வெடுக்கின்றன. இஸ்ரேல் மீண்டுமொரு யுத்தத்தை லெபனான் மீது திணிக்குமானால், அது ஹிஸ்புல்லாவுடன் மட்டும் நிற்காது. பாலஸ்தீன முகாம்களில் அகதிகளை பாதுகாக்கும் ஆயுதங்களையும் அபகரிக்க எத்தனித்தால், பாலஸ்தீனர்களும் இறுதிவரை எதிர்த்து சண்டையிடக் காத்திருக்கின்றனர். "இம்முறை யுத்தம் வந்தால் நாம் லெபனானிலேயே தொடர்ந்து தங்கப்போவதில்லை. இஸ்ரேலிய இராணுவத்தை எதிர்த்து சண்டையிட்டுக்கொண்டே நமது தாயகத்திற்கு (பாலஸ்தீனம் - இஸ்ரேல்) நாம் திரும்பிப் போவோம்." இவ்வாறு கூறினார் ஒரு அகதிமுகாம் நிர்வாகி.



சுருங்கக் கூறின், லெபனானின் உள்நாட்டுப் போரினை ஹிஸ்புல்லா ஆரம்பித்து வைக்கும் சாத்தியங்கள் குறைவு. சுன்னி முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாளித்துவ அமெரிக்க சார்பான சாட் ஹரீரியின் கட்சியைச் சேர்ந்தவர்களே வன்முறைகளில் இறங்குவர். அந்தக் கட்சியைச் சேர்ந்த தீவிரவாதிகள் இப்போதே இரகசியமாக ஆயுதங்களை வாங்கி வருகின்றனர். கிறிஸ்தவர்கள் இரண்டு முகாம்களாகப் பிரிந்துள்ளதால், அவர்கள் இம்முறை தீர்மானகரமான அரசியல் சக்தியாக இருக்கப் போவதில்லை. எழுபதுகளில் ஷியா, டுரூசிய சமூகங்களில் இருந்து எழுந்த இடதுசாரி சக்திகளை எதிர்த்து, வலதுசாரி கிறிஸ்தவர்கள் போரிட்டனர். அப்போது பிரான்ஸ் கிறிஸ்தவ ஆயுதக் குழுக்களை பலப்படுத்தியது. அந்த இடத்தில் தற்போது அமெரிக்காவும் சாட் ஹரீரியின் ஆயுதக்குழுவும் வந்து கொண்டிருக்கின்றன.

லெபனான் பிரச்சினை வெறுமே மதம் சார்ந்தது மட்டுமல்ல.

அது வர்க்கங்களின் முரண்பாடு, வல்லரசுப் போட்டி ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

மலையகத்தமிழ் இலக்கியமும் அதன் சித்தாந்த நிலைப்பாடுகளும்

லெனின் மதிவானம்

மலையக இலக்கியம் எனும் இலக்கியத் தொகுதியானது, ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கின் மிக முக்கியமான கூறாகப் போற்றப்பட்டு வருகின்றது. இலக்கியத்தில் ஜனநாயகப் பண்பு வளர, இதன் முக்கியத்துவம் சிறப்பாகவே உணரப்பட்டு வெளிக் கொணரப்படும். மலையகத்தின் தனித்துவத்தையும் ஈழத்து இலக்கியத்தின் பொதுமையையும் இணைத்து நிற்கும் தமிழ் இலக்கிய மரபு தோன்றி வளர்ந்துள்ளமையே இதற்கான அடிப்படையாகும்.

மலையக சமூகத்தினை அடிநிலையாகக் கொண்டு தோன்றிய இலக்கியங்களை ஈழத்து இலக்கியத்துடன் அல்லது முழுத் தமிழ் இலக்கியங்களுடன் ஒப்பு நோக்கி அவற்றின் இலக்கியத் தரத்தினை மட்டிடுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. மலையகத்தில் இத்தகைய இலக்கியங்கள் தோன்றுவதற்குக் காலாக இருந்த சமூக, வரலாற்று, பண்பாட்டுச் சக்திகளை குறித்துக் காட்டுவதுடன் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரிணமிப்பில் இதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்ட முனைவதாகவே இவ்வாய்வு முயற்சி அமையும்.

மேற்குறித்த கருதுகோளின் அடிப்படையில் மலையக இலக்கியம் குறித்து எழுத முற்படுகின்ற இவ்வாய்வு, அதன் முனைப்பற்ற போக்குகளை மட்டுமே சுட்டிக் காட்ட முனைவதாக அமைகின்றது. இதனை நிரூபிக்க நீண்ட பட்டியல் நீட்ட நான் விரும்பவில்லை. அட்டவணை போட்டு இலக்கியக் கணக்கெடுக்கும் இரசிக விமர்சகர்களுக்கு அப்பணியினை விட்டுவிட்டு, ஈழத்துத் தேசிய இலக்கிய வளர்ச்சிப்போக்கில் மலையக இலக்கியம் எத்தகைய வளர்ச்சியினைப் பெற்று வந்துள்ளது என்பதனையும், அதற்கு அனுசரணையாக இருந்த இலக்கியங்களையும் எழுத்தாளர்களையும் சுட்டிக் காட்டிச் செல்வது இதன் சாராம்சமாகும். தனிப்பட்ட எழுத்தாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது குறிப்பிட்ட போக்கினைப் பிரதிநிதித்துவப்படுத்திய எழுத்தாளர்களின் பெயர்களே இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் மலையக இலக்கியம்:

இலங்கையை ஈழம் எனக் கூறுதல் பழந் தமிழ் இலக்கிய மரபு. தமிழுடனுள்ள பொதுத் தொடர்பையும் அதேவேளையில் தனித்துவத்தினையும் நன்கு எடுத்துக் காட்டுவதற்கு இப்பதப் பிரயோகம் பொருத்தமானதாக அமைந்துள்ளது. இதனால் தமிழ் இலக்கிய வளர்ச்சியைக் குறிப்பிடும்போது இலங்கை எனும் சொல்லே பெரும் வழக்காக கையாளப்படுகின்றது. இப்பதப் பிரயோகத்தினை மீட்டெடுத்து சனரஞ்சகப் படுத்தியோர், 1954 முதல் இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் தேசிய பரிணாமத்துக்காகப் போராடிய முற்போக்கு இயக்கத்தினரே.[1]

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றினைக் கூர்ந்து நோக்குகின்றபொழுது இலங்கையில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் வாழ்வியலையும் சமூக அடிப்படைகளையும் வெளிப்படுத்துகின்றவையாக அவை அமைந்து காணப்படுகன்றது. இலங்கையில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்கள் குழுமத்தினர் தமது தனித்துவமான சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்கள் காரணமாக பலவிதமான தனித்துவப் பண்பு

களைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். இத் தனித்துவப் பண்புகளை அச்சமூகத்தின் அடிநிலை யாகத் தோன்றும் இலக்கியங்கள் பிரதிபலிக்கும் என்பது சமூக யதார்த்தமாகும்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி இத்தகைய தனித்து வமான பண்புகளை ஆதாரமாகக் கொண்டு ஈழத் தமிழரை பின்வரும் மூன்று பிரிவாக வகைப்படுத்திக் காட்டுகிறார்.

1. இலங்கையில் பாரம்பரியமாக வரலாற்று காலம் முதல் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள். இவர்கள் இலங்கையில் வடகிழக்கு பிரதேசங்களில் பெருந் தொகையினராகக் காணப்படுகின்றனர்.

2. இலங்கையில் வாழ்ந்து வரும் பாரம்பரிய இஸ்லாமிய மதத்தினர். இவர்கள் வட, கிழக்குத் தெற்குப் பகுதிகளிலும் மத்திய பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

3. 19ம் நூற்றாண்டின் நடுக்கூற்று காலப்பிரிவில் பிரித்தானிய ஆட்சியினால் இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு இலங்கையின் தேயிலை, இறப்பர் பெருந் தோட்டங்களில் வாழ்ந்து வரும் தென்னிந்தியத் தமிழ் மக்கள், இவர்கள் தம் பாரம்பரிய தென்னிந்தியத் தமிழ் வாழ்க்கையைத் தொடர்ந்து பேணி வருகின்றனர். இவர்கள் பிரித் தானிய ஆட்சி முடிவில் இலங்கையர் அல்லாதோர் எனக் கொள்ளப்பட்டனர். இதனால் அவர்களுள் பெரும் பாலானோரை மீண்டும் தென்னிந்தியாவிற்கு அனுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு சமூக அடிப்படைகள் காரணமாக முதலாவது பிரிவினருக்கும் மூன்றாவது பிரிவின ருக்கும் இடையில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. குறிப்பாக, தமிழர் என்ற அடிப்படையில் சிங்களப் பெருந்தேசியவாதத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறைகள் இவ்விரு பகுதிகளையும் பாதித்தது எனலாம். இப்பாதிப்பு முதலாவது பிரிவினரையே அதிகமாகப் பாதித்தது என்பது இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். பொருளாதாரம் என்னும் மேல்கட்டுமானமே சமூக அமைப்பினைத் தீர்மானிப்பதாக உள்ளதால் இவ்விரு பிரிவினரிடையே காணப்பட்ட பொருளாதார அமைப்பு முறையே சமூக வேறுபாடுகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

எனவே, மலையக இலக்கியம் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ள அதேசமயம் தமிழ் இலக்கியத்தின் பிரிக்க முடியாத பிரதான கூறாகவும் அமைந்துள்ளது.

மலையக இலக்கியத்திற்கான சமூகப் பின்புலம்:

19ம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மேற்கு ஐரோப்பிய காலனித்துவ வாதிகள் மூன்றாம் உலக நாடுகளைத் தமது காலனித் துவ ஆட்சிக்கு உட்படுத்தியதுடன் அந்நாடுகளில் பெருந்தோட்ட பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு தேவையான தொழிலாளர்களை தமது காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகளில் இருந்தே இறக்கு மதி செய்தனர். இவ்வடிப்படையில் ஒப்பந்த பிணைப்புச்

ஈழத்து இலக்கியச் செல்நெறியில் மலையக இலக்கியம் அதன் பிரிக்க முடியாத பிரதேச இலக்கியக்கூறாக காணப்படுகின்றது. அவ்வகையில் மலையக இலக்கியமானது ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளதுடன் ஈழத்து இலக்கியப் பரப்பினை ஆழ அகலப்படுத்தியுள்ளது எனலாம்.

செய்து கொண்டு இங்கு அழைத்து வரப்பட்ட தொழிலாளர்களும், அவர்களோடு இணைந்து வந்த வர்க்கங்களுமே மலையக மக்கள் என்ற பதம் கொண்டு அழைக்கப்படுகின்றனர்.

தென்னிந்தியத் தமிழ் கிராமியப் பின்னணியில் வாழ்ந்த இம்மக்கள் குழுமத்தினர், ஒரு நிலவுடைமை சமூக அமைப்பின் கீழ் விவசாயிகளாக கட்டுண்டு கிடந்தனர். இலங்கையில் முதலாளித்துவ சமூக அமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந் தோட்டப் பயிர்ச் செய்கை முறையில் பரந்துபட்ட தொழிலாள வர்க்கமாக மாற்றப்பட்டனர். இச்சமூக அமைப்பு மாற்றம் மிக முக்கியமானதாகும். தென்னிந்தி யாவில் ஓர் நிலவுடைமை சமூக அமைப்பில் விவசாயி களாக வாழ்ந்து இம்மக்கள் விவசாய வர்க்கத்திற்குரிய குணாதிசயம் கொண்டவர்களாக தமக்கென சிறுநிலத் தையுடையவர்களாகவும் காணப்பட்டனர் என்பதனைப் பின்வரும் நாட்டார் பாடல் வரிகள் எமக்கு உணர்த்து கின்றன.

ஊரான ஊரிழந்தேன்
ஒற்றைப் பனைத் தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயை நா மறந்தேன்
என்ற வரிகளும்
பாதையிலே வீடிருக்க
பழனிசம்பா சோறிருக்க
எருமை தயிரிருக்க
ஏண்டி வந்தோம் கண்டி சீமை [2]
என்ற வரிகளும்

வறுமை, வரட்சி, சுரண்டல், சாதிய அடக்கு முறைகள் என்பனவற்றின் காரணமாக, தென்னிந்தி யாவில் இருந்து இங்கு வந்த மக்கள் புகுந்த மண்ணில் ஏற்பட்ட ஏமாற்றம், சுரண்டல், அடக்குமுறைகள் என்பனவற்றின் காரணமாக, அவர்களின் வஞ்சிக்கப் பட்ட வாழ்க்கையினை நினைத்தபோது தமது தாயகம் பற்றிய ஏக்க உணர்வுகளாக மேற்குறித்த பாடல்கள் பிரவாகம் கொண்டன.

இம்மக்கள் எங்கிருந்தோ வந்து இங்கு தயாராக இருந்த பொருளாதாரத்தை சூறையாடியவர்களல்ல.

தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தாரை வார்த்து மலையக மண்ணை வளம்படுத்தியவர்கள். இது குறித்து மலையகப் பெண்ணொருத்தி தன் சரித்திர தூரிகை கொண்ட புதியதோர் சித்திரத்தை இவ்வாறு கீறுகின்றாள்,

கூனியழிச்ச மலை
கோப்பி கண்டு போட்ட மலை
அண்ணனை தோத்த மலை
அந்தா தெரியுதடி [3]

இப்பாடல் வரிகளை விபரிக்கும்போது மலையகப் பெருங்கவி சி. வி. வேலுப்பிள்ளை, "காடுகளை அழித்துப் புதிய மலைகளை உருவாக்கும்போது சாவு என்பது சர்வ சகஜமானது. மலையகத்தின் ஒவ்வொரு மலைகளும் நிச்சயம் சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்தத் தக்க யாரோ ஒரு தங்கையின் அண்ணனைத் தோத்த மலையாகத்தான் இருக்கும். மலையகத்தின் மலைகள் மீது உங்களுக்கு ஏறிடச் சந்தர்ப்பம் வாய்த்தால், உங்கள் காலடிகளைக் கவனமாக எடுத்து வையுங்கள். ஏனெனில் அவை அண்ணனைத் தொலைத்த மலைகள்" எனக் கூறுவது மலையக மக்களின் வாழ் நிலைகளைச் சிறப்பாகவே உணர்த்தி நிற்கின்றது.

இம்மக்களின் சமூக அமைப்பின் மாற்றம் குறித்து கவிஞர் முத்துவேல் தமது ஆய்வில் "மலையக சமூக அமைப்பு கலப்பே இல்லாத முதலாளித்துவ சமூக அமைப்பாகவே தோற்றம் பெற்று ஸ்தாபிதமானது. மலையகத்தின் அடிநிலை மக்கள் 'இழப்பதற்கென' சொத்துடைமை ஏதும் இல்லாத கூலித் தொழிலாளர்களேயாவர். முதலாளித்துவம் தோற்றுவித்த சொற்ப கூலிக்காக உடல் உழைப்பை விற்கும் தொழிலாள வர்க்கமாகவே இப்பிரதேசத்தில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு மூலதனக்காரர்களுக்கும், உழைப்பை விற்பவர்களான பாட்டாளி வர்க்கத்தினருக்கும் இடையில் நிலவுகின்ற உற்பத்தி உறவே மலையக சமூக, மனித ஊடாட்டத்தின் அடிப்படையாகும். இ.து ஒரு முரண்பாடுடைய உறவு. அதுவும் நேச முரண்பாடாக அன்று பகை முரண்பாடாக வரலாற்றுப் பரிணாமத்தை அடையச் செய்யும் மூலாதார அம்சமான வர்க்கப் போராட்டமானது இப்பகை முரண்பாட்டின் அடிப்படையில் பிறப்பதேயாம்" எனக் குறிப்பிடுகின்றார்.[5]

இவ்வாறாக மலையக சமூகத்தின் அடிநிலை மக்கள் குறித்து நோக்குகின்றபோது, "எங்கிருந்தோ வந்து தயாராக இருந்து பொருளாதார வாய்ப்புகளை அபகரித்துக் கொண்ட மக்கள் அல்ல மலையக மக்கள். இவர்கள் எந்தவொரு நாகரிக சமூகத்தினதும் மூலத்தைப் போலவே, காடுகளை அழித்து வளமாக்கி புதியதோர் பொருளாதாரத்துறையை ஏற்படுத்திய வர்கள். இவர்கள் அமைத்த இந்தப் பொருளாதாரத் துறையும் அதைச் சார்ந்த அமைப்புக்களும், இன்னும் இந்நாட்டின் ஆதாரமாக இருக்கின்றன. இந்த மக்களின் உருவாக்கமும் வரலாறும் யாரையும் போலவே இவர்களும் இம்மண்ணின் மக்களே என்பதை ஆதாரப்படுத்துகின்றன. நமது வரலாறு குறித்த கண்ணோட்டம் நம்மிடையே நம்பிக்கையையும் உறுதியையும் வளர்க்க உதவும்" [6]

தென்னிந்தியத் தமிழ் கிராமியப் பின்னணியில் வாழ்ந்த இம்மக்கள் குழுமத்தினர், ஒரு நிலவுடைமை சமூக அமைப்பின் கீழ் விவசாயிகளாக கட்டுண்டு கிடந்தனர். இலங்கையில் முதலாளித்துவ சமூக அமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை முறையில் பரந்துபட்ட தொழிலாள வர்க்கமாக மாற்றப்பட்டனர். இச்சமூக அமைப்பு மாற்றம் மிக முக்கியமானதாகும்.

ஒருபுறமான காலனித்துவ ஆதிக்கமும் மறுபுறமான சமூக உருவாக்கமும் இணைந்து தாம் தனித்துவமான சிறுபான்மை இனமென்ற உணர்வை, பிரக்ஞையை உருவாக்கியுள்ளது எனலாம். இன்றுவரை இவர்கள் பல்வேறு விதமான சுரண்டல்களுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உட்பட்டு வருகின்றனர். ஒரு தேசிய சிறுபான்மை இனத்தின் எழுச்சிபற்றிய கருத்தினை முன்வைக்கும் ஒரு பிற்போக்குவாதியின் பார்வையும் ஓர் மார்க்சியவாதியின் பார்வையும் அடிப்படையில் முரண்பாடுள்ள ஒன்றாகும் என்பதும் இவ்விடத்திற் கவனத்திற் கொள்ளத்தக்கதொன்றாகும். மலையகத் தேசிய எழுச்சியினை, தேசியம் குறித்த பார்வையினை உழைக்கும் மக்கள் சார்பான கண்ணோட்டத்துடன் நோக்குவது அதன் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு கால்கோளாக அமையும்.

இவ்விடத்தில் பிறிதொரு விடயம் குறித்தும் கவனம் செலுத்துதல் அவசியமானதாகும். இதுவரை காலமும் மலையக மக்கள் என்ற பதம் பெரும்பாலும் மலையகப் பெருந்தோட்டத்துறை சார்ந்தவர்களையும் அவர்களோடு இணைந்த மக்கள் குழுமத்தினரையுமே குறிப்பதாக அமைந்து காணப்பட்டது. அண்மைக் காலத்தில் மலையகத் தேசிய சிறுபான்மை இனம் என்ற உணர்வின் வளர்ச்சியுடன் மலையகச் சமூக அமைப்புடன் தொடர்பு கொண்ட அனைவரையும் மலையகத் தமிழர் என்ற சமூக அடையாளத்துடன் இணைத்து நோக்கப்பட வேண்டும் என்ற கருத்துநிலை வளர்ச்சியடைந்துள்ளது. அவ்வாறு மலையகத் தேசிய சிறுபான்மை இனத்தினர் என்ற அடையாளத்துடன் இணைக்கப்பட வேண்டியவர்கள் பின்வருமாறு:

1. மலையகத்தில் நிரந்தரமாக வசிக்கின்றவர்கள், உதாரணமாக, தோட்டப்புற உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் உத்தியோகஸ்தர்கள், நகர்ப்புற வியாபாரிகள் போன்றோர்.
2. மலையகத்தில் இருந்து வெளியேறி மலையகத்திற்கு வெளியில் வாழ்ந்து கொண்டிருக்கும் அதேசமயம் மலையகத்தை வசிப்பிடமாகக் கொண்ட இந்திய வம்சாவளியினர்
3. மலையகத்தில் இருந்து வெளியே திரும்ப முடியாத அல்லது திரும்ப விருப்பம் இல்லாத மலையக அடையாளத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும்

இந்திய வம்சாவளியினர்

4. கடந்தகால அரசியல், பொருளாதார நிர்ப்பந்தம் காரணமாக மலையகத்தில் இருந்து வெளியேறி வடகிழக்கின் எல்லைப்புறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் (மலையக அடையாளத்தால்) இந்திய வம்சாவளியினர்

5. வடகிழக்கு மக்களுடன் சம்பந்தம் இல்லாத அதேசமயம் மலையகத்திற்கு வெளியில் வாழும் (மலையகத்திற்கு வராத) இந்திய வம்சாவளி மக்கள்[7]

6. மலையக பெருந்தோட்டத்துறை உற்பத்தியுடன் சம்பந்தப்படாத அதேசமயம் நகர்ப்புறங்களில் சேரியில் வாழும் நகரநிலை தொழிலாளர்கள்

இம்மக்கள் பிரிவினர் வடகிழக்குத் தமிழரின் பண்பாட்டினைவிட மலையகத் தமிழரின் பண்பாட்டுப் பாரம்பரியங்களை அதிகம் தழுவுகின்றவர்களாகவும் இவற்றுடன் அதிக ஒற்றுமை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். ஏனைய மக்களோடு ஒப்பிடுகின்றபோது இவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இம்மக்களின் சுயநிர்ணய உரிமை, சுரண்டல் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டம் என்பனவற்றினை முன்னெடுக்கின்றபோது சிறு சிறு தேசிய இனங்களுக்கானதென தனித்தனியாக எடுக்க முடியாது. அதேசமயம் அவற்றைப் புறக்கணித்து விடவும் முடியாது. எனவே, அவற்றினை மலையகத் தமிழர் என்ற தேசியத்துடன் இணைத்து முன்னெடுப்பதே முற்போக்கானதாகும்.

மலையகம் என்பதைப் பரந்த அடிப்படையில் நோக்குகின்றபோது மேற்குறிப்பிட்ட மக்கள் திரளினரை உள்ளடக்க வேண்டும் என்ற கருத்து ஆரோக்கியமானதாகும். ஆகவே, மலையக இலக்கியம் குறித்த ஆய்வும் இத்தகைய பரந்த கண்ணோட்டத்திலேயே அமைய வேண்டும். மலையக இலக்கியம் குறித்த ஆய்வு இன்றுவரை பின்வருவோரையே ஆதாரமாகக் கொண்டு அமைந்துள்ளது.

1. பெருந்தோட்ட உற்பத்தியுடன் தொடர்பு கொண்ட தொழிலாளர்களைப் பற்றியது. இதில் கங்காணி மார்களும் அடங்குவர்.

2. தோட்டத்துறை சம்பந்தப்பட்ட நிர்வாக உத்தியோகஸ்தர்கள், ஆசிரியர்கள் என்போரையும் பற்றியது.

3. பெருந்தோட்டத்துறை சார்ந்த நகரங்களில் வாழும் வணிகர்களைப் பற்றியது.

மலையக ஆக்க இலக்கியங்களும் ஆய்வுகளும் மேற்குறித்த மக்கள் கூட்டத்தினரைப் பற்றியதாகவே இருந்துள்ளது. மலையகத் தேசியம் குறித்த பார்வையை பரந்த கண்ணோட்டத்தில் நோக்கின் அதனுடன் இணைக்கப்பட வேண்டிய சகலரையும் இணைத்து ஆய்வு செய்யப்பட வேண்டியது அறிஞர்களின் கடன். இப்பார்வை மலையக இலக்கியத்தைச் ஆழ அகலப் படுத்தும்.

மலையக இலக்கியத்தில் சித்தாந்த நிலைப்பாடுகள்:

மலையக சமூக அமைப்பில் நிலவும் ஒரு கூட்டு வாழ்க்கை முறையானது உழைப்புடன் அல்லது உற்பத்தியுடன் தம்மை சம்பந்தப்படுத்திக் கொள்ளும் போது அதன் வெளிப்பாடாக பீறிட்டு எழுகின்ற கலை இலக்கிய உணர்வுகளும் இவ்வம்சத்தினைப் பிரதிபலிப்பதாக அமையும் கூட்டு வாழ்க்கை முறையானது சோகத்தை இசைத்தாலும் அவைகூட சமூக அசைவியக்கத்தை முன்னெடுப்பதாகவே அமையும்.

இவ்வகையில் மலையக இலக்கியத்தினைப் பின்வரும் அடிப்படைகொண்டு நோக்குதல் பயன்மிக்கதொன்றாகும். சமூக மாற்ற செயற்பாடுகளில் இலக்கியம் வழிகாட்ட வேண்டும். அதனை சாதிப்பதற்கான அணுகுமுறையை வாழ்க்கைப் பிரச்சனைகளை தெளிவுபடுத்துவதாக அமையவேண்டும். எனவேதான் இலக்கியம் காலத்தைப் பிரதிபலிப்பதாக மட்டுமன்றி அதனை உருவாக்குகின்ற பணியினையும் ஆற்றுகின்றது. இவ்வம்சம் மலையக இலக்கியத்திற்கும் பொருந்தும்

மலையக இலக்கிய வரலாற்றை கூர்ந்து நோக்குகின்றபொழுது அவ்விலக்கியத் தொகுதி இரு வகையினரால் எழுதப்பட்டுள்ளன.

அவை பின் வருமாறு:

1. மலையகத்தை வாழ்விடமாகக் கொண்டு அந்தப் பண்பாட்டிற்குள்ளிருந்து முகிழ்ந்த இலக்கிப் படைப்பாளிகள் (மலையக மண்ணைச் சார்ந்த வர்கள்)

2. மலையகத்தோடு தொடர்பு கொண்டு அதே சமயம் மலையகத்தை பிறப்பிடமாகக் கொள்ளாத இலக்கியப் படைப்பாளிகள்

இவ்விருவகைப்பட்ட எழுத்தாளர்களினாலும் மலையக இலக்கியம் வளப்படுத்தப்பட்டு வந்துள்ளதென்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதன் முதலாவது பிரிவில் சி.வி. வேலுப்பிள்ளை, என். எஸ்.

எங்கிருந்தோ வந்து தயாராக இருந்து பொருளாதார வாய்ப்புகளை அபகரித்துக் கொண்ட மக்கள் அல்ல மலையக மக்கள். இவர்கள் எந்தவொரு நாகரிக சமூகத்தினதும் மூலத்தைப் போலவே, காடுகளை அழித்து வளமாக்கி புதியதோர் பொருளாதாரத்துறையை ஏற்படுத்தியவர்கள். இவர்கள் அமைத்த இந்தப் பொருளாதாரத் துறையும் அதைச் சார்ந்த அமைப்புகளும், இன்னும் இந்நாட்டின் ஆதாரமாக இருக்கின்றன. இந்த மக்களின் உருவாக்கமும் வரலாறும் யாரையும் போலவே இவர்களும் இம்மண்ணின் மக்களே என்பதை ஆதாரப்படுத்துகின்றன.

எம். ராமையா, சாரல்நாடன், அந்தனிஜீவா, மல்லிகை சி. குமார், மரியதாஸ், என்.முத்துவேல், எல். சாந்தகுமார், மாத்தளை வடிவேலன், மாத்தளை சோமு, கேகாலை கைலைநாதன், லெனின் மதிவானம், றாகலை பன்னீர் முதலானோரைக் குறிப்பிடலாம். இம்மண்ணைச் சாராத அதேசமயம் இம் மண்ணுடன் நேசபூர்வமான உறவினைக் கொண்டவர்களாக, இம்மக்கள் குறித்த இலக்கியம் படைப்பதில் யோ. பெனடிக்ற் பாலன், செ. கணேச லிங்கன், நந்தி, புலோலியூர் க. சதாசிவம், வ. அ. இராசரத்தினம் அ. செ. முருகானந்தம், சுபத்திரன், கே. டானியல், சி. நாகராஜன், வ. ஐ. ச. ஜெய பாலன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்த இரண்டுவகையான எழுத்தாளர்களிடையேயும் சிற்சில வேறு பாடுகள் கண்டுகொள்ளத்தக்கனவாய் உள்ளன. மலையக மக்களின் வாழ்வியலை அதன் உற்பத்திமுறையினைப் புரிந்துகொண்டு இலக்கியம் படைப்பதிலேயே இவ்வேறுபாடு அமைந்து காணப்படுகின்றது.

மலையக பண்பாட்டிற்குள் நின்று அம்மக்கள்பற்றிய இலக்கியம் படைப் பவர்கள் மலையக வாழ்வியலின் உள் நின்று அதன் உற்பத்திமுறையினை உணர்ந்து இலக்கியம் படைக்க முனைவதைக் காணலாம் (இவ்விடத்தில் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அனைத்து எழுத்தாளர்களையும் குறிப்பிடமுடியாது). யதார்த்த நோக்கு, சமூக அசைவியக்கம், வர்க்க முரண்பாடு என்பவற்றினைச் சித்தரிப்பதில் இவர்களிடையே நுண்ணிய தத்துவார்த்த வேறுபாடுகள் உண்டு என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடவேண்டி உள்ளது.

இந்நிலையில் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொள்ளாத, அதே சமயம் அதனோடு தொடர்பு கொண்ட இலக்கிய கர்த்தாக்களினால் படைக் கப்பட்ட இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு நோக்குகின்றபோது, இம்மக்கள்மீதான நேசபூர்வமான சிந்தனையைக் கொண்டுள்ள அதேசமயம் மலையக மக்களின் வாழ்வியலைப் புரிந்துகொண்டு இலக்கியம் படைப்பதில் இடறுகின்றனர். உதாரணமாக, வடகிழக்குப் பகுதியைச் சார்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளில் இம்மக்கள் குறித்த கரிசனை இடம்பெறுகின்ற அதேசமயம், நிலவுடைமை சார்ந்த ஒரு விவசாய வர்க்கத் திற்குரிய சிந்தனை முறையையே அவர்கள் முன்வைக்க முனைந்துள் ளனர். எடுத்துக் காட்டாக, யோ. பெனடிக்ற் பாலனின் 'சொந்தக்காரன்', தி. ஞானசேகரனின் 'குருதி மலை' முதலிய நாவல்களில் இப்பண்பு முனைப்புற்றிருப்பதைக் காணலாம். ஒரு காலகட்ட ஆர்ப்பரிப்பால் உழைக்கும் மக்கள் நலன் சார்ந்த பதாகையை உயர்த்திப் பிடித்த கலைஞர்களில் ஒருவரான சுபத்திரன் 1977ம் ஆண்டு துப்பாக்கிச் சூட்டுக்கு இரையான சிவனு இலட்சுமணன் குறித்து இவ்வாறு கவிதை வரைகின்றார்

"சிவனு
எதனைக் கேட்டான்?
அவன் உழைத்த பூமியிலே
அதற்கு முன்னர்
அவன் பூட்டன் சமாதியிலே
தனக்கொரு துண்டு
தா என்று கேட்டான்
.....
.....
துண்டு நிலம்தான் கேட்டான்
துவக்கால் அடித்து அவனை
தேயிலைக்கு உரமாக்கி
திருப்தியடைந்தீரே!"[8]

இவ்வாறாக நோக்குகின்றபோது நிலத்தை சொந்தமாக்குவதில் அல்லது நிலத்திற்காகப் போராடுவதில் காட்டிய அக்கறை மலையக மக்களின் வாழ்வியலுடனும் உணர்வுகளுடனும் இணைந்திருந்த தனியுடை மைக்கு எதிரான போராட்டம் என்பதை வலியுறுத்தத் தவறிவிடுகின்றனர். தவிரவும் இவர்களது பெரும்பாலான படைப்புகளில் யதார்த்த சிதைவும்



சமூக மாற்ற செயற்பாடுகளில் இலக்கியம் வழிகாட்ட வேண்டும். அதனை சாதிப்பதற்கான அணுகுமுறையை வாழ்க்கைப் பிரச்சனைகளை தெளிவுபடுத்துவதாக அமையவேண்டும். எனவேதான் இலக்கியம் காலத்தைப் பிரதிபலிப்பதாக மட்டுமன்றி அதனை உருவாக்குகின்ற பணியினையும் ஆற்றுகின்றது. இவ்வம்சம் மலையக இலக்கியத்திற்கும் பொருந்தும்

காணப்பட்டது. கே. ஆர். டேவிட்டின் 'வரலாறு அவனைத் தோற்றுவித்தது' (நாவல்), தமிழக எழுத்தாளர் புதுமைப்பித்தனின் 'துன்பக் கேணி' போன்றன இதற்குத் தக்க எடுத்துக் காட்டுகளாகும். மலையக சமூகத்து யதார்த்தத்தையும் மனித ஊடாட்டத்தையும் புரிந்து கொண்டு ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டதிலும், அத்தகைய ஆக்க இலக்கியங்கள், வெளிவரவும் துணை நின்றவர்களாக பேராசிரியர் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மலையக சமூகம் குறித்து இவர்களது குறிப்புகள், ஆய்வுகள், மலையக சமூக அமைப்பின் உற்பத்தி உறவுகள், உற்பத்தி முரண்பாடுகள் குறித்த தெளிவான பார்வையை முன்வைக்கின்றன. மலையக மண்ணைச் சார்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளையும் அதனூடாக வெளிப்படும் அவர்களின் சிந்தனைத் தெளிவுப்பார்வை என்பனவற்றின் ஆதாரமாகக் கொண்டு அவர்களைப் பின்வருமாறு இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்

1. முற்போக்குவாதச் சிந்தனை நிலை நின்று இலக்கியம் படைப்பவர்கள்
2. மார்க்சிய சித்தாந்த நிலை நின்று இலக்கியம் படைப்பவர்கள்

இவ்விடத்தில், முற்போக்குவாதம், மார்க்சியவாதம் ஆகிய சிந்தனைத் தொழிற்பாடுகள்

"முற்போக்குவாதம்பற்றிய ஆய்வு, அது சிந்தனைத் தெளிவுநிலை (மாத்திரமே) என்பதனை நிலைநிறுத்துகின்றது. மார்க்சியத்தை விபரிக்கும் அறிஞர்கள் அதனை அரசியல் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டி. அன்றேல் அரசியல் நடவடிக்கைகளுக்கான ஆற்றுப்படை என்பர். மார்க்சியத்தை திரிகரண சுத்தியாக ஏற்றுக்கொள்ளும்போது அவ்வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு உலகை மாற்றி மனித சமூகத்தின் முற்போக்குப்பாதையினை உறுதிப்படுத்தும் அரசியல் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளுதல் இயல்பாகின்றது. ஆனால் முற்போக்குவாதம்பற்றிய எண்ணத் தொய்வுநிலை அத்தகைய நேரடி நடவடிக்கை நிலையினச் சுட்டி நிற்பதில்லை. மார்க்சியவாதிகள் முற்போக்குவாதிகளே. ஆனால் முற்போக்குவாதிகளோ மார்க்சியவாதம் வற்புறுத்தும் உலக மாற்றத்துக்கான அரசியல்மாற்றத்தினை, நேரடி இயக்க முறைகள் மூலம் நிலைநிறுத்தும் இயக்கவாதியாக தொழிற்படுவதில்லை. முற்போக்குவாதம் எண்ணத் துய்ப்பும் செயற்பாடும் ஒருவரை அதனைப் பூரணமாக நடைமுறைப்படுத்தும் அரசியல் நடவடிக்கைகளாக மாற்றலாம். ஆனால் முற்போக்குவாத நிலை அந்த நிலையினை குறிக்காது"[9]


முதலாவது பிரிவினர் மலையக இலக்கியத்தினை முற்போக்கு உணர்வுடன் நோக்கியதோடு, மண் வாசனை மிக்க படைப்புகளை வெளிக் கொணர்வதில் முக்கியத்துவம் உடையவர்களாக காணப்படுகின்றனர். இப்பிரிவில் சி. வி. வேலுப்பிள்ளை, என். எஸ். எம். ராமையா, சாரல்நாடன், தெளிவத்தை யோசப், அந்தனி ஜீவா, மல்லிகை சி. குமார், மாத்தளை வடிவேலன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். மலையக மக்களின் வாழ்வியலையும் இயற்கையையும் ஒன்றாக நேசித்து, காதலிக்கின்ற போக்கினை இவர்களது படைப்பில் காணலாம்.

மலையக சமூகம் குறித்த தீட்சண்யம் மிக்கதும் யதார்த்தபூர்வமானதுமான தத்துவார்த்த பார்வையினை கொண்டிராமை காரணமாக, இச்சமூக அமைப்பில் நிலவிய உற்பத்தி முறைகள், உற்பத்தி உறவுகள், சமூக அரசியல், கலாச்சாரம் குறித்த விஞ்ஞான பூர்வமான தெளிவற்றோராய்க் காணப்பட்டமை அவ்வணியினரின் பலவீனமாகும்.

இவ்விடத்தில்தான் இரண்டாவது பிரிவினர் முக்கியத்துவம் உடையவர்களாக காணப்படுகின்றனர். மார்க்சியத்தின் உள்ளடக்கக் கூறுகள்பற்றி லெனின் கூறியதை இவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

"வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்ற தத்துவம் காட்டுவதென்ன? உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியின் விளைவாக ஒரு சமுதாய அமைப்பு முறையில் இருந்து இதைவிட உயர்தரமான சமுதாய அமைப்புமுறை எப்படி வளர்கின்றதென்பதை அது காட்டுகின்றது. இயற்கை என்பது வளர்ச்சி பெற்றுக் கொண்டே இருக்கும் பருப்பொருள்என்பது மனிதனுக்கு அப்பால் சுயமாக இருந்து பிரதிபலிக்கின்றது. அதேபோலத்தான் மதம், அரசியல் முதலானவை சம்பந்தமாக மனிதன் கொண்டிருக்கும் பல்வேறு கருத்துக்களும் போதனைகளும் சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையைப் பிரதிபலிக்கின்றது. அரசியல் ஏற்பாடுகள் என்பவை எல்லாம் பொருளாதார அஸ்திவாரத்தின்மீது நிறுவப்பட்ட மேல் கட்டுமானமே ஆகும்"[10]

இவ்வாறானதோர் நிலைப்பாட்டினை ஏற்றுக் கொண்டு அவற்றினை மாறிவருகின்ற மலையகச் சூழலுக்கு ஏற்ற வகையில் பிரயோகிப்பவர்களாக இப்பிரிவினர் காணப்படுகின்றனர். இப்பிரிவில் பி. மரியதாஸ், எம். முத்துவேல், எல். சாந்திகுமார் (இன்று இந்நிலைப்பாட்டுக்கு எதிரானவராக சிதைந்து விட்டார்), கேகாலை கைலைநாதன் போன்றோருடன் இதன் அடுத்த கட்ட பரிணாமத்தை தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் மலையக இலக்கியத்தில் சுவடு பதிக்கத் தொடங்கிய இளம் தளிர்களான லெனின் மதிவானம், ஜெ. சற்குருநாதன், ஜெ. ட்ரொட்ஸ்கி,



றாகலை பன்னீர் முதலானோரைக் குறிப்பிடலாம். இவர்களுக்கிடையே சிற்சில நுண்ணிய தத்துவார்த்த வேறுபாடுகள் காணப்படினும் பொதுவுடைமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டு அதன் வழி இலக்கியம் படைப்பதில் முக்கியத்துவம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

மலையக இலக்கியம் என்பது ஆயிரக்கணக்கான தொழிலாளர் களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சமூகத்தில் இலக்கியமாகக் கொண்ட சமூகத்தின் விளைபொருளாக உள்ளமையினால் பாட்டாளி வர்க்கம் சார்ந்த தத்துவ சிந்தனைகள் வேகமாகவும் ஆழமாகவும் மலையகப் புத்திஜீவிகளின் சிந்தனையில் செல்வாக்குச் செலுத்தியது எனலாம். இதன் காரணமாகத்தான் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு எதிராகத் தோன்றிய இலக்கியக் கோட்பாடுகளான அழகியல்வாதம், அமைப்பியல் வாதம், பின் அமைப்பியல்வாதம், பின் நவீனத்துவம், இருத்தலியல் முதலியன மலையக இலக்கியத்தில் வேரூன்ற முடியாமற் போனமை ஒரு தற்செயல் நிகழ்ச்சி அல்ல. மலையக மக்களின் கலாச் சாரப் பண்பாடுகளில் ஒன்றாகச் சாதிமுறை விளங்குகின்றது. தென் னிந்திய நிலப் பிரபுத்துவ சமூக அமைப்பில் இச்சாதி முறை தோற்றம் பெற்று பாதுகாக்கப்பட்டு வந்திருப்பினும் இலங்கைப் பெருந்தோட்ட உற்பத்திமுறையிலும் அது

மலையக சமூகத்து யதார்த்தத்தையும் மனித ஊடாட்டத்தையும் புரிந்துகொண்டு ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டதிலும், அத்தகைய ஆக்க இலக்கியங்கள், வெளிவரவும் துணைநின்றவர்களாக பேராசிரியர் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மலையக சமூகம் குறித்து இவர்களது குறிப்புகள், ஆய்வுகள், மலையக சமூக அமைப்பின் உற்பத்தி உறவுகள், உற்பத்தி முரண்பாடுகள் குறித்த தெளிவான பார்வையை முன்வைக்கின்றன.

தொடரக் கூடியதாக இருந்தது. (நிலப் பிரபுத்துவத்தின் சிதைவில் இருந்துதான் முதலாளித்துவ சமூக அமைப்பு தோற்றம் பெற்றது என்ற போதிலும் அது இழந்து கொண்டிருக்கும் நிலப்பிரபுத்துவத்தில் இருந்து தனக்கு சாதகமான அம்சங்களை உள்வாங்கிக் கொள்ளும்)

சாதிமுறையானது பொருளாதாரத்துறையில் அதிக தாக்கம் செலுத்தாத ஒன்றாக இருப்பினும் அது மலையக மக்களின் சமய சடங்குகளில் பெரும் தாக்கத்திற்குரிய ஒன்றாக விளங்குகின்றது. லயன்கள் சாதியத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தமையும் (இன்றும் சில தோட்டங்களில் இந்நிலைமை தொடர்கிறது) குடும்ப வழிபாடு சாதிய அமைப்பினை அடிப்படையாகக் கொண்டிருந்தமையையும் காணலாம். இதனை மேலும் வலுப்படுத்த பிரிட்டிஷார் போட்டித் தெய்வ வழிபாடுகளை ஊக்குவித்தனர்.

இவ்வாறாக, மலையக சாதியமைப்பு முறையில் இறுக்கமான முரண் பாடுகள் தளர்ச்சி கண்டு மனிதநேய உறவுகள் நிலைபேறடைவதற்கு மூலமாய் அமைந்தது காலனித்துவம் தொடக்கி வைத்த முதலாளித் துவம் வர்க்க அடிப்படையிலான உறவேயன்றி வேறில்லை. லயத்தில் வாழ்ந்த யாவரும் (பெரிய கங்காணிமாரைத் தவிர) கூலித்தொழிலாளர் களானதால் முகாமைத்துவ வர்க்கத்தினதும் இதர வர்க்கத்தினரதும் பார்வையில் தரங்குறைந்தவர்களாகவே பட்டனர். தொழிலாளர்கள் யாவருக்கும் உழைப்பை விற்பதற்கான கூலியின் அளவு ஒன்றே. இவ்வாறு காலனித்துவ அமைப்பின் அடிப்படையில் சேவைசெய்தோரான அதிகாரத்துவ

முகாமைத்துவ சிறு முதலாளித்துவ வர்க்கத்தினர் தொழிலாளரை ஒரு சேர நோக்கிய போது நோக்கும் அணுகலும் நடத்துகை யாவும் சாதிய வேறுபாட்டுணர்வையும் அதன் செயன்முறைகளையும் மாறுபடுத்தின. தொழிலாளர்கள் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சனைகள் அனைத்தும் ஒரே மையத்தை அடிநிலையாகக் கொண்டிருந்தன. இப்பின்னணியில் மலையக இலக்கியம் குறித்து நோக்குகின்றபொழுது மலையகத்தில் 'தலித் இலக்கியம்' தோன்றாமல் இருப்பது தற்செயல் நிகழ்ச்சி அல்ல. இன்றைய உலக மயமாதல் சூழலானது மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தியுள்ளதுடன் அவை இயற்கையானதென கற்பிதம் செய்து மனிதர்களிடையே போட்டியை வளர்த்து ஒருவரை ஒருவர் முந்திச் செல்வதற்கு எதையும் செய்யலாம் என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. இப்பின்னணி மனித குல சுயீட்சத்திற்கான வர்க்கப் போராட்டத்தை சிதைப்பதற்கான பால், சாதி, இன, மத ரீதியான ஒடுக்கல்களைத் தீவிரப் படுத்தி உள்ளது.

மலையகத்தில் புதிதாக எழுச்சி பெற்றுக் கொண்டிருக்கும் மத்தியதர வர்க்கம் சாதிய அடிப்படையை கருவியாகக் கொண்டு தமது நலனை காக்கத் தொடங்கியுள்ளது. சாதிய முரண்பாட்டைப் பிரதானமாக்கி வர்க்க முரண்பாட்டைச் சிதைக்கும் முயற்சிகளை ஏகாதிபத்திய நிறுவனங்களும் அரசியற் கட்சிகளும் செய்து வருகின்றன. அண்மையில் ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பப்பட்ட 'தப்பு' நாடகம் இதற்குத்தக்க எடுத்துக் காட்டாகும். தவிரவும் மலையகத்தில் சாதியை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளும் சங்கங்களும் நாளுக்குநாள் பெருகி வருகின்றன என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.

மலையகப் பெண்களின் நிலை குறித்துச் சிந்திக்கின்றபோது இனம், மதம், மொழி வர்க்க அடிப்படையிலான ஒடுக்குமுறைகளுக்கு உட்பட்டு வந்துள்ளமையையும் வருகின்றமையையும் உணரலாம். குறிப்பாக, மத்தியதர வர்க்கப் பெண்கள் வர்க்க அடிப்படையிலான ஒடுக்குமுறைக்கு உட்படவில்லையாயினும் ஏனைய ஒடுக்குமுறைகள் அவர்களையும் பாதிக்கவே செய்தன. குறிப்பாக, பெருந்தோட்டத்துறை சார்ந்த உற்பத்தியுடன்கூடிய உழைக்கும் வர்க்கப் பெண்கள் இதுவரை காலமும் உழைப்பு, சுரண்டல், நிர்வாக அடக்கு முறைகள், பாலியல் பலவந்தம்/வல்லுறவு, குடும்பரீதியான அடக்கு முறைகள் என்பனவற்றிற்கு உட்பட்டே வந்துள்ளனர். புதுமைப்பித்தனின் 'துன்பக்கேணி'யில் இருந்து நமது யுகத்துக் கவிஞரான வே. தினகரன் வரையில் இப்பெண்கள் பிரச்சினைகளை இலக்கியமாக்கியுள்ளனர். இவ்வொடுக்குமுறைகளை இவ்வெழுத்தாளர்கள் தத்தம் நிலைப்பாடுகளுக்கு ஏற்ப வெவ்வேறு தளங்களில் இருந்து நோக்கியுள்ளனர். ஈழத்தில் ஏனைய பிரதேசம் சார்ந்த இலக்கியங்களோடு ஒப்பிட்டு நோக்குகின்றபொழுது 'மலையக இலக்கியத்தில் பெண்விடுதலை' எனும் சிந்தனைத் தொழிற்பாடானது சமூக விடுதலையுடன் இணைந்தே வெளிப்பட்டுள்ளது.

மிக அண்மைக் காலங்களில், மலையக இலக்கியக் கோட்பாட்டுத் தளத்தில் பல மாற்றங்களும் புதிய போக்குகளும் தென்படத் தொடங்கியுள்ளன. அறுபதுகளில் மலையக இலக்கியத்தில் வெளிப்பட்ட இலக்கியப் போக்கின் அடுத்த கட்ட வளர்ச்சியை இக்காலப் பகுதிகளில் தரிசிக்கக் கூடியதாக உள்ளது. சமுதாய சிந்தனையுடனும் வரலாற்றுணர்வுடனும் இலக்கியம் படைக்கக்கூடிய புதிய படைப்பாளிகளும் திறனாய்வாளர்களும் தோன்றி மலையக இலக்கியத்திற்கு காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருகின்றனர்.

மறுபுறமாக, ஓர் காலகட்ட ஆர்ப்பரிப்பில் முற்போக்குணர்வுடனும் சமுதாயக் கண்ணோட்டத்துடனும் இலக்கியம் படைத்த சிலர் இக்காலச் சூழலில் தத்துவார்த்தரீதியாக சிதைவடைந்து செல்வதையும் காணலாம். தி. ஞானசேகரனின் 'குருதி மலை' நாவலில் வெளிப்பட்ட சமுதாய உணர்வு, 'லயத்துச் சிறைகள்' நாவலில் சிதைவடைந்து செல்வதனையும் சு. முரளிதரனின் சமுதாயப் பார்வை அவரது அண்மைக்காலக் கவிதைகளில் ('தேசத்தின் கரங்கள் சொல்லும் சேதி' - கவிதை) நலிவடைந்து செல்வதனையும் 'தீர்த்தக்கரை' சஞ்சிகையின் ஆசிரியர் எல். சாந்திகுமார் சிந்தனைரீதியாக சீரழிந்தது மாத்திரமன்றி எழுத்துலகில் இருந்தே அஞ்ஞாதவாசம் சென்றுவிட்டதுயரினையும் இவ்விடத்தில் உதாரணங்களாக கூறலாம்.

தவிரவும், மலையக இலக்கியத்திற்கு மாத்திரமன்றி, இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்திற்கும் தமது மொழிபெயர்ப்பு சார்ந்த பணியினூடாக பங்களிப்பினை நல்கியவர் கே. கணேஷ். பிறநாட்டு நல்லறிஞர்களின் இலக்கியப் படைப்புகளை உள்ளடக்கம், உருவகம் சிதையாத வகையில் மொழி பெயர்த்துத் தந்தமை - இவரது காத்திரமான பங்களிப்பாகும். குறிப்பாக, லூசுன் சிறுகதைகள், கோசிமின் சிறைக் குறிப்புகள், குவாஜா அகமது அப்பாஸின் குங்குமப்பூ, அஜந்தா ஆகியவற்றையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

இவ்வாறிருக்க, மிக அண்மையில் 'களம்' சஞ்சிகையில் வெளிவந்த அவரது நேர்காணல் அவரது மதம் பற்றிய பிற்போக்கான பார்வையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. நேர்காணலை மேற்கொண்ட கலாநிதி எம். ஏ. நுஃமான் அவர்கள் கே. கணேஷ் அவர்களின் அந்திமக் காலத்தடுமாற்றத்தினையும் சாதகமாகக் கொண்டு மார்க்சிய இலக்கிய கர்த்தாக்கள் யாவரும் இறுதியில் மதத்தில்தான் சங்கமமாகின்றார்கள் என்ற கருத்தினை கே. கணேஷ் மூலமாகக் கொண்டு வருவதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளார். மார்க்சியக் கோட்பாட்டை சிதைப்பதிலும் அதனைத் தவறாகக் காட்ட முனைவதிலும் இவர்களின் எத்தனிப்புகள், முயற்சிகள் தற்செயலானவை அல்ல.

மறுபுறமாக, கே. கணேஷின் மதச்சார்பு என்பது அவரது அந்திம காலத்தில் ஏற்பட்ட சிந்தனை அல்ல. அவரது ஆரம்ப காலம் தொட்டே இருந்து வந்துள்ள ஒன்றாகும் என்ற உண்மையினை/ பக்கத்தினை வெளிக்

கொணர்வதில் 'நந்தலாலா' சஞ்சிகைக் குழுவினரின் நேர்காணல் முக்கியமானதொன்றாகும். ஆயினும் கே. கணேஷின் மதம்பற்றிய பார்வையைத் துருவித் துருவி ஆராய்ந்து வெளிக்கொணர்வதில் காட்டிய அக்கறையும் ஆர்வமும் அவரது மொழிபெயர்ப்புத்துறை குறித்த பங்களிப்பைக் கொணர்வதில் காட்டத் தவறிவிடுகின்றனர். மதம் குறித்த இத்தகைய பார்வையைக் கொண்டிருந்த கே. கணேஷால் கூட எத்தகைய பங்களிப்பினை ஒரு நாகரிகமான பக்கத்திற்கு வழங்க முடிந்தது என்பது குறித்த ஆய்வுகள் வெளிவர வேண்டியது அவசியமானதாகும்.

மேலும் சமுதாய நோக்கம் கொண்ட கவிதைகளை எழுதிக் குவித்தால், மானுடக் காதலையும் அன்பையும் யார் பாடுவார்கள் என்ற பிரகடனத்துடன் கவிஞர் வைரமுத்துவின் அங்கீகாரத்துடனும் வெளிவந்துள்ள செல்வி யோகேஸ்வரி துரைப்பாண்டியின் கவிதைகள் இப்பணபில் கால் பதித்து, பாலியல் விசாரத்தில் சற்றே அந்நியப்பட்டு நிற்கும் பெ. லோகேஸ்வரனின் கவிதைகளும் அதீத நம்பிக்கை வரட்சி, அந்நியமயப்பாடு, மனோவிகாரம், போலி மேதாவித்தனம், வரலாற்று உணர்வின்மை போன்ற இவர்களது கவிதைகளில் மலிந்து காணப்படுகின்றன.

ஈழத்து இலக்கியச் செல்நெறியில் மலையக இலக்கியம் அதன் பிரிக்க முடியாத பிரதேச இலக்கியக் கூறாக காணப்படுகின்றது. அவ்வகையில் மலையக இலக்கியமானது ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளதுடன் ஈழத்து இலக்கியப் பரப்பினை ஆழ அகலப்படுத்தியுள்ளது எனலாம். இதனை முற்போக்கு மார்க்சிய இலக்கிய கர்த்தாக்கள் புரிந்து கொள்ளும் விதம் தனித்தன்மை கொண்டதாக இருக்கும்; இருக்க வேண்டும்.

———— ————

அடிக் குறிப்புகள்

1. சிவத்தம்பி.கா (1978) ஈழத்துத் தமிழ் இலக்கியம் - நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை பக். 03
2. வேலுப்பிள்ளை சி.வி. (1993) (தொகுப்பாசிரியர்) மலைநாட்டு மக்கள் பாடல்கள்
3.
4.
5. முத்துவேல். எம் (கட்டுரையாசிரியர்) (1999) புதுவசந்தம், தேசிய கலைஇலக்கியப் பேரவை, இலங்கை
6. சாந்திகுமார். எல் (1981) தீர்த்தக்கரை இதழ் - பக் 27
7. தம்பையா. இ (1995) மலையக மக்கள் என்போர் யார்? - புதியபூமி வெளியீட்டகம், கொழும்பு, - பக் 59, 60
8. சாருமதி (தொகுப்பாசிரியர்) (1997) - சுபத்திரன் கவிதைகள்: பூவரசு இலக்கியவட்டம், பக். 143
9. சிவத்தம்பி. கா (கட்டுரையாசிரியர்) (1995) - புதுமை இலக்கியம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம், கொழும்பு
10 லெனின் வி. ஐ. (1974) சோஷலிச சித்தாந்தமும் கலாசாரமும் குறித்து, முன்னேற்றப் பதிப்பகம் மொஸ்கோ பக்

மூன்றாவது மனிதன்

இதழ்-19
டிசம்பர் 2006 - ஜனவரி 2007



தொடர்புகளுக்கு:
ஆசிரியர் -
மூன்றாவது மனிதன்
அவிசாவெல ரோட்
வெல்லம்பிட்டிய
இலங்கை.

தொலைபேசி:
00 94 77 3131627

மின்னஞ்சல் : thirdman publication@yahoo.com

கட்டுரைகள்

இரண்டாம் பாலினத்தின் இரகசியக் கதைகள்(துயான்)
யாழ்ப்பாண நாட்குறிப்பு
(முரண்வெளியில் இருந்து, muranveliemag.blogspot.com)
இலக்கியம் பயணிக்கும் இன்னொரு பாதை
(ஜிப்ரி ஹஸன்)
மேற்குலகின் மனச்சாட்சி. (ஹரன்)
நாளிதழ்களின் பங்களிப்பு - வீரகேசரி
(தெளிவத்தை யோசப்
மறுபாதியின் கதை (அதீதன்)
அன்புடன் லெபனானிற்கு... (சந்துரூஷ்)
ஈழநாடு இதழின் புனைகதைப் பங்களிப்பு
(செங்கை ஆழியான்)
33வது இலக்கியச் சந்திப்பும் பெண்கள் சந்திப்பும்
(ராதை)

சிறுகதைகள்

இருக்கிறது - சாந்தன் -
விடலை - சட்டநாதன் -
நே - 1 - இராகவன் -
- 'அதனை' ஆராதனை செய்! - எஸ். நஸ்றுதீன்
- சந்தரே வரும்வரை (மொழிபெயர்ப்பு)
- இப்னூ அஸுமத் -

அனார், இளைய அப்துல்லா, பஹீமா ஜஹான், தில்லை, ஆமிரபாலி, சோலைக்கிளி, றிஸ்வியூ நபீல், நவாஸ் சௌபி, யசோதர, தவ சஜீதரன், மபர்க்ஸ் பிரபாகர், ஏ. இக்பால், மலர்ச்செலவன், எஸ். போஸ். ஆகியோரின் **கவிதைகள்**

விசேடங்களாக:
ஏ. ஜே. நினைவுகூரல் கட்டுரைகள்
ராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்தின் நேர்காணல்



யஸ்மினா ரேஸா 1959ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி பாரிஸில் பிறந்தார். இவர் சமூகவியல், நாடகக்கலை என்பவற்றில் பல கலைக்கழகக் கல்வி கற்றார். இவர் தன்னுடைய முதலாவது நாடகப் பிரதியான Conversations après un enterrement (ஒரு மரணச் சடங்கிற்குப் பின்னான உரையாடல்கள்)ஐ 1987இல் பிரான்சில் மேடையேற்றினார். இதற்கு மிகச் சிறந்த நாடகப் பிரதிக்கான மொலியார் பரிசு கிடைத்தது. இவருடைய Art Triomphe என்னும் நாடகம் 1994இல் பல நாடுகளில் மேடையேற்றப்பட்டது. இவ்வாறே இவருடைய ஏனைய நாடகங்களான La traversée de l'hiver, Trois versions de la vie, L'Homme du hasard, Une piece Espagnol என்பனவும் உலக முழுவதும் மேடையேற்றப்பட்டன. இவருடைய படைப்பான Hammerklavierயை 1997இல் வெளிவருகிறது. அதன் பின்பு இவருடைய முதலாவது நாவலான Une désolation 1999இலும் பின்பு Adam Haberberg என்னும் நாவல் 2003இலும் வெளியிடப்படுகின்றது.

இப்போது 2005ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இவருடைய இரண்டு நூல்களான Dans La Luge d'Arthur Schopenhauerஉம் Nulle partஉம் வெளியிடப்பட்டது.

இதனை யொட்டி இவரை நேர்கண்டவர் François Busnel.

Nulle Partஇல் அவருடைய சொந்த வாழ்க்கைச் சரித்திரத்தின் துண்டங்கள், சந்தோஷமும் ஏமாற்றமும் ஒன்றோடொன்று மிகவும் சூட்சுமமாகப் பின்னப்பட்ட காட்சிப் படிமங்களுடன் இணைந்தோடுகின்றன.

"நான் எங்கும் திரும்பிப் போகவில்லை. நான் திரும்பிச் செல்வதற்கு எந்த இடமும் இருக்க மாட்டாது."




NULLE PART(2005)
Yasmina Reza
Edition : Albin Michel

"நான் எங்கும் திரும்பிப் போகவில்லை. நான் திரும்பிச் செல்வதற்கு எந்த இடமும் இருக்க மாட்டாது."

யஸ்மினா தன் சுயசரிதத்தின் ஒரு வடிவத்தைத் தருகின்றார். தன் குழந்தைகள், சிநேகிதி, தன்னுடைய சிறுபிள்ளைப் பருவம், தன்னுடைய பெற்றோர்கள் இவர்களுக்கிடையேயான கணங்கள் பற்றிய பிரதிமைகளை மிகவும் அற்புதமாகச் சித்தரிக்கின்றார்.



Dans La Luge d'Arthur Schopenhauer (2005) Yasmina Reza Edition : Albin Michel



சுருக்கம்:

நான்கு கதாபாத்திரங்கள் தங்களை வரைகிறார்கள். அவர்களுடைய தனிமை, அவர்களுடைய விசனங்கள், அவர்களுடைய விருப்பின்மைகள் பற்றி வெளிப்படுத்துகின்றார்கள். ஸ்பினோஸா ஆரியலைக் கைவிட்டதில் இருந்து அவர் மிக மோசமான மனத்தளர்ச்சி நிலைக்குத் தள்ளப்படுகின்றார். அவருடைய மனைவி நடின் துயரமாகிப் போய்விட்ட தம் வாழ்க்கைக்கு ஒரு உயிர்த்துடிப்பைக் கொண்டு வர விரும்புகிறார். அவர்களுடைய நண்பன் சேர்ஜ் அறிவுஜீவிதத்தின் சிறைக்குள் துய்க்கின்றார். இவர்கள் மூன்றுபேருடைய மனோவைத்திய நிபுணன் அவர்களுடைய வாழ்க்கை மங்கிக்கொண்டு போவதாக, அறிவு அவர்களைக் கைவிட்டுவிட்டதாக, எளிமை அல்லது இலகுத் தன்மைக்கான ஏக்கம் இன்னும் தீரவில்லை என்பதாக அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறான்.

நூலில் இருந்து:

"இன்று காலை பூண்டுக் கொத்தொன்று வாங்கினேன். வீட்டிற்கான அலங்காரப் பொருட்கள் விற்கும் கடையொன்றினுள் சென்றேன். அங்கு ஒரு கமண்டலமும், ஒரு வாசனையூட்டப்பட்ட மெழுகுவர்த்தியும் வாங்கினேன். அத்துடன் என்னுடைய தேநீர்க் கலசத்தை வைப்பதற்கென்று ஒரு யப்பானிய தேநீர் பரிமாறும் தட்டொன்றும் வாங்கினேன். எனக்கு ஒரு புத்தகம் ஞாபகத்திற்கு வந்தது. அதில் ஒரு பெண் தன்னுடைய காதல் சோகத்தில் இருந்து விடுபடுவதற்கு ஒரு நாயை வாங்கினாள். அவள் அந்த நாயுடன் நல்ல சூரிய வெளிச்சமுள்ள நகரத்தில் உலாவினாள். அவள் தன்னுடைய ஹோட்டல் அறைக்குள் சென்றாள். சூரிய ஒளியில் இருந்த வெளியைப் பார்ப்பதற்காக அவள் பல்கனிக்குச் சென்றாள். பல்கனிக் கம்பிகளின் மேலால் பாய்ந்தாள். இல்லை. இல்லை. நான் பகிடிக்குச் சொல்கிறேன். நான் அதற்கு மேலால் பாயமாட்டாள். ஏனென்றால் அங்கு கம்பிகள் இல்லை. ஆனால் கடைசியில் நான் என்னுடைய பூங்கொத்துடன் வீட்டுக்கு வருகின்றேன்.(...) நான் வாசனையூட்டப்பட்ட மெழுகுவர்த்தி மூட்டுகிறேன். எல்லாமே சரியாகவும் சந்தோஷமாகவும் இருப்பதாகத் தெரிகின்றது. ஒர வாசனையூட்டப்பட்ட மெழுகுதிரி அமைதியாக எரிந்து கொண்டிருக்கும் ஒரு வீட்டில் எல்லாமே துப்புரவாகவும் சந்தோஷமாகவும் இருக்க வேண்டும். அங்கு துயரத்திற்கு இடமில்லை."

தத்துவம்!

அது நாங்கள் வாழ்வதற்கு உதவுமா?

எதுவுமே சரியாக இல்லாதபோது ஷொப்பனோவரின் அவநம்பிக்கை என்பது ஸ்பினோஸாவின் மகிழ்ச்சியை விடப் போற்றத்தக்கதாக அல்லது கொண்டாடத்தக்கதாக இல்லையா?

மேலும், இது அன்றாட வாழ்க்கையில் பொய்ப்பிக்கப்படவில்லையா?

யஸ்மினா ரேஸாவினால் உருவாக்கப்பட்ட நான்கு கதாபாத்திரங்களும் ஒருசேரக் கேட்கும் கேள்விகள் இவை.

Dans la luge d'Arthur Schopenhauerஇல், அண்மைக் காலங்களில் தீவிரக் கொள்கைகளுடன் தம்மை இணைத்துக்கொண்ட சில தத்துவவியலாளர்களினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கத்தின் ஒரு அழகான சித்தரிப்பு. நடைமுறையில் இருந்து பிரித்துப் பார்க்கக்கூடிய கருதுகோள்களின் தொடர்ச்சியைப்போல அல்லாது வாழ்வதற்கான ஒரு கலையாகக் கருதும்படியாக இது நடைமுறைக்குச் சாத்தியமான ஒரு தத்துவத்தைப் பரிந்துரைக்கின்றது. பிரபல்யமிக்க பல்கலைக்கழக கற்கை நெறியாளரான ஆரியல் ஷாப்மன், ஸ்பினோஸாவைக் கற்பிப்பதிலேயே தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் கழித்தவர். அதாவது அவர் மகிழ்ச்சிபற்றியும் நியாயத்தின் மேன்மைபற்றியும் போதித்தார். பாரம் சுமத்தப்பட்ட குடும்பத்திடம் தோற்று, யதார்த்தத்தினால் அடித்துச் செல்லப்பட்டு,


தன்னுடைய சகலபொழுதுகளையும் யாருக்கு அர்ப்பணித்தாரோ அந்தத் தத்துவவாதியை அப்போதிருந்து தவிர்க்க முடியவில்லை. அங்கு கோட்பாடுகள் யதார்த்தத்தினால் பொய்யாக்கப்பட்டன. அவநம்பிக்கை யுடைய, வலி தரும் பேச்சுக்களை அள்ளிவீசும் நான்கு கதாபாத்திரங்களுடாக கண்ணைக் கூச வைக்கும் ஒரு துலக்கத்தைப் பாய்ச்சுகிறார்.

குடும்பம் என்பது ஒரு சுழலுக்குள் அமிழ்ந்து போவதை காண்பிக்கின்ற அதேவேளை, யதார்த்தத்திற்கு கோட்பாடு அடிமையாகிப் போவதை மறுக்கும்போது அந்த வாழ்க்கைபற்றியும் மிக ஆழமாக எங்கள் கண்முன் கொண்டு வருகின்றார். அறிவுஜீவித்தனத்தின் ஆற்றாமையும் கேலிக்குரிய அங்கதமும் மிகத் துணிகரமான வகையில் விருத்தி செய்யப்பட்டுள்ளது. இச் சிறிய நூல் ஒரு பொக்கிஷம். மனிதனுக்கு நெருக்கமாயிருக்கக்கூடிய வகையில், ஒரு தனித்துவமான படைப்பு மூலம், பிரமிக்கத்தக்க துணிச்சலுடன் விடயங்களைத் தாண்டிச் செல்கிறார்: வாழ்தலுக்கான அவா, எதையும் கோட்பாடாக்கும் முனைப்பு, நரகமான குடும்ப வாழ்க்கை, ஒரு ஆறுதலுக்கான காத்திருப்பு.... இப்படியாக.

* * *

சந்திப்பின் ஆரம்பத்தில் மிகவும் எளிமையாகவும் கொஞ்சம் கூச்ச சுபாவமுள்ளவராகவும் தென்படுகிறார். பின்பு தன்னுடைய வாழ்க்கை பற்றி மகிழ்ச்சியாகவும் மிகவும் உற்சாகமாகவும் விபரிக்கின்றார். அதன் பிறகு 'உலகு பற்றிய நோக்கு'பற்றி வெளிப்படுத்தும்போது மிகவும் ஆறுதலாக, அமைதியாக, ஒவ்வொரு சொற்களையும் அளந்து பேசுகின்றார். அவர் அறிவுஜீவிகளின் பாசாங்குத்தனம் பற்றி பிரஸ்தாபிக்கும்போதும், தங்களுடைய இருத்தலுக்கான தெரிவுகளுக்குத் தங்களை இசைவாக்கிக் கொள்வதில் அவதியுறுபவர்கள் இந்த அறிவுஜீவிகளின் பாசாங்குத் தனத்தை எதிர்கொள்ளவேண்டிய நிலையில் இருப்பதுபற்றியும் பேசும்போது அவர் உண்மையிலேயே வருத்தப்படுகின்றார். பின்பு, அட்டகாசமான சிரிப்புடன், தத்துவத்தினுள் எளிமை என்பதன் வரைபுபற்றி மிகவும் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் வெளிப்படுத்துகின்றார்.

* * *



நீங்கள் ஏன் ஒரே சமயத்தில், ஒன்றோ டொன்று தொடர்பே இல்லாத, இந்த இரண்டு குறும் பிரதிகளையும் வெளி யிட்டீர்கள்?

எந்த ஒரு குறிப்பிட்ட தந்திரோ பாயத்துடனும் இவைகள் பிரசுரிக்கப் படவில்லை. இது ஒரு தற்செயல். Nulle Part பிரதியானது Hammerklavierயை பிரதிபலிக் கின்றது. இவை என்னுடைய சிறிய குறிப் பேடுகளில் நான் வெறும் எனக்காக எழுதிய எழுத்துக்கள். குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய தென்று சொல்ல முடியாத சம்பவங்கள் தொடர்பான குறிப்புகள். அதில் நான் என்னுடைய பிள்ளைகள், என்னுடைய வாழ்க்கையின் சில காட்சிப் படிமங்கள் என்பவற்றை நினைவுபடுத்துகிறேன். நான் இப் பிரதிகளை, எப்போதாவது அவை பிரசுரிக்கப் படலாம் என்ற எந்தவிதமான நினைப்பு களுமற்று, ஓர் ஒழுங்கற்ற முறையில் எழுதி இருக்கிறேன். குறிப்பிட்ட சிலவற்றை என் வாழ்க்கையின் மிகவும் இருளடைந்த பொழுதுகளில் எழுதினேன். பின்பு அவற்றைத் தரம்பிரித்து அடுக்கி வைத்தேன். பிறகு அவற்றை அப்படியே மறந்து போய்விட்டேன். சில காலத்தின் பின்பு அவற்றை மீளவும் பார்க்கும்வரை அவை அப்படியே கிடந்தன. அவற்றைச் சேர்த்துப் பார்த்த பொழுது, குறைந்த பட்சம் என்னுடைய பார்வைக்கு, அவை பிரசுரமாக வேண்டியதற்கான தேவை யை உணர்த்தின. ஆனால் அந்தப் பொழுது களில் அவை பிரசுரிப்பிற்கான எந்தவித நோக்கமும் அற்று எதேச்சையாகத் தோன்றிய எழுத்து. இம்மாதிரியான எழுத்துத்தான்

என்னுடைய வகையாக இருக்கின்றது.

இன்றைக்கு உங்களுடைய பிரபலத்தினைக் கருத்திற் கொண்டு பார்த்தால், உங்களுடைய எழுத்துகள் ஒரு நாள் பிரசுரமாகும் என்ற நோக்குக் கொண்டு எழுதவில்லை என்று நீங்கள் சொல்வதில் ஒருவித பாசாங்குத்தனம் சிறிதும் இல்லை என்கிறீர்களா? நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், உங்களால் இப்போதும் உண்மையிலேயே பின்னுக்கு வருவதுபற்றி (பிரசுரம்பற்றி) யோசிக்காமல் எழுத முடிகின்றதா?

ஆம், உண்மையாக. நீங்கள் என்னத்தைச் சொன்னாலும் அதுதான் எப்படியோ உண்மை. இந்த இரகசியம் அல்லது இந்த மர்மம் எனக்குத் தேவையாக இருக்கின்றது. எல்லாப் பிரதிகளும் கிரமமாக பிரசுரத்திற்குச் செல்லாதென்பது எனக்குத் தெரிந்திருக்க வேண்டி இருக்கின்றது. எழுதிப் பல வருடங்களின் பின்புதான் நான் எனது பிரதிகளை என்னுடைய பதிப்பாளரிடம் வாசிக்கக் கொடுப்பதற்கு முடிவு செய்கிறேன். பிறகு அவர்தான் அதைப் பிரசுரிக்கலாமா இல்லையா என்னும் முடிவை எடுக்கின்றார். Nulle Partஇல் இருந்து நிறைய விடயங்கள் பிரசுரத்திற்கு ஆகாதவை என்று தவிர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சில அவை மட்டமான எழுத்தாகவோ அல்லது மீளக் கூறுபவை யாகவோ இருந்திருக்கின்றன என்பதால் அகற்றப் பட்டன. மேலும் சில, மிகவும் அந்தரங்கமான விடயங் களாக இருந்ததால் தவிர்க்கப்பட்டன.

என்னுடைய வாழ்க்கையை பகிரங்கமாகக் காட்டுவதற்கு எண்ணவில்லை. அதற்காக எழுதவு மில்லை. குறிப்பிட்ட சில எழுத்தாளர்கள் தங்களுடைய எழுத்துக்களில் இதனைச் செய்கிறார்கள். உதாரணத்திற்கு, கிறிஸ்ரின் அங்கோ அல்லது பிலிப் ரொத் போன்றவர்களைக் குறிப்பிடலாம். என்னைப் பொறுத்த வரையில், நான் வேறொரு முறையைத் தெரிவு செய்திருக்கிறேன். இந்தப் பிரதிகளைப் பிரசுரிப்பதற்கு எண்ணியபோது, எனக்கு மிக நெருங்கியவர்களாக இருப்பவர் களினால் எனக்கு ஒரு விடயம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று விரும்பினேன். பகிரங்கமாக என்று சொல்லும் போது நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், அது எனக்கு மட்டுமே பிரத்தியேகமாகச் சொந்தமான



தல்ல என்பதைத்தான்.

Nulle partம் Dans la luge d'Arthur Schopenhauerம் ஒரே சமயத்தில் வெளிவர வேண்டும் என்பதை என்னுடைய பதிப்பாளர்தான் முடிவு செய்தார். இவ்விரு பிரதிகளிலும் என்னை நான் நிறையவே அடையாளம் காண்கிறேன். இரண்டுக்குமிடையில் நான் நிறையத் தொடர்புகளைக் காண்கிறேன்.

எனக்கு என்ன ஆச்சரியமாக இருக்கின்றதென்றால், நீங்கள் எழுதியதைப் பிரசுரிப்பதற்கான முடிவை எடுப்பதற்கு உங்களுக்கு இன்னொரு மூன்றாவது நபரின் (சிநேகிதர், பதிப்பாளர்) அபிப்பிராயம் தேவைப்படுகின்றதென்பதுதான். உங்களுடைய நாடகப் பிரதிகள் பரவலாக உலகின் பல பாகங்களிலும் மேடையேற்றப் பட்டிருக்கின்றன. நீங்கள் அங்கெல்லாம் மிகவும் பிரசித்தமாக இருக்கிறீர்கள்.
எப்படியோ நீங்கள் இன்னும் ஆரம்ப கால யஸ்மினா ரேஸா இல்லைத்தானே....?

நிச்சயமாக! ஆனால், என்னுடைய மிக அந்தரங்கமான பிரதிகளைப்பற்றி நான் இப்போதும் அப்படித்தான் நினைக்கிறேன். அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. 'இந்த எழுத்துப் பிரதிகள் மிகவும் நேர்த்தியாக இருக்கின்றன. ஆனால் இவற்றைப் பெட்டிக்கு அடியில் வைப்பதுதான் நல்லது' என்று யாராவது சொல்லி இருந்தால் நான் அப்படியே செய்திருக்கக் கூடும்.

Nulle Partஇல், நீங்கள் சிறு பெண்ணாக இருந்த போது வஞ்சனையாக கட்டி அணைக்கப்பட்டதுபற்றி, மற்றும் நிச்சயமின்மைபற்றி அடிக்கடி மீண்டும் கூறுகின்றீர்கள். குறிப்பாக, உங்களுடைய தந்தை தன்னுடைய வீடியோ கமராவினால் உங்களைப் படம் பிடித்தபோது உங்களை ஆடச் சொல்லிக் கேட்டது பற்றி. இன்னும் அந்த நிச்சயமின்மையினால் வலுவாகப் பீடிக்கப்பட்டிருக்கிறீர்களா?

ஆம். அது என்னைவிட்டு எப்போதும் நீங்கிய தில்லை. அதாவது, நான் எப்போதும் அதிலிருந்து மீண்டதில்லை. அதுதான் என்னை வெளியாட்களிடம் இருந்து அபிப்பிராயங்களைக் கேட்பதற்குத் தூண்டுகின்றது. குறிப்பாக, மிக நெருக்கமாக என்னைப் பாதித்த சம்பவங்களில் இருந்து எழுந்த இந்தப் பிரதிகள் பற்றி- எழுத்து வேண்டி நிற்கும் எந்தவிதமான ஒப்பனைகளும் இன்றி எழுதப்பட்ட பிரதிகள் பற்றி. ஒப்பனைகள் என்று சொல்வது நீசமானதாக இல்லைத்தானே!

இல்லை... நீங்கள் எழுதுதல் தொடர்பான நுட்பம்பற்றித்தானே சொல்கிறீர்கள்?

ஆம். எழுதுவதற்குரிய நுட்பம்பற்றித்தான். அது ஒரு கலை. இது ஒன்றும் இழிவுபடுத்துதல் அல்ல. இந்த நுட்பமானது Dans La Luge d'Arthur Schopenhauerஇன் படைப்புருவாக்கத்தில் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் Nulle partஇல் இவை எதுவும் இல்லை. Nulle Part எனக்கும் உண்மைக்கும் மிக அண்மித்த எழுத்து. உயிர்ப்புள்ளது. இது என்னுடைய நிச்சயமின்மையை வளர்க்கின்றது. அது என்னைத் தவிர்ந்த வேறொன்

றைப் பற்றிப் பேசுமாயின் அதன் பெறுமானம் என்னவென்பது குறித்து எனக்குத் தெரியவில்லை. ஒரு நாடகத்துக்கான எழுத்துப் பிரதியையோ அல்லது ஒரு நாவலையோ நான் எழுதும்போது அதன் பெறுமானம் என்னவென்று எனக்குத் தெரியும். ஆனால் இந்தப் பிரதியில் அது இல்லை, நிச்சயமின்மை என்பது உறுதியாக உள்ளது.

உங்களுடைய அனுபவமும் வெற்றியும் இந்த நிச்சயமின்மையைத் தணிக்கவில்லையா?

வெற்றி, மகிழ்ச்சி, இவை எல்லாம் அழகானவை. ரசிக்கக் கூடியவை. ஆனால் எழுதுவதற்கு இவை எவ்விதத்திலும் உதவுவதில்லை. இவை நீங்கள் உங்கள் வேலைகளை இடைநிறுத்திக் கொள்வதற்கான ஒரு இடைவேளையாகக் கொள்ள உதவலாமேயன்றி, அதற்கு மேலால் எதுவும் இல்லை. இது ஒரு அழகான சட்டையை நீங்கள் விரும்பி வாங்குவது போலத்தான். அதனை நீங்கள் அணியும்போது அது உங்களை மேலும் அழகுபடுத்துகின்றது. ஆனால், அது உங்கள் அகத்தில் ஒரு திடநம்பிக்கையைக் கொண்டு வருவதில்லை.

உங்களுடைய எழுத்துக் கலையின் நுட்பத்தினால் பிரதிகளை 'உரு வாக்கத்' தெரிந்த நீங்கள், பிறகு ஏன் உங்களை அவஸ்தைப்பட வைக்கும் அந்தரங்கமான பிரதிகளைப் பிரசுரிக்கிறீர்கள், ?

ஏனெனில் நான் மேலும் மேலும் ஆபத்துகளை எதிர்கொள்வதை விரும்புகிறேன். (இன்னும் இந்த வார்த்தை எழுத்தைப் பொறுத்தவரையில் கொஞ்சம் கேலிக்குரியது!) என்னால் முடிந்த ஒரு குறிப்பிட்ட திறமையில் இருந்து விலகி, இன்னும் மர்மமான வெளிகளுக்கு, தொலைவாகச் செல்வதற்கு நான் விரும்புகிறேன். மற்றும்படி, என்னுடைய நாடகத்துறையில் பயிற்சி பெறவும் அல்லது அதில் மேலும் நுட்பங்களைப் புகுத்தவும் விரும்புகிறேன். இந்தத் துறையை எடுத்துக் கொண்டால்கூட, அதன் திறமையையெல்லாம் பெற்றுக்கொண்டுவிட்டேன் என்று கூறமுடியாது. ஆபத்துகளை எதிர் கொள்ளத் துணியாமல் எழுதுவதென்பது ஒரு எழுத்தா?

நீங்கள் ஆபத்துகளை எதிர்கொள்ள விளைவதாகக் கூறுகிறீர்கள். ஆனால், நீங்கள் அதன் இறுதிவரை செல்வதில்லை. இதை நீங்கள் பின்வருமாறு எழுதுவதில் இருந்து ஒப்புக் கொள்கிறீர்கள்: "ஏனெனில் எத்தனையோ வருடங்களாக நடந்து வந்த கடினமான பாதையொன்றி ருக்கின்றது. ஒருவேளை என்றோ ஒரு நாள் எனக்கு பலமும் துணிவும் இருக்குமானால் திரும்பவும் அவ்விடத்திற்கு மீளக்கூடும்".
நீங்கள் எப்போது இதை எதிர்கொள்ளத் துணியப்போகின்றீர்கள்?

எனக்குத் தெரியாது. இப்போது என்னால் அது முடியாது. உண்மையில் எப்போதுமே என்னால் அது முடியாமற் போகுமென்று அஞ்சுகிறேன்.

இதை அடைவதற்கு உங்களிற்கு என்ன தேவைப்படுகின்றது?


சில பேர் இல்லாமற் போகவேண்டும்....


அதாவது உங்களால் பிரசுரிக்க முடியாதென்று சொல்ல வருகின்றீர்களா?

இல்லை.

பிரசுரிக்க என்ன... என்னால் அதை எழுதவேகூட முடியாது. இந்தச் சம்பவத்தை இலக்கியமாக மாற்றுவதற்கான பலம் எனக்கிருக்க வேண்டும். Nathalie Sarraute இந்தப் பலத்தை அவருடைய மிகவும் நேர்த்தியான படைப்பான Enfanceஇல் கண்டு பிடித்தார். ஆனால் அவருடைய தொண்ணூறாவது வயதில்தான் அவரால் இதைச் சொல்ல முடிந்திருக்கின்றது. நான் அந்த வயதை எட்டுவேன் என்பது அதியுயர் சந்தேகத்திற்குரியது.

உங்களுக்கு இப்போதும் எழுதுவற்கு மனத் தளர்ச்சியான மனோநிலை தேவைப்படுகின்றதா? நீங்கள் இப்போது சிறிது நேரத்திற்கு முன்பு நினைவு கூர்ந்ததுபோல்....







எழுத்து என்பது ஒரு இல்லாமையினை ஈடு செய்கிறது. எனக்கு எழுத்தைவிட வாழ்க்கை பிடிக்கும். பெஸோவா சொல்வதுபோல், "வாழ்க்கை என்பது போதுமானதாய் இருந்திருந்தால் இலக்கியம் என்பது இருந்திருக்க முடியாது"

சந்தேகமில்லாமல். நீங்கள் கிரமமாக புத்தகங்களை வெளியிடுகிறீர்கள். இதிலிருந்து நாங்கள் என்ன முடிவுக்கு வரலாம்?

இந்த ஓட்டத்தில் எழுதுவதில் இருந்து நான் வெகு தொலைவில் இருக்கிறேன். நீங்கள் எதையோ போட்டுக் குழப்பிக் கொள்கிறீர்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனால் இவ்வளவுக்கு உற்பத்தி செய்பவளாக நான் இருக்கிறேன் என்று நீங்கள் என்னைக் கருதினால்,.. எனவே நான் எனது உறுதியில் எங்கோ குறைபாடுள்ளவளாக இருக்கிறேனென்று கருதலாமா? (சிரிப்பு) போதாமை அல்லது வாழ்க்கையின் வலி என்பது மகிழ்ச்சியுடனும் மனோரம்யத்துடனும் பொருந்திப் போகாது. நான் எப்போதும் மனத்தளர்ச்சி நிலையில் இருந்து எழுதியதில்லை. அந்த நிலை என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால், என்னில் மறைந்து போயுள்ள அல்லது எனக்குப் புலப்படாத நிலைகள் என்று இருக்கின்றன. அதாவது, என்னை மிகவும் அவதானத்துடன் வாசித்தால், நான் வாழ்க்கை பற்றி ஒரு உத்தமமான கோட்பாட்டைக் கொண்டவளாக எண்ண முடியவில்லை, அல்லவா?

ஆனால், அது மூட்டமாகவும் நம்பிக்கையற்றதாகவும் இருக்கின்றதென்றும் இல்லை. அப்படியில்லையா?

மெய்யாகவே.

இந்த இரண்டினதுமான சேர்க்கைதான் என்னுள் நிரந்தரமாக இருக்கும் உண்மையாக இருக்கின்றது.

நீங்கள் எழுதுவதில் உள்ள உங்களுடைய 'சாமர்த்தியங்கள்' பற்றி நீங்கள் பிரசன்னப்படுத்துகிறீர்கள்? அவை எவை?

நான் இப்படியொரு வார்த்தைப் பிரயோகத்தைப் பாவித்திருக்கக் கூடாது. ஏனெனில், இது ஒரு தவறான உள்ளர்த்தத்தைக் கொடுக்கின்றது. இது எப்படியான ஒரு விளக்கத்தைச் சுட்டி நிற்கின்றதென்றால், எழுத்து ஒரு ஏமாற்று வேலை என்பதுபோல். ஆனால் இங்கு இது ஒரு நுட்பத்தைச் சுட்டி நிற்கின்றது. அதற்கு மாறாக, நான் எதையும் ஒரு சாமர்த்தியத்துடன் எழுதக் கூடாதென்று என்னை வலுக் கட்டாயப்படுத்து கின்றேன். ஆனால் இன்னொரு புறத்தில், 'சாமர்த்தியம்' என்கின்ற வார்த்தை மிகப் பொருத்தமானதாகத் தெரிகின்றது. ஏனெனில் எல்லா எழுத்துமே ஒரு வகைத் தந்திரம்தான். வாழ்க்கைபற்றிய சாமர்த்தியம் என்பது, நாங்கள் வாழ்க்கையை எப்படி அணிந்து கொள்கிறோம் என்னும் அர்த்தத்தில்தான். உண்மையை நோக்கிய தேடல் என்பது எந்த ஏமாற்றுக்களும் இல்லாததுதான். சரியாகச் சொல்வதென்றால், தேவையில்லாமல் சர்ச்சைகளைத் தேடாதிருத்தல், மகிழ்ச்சியை எதிர் பார்க்கும் எழுத்தை விரும்பாதிருத்தல், அதாவது, அது ஒரு ஆழமான அர்த்தத்துக்கு விடை பகராதிருத்தல் என்பதைத்தவிர.

இதுதான் நான் எழுதும்போது கடைப்பிடிக்க முயற்சி செய்வது.



நீங்கள் எப்படி எழுதுகின்றீர்கள்?

நான் எங்கிருந்தும் ஆரம்பிப்பதில்லை. நீண்ட குறுகலான ஒழுங்கை ஒன்றில் பயணிப்பதுபோல நான் என்னை அலைய விடுகிறேன். வெகுதூரம் நடப்பதில் அலாதிப் பிரியம் உடையவள் நான் . எனக்கு மலைச் சரிவுகள் மீதான பாதைகளில் பயணிப்பதில் மிகுந்த நாட்டமுண்டு. நாங்கள் அறியாத வளைவுகளைக் கொண்டிருப்பதனால் அதனைச் சுற்றிச் செல்லும் பாதைகளில் நடப்பது ஒரு தனி அனுபவம். நேரான ஒரு பாதைக்கும் வளைவுகள் கொண்ட ஒரு பாதைக்கும் இடையில் என் தெரிவு இருக்க வேண்டுமெனில், அது எப்பொழுதும் ஒரு வளைவான நெடிய நீண்ட பாதையாகத்தான் இருக்கும். இப்படித்தான் எனக்கு என் எழுத்தும். நாங்கள் தொலைந்து போவதற்கான சாத்தியங்கள் இருக்கும் பாதைகளைத் தெரிவு செய்வதும் அவற்றினூடே தொலைந்து விடாத பயணத்திற்கான முயற்சியும். இன்னும் நாங்கள் எங்கு செல்கிறோம் என்பது தெரியாத ஒரு பாதையில் குழம்பியபடி செல்வதும்தான்.

நீங்கள் ஒரு நாடகப் பிரதியையோ அல்லது ஒரு நாவலையோ எழுதத் தொடங்கும்போது உங்களுடைய கதாபாத்திரங்களின் நியதி பற்றி உங்களுக்கு எப்போதும் தெரியாது, அப்படியா?

ஒருபோதும் தெரியாது. அவர்களிற்கு என்ன நடக்கப்போகிறது என்பதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது.

அப்படி இருந்தும், எல்லாமே மிகச்சரியாக செதுக்கப் பட்டது மாதிரியான தோற்றத்தைக் கொடுக் கின்றதே....?

'செதுக்கப்படுதல்' என்னும் பதம் என்னைக் கொஞ்சம் அச்சுறுத்துகின்றது. என் மனக்கட்டுக்குள் மிகவும் வல்லமையுள்ள ஒரு சிற்பி ஒருவர் இருந்து எனக்குத் தெரியாமலே தீர்மானிக்க வேண்டும். இதுதான் Dans la luge d'Arthur Schopanhauerஇன்

எழுத்துக்குள் வெளிப்படுகின்றது. இதன் ஆரம்பப் புள்ளியில் இந்த நான்கு கதாபாத் திரங்களையும் கொண்டிருந்தேன். தத்து வத்தைப் பற்றிக் கொள்வதற்கு விளங்கும் ஒரு குறிப்பிட்ட முறையின் மீதான விமர் சனம். நான் அதற்குள் பிரவேசித்தேன்.... என்ன சம்பவிக்கும் என்பது தெரியாமல். சந்தேகமில்லாமல் என்னுடைய மூளைக் குள் ஏதோ ஒன்று என்னை நெறிப்படுத் தியது. எங்கே செல்ல வேண்டுமோ அங்கு கூட்டிச் சென்றது. அது சேர்த்தது, அழித் தது. சீர்துாக்கியது, நிர்மாணித்தது. நான் அதை உணரவில்லை. அத்துடன் நான் எனது எழுத்துக்களை திரும்பவும் வாசிப்ப தில்லை. நான்கு அல்லது ஐந்து வருடங் களிற்குப் பின்புதான் அவற்றினுடைய கலைநுட்பத்தைப்பற்றி நான் கண்டு கொள்வேன். ஒரு குறிப்பிட்ட கால இடை வெளிக்குப்பின், நான் வெவ்வேறு மொழி களில், வெவ்வேறு நாடுகளில் என்னுடைய நாடகப் பிரதிகளின் மேடை யேற்றத்தைப் பார்க்கப் போகிறேன். அப்போது நான் அவற்றை மீள்கண்டு பிடிக்கிறேன். அங்கு நாடகக் கொட்டகையை விட்டு வெளியே வரும்போது அந்த நாடகம் உண்மையி லேயே நன்றாக கட்டமைக்கப்பட்டிருக் கிறது என்று எனக்கு நானே சொல்லிக் கொள்ள நேர்ந்திருக்கிறது.



நீங்கள் சொல்பவைகளைக் கேட்கும்போது, மெய்யாகவே, நீங்கள் எழுதுவதற்கு எவ்வித நுட்பங்களையும் பாவிப்பதில்லை. அப்படித்தானே...?

இல்லை. எந்தவித நுட்பங்களும் இல்லை. ஆனால் வெவ்வேறு உணர் திறன்கள் உள்ளன.

நீங்கள் எழுதியவற்றில் நிறையதைக் கழித்து விடுவீர்களா?

ஆம். நிறைய். அவ்வப்பொழுது. சுருங்கச் சொல்லிப் புரிய வைத்தலை நான் விரும்புகிறேன். அடக்கமாய் இருப்பது எனக்குப் பிடிக்கும்.

உங்களுடைய சகல படைப்புகளிலும் தோன்றும் இந்த சுருங்கக் கூறுதலின்மீதான விருப்பு உங்களுக்கு எங்கிருந்து வருகின்றது?

உண்மையில் எப்போதும் விபரிப்பு என்பது என்னி டத்தில் கிடையாது. செய்கைகள் அற்பமாக இருக்கும். ஒரு கதவு எப்படித் திறக்கின்றது என்பதையோ அல்லது ஒரு கதாபாத்திரம் இந்த இந்த முக்கியமான செயல்களைச் செய்கின்றது என்பதையோ நான் விபரிப்பதில்லை. என் ரசனைக்குரியதாக எது இருக் கின்றதென்றால், அவர்களின் செய்கைகள் அல்ல. அவற்றின் மனசுதான். நிகழ்வுகளை விபரிப்பதை விடுத்து, கதாபாத்திரங்களின் இருப்பை விமர்சனக் கண்ணோட்டத்தில் பார்ப்பது.

காலத்தை விரயமாக்க நான் விரும்புவதில்லை. நேரடியாகவே நான் விடயத்திற்கு வந்து விடுவேன். ஒரு பிரதியானது மேலும் எதுவும் சேர்க்கப்படவோ விலக் கப்படவோ தேவையில்லாமல் அவ்வளவு அடக்கமாக வந்துவிழும் பொழுது நான் அதன் எல்லையைக் கண்டுவிட்டேன் என்பதுதான் அது.

நீங்கள் சொல்கிறீர்கள் Nulle Part பிரதியானது உண் மைக்கு மிகவும் நெருக்கமானதென்று. ஆனால் நீங்கள் எப்போதும் வேரோடு பிடுங்கி வீசப்பட்டவளாக உங்களைப்பற்றிப் பிரகடனப்படுத்தி இருக்கிறீர்கள். நாங்கள் அது அப்படியல்ல என்று கண்டு பிடிக்கி றோம். ஊடகங்கள் உங்களுடைய மூலம்பற்றி மிகவும் வில்லங்கப்படுத்திக் கேட்டிருக்கிறார்கள். உங்களுடைய தாய்வழி கங்கேரியைச் சேர்ந்த தென்றும் உங்களுடைய தந்தைவழி ரஷ்யாவையும் ஈரானையும் சேர்ந்ததென்றும் கூறுகின்றார்களே...?

இதுதான் குறிப்பாக என்னை மிகவும் கோபமூட்டியது.

எனினும் உங்கள் தொடர்பான இந்தப் பிரதிமையை நீங்கள் வரவேற்றீர்கள். அதற்கு ஊக்கம் கொடுத்தீர்கள்...?

சரி... இப்ப என்ன...? உங்களுக்கு நான் உண்மையைச் சொல்ல வேண்டுமா...?

நிச்சயமாக!

நான் எழுதுவதற்கு ஆரம்பித்தபொழுது பத்திரிகைகள் என்மீது அக்கறை காண்பித்தன. நான் சில நேர்காணல்களுக்கு உடன்பட்டேன். அங்குதான் சில குழப்பங்கள் ஏற்பட்டன. அங்கு எதையும் சொல்லக் கூடிய ஒரு அற்புதமான சாத்தியம் இருந்ததைக் கண்டேன்.

அதாவது நீங்கள் பொய் பேசினீர்கள் என்று சொல்ல வருகிறீர்களா...?
உங்களுடைய வேர்கள் பற்றி...? உங்களுடைய பெற்றோர்பற்றி...?

என்னுடைய வாழ்க்கையை நான் மீளக் கண்டு பிடித்தேன். என்னிடம் எந்த அத்தாட்சியங்களும் கேட்கப்படாதபடியால், உண்மையில் இருந்து நான் சிறிது விலகி நின்றேன். என்னுடைய பொன்னான இளமைப் பருவம், பயணங்கள், பரந்த நோக்கு.... இத்தியாதி.

என்னைப் புரிந்து கொள்ளுங்கள். நான் ஏழையாகவும் துயரமானவளாகவும் இருப்பதை விடுத்து ஒரு அழகியாகவும் வசப்படுத்துபவளாகவும் தோற்றம் காட்ட விரும்பினேன். அதாவது, என்னுடைய வாய் மொழிகள் என்னை இப்படித் தொடர்ந்து வரும், என்னோடு ஒட்டிக் கொள்ளும், சந்தேகத்திற்குரிய விகற்பத்தைத் தோற்றுவிக்கும் என்பதை நான் அறிந்திருக்காத இந்த அறியாமை என்னிடம் இருந்தது. மேலும் என்னைப் பற்றிய இன்னொரு தோற்றத்தைக் கொடுக்கும், அத்துடன் சந்தேகத்துக்குரிய விளக்கப் பாடுகளைக் கொண்டு வரும் என்பதெல்லாம் புரிந்திருக்கவில்லை. திடீரென்று, என்னைப்பற்றி பத்திரிகைகளில் வெளிவந்த விடயங்களை எல்லாம் மீளக் கோர்த்து சந்தேகத்திற்கிடமான அல்லது நிச்சயமில்லாத வாக்குமூலங்கள் என்று அவற்றைப் பெரிதுபடுத்தின. காலம் செல்லச் செல்ல இது ஒரு கணக்கிட முடியாத மிகவும் பூதாகரமான ஒரு பரிமாணத்தை எடுத்தது.



நீங்கள் கூறுவதைவிட மிகவும் மோசமாக நான் சந்தேகப்பட்டேன்.....
ஆனால், ஏன் இந்தப் பொய்களைப் பொய்களென்று நீங்கள் இப்போது ஒத்துக் கொள்கிறீர்கள்?

ஏனெனில் நான் இந்த Nulle Part பிரதியை இப்பொழுது வெளியிடுகிறேன். எனவே என்னை நான் மீளமைப்பதற்கான தேவையொன்று இப்போதிருக்கின்றதை உணருகின்றேன். நான் விரும்புகின்ற எல்லா எழுத்தாளர்களுமே, பெக்கெற் தவிர்ந்த, ஏதோ ஒரு இடத்தில் இருந்து வந்தவர்கள், ஒரு பூமிக்குச் சொந்தமானவர்கள், அவர்களுக்கென்று ஒரு நிலம் இருக்கின்றது. சத்தியமாக, உண்மையாக, எந்தவொரு மண்ணும் எனக்குச் சொந்தமல்ல.

இந்தப் பொய் பேசுவதன்மீதான பற்றுதலா உங்கள் வாழ்க்கையை இன்னொருவிதமாக வெளிப்படுத்துவதற்கு உந்துதலாக இருந்திருக்கின்றது?

பொய் பேசுதலில் அப்படி ஒரு பிடித்தமும் எனக்கில்லை. இந்த வார்த்தையை நான் நிராகரிக்கிறேன் அல்லது ஆட்சேபிக்கிறேன். என் வாழ்க்கையுள்ளான இந்த உரிமையற்ற ஊடுருவலும் இந்தக் கேள்விகளும் எனக்கு அருவருப்பைத் தருவதைக் காண்கிறேன். திடீரென்று என்னுடைய அந்தரங்க வாழ்க்கைபற்றி, என் பெற்றோர்பற்றி, நான் எங்கே பிறந்தேன் என்பது பற்றி, நான் எங்கே வளர்ந்தேன் என்பதுபற்றி.....


நீங்கள் ஏற்கனவே கொட்டியவற்றைத் திருத்தப் போகிறீர்களா? நான் என்ன கேட்கின்றேன் என்றால், ஒரு நாளைக்கு உங்கள் சுயசரிதையை எழுதப் போகிறீர்களா?

இல்லை. நிச்சயமாக இல்லை. அது சுவாரஸ்யமானதாக இருக்கக்கூடும் என்றாலும் கூட.... ஆனால் எனக்கு அதில் அவ்வளவு தூரம் ஈடுபாடில்லை. L'homme du Hasardஇல், அதன் கதாபாத்திரங்களில் ஒன்றான எழுத்தாளன் தன்னுடைய வழக்கறிஞனிடம் சொல்கிறான் "என்னுடைய மரணத்தின் பின் என்னைப் பற்றிய சரிதத்தை எழுதுவதற்கு முற்றாகத் தடை. ஒரு எழுத்தாளனின் சரிதம் என்பது முற்றுமுழுதான ஒரு அபத்தம்"

எனக்கு நன்றாகத் தெரியும் நாளைக்கு யாராவது ஒருவர் என்னுடைய சரிதத்தை எழுதுவதற்குத் தீர்மானிக்கலாம். அது எனக்கு அச்சம் தரும் ஒரு சிந்தனை. என்னுடைய அந்தரங்க வாழ்க்கையைப் பற்றி யாருக்கும் எதுவும் தெரியாது. என்னோடு கூடிய அந்தரங்கங்கள் எதையும் பிரசித்தப்படுத்துவதில் எனக்கு உடன்பாடில்லை.

மீண்டும் உங்களுடைய புத்தகங்களுக்கு வருவோம், ஆனால், பொய்யின்றிப் பதிலுரைப்பீர்கள் என்று சத்தியம் செய்யுங்கள்!

சத்தியமாக!



Dans la luge d'Arthur Schopenhauer**இல் எது உங்களை ஆகர்ஷித்தது? அறிவுஜீவிதத்தின் குருவுக்கு தன்னுடைய சொந்த வாழ்க்கையையும் தான் போதிப்பதையும் இணைக்க அல்லது ஒருமைப்படுத்தத் தெரிய வில்லை என்பதன் மீதான கேள்வியா அல்லது அறிவதிகாரத்தின் வன்முறை என்பதன் விமர்சனமா?**

அது ஒரு வாழ்ந்து அனுபவித்த சூழல். எல்லாமே கடைசிப் பிரதிமையில் இருந்துதான் ஆரம்பிக்கின்றது. நடைபாதையொன்றில், இலேசாக உடை யணிந்த, துணிவாகத் தோன்றிய பருமனான ஒரு மனிசிக்குப் பின்னால் நான் ஒரு நாள் நின்றேன். அங்குமிங்குமாக இழுபடும் தன்னுடைய மூட்டைகளேற் றிய வண்டிலுடன் அவள் தடுமாறிக் கொண்டிருந்தாள். நான் அவளைக் கடந்து முன்னேறுவதை அது தடுத்தது. இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில், எங்களை ஆட்கொள்ளும் இந்தத் தாங்க முடியாத பொறுமையின்மை என்னும் உணர் வினை நான் நேரடியாக அன்று அனுபவித்தேன். சிலவேளைகளில் இது வாழ்வதற்கான பேராசையினால் விழுங்கப்பட்டு விடமுடியும் என்பது மிகவும் அதிசயமானது. இந்த வாழ்வின் மீதான 'ஷொப்பனோரிய' விருப்பு எங்களைத் தீர்மானிக்கின்றது. நாங்கள் எங்களுடைய வாழ்க்கையை கண்காணிப்புக் குள்ளாக்குகிறோம். சுற்றிவர ஒரு கோட்டைப் போடுகிறோம். ஒழுங்குபடுத்து வதற்கு முயற்சிக்கின்றோம். ஆனால் அது அங்கேயே இருக்கின்றது.




உங்களுடைய பிரதியில், ஒரு மனோதத்துவ நிபுணர் இந்த உணர்வோடு வாழ்கிறார். அவருக்கு தன்னுடைய கோட்பாடுகளை நிராகரிப்பதற்கு யதார்த்தத்தின் நிறுவல் தேவை. எடுத்ததெல்லாவற்றுக்கும் மனோதத்துவ விபலாளர்களை ஆலோசிக்க நினைக்கும் ஒரு உலகத்தினைப் பரிகசித்தல் என்றும் இதனைக் கொள்ளலாமா?

அதை அப்படிப் பார்ப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கின்றது. எனக்கு மனோதத்துவ நிபுணர்கள்மீது அவ்வளவு நல்லெண்ணம் இல்லை. இன்றைய சமூகம் அவர்களை முற்காலத்து ஞானிகளின் நிலைக்கு ஆக்கியிருக் கின்றது. மிகவும் அற்பமானதொரு பிரச்சினை வந்தவுடனேயே நாங்கள் அவர்களை ஆலோசிக்கின்றோம். எல்லாத்துறைகளிலும் எல்லா விடயங் களிலும் பத்திரிகைகள் மனோதத்துவ நிபுணர்களின் அபிப்பிராயத்தைக் கேட்கின்றன. இங்கு, மனோதத்துவ நிபுணர் எதையும் புரிய வைப்பதில்லை என்பது மட்டுமல்ல, அவருக்கு இருக்கும் அறிவு என்று நாங்கள் நம்பிக் கொள்வதற்கு மிகப் பெரியளவில் முரண்பாடாகவும் இருக்கிறார்.

நீங்கள் விபரித்த இந்த நடைபாதைமீது அங்குமிங்குமாக இழுபட்ட பெண், L'homme du Hasard**இல் வரும் பெண்ணுடன் ஒற்றுமையாக இருக்கிறார். அத்துடன் அது போடெலார் மரணத்தை விபரிப்பதைப்போன்ற ஒரு நடையுடன் பொருந்திப் போகிறது. 'ஒரு வயோதிப மாதின் சுவடு களின் கீழ்' இது சபின் வைஸின் புகைப்படம் ஒன்றின் விபரிப்பு, அப்படியல்லவா?**

ஆம், அது ஒரு அபூர்வமான புகைப்படம். எனக்கு சபின் வைஸை மிகவும் பிடிக்கும். இவர் ஒரு மிகவும் அற்புதமான பெண்ணும் ஒரு மிகச் சிறந்த போட்டோகிராபரும் ஆவார். என்னுடைய வாழ்க்கையில் நான் பார்த்த புகைப்படங்களில் என்னை மிகவும் பாதித்தது இதுவாகத்தான் இருக்கும்: அழுதுகொண்டிருக்கும் அந்தப் பெண், வெண்கற்கள் பதிக்கப்பட்ட அந்த மோசமான சுவர்.... La luge இல்கூட நான் இன்னொரு பெண்ணைப்பற்றி விபரிக்கிறேன். அதுவும் இதே பெண்தான். அது காலம், இழிந்த தோற்றம், தனிமை யின் எல்லை என்பவற்றின் பிரதிமை,



Dans La luge de AS **இற்கும்** Nulle part**க்கும் இடையில் ஒரு விடயத்தில் ஒற்றுமை இருக்கின்றது: விகிதாசாரமற்ற ஒரு சந்தோஷம் கவலையாக மாற்றமடைய முடியும் என்ற சிந்தனை. இந்த முரண் உண்மையை நீங்கள் எப்படி விளக்குகிறீர்கள்?**

மிகப் பெரிய மகிழ்ச்சியில் அந்தக் கணம் அல்லது காலம் தொலைந்து விடுகிறது. எல்லாம் அங்குதான் இருக்கிறது. இதுதான் மகிழ்ச்சியின்

துன்பியல். அது நீட்டிக்கப்படக் கூடியதல்ல. மகிழ்ச்சி, மிக உச்சமான மகிழ்ச்சி, அகோரமான அற்பாயுசானது. நான் மிகச் சிறியவளாக இருந்த பொழுதிருந்தே இது எனக்குத் தெரியும். துரதிர்ஷ்டவசமாக இது எனக்குத் தெரியும், மகோன்னதமான மகிழ்ச்சியில் இருப்பதற்கு அல்லது திளைப்பதற்கு என்னால் முடியும். ஆனால் அதேநேரம் அதன் அற்பாயுசின் உச்சம்பற்றிய தன் மையை உணர்ந்து கொள்ளாத ஒரு அவதானிப்பில் லாது அதை அனுபவிக்கவும் என்னால் முடியாது. அப்போது உடனடியாகவே சோகம் கவிந்து விடுகிறது. Nulle Partஇல் நான் விபரிக்கும் ஒரு காட்சியை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அது நான் சிறுமியாக இருந்த போது எனக்கு நடந்தது. பாடசாலை முடிந்து நான் வெளியே வரும்போது, என்னுடைய பெற்றோர் என்னை நோக்கி வருவதைக் கண்டேன். நான் மிகவும் குதூ கலமான மகிழ்ச்சியை அனுபவித்தேன். மறு கணமே சோகமான அந்தப் பொழுதை நான் வாழ்ந்திருக் கிறேன். சிறையில் இருந்து அப்போதுதான் விடுவிக் கப்பட்ட ஒரு சிறுமிபோல் நான் அவர்களை நோக்கி ஓடினேன். அந்த நேரத்தில், ஒரே தருணம் அவர்களைக் கண்டதன் அந்தரங்கமான மகோன்னத மகிழ்ச்சி யையும் அந்த ஓட்டத்தைத் தடுத்து நின்ற சோகத் தையும் உணர்ந்தேன். அருமையான அந்தக் கணம் சோகத்தின் உற்பத்திக் கணமாயிற்று. இந்தச் சம்பவம் தான் என்னுடைய முழு வாழ்க்கையையும் தீர்மா னித்தது....

தன் வாழ்நாள் முழுவதும் ஸ்பினோஸா பற்றிப் போதிக்கும் ஒரு தத்துவ ஆசிரியரை என்ன கார ணத்திற்காக நீங்கள் தேர்ந்தெடுத்தீர்கள்? காண்ட் அல்லது கேகலை விட்டு ஏன் நீங்கள் ஸ்பினோஸா விடம் சென்றீர்கள்?

தத்துவத்தில் அளப்பரிய அறிவைக் கொண்டிருப் பதாக நான் எப்போதும் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், எனக்கு ஸ்பினோஸா, சோகத்தின் மீதான பெருவிருப்பை, அதாவது துக்கத்தையும் இரக்கத் தையும், தீவிரமாகக் கண்டித்தவராக எனக்குத் தெரிந்தார். ஓர் இலட்சிய உலகத்தில், ஸ்பினோ ஸாவின் கோட்பாடுகளை சேர்த்துக்கொள்ள முடிய வேண்டுமென்று விரும்புவோம். அவரைப்போல் சொல்ல



முடிவதற்கு விரும்புவோம். "எதிர்பார்ப்பைக் கூட ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, நாங்கள் மகிழ்ச்சியின்மீது எங்கள் கவனத்தைக் குவிப்போம்". நான் ஸ்பினோஸா வுடன் சேர்ந்து கொள்கிறேன், எப்படியென்றால், பொதுப்புத்தியானது எதிர்பார்ப்பு என்பதனை ஒரு அறமாகக் கொள்ளும்போது, எதிர்பார்ப்பென்பது ஆழமான பிளவுகளை உருவாக்குகின்றதென்றும் அது சோகத்தின்மீதான ஈடுபாடுதான் என்பதையும் உருவாக் கியமைக்காக. ஸ்பினோஸாவுக்கு ஒரேயொரு அறம் மகிழ்ச்சிதான், மகோன்ன தமான சந்தோஷம் கொண்டு வரக்கூடிய சக்தியின் பலம், ஆனால், எனக்கு அதே நேரம் இன்னொரு விடயமும் புலப்பட்டது. அது நிலைக்காது! நான் என்ன சொல்கிறேன் என்றால், தனியாக அது நின்று பிடிக்காது! அநியாயம்! மனித நிபந்தனையென்பது இதைவிடப் பலமானது, அது நிறையக் குழப்பங்களுடன் சம்பந்தப்பட்டது.

ஆரியல் ஷாப்மான் தன்னுடைய வாழ்நாள் முழு வதும் ஸ்பினோஸாவைப் போதித்தார், தன்னுடைய இருத்தல் மிகச்சிறிய அளவில்தான் தனக்கு மகோன்னத மகிழ்ச்சியைத் தந்ததென்று கண்டபோது மனச்சோர்வுக்கு ஆளாகியவர்....

அவர் தன்னுடைய வாழ்நாளின் பெரும்பகுதியினை கோட்பாட்டுக்கே அர்ப்பணித்தவர். ஆனால் அந்தக் கோட்பாடு தானே நிற்க முடியாது வழுவிச் செல்லும் போது, அவருக்கு எந்தவிதமான ஆதரவும் இருக்க வில்லை. கோட்பாடானது எதற்கும் உதவாது. அது ஒருவரின் வியர்த்தமான எண்ணம் மட்டுமே. இதனால் தான் ஆரியெல் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தான் பிரசங்கித்தவைகள் எல்லாவற்றையும் வன்மத்துடன் தூக்கி எறிகிறார். அவைகள் எதுவும் அவர் இக்கட்டான துன்பங்களுக்குள் மூழ்கிப் போகும்போது உதவ வில்லை. வஞ்சகத்திற்கும் ஏமாற்றுக்கும் முன்னால் வினாக்களுடன் நிற்கின்றார்.

திட்டவட்டமாக பாசாங்குத்தனம் எங்கிருக்கின்றது?

நிச்சயமாக அது ஸ்பினோஸாவிடம் அல்ல. அவரிடம் பாசாங்கு இருக்கின்றதா! அப்படியே இல்லை. வஞ்சகர்கள் யாரென்றால் கோட்பாட்டைப் பகுத்தறியத் தெரியாது அதைக் கெலியில் விழுங்கி அப்ப டியே கக்குகின்ற அறிவுஜீவிகள். எல்லாக் கோட்பாடும் வாழ்க்கை அனுபவத்துடன் பொருத்திப் பார்க்கப்பட வேண்டியது. - இதை இப்படிச் சொல்வதன்மூலம் நான் ஒரு கோட்பாட்டுருவாக்கம் என்பதற்கான தூண்ட லைக் கொடுக்கிறேன்! ஆனால் நான் இந்தப் புத்த கத்தில் எதைக் காட்ட முயற்சிக்கின்றேன் என்றால், வாழ்வனுபவத்துடன் சமாந்தரமாக விருத்தி செய் யப்பட முடிகின்ற ஒரு கோட்பாட்டிற்கு பெறுமானம் இல்லை என்பதுதான். இது பல்கலைக்கழகத்தின் பிரச்சினை. பல்கலைக்கழகக்காரர்கள் சிந்தனை களின் புத்தகப்பூச்சிகள்.

நீங்கள் பல்கலைக்கழகத்தைத் தாக்குகிறீர்களா அல்லது....?

நான் எதையும் தாக்கவில்லை! சத்தியமாக

யாரையும் தாக்கவில்லை!

ஆனால் இது இந்தப் பல்கலைக்கழகக்காரர்கள் பற்றிய மிகத் தீவிரமானதும் நகைப்புக்கிடமானதுமான ஒரு விமர்சனம்தானே! இவர்கள் வருடக் கணக்காக ஒரு கோட்பாட்டைக் கற்பிப்பார்கள். அது யதார்த்தத்தின் வலிமைக்கு முன் தாக்குப் பிடிக்க முடியாது, அப்படித்தானே?

ஆம். அதுதான்.

உங்களுடைய புத்தகத்தைப் படிக்கும்போது, பல்கலைக் கழகத்திற்குள் விசாரிப்பையும், அத்துடன்கூட இன்றைய சிந்தனைப்பாட்டின் நிலைபற்றி கோட்பாட்டுருவாக்கத்தின் மூலம் நெட்டுயிர்க்கும், பிரசங்கிக்கும் அறிவுஜீவிகளையும் பற்றிச் சிந்திப்பதையும் தடுக்க முடியவில்லை.

நான் அப்படி பதில் சொல்லமாட்டேன். ஏனெனில், உண்மையாக, அவர்களை நான் ஒரு பிரிவாகப் பிரித்து வைப்பதற்கு அல்லது அவர்களது பெயர்களைச் சொல்வதற்கு விரும்பவில்லை. உங்களுடைய கேள்வியை நான் நாசூக்காக விலக்கிக் கொள்கிறேன். இப்படிச் சொல்லலாம், அறிவுஜீவிகளின் நிலைப்பாடு என்னை இன்னும் சங்கடப்படுத்துகின்றது. ஏனெனில், அது வாழ்க்கைக்கு வெளியே உள்ளது. அநேகமான சமயங்களில் அது நின்றுபிடிக்க முடியாதது.

எதில்?

யதார்த்தம், அது முரண் மெய்களினதும் முரண்பாடுகளினதும் கூட்டு. யதார்த்தம் வெள்ளையையும் கறுப்பையும், உடன்பாட்டையும் உடன்பாடின்மை யையும் கொண்டிருக்கின்றது. ஒரு மனிதன் பல்வேறு விசாரணைகளாலும் முரண்பாடுகளினாலுமே ஆக்கப்பட்டவன். இங்குதான் ஷொப்பனோவர் தோன்றுகிறார், ஒருவித விமோசனத்தை வழங்குகின்றார். "எங்களைப் பற்றி ஏதாவது தெரிந்த முதலாமவர்" என்று ஷொப்பனோவர்பற்றி இற்றாலோ ஸ்வேவோ சொன்னார். கோட்பாட்டாளர்கள் இந்த முரண்பாடுகளின் பன்மை நிலையை செப்பிடு வித்தையாக்குகின்றார்கள். ஒற்றைப் பரிமாணம் கொண்ட விவாதங்களை உருவாக்குகின்றார்கள். இவைகள் நிச்சயமாக மிகவும் கவர்ச்சியானதாக இருக்கும். ஆனால் அவை யதார்த்தத்தின் முன்னாலும் வாழ்க்கைக்கு முன்னாலும் நின்று பிடிக்க மாட்டா. இங்குதான் அந்த வஞ்சகத்தன்மை வந்து சேர்கின்றது.

உங்களுடைய சிந்தனைக்கு ஆதரவாக, ஆரியலின் ஆசான்களான அல்தூஸரினதும் டெலெஸினதும் சம்பவங்களுக்கு அழுத்தம் கொடுக்கிறீர்கள்.: ஒருவர் தனது மனைவியின் கழுத்தை நெரித்தார். மற்றவர் யன்னல் வழியாகக் கீழே பாய்ந்தார். ஸ்பினோஸிய மகிழ்ச்சி இவர்களுக்கு ஒரு பெரிய பாதுகாப்பைக் கொண்டு வந்த மாதிரி இல்லை. ஆனால் நீங்கள் கொஞ்சம் மிகைப்படுத்தித் தாக்குவதுபோல் இல்லையா?

டெலெஸின் விடயத்தை எடுத்துக் கொண்டால், ஆம், நான் அவருடன் உடன்படுகிறேன். டெலெஸ் தற்கொலை செய்துகொண்டார் என்று ஒருவர் சொல்ல முடியும், ஏனென்றால், அவர் தினறிப் போனார். அவருடைய பார்வையின் நிமித்தம் இது நடந்தது. கிட்டத்தட்ட மகிழ்ச்சியான ஒரு விடுதலை...! இந்தக் காத்திரமான தற்கொலையினுள் அற்புதமான ஏதோ ஒன்று உள்ளது.

ஆனால் கோட்பாட்டுரீதியான தத்துவம் அல்தூஸருக்கு எந்தவிதத்திலும் உதவி செய்யவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். 'மனிதத்துவத்தை மறுக்கும் கோட்பாடு' என்பதன் கோட்பாட்டாளர் தன்னுடைய மனைவியின் கழுத்தை நெரித்தார். இந்த அல்தூஸருக்குத்தான், அதாவது, மனநோயாளியாக கிரமமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த, என்னுடைய அநுதாபங்கள் உண்டு. தவிர தத்துவத்தின் கோட்பாட்டாளருக்கல்ல.

அல்தூஸர், டெலஸ், பார்த்தஸ், சார்த்தர், ஃபூக்கோ... போன்ற பெரிய தத்துவவியலாளர்களை குருவாகக் கொண்ட இந்தத் தலைமுறை விரிவுரையாளர் களுக்கும் அறிவுஜீவிகளுக்கும் நீங்கள் ஒரு போக் கின்மையைச் சுட்டுகின்றீர்கள்?

ஆம்! அவர்களுடைய சோகம் என்னவென்றால், அநேகமாக தங்களையே ஆசான்களிடம் சமர்ப்பித்து விடுகிறார்கள். எனவே அவர்களைக் கடந்து செல்வதில் வெற்றி காணமுடியாதவர்களாகிறார்கள். மீறிச் செல்வதை எண்ணுவதில்லை. உண்மையிலேயே ஒருவர் வாழ்நாள் முழுவதும் சீடராகவே இருக்க முடியுமா என்பது கேள்விக்குறிதான்.

எல்லாத் தத்துவமும் பிரயோசனமற்றதும் வீணானதும் என்று குறிப்பிடுகிறீர்களா?

உங்களுக்கு நான் ஞாபகமூட்டுகிறேன். தத்துவரீதியான கோட்பாடுகளின் வியர்த்தம் பற்றிய சிந்தனைகளையெல்லாம் என்னுடைய கதாபாத்திரங்கள் கொண்டிருக்கின்றன. அவை என்னுடைய சிந்தனைகள் அல்ல. உங்களுடைய சொந்த விமர்சனங்களில் இருந்து பார்க்கும்போது, ஒரு சிந்தனையானது ஒரு கதாபாத்திரத்தினூடாக வெளிப்படுத்தப்படும்பொழுது அது அதற்கான தகுதியுடையதாகவோ அல்லது இல்லாததாகவோ ஆகிறது. அப்போது அது தன்னுடைய செயற்பாட்டில் இருந்து வழுவிச் செல்கிறது.

மேடையில் வெவ்வேறு சிந்தனைகள் கொண்ட நான்கு பாத்திரங்களை நான் உலவ விடுகின்றேன். அவை ஒவ்வொன்றிற்கிடையிலும் நான் இருக்கிறேன். தத்துவம் என்பது ஒன்றுக்குமே பிரயோசனப்படாதென்றல்ல. எதிரிடையாக. நான் தத்துவத்திடம் என்ன கேட்கிறேன் என்றால் அது மீண்டும் வந்து தன்னுடைய முதன்மையான வேலையைச் செய்ய வேண்டும். அதாவது, வாழ்வதற்கான கலை எப்படி என்பதைத் தத்துவம் கற்றுத்தர வேண்டும். எனக்கு எது இடைஞ்சலாக இருக்கின்றதென்றால், தத்துவமல்ல, ஆனால் தத்துவத்தின் கோட்பாட்டுருவாக்கம், ஒரு சிந்தனையின்

கட்டமைப்புருவாக்கம். தத்துவத்தை வாழ்வதற்கான கலையாக ஒருவர் எடுத்துக் கொள்வதற்கு, கோட்பாடு போலல்லாது, பரப்பிரம்மமான உண்மை போலல்லாது, நிச்சயங்களின் கூட்டல் போலல்லாது, அது வாழ்க்கையில் பரப்பிரம்மமானதொரு அநுக்கிரகமாக இருக்கக் கூடியதாக வேண்டும். ஆனால் தத்துவமானது வாழ்க்கையின் நகர்த்தலுக்கு உடனடியாக கடைப்பிடிக்க முடியாததாக இருக்குமாயின், நான் அந்தச் சிந்தனையின் கொள்ளளவின்மீது மிகப் பெரிய சந்தேகத்தை எழுப்புகிறேன். நான் தத்துவங்கள்மீது எச்சரிக்கையாக இருக்கிறேன். அவை அனுபவத்தை கோட்பாடாக்கியது போன்ற தோற்றப்பாட்டைக் காட்டுகின்ற பேரமைப்பு வடிவத்தைக் கட்டமைக்கின்ற (அல்லது கட்டுடைக்கின்ற) கட்டுமான அமைப்புகளின் வடிவத்தில் தங்களைக் காட்டுகின்றன.

தத்துவவியலாளர்கள் தங்களுடைய கேள்விகள் தங்களுடைய பதில்களை விட முக்கியத்துவம் வாய்ந்தன என்று பாவனை செய்கிறார்கள். ஆனால், அவர்கள் கேள்விகள் கேட்பதை மட்டும்தான் செய்தார்கள்! அநேகமானவை கோட்பாடுகளையும் அமைப்பு வடிவங்களையும் பொய்யாக்கி இருக்கின்றன. அவற்றினுள் பதில்கள் கேள்விகளைவிட முக்கியமானதாகின்றன. எழுத்தாளர்கள்தான் இப்போதெல்லாம் கேள்விகளை எழுப்புகின்றார்கள். தத்துவவியலாளர்கள் அல்ல. தத்துவம் - அரசியலைப்போல், இன்னும் சொல்லப் போனால், பரந்த காட்சிப் பொருளாக இருக்கும் மனிதனைத்தான் கருத்தில் கொள்கின்றது. மனிதன் பற்றி பொதுவாகப் பேசப்படுகிறது. அதாவது மனிதன் என்பதில் பொது என்பது இல்லை. இலக்கியமானது, மறுதலையாக, மனிதன்பற்றி தனிப்பட்ட முறையில் பேசுகிறது. பொதுவுக்குள் கரைந்து போய்விடாத கதாபாத்திரங்களை உருவாக்குகின்றது. இவற்றை நாங்கள் ஒரு கட்டுமான அமைப்புக்குள்ளோ அல்லது கோட்பாடுகளுக்குள்ளோ அடக்க முடியாது. இலக்கியத்தில் வரும்சிறிய மனிதன் எனக்கு தத்துவத்தினுள் வரும் பெரிய மனிதனைவிட முடிவற்றளவு உயர்ந்தவன், ஏனெனில், அவன் முடிவற்றளவு சிக்கலுள்ளவன், குழப்பங்கள் நிறைந்தவன், பல்வேறு உணர்வுகள் கொண்டவன். அத்துடன் கோட்பாட்டாளர்களால் ஒட்டுமொத்தமாகச் சிந்திக்கப்பட்ட மனிதனுக்கும் நெருக்கமானவன் : அவன் தன்னைக் கேள்வி கேட்கிறான், சரியாகவோ பிழையாகவோ பதில் சொல்கிறான். தாண்டு போகிறான். மேலெழுந்து வருகிறான். சிகரங்களின்மீது ஏறுவதற்கு முயற்சி செய்கிறான்....



என்னதான் இருந்தாலும், ஷொப்பனோவரும் தன்னுடைய சிந்தனைகளை ஒரு கட்டுமான அமைப்புக்குள் கொண்டு வருவதற்கு முயற்சித்தவர்தானே! பல ஆயிரம் பக்கங்களைக் கொண்ட அவரது பிரதியான Le Monde comme volonté et comme மிகவும் கோட்பாட்டுரீதியான சில பார்வைகளைக் கொண்டது....?

சந்தேகமில்லாமல்.

ஆனால் என்னை ஒரு ஷொப்பனோவர் பற்றிய நிபுணத்துவவாதியாக எடுத்துக்கொள்ள நான் அனுமதிக்க மாட்டேன்.

ஷொப்பனோவரிடத்தில் எனக்கு என்ன பிடித்திருக்கின்றதென்றால், அவருடைய கையெழுத்துப் பிரதிகளின் சில பகுதிகள், குறிப்பிட்ட தனித்தன்மையான சில திட்ப நுட்பத்துடன்கூடிய வாசகங்கள்.

"எதையும் இலகுபடுத்தல் அல்லது எளிமைப்படுத்தல்" என்று கூறிக்கொண்டு. நீங்கள் ஒரு இருண்ட பாதைக்குள் இருந்து வெளியே வருகிறீர்கள். வாழ்வதற்கான வழிமுறை என்று நீங்கள் ஏற்றுக் கொண்ட தத்துவத்திற்கு உங்களை இந்த இலகுத்தன்மை இட்டுச் செல்கின்றதா?

ஆம், முழுமையாக!

நான் 'இலகுத்தன்மை' என்பதனை மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கின்றேன். ஆனால் அது தனித்திருந்தால் அது கணக்கெடுக்கப்படாததாக இருக்கும். அந்த இலகுத்தன்மையானது வேறு ஏதோவும் சேர்ந்தது. நான் என்ன சொல்ல வருகிறேனென்றால், தனிப்பட்ட முறையில், மிகவும் இறுக்கமாக விடயங்களை அணுகும் அறிவுஜீவிகளுடனும், எதற்கும் இசைந்து கொடுக்காமல் இருப்பவர்களுடனும் இருந்து மரணிப்பது எனக்கு சோர்வைத்தரும் ஒன்றாக இருக்கும் என்று எண்ணுகிறேன். எளிமை என்பது அறிவுஜீவித்தத்திற்கு ஆசுவாசம் தருவது.

ஆனால், இந்த இலகுத்தன்மை என்பது என்ன? புனைவா? செழுமையா? மிதமா?.....

இல்லை. செழுமை இல்லை. இலகுத்தன்மை என்பது நுரை போன்றது. ஆனால், உங்களுடைய கேள்வி தரும் அழுத்தம் என்னை ஒரு பலம் குன்றியவளாக நீங்கள் எடுக்கின்றீர்கள் போலத் தோன்றுகிறது. இதோ எழுத்திற்குள் இடையறாது வரக்கூடிய ஒரு உதாரண மாதிரி, ஒரு விடயத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எப்போதும் உயர்வாகப் பேசிக்கொண்டிருப்போம். அதேசமயம், அதுபற்றி புத்திசாலித்தனமாக அபிப்பிராயம் சொல்வதற்கு அதேயளவு திறமையற்றவராயிருக்கிறார். பெண்கள் இந்த இலகுபடுத்தல் விடயத்தில் மேதைகள். முக்கியத்துவமான கேள்விகள் பற்றியது என்பதுபோல முக்கியமில்லாத விடயங்

களைப்பற்றிப் பேசுவற்கு அவர்கள் திறமையுடையவர்கள். இலகுபடுத்தல் என்பது அந்தக் கணத்திற்கு எவ்வளவு முக்கிய மானதோ அதேபோல மிகுதிக்கும் முக்கியத்துவமானது. எல்லாத்துக்கிடையிலும் அல்லது எது நடந்திருந்தபோதிலும் மகிழ்ச்சியாக இருப்பதற்கான விருப்பின் ஒரு பாதை அல்லது வழி. இது எங்களைக் காப்பாற்றுகின்றது, நான் இதைப்பற்றி ஆழமாகச் சிந்திக்கிறேன். தத்துவமானது இந்த இலகுபடுத்தலின் பாரிய ஒரு பகுதியை தனக்குள் கொண்டிருக்கின்றதென்று சொன்னால் அது எதிரிடையாகப் பார்க்க வேண்டிய விடயமல்ல. மாறாக! நிச்சயமாக, நான் அதை அப்படி பிரகடனப்படுத்துவேனானால் நான் தத்துவத்தின்மீது காறித் துப்புகிறேன் என்று சொல்வார்கள். இது நான் என்ன சிந்திக்கின்றேன் என்பதை முற்றுமுழுதாகத் தவறாக்கும்.

நீங்கள் அறிவுஜீவிகளைப்பற்றி இன்னொரு விமர்சனம் வைக்கின்றீர்கள்: 'அர்த்தத்திற்கான காத்திருப்பு'. நாங்கள் தத்துவவியலாளர்கள், மனோதத்துவநிபுணர்கள், அறிவுஜீவிகள் ஆகியோரிடம் இருந்து நிறைய எதிர்பார்க்கின்றோமா?

என்னத்தை எதிர்பார்க்கின்றோம், பொதுவாக, ஒரு கோட்பாடு அல்லது ஒரு அர்த்தப்பாடு?

எங்களுடைய எதிர்பார்ப்பு எல்லாம் அர்த்தத்திற்கான யாசிப்பு. உலகில் இருப்பதற்கு, பிறப்புக்கு, வாழ்வுக்கு, மரணத்திற்கு என்ன அர்த்தம் இருக்கின்றது? இந்தக் கேள்விகளைத்தான் நாங்கள் கேட்கின்றோம். நாங்கள் மேலும் மேலும் பொறுமையற்றவர்களாக இருக்கின்றோம். தத்துவவியலாளர்கள், மனோதத்துவவியலாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியோரிடம் இருந்து நாங்கள் ஒரு பதிலைத் தரும்படி நிர்ப்பந்திக்கிறோம். எனவே அது ஒரு எதிர்பார்ப்புடனான காத்திருப்பு.

ஏனெனில், நாங்கள் ஒரு அர்த்தத்தை மட்டுமல்ல அல்லது ஒரு கருத்தை மட்டுமல்ல, ஆனால், ஒரு ஆறுதலையும் எதிர்பார்க்கின்றோம். எல்லாச் சமயங்களும் எல்லாத் தத்துவங்களும் மனிதனின் ஆறுதலுக்காகவென்றுதான் அவை இருப்பதாக, ஓரளவு வெளிப்படையாகத், தம்மைப் பாவனை செய்துகொள்கின்றன. ஆதலால் நான் நினைக்கிறேன், நாங்கள் ஒருபோதும்ஆறுதற்படுத்தப்பட முடியாது. ஒருபோதும் இல்லை. இந்தக் காத்திருப்பின் அர்த்தம், ஆறுதல் என்னும் அடிப்படையில் பார்த்தால் மிகுந்த ஏமாற்றத்தைத் தரும், அது கசப்பானதாக மாறுகின்றது. ஆரியல் இந்தப் பல்கலைக்கழகப் போஷகர் தன்வாழ்நாள் முழுவதும் ஸ்பினோஸாவைக் கற்பித்து மனநோய்க்கு ஆளாகின்றார். இந்தக்கடினமான பாதையினூடான அனுபவத்துடன், வாழ்நாள் முழுவதும் நிறைந்த அர்த்தங்களைக் கொண்டதென்று சொல்லப்படும் ஒரு பிரபஞ்சத்துக்கு அவர் தன்னை அர்ப்பணித்து இருந்தார்.

உங்களைப்பற்றி இன்னும் சொல்வதானால், 'அயர்ச்சியூட்டும் குடும்பம்'பற்றி நீங்கள் வைக்கும் விமர்சனத்தில், உங்களை தீவிரமானவளாக, சீற்றம் கொண்டவளாக காண முடிகிறது. ஏறக்குறைய உங்களுடைய நூல்கள் எல்லாவற்றிலும் இந்த விமர்சனத்தைக் காண்கிறோம்.

ஆம். அதென்றால் உண்மைதான். குடும்ப பந்தம் என்பது ஒரு விசனகரமான நிகழ்வு. சமகாலத்தின் மிகப்பெரிய ஏமாற்று அங்கு உள்ளது. நீங்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததென்றும் மலர்ச்சியைக் கொண்டு வருகின்றதென்றும் விளம்பரங்கள் பறைசாற்றுகின்றன. ஆனால், யதார்த்தம் முற்றிலும் வேறான ஒன்று. குடும்பம் என்பது முற்று முழுதான ஒரு நரகம். யார் இந்தக் குடும்ப அமைப்புக்குள் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள்?

பிறகும் இங்கு பார்த்தீர்கள் என்றால். ஒரு அழகான கோட்பாடு நடைமுறை வாழ்க்கையின் யதார்த்தத்துடன் முரண்பட்டு நிற்பதைக் காண்கிறீர்கள். காதல் என்பது அங்கு உடனடியாக மறைந்து போகிறது. திருமண பந்தத்தினுள் காதல் நின்று பிடிக்க முடிவதில்லை. திருமணம் என்பது போதிக்கும் ஒரு அமைப்பு. அங்கு எல்லோரும் அவரவருடைய விடயங்களைப் பெற்றுக் கொள்வதனைக் கருத்திற் கொண்டு செயற்படுவர். அதற்கும் காதலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நாங்கள் மனவெழுச்சிகளை குடும்ப வாழ்க்கையுடன் கலந்துவிட்டோம். இது ஒரு முற்றுமுழுதான ஏமாற்று வித்தை. உங்கள் இருப்பிற்கு ஒரு குறிப்பிட்ட உயிர்ப்பு இருப்பதற்கு உங்களிடம் மிகவும் அற்பளவு ஆசை இருப்பின் (நான் வெற்றிபற்றிக்கூடச் சொல்லவில்லை), இன்று நிலவும் இந்தக் குடும்பமாதிரியை அத்துமீறுவதற்கு நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

அப்ப, என்ன தீர்வு?

எனக்குத் தெரியாது.

குடும்பச் சுமை பற்றி நீங்கள் எழுதுவது அதற்குள் நீங்கள் மூழ்கிப் போவதைத் தடுப்பதற்கு உதவுகின்றதா?

எழுத்தென்பது நிச்சயமாக எதற்கும் உதவாது என்று நான் நம்புகின்றேன். பொதுவாகப் பார்த்தால் எழுத்து எந்தப் பிரச்சினைக்கும் தீர்வாக அமைவதில்லை.

நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?

நீங்கள் மணித்தியாலக் கணக்காக எழுதலாம். அது உங்கள் வாழ்க்கையை இம்மியளவேனும் மாற்றப்போவதில்லை. துரதிர்ஷ்டவசமாக, எழுத்து எந்தச் சூழலிலும் ஒரு நிவாரணி அல்ல. இது வெறும் தெளிவின் ஒரு வெளிப்பாட்டு வடிவம். அதற்கு எழுதும் கெட்டித்தனத்தில் சிறிதைச் சேர்ப்பது அந்தத் தெளிந்த சிந்தனையை வெளிப்படுத்த உதவுகிறது. ஆனால் இது வாழ்வதற்கான அறிவு தொடர்பான விடயத்திற்கு எவ்வித மேம்பட்ட நிலையையும் வழங்குவதில்லை.

எழுதுதல் என்பது எப்போதும் வாழ்தலுக்கு கீழ்ப்பட்டதுதான்.

தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டம் எதைநோக்கி?

தீர்வை நோக்கிய பாதையில் இலங்கை அரசியல்

வி.சிவலிங்கம்

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வை நோக்கிய பாதையில் திரும்பி இருப்பதாகத் தெரிகிறது. ஒரு புறத்தில் உக்கிரமான போரை நோக்கிய அணுகு முறையும், மறுபுறத்தில் அரசியல் தீர்வு பற்றிய வாதப் பிரதிவாதங்களும் எழுந்துள்ளன. இவ்விரு அணுகு முறைகளுக்கும் வலுவான நியாயங்கள் முன் வைக்கப் படுகின்றன. தற்போதைய முயற்சிகள் கடந்த காலம் போல செயலற்ற ஒன்றாக அமைந்து விடுமா அல்லது இம்முறையாவது உருப்படியான மாற்றம் ஏற்படுமா என்ற கேள்வி தொடர்ச்சியாகவே முன்வைக்கப்படுகின்றது. இருப்பினும், சமீபகால முயற்சிகளுக்கும் கடந்த கால அணுகுமுறைகளுக்கும் பாரிய வேறுபாடு இருப்பது மறுப்பதற்கில்லை. இதன் காரணமாகவே, இத்தடவை எதிர்பார்க்குமளவுக்கு தீர்வுகளை நோக்கிச் செல்லா விடினும் அதற்கான சில அத்திவாரங்கள் போடப்படும் சாயல்கள் தென்படுகின்றன.

இனப்பிரச்சினையின் நீண்ட காலத் தன்மையும், குறிப்பாக, ஆயுத வன்முறை அரசியல் போக்கில் ஏற்ப டுத்தி வரும் கடுமையான தாக்கங்களும் ஜனநாயக வழியிலான அரசியல் நடைமுறைகளுக்குப் பெரும் சவாலாகவே அமைகிறது. ஆயுத வன்முறையைக் கருவியாக்கி, அதன் மூலம் அரசியல் நிலைமைகளை மாற்றும் போக்கு ஜனநாயக வழிகளல்லாத பயங்கர வாத சக்திகளின் நெறியாக இருக்கின்றது. இவர்கள் மறைமுகமாகவே இயங்குகின்றனர். ஆனால், மக்க ளால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களின் தீர்மா னங்கள் மிகவும் வெளிப்படையானதாகவும் விமர்சனத் துக்கு உட்படுத்தக் கூடியனவாகவும் இருப்பதால் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை விமர்சிப்பதற்கு ஜனநாயகம் வாய்ப்பை அளிக்கிறது. இங்கு இரண்டு அடிப்படை அம்சங்கள் நேரடியாக மோதுகின்றன. அதாவது, ஆயுத வன்முறையின் மூலம் அரசியல் செய்ப வர்கள் தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறி முறைகளும் அதற்கு எதிராகச் செயற்படுவதற்கான முடிவுகளை மேற்கொள்ளும் அரசின் பொறிமுறைகளும் முற்றிலும் வேறுபட்டவை. எனவே, இனப்பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்டுள்ள அரசினதும் புலிகளி னதும் ஜனநாயகத் தன்மையை நாம் கவனத்தில் கொள்வது அவசியமானது. அரசின் தற்போதைய அணுகுமுறையில் போர் பற்றிய அம்சங்களை நாம் அவதானிப்பின் இம்முரண்பாடுகள் நன்கு புலப்படும். 1978ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்த காலம் முதல் இனப்பிரச்சினையானது உக்கிரமாகத் தொடங்கியது. 1983ம் ஆண்டின் இனக் கலவரங்கள் ஆயுத வன்முறைக்கான நியாயங்களை வழங்கியது. அன்று பதவியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசு இனப்பிரச்சினை என்ற ஒன்று இருப்பதாக ஏற்றுக் கொள்ளவில்லை. இனப்பிரச்சினையைப் பயங்கர வாதமாக வர்ணித்து இராணுவ வழிகளில் அதைத் தீர்க்க முயற்சித்தது. இலங்கை அரசின் இம்முயற்சிகள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. ஜே. ஆர். அரசின் வெளிநாட்டுக் கொள்கைகள் இந்தியாவின் பாதுகாப் பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதையும், தென்னிந்தி யாவில் வாழும் 5 கோடி தமிழர்களும் இலங்கைத் தமிழர் களின் ஜனநாயகக் கோரிக்கைக்கு பக்கபலமாக இருப்பதையும் இலங்கை அரசு தனது கவனத்தில் கொள்ளத் தவறி விட்டது. இதன் விளைவாக, சிறுபான்மை மக்களின் ஜனநாயக உரிமைப் போராட் டத்தை பயங்கரவாதமென்ப பிரகடனப்படுத்தி அதனை ஒடுக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் இந்திய அரசின் உதவியால் சாத்தியமாகவில்லை.

இலங்கையின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்

“பயங்கரவாதம் என்ற பெயரில் இனப் பிரச்சினையை ஒடுக்க 17 ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட அரசு என்ற பொறிமுறை சந்திரிக்கா அவர்கள் பதவிக்கு வந்தபின் ஏற்படுத்த விரும்பிய சமாதான முயற்சிக்கு உகந்ததாக அமையவில்லை. பாராளுமன்றத்தில் போதிய பலம் இல்லாமையினாலும் இராணுவத்தில் காணப்பட்ட போருக்கான முனைப்புக் காரணமாகவும் அவரின் சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தது மட்டுமல்லாது மீண்டும் போரை நோக்கி அரசு தள்ளப்பட்டது.”

தையும் வலியுறுத்திய அதேவேளை இலங்கைத் தமிழர்களுடைய நியாயமான ஜனநாயக உரிமைகளை வழங்கவேண்டுமென இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தியபோதெல்லாம். அவை சந்தேகக் கண் கொண்டே பார்க்கப்பட்டன. இதன் விளைவுதான் கடந்த 25 வருட கால ஆயுதப் போராட்டம். 1977ம் ஆண்டு முதல் 1994ம் ஆண்டு வரையான 17 ஆண்டுகள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலமாகவே அமைந்தன. இந்நீண்ட காலத்திற்குள் பலமான இராணுவ உளவுப் பிரிவு, மற்றும் பல பாதுகாப்புத் தொடர்பான நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு இராணுவம் நாட்டின் மிக முக்கியமான தீர்மானங்களில் பெரும் ஆதிக்கம் செலுத்தும் நிலைக்கு வளர்க்கப் பட்டது. நாட்டில் இடம் பெற்று வரும் போர் நிலைமைகள் இரு சாராருக்கும் மிகவும் வாய்ப்பாக அமைந்தன. அதாவது, இராணுவத் தளபாட வர்த்தகத்தில் இராணுவமும், மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் வர்த்தகத்தில் வியாபாரிகளும் பலன் பெற்றனர். இதனால் ஊழலை மையமாகக் கொண்ட அரசியல் வாதிகளும் தமது நலன்களைப் பெருக்கிக் கொண்டனர். போர் நிலைமைகள் ஓர் குறிப்பிட்ட சாராரின், குறிப்பாக, அதிகாரத்தில் இருப்பவர்களின் நலன்களை வளர்ப்பதில் உதவியதால் போரைத் தொடர்வதும் ஓர் தேவையாக மாறியது. இக் காலகட்டத்தில் மக்களின் பொருளாதார வாழ்வு பின்தள்ளப்பட்டது. நாட்டின் முக்கியமான தேசிய வளங்கள் தனியார் மயமாக்கப் பட்டதுடன் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் விற்கப் பட்டன. பெருந்தொகையான மக்கள் வேலையற்றவர் களானார்கள். விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், போர் என்பன சாதாரண மக்களின் வாழ்வைப் பாதிக்கத் தொடங்கின. இதன் விளைவாகவே, மக்கள் தமது 17 ஆண்டு காலக் கொடுமை வாழ்வுக்கு முடிவு கட்டும் வகையில், 1994ம் ஆண்டு சந்திரிக்கா அவர்களைப் பதவியில் அமர்த்தினார்கள். அரசியல் கட்சிக்கான பலமான தளம் இல்லாத பின்னணியில் சந்திரிக்கா அவர்கள் பதவி ஏற்றார்கள். இவரின் ஆட்சியின் ஆரம்பம் நம்பிக்கை அளிப்பதாகவே அமைந்திருந்தது. இனப்பிரச்சினைக்கான தீர்வை இவரால் வழங்க முடியும் என்ற நம்பிக்கை காணப்பட்டது. இலங்கையின் அரசியல் வரலாற்றிலேயே முதன்முறையாக இலங்கையில் இனப் பிரச்சினை உண்டு எனவும் இவ்வினப் பிரச்சினை கடந்த கால அரசுகளின் தவறான அணுகுமுறைகள் காரணமாகக் கூர்மையடைந்ததாகவும் கூறியதோடு 1983ம் ஆண்டின் இனக்கலவரத்திற்கு அரசுத் தலைவர் என்ற வகையில் சந்திரிக்கா அவர்கள் தனது கவலைகளையும் வெளியிட்டார். இலங்கை அரசியலில் சில அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் தனது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்த சந்திரிக்கா அவர்கள் தனது இலட்சியங்களை நிறைவேற்ற, 17 ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சியால் உருவாக்கப்பட்ட அதே அரசியல் பொறிமுறையையே பயன் படுத்த வேண்டி ஏற்பட்டது. பயங்கரவாதம் என்ற பெயரில் இனப் பிரச்சினையை ஒடுக்க 17 ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட அரசு என்ற பொறிமுறை சந்திரிக்கா அவர்களின் சமாதான முயற்சிக்கு உகந்ததாக அமையவில்லை. பலமான அரசியற்கட்சிப் பலம் இல்லாமையாலும் உட்கட்சிக் குள் காணப்பட்ட அதிகாரப் போட்டிகள், இனவாதக் கூச்சல்கள் என்பவற்றினாலும் பாராளுமன்றத்தில் போதிய பலம் இல்லாமையினாலும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி போதிய ஆதரவை வழங்காமையினாலும் இராணுவத்தில் காணப்பட்ட போருக் கான முனைப்புக் காரணமாகவும் அவரின் சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தது மட்டுமல்ல, மீண்டும் போரை நோக்கி அரசு தள்ளப் பட்டது.

போருக்கான பின்னணிகளை நாம் தெளிவாகத் தெரிந்திருப்பது அவசியமானது. அதுமட்டுமல்லாமல், அரசு என்பதன் செயற்பாடு எவ்வாறு தொழிற் படுகின்றது என்பதனையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கமானது மக்களின் வரிப் பணத்தில் செயற்படுகின்றது. வரிப் பணத்தில் பெரும்பகுதியை நாட்டில் உள்ள மிகப் பெரிய தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களே வழங்குகின்றன. அரசின் தேவைகள் பெருகப்பெருக செலவினம் அதிகமாகிறது. செலவினத்தின் பெரும்பகுதியை நிறுவனங்களே ஈடு செய்வதால் இந்நிறுவனங்களின் அழுத்தங்களும் செல்வாக்குகளும் அரசின்மேல் பிரயோகிக்கப்படுகின்றன. அரசின் போர்ச் செலவினங்கள் அதிகரிப்பதாலும் அதற்குரிய பணத்தினை வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் வழங்குவதாலும் நாட்டின் உற்பத்தி மற்றும் வர்த்தகப் பொருட்களின் விலை அதிகரிக்கிறது. இதுவே மக்களின் சுமையாகிறது. இப்பொருளாதார சுமைக்கு எதிராக மக்கள் திரண்டு எழும்போது இவ்வர்த்தக நிறுவனங்களைப் பாதுகாக்கும் வகையில் அரசு மக்களுக்கு எதிராகக் குழம்புகிறது. இதுவே

சந்திரிக்கா அரசுக்கும் நிகழ்ந்தது. போரை ஒரு புறத்தில் நிகழ்த்திக் கொண்டு, மறுபுறத்தில் நாட்டின் முக்கியமான மூலவளங்களைத் தனியார் மயமாக்கும் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தன. எனவே, இன்றைய அரசு முன்னெடுத்திருக்கும் போருக்கான முனைப்புகள் ஒன்றும் புதிதானவை அல்ல. அவற்றிற்கும் ஓர் வரலாறு உண்டு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனாலும் சந்திரிக்கா மற்றும் மகிந்த அரசுகளின் போக்கில் முன்னரைவிட மிகவும் வித்தியாசமான போக்கு இருப்பதையும் நாம் அவதானிக் கவேண்டும். இந்த இருவரது ஆட்சிகளில் மட்டும்தான் இனப்பிரச்சினை என்பது மிகவும் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கான தீர்வுகளும் மிக முழுஅளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போதுதான் சிங்கள ஆட்சியாளர் தரப்பில் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து முழு அளவிலான தீர்வுத் திட்டங்கள் பற்றிப் பேசப்படுகின்றன. சந்திரிக்கா ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் தொடர்ச்சியாகவே இவை கருதப்படவேண்டும்.

இனப்பிரச்சினைக்கான முயற்சிகளை இவ்விரு அரசியல் தலைவர்கள் மேற்கொண்டபோதிலும் கடந்த கால ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்காலங்கள்போல் இவை அமைய வில்லை. ஐக்கிய தேசியக்கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பன தனித்து அரசு அமைக்கும் பலத்தை அன்று ஓரளவு பெற்றிருந்தன. அரசியலமைப்பில் வழங்கப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறை இவ்விரு பிரதான அரசியல் கட்சிகளின் பலத்தைக் குறைத்ததோடு, மத்தியில் கூட்டு அரசு அமைக்கும் வாய்ப்புகளையே அதிகம் வழங்கியது. இதன் காரணமாக, சந்திரிக்கா, மகிந்த ஆகியோரின் அரசுகள் பாராளுமன்றத்தில் பலம் வாய்ந்ததாக அமையவில்லை. இனவாதக் கொள்கைகளின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட கட்சிகள் என்பதால் இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்ட புதிய முயற்சிகளை கட்சிக்குள் பூரணமாக உள்வாங்க முடியவில்லை. இதனால் இவ்விரு பிரதான கட்சிகளும் நாட்டின் புதிய மாறுதலுக்கு ஏற்ப அரசியல் மாற்றங்களை மேற்கொள்ள, பல உட்கட்சிப் போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. இனப்பிரச்சினையை மையமாக வைத்து அரசியல் நடத்திய இக்கட்சிகள் தொடர்ந்தும் அதே அரசியலை நடத்த முடியாத நிலையில் பல உட்கட்சிப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. 21ம் நூற்றாண்டின் இலக்குகளுக்கு ஏற்பத் தமது போக்கை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலைக்கு இக்கட்சிகள் தள்ளப்பட்டுள்ளன. கட்சிக்குள் ஏற்பட்டு வரும் உள் மோதல்களை அவதானிக்கும்போது மிகவும் ஆரோக்கியமான எதிர்காலத்துக்குரிய போராட்டங்கள் நடைபெற்று வருவதைக் காணமுடிகிறது.

இந்த அடிப்படையிலேயே சமாதான முயற்சிகளின் எதிர்காலம் பார்க்கப்படவேண்டும். நாட்டின் பொருளாதாரத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மிகவும் இறுக்கமான வகையில் தேசியப் பொருளாதாரம் சர்வதேச சந்தையுடன் இணைக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல், சர்வதேச சட்டங்களுடனும் பிணைக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. சுமுகமான பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் நாட்டில் போரற்ற சூழல் ஏற்பட வேண்டும், அதாவது, சமாதானம் ஏற்பட வேண்டும். எனவே சமாதானத்திற்கான முயற்சிகளும் பாரியளவில் ஆரம்பமாகி உள்ளன. தேசியப் பொருளாதாரம் சர்வதேசப் பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்டதால் அதன் அரசியல் கட்டுமானமும் அதற்கு ஏற்றதாக நிர்மாணிக்கப்படுவது அவசியமாகிறது. இதன் காரணமாகவே சர்வதேச அழுத்தங்கள் முழு அளவில் இலங்கைமேல் பிரயோகிக்கப்படுகின்றன. எனவே சமாதானம் என்பது அரசின் முக்கியமான செயற்பாடாக அமைய வேண்டியுள்ளது.

அரசின் சமாதான முயற்சிகள் போரின் அனர்த்தங்களாலும் இராணுவத் தோல்விகளாலும் சர்வதேச அழுத்தங்களாலும் ஏற்பட்டிருப்பினும் அம்முயற்சிகள் போலியாக அமைய வாய்ப்பில்லை என்பது எமது கருத்தாகும். நாட்டில் நிலையான சமாதானச் சூழல் காணப்படுவது அவசியம் என்பதால், நிர்வாகக் கட்டுமானத்தில் சமாதான உருவாக்கம் என்பது சகல அங்கங்களிலும் அமைவது அவசியமாகிறது. பாராளுமன்றத்தில் போதிய பலமின்மையாலும், அரசியல் கட்சிகள் இனவாத அரசியலில் இருந்து விடுபடுவது தாமதமாகின்ற காரணத்தாலும் சீர்நெறி அடிப்படையில் சமாதான முயற்சிகளை மேற்கொள்வது தாமதமாகலாம் அல்லது பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கலாம்.

நாட்டில் நிலையான சமாதானச் சூழல் காணப்படுவது அவசியம் என்பதால் நிர்வாகக் கட்டுமானத்தில் சமாதான உருவாக்கம் என்பது சகல அங்கங்களிலும் அமைவது அவசியமாகிறது.

பாராளுமன்றத்தில் போதிய பலமின்மையாலும் அரசியல் கட்சிகள் இனவாத அரசியலில் இருந்து விடுபடுவது தாமதமாகின்ற காரணத்தாலும் சீர்நெறி அடிப்படையில் சமாதான முயற்சிகளை மேற்கொள்வது தாமதமாகலாம் அல்லது பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கலாம்.

ஆனால் சமாதானத்தைப் போலியாகக் கட்ட முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால் சமாதானத்தைப் போலியாகக் கட்ட முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இப்பின்னணியில் தற்போதைய அரசியல் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது போரும் சமாதானமும் புதிய இலக்கை நோக்கித் தள்ளப்பட்டு வருவதை நாம் அவதானிக்கலாம். போரானது பயங்கரவாதத்திற்கு எதிராகவும் சமாதானம் இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிச் செல்வதையும் அவதானிக்கலாம். இங்கு நாம் சில யதார்த்தரீதியான பிரச்சினைகளைப் பார்ப்போம். புலிகளால் நடத்தப்படுவது விடுதலைப் போராட்டமே தவிர பயங்கரவாதமல்ல என்றும் பயங்கரவாதம் என்ற பெயரில் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி இனப்பிரச்சினையை ஒடுக்கிவிட அரசு முயற்சிப்பதாகவும் வாதிடப்படுகிறது. புலிகளால் நடத்தப்படுவது விடுதலைப் போராட்டம் அல்ல என்பதனை மிகவும் தெளிவாகவே அதன் போக்கு அடையாளப்படுத்துகிறது. மக்களுக்கு உத்தரவு போடும் நிலையும், மக்களின் அவலங்கள் தொடர்வதைத் தவிர்க்கும் அணுகுமுறை காணப்படாத நிலையிலும் அப்போராட்டம் 'விடுதலை' என்ற குணாம்சத்தை இழந்துவிடுகிறது. எந்த மக்களின் விடுதலையை நோக்கிப் போராட்டம் நடத்தப்படுகின்றதோ அந்த மக்களின் பாதுகாப்பு எதிரியினால் வழங்கப்படுவதைவிட அதிகமானதாக இருத்தல்வேண்டும். தற்போது மக்கள் எதிரியிடம் பாதுகாப்பை நோக்கி ஓடுகிறார்கள் எனில், அது விடுதலைப் போராட்டக் குணாம்சத்தின் முக்கிய அம்சத்தை இழந்துவிட்டது என்பதுதான். இப்படியான இன்னும் பல உதாரணங்களைக் காட்ட முடியும். இருப்பினும் இது ஒன்றே போதுமானது. எனவே புலிகளால் நடத்தப்படுவது 'விடுதலைப் போராட்டம்' அல்ல என்ற முடிவுக்கு நாம் செல்ல முடியும். இந்நிலையில் தற்போது இடம்பெறும் சம்பவங்களை எவ்வாறு வரையறுக்கலாம் என்ற நிலைமைக்குச் சென்றால் அது ஆயுதவன்முறை, பயங்கரவாதம் என்ற கட்டமைப்புக்குள் வரையறுக்கப்படுகின்றது.

21ம் நூற்றாண்டின் பொருளாதார உறவுகளும் அரசியல் நடவடிக்கைகளும் சர்வதேச சட்டங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. சர்வதேச நிறுவனங்களின் அதிகாரம் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களில் பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்நிலையில் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாக பல்வேறு நாடுகளில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையும் எமது கவனத்திற்குரியது. எனவே, புலிகளின் நடவடிக்கைகள் பயங்கரவாதமே என்பது சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்ட நிலையில், இலங்கை அரசு பயங்கரவாதத்திற்கு எதிராகச் செயற்படுவதை உலக நாடுகள் கண்டிக்க முடியாத நிலையில் இருப்பதையும் நாம் அவதானிக்க வேண்டும். எனவே இலங்கை அரசின் தற்போதைய செயற்பாடுகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்து வருவது ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இலங்கை அரசின் சமாதான முயற்சிகள் போலியானவை என்றும், சர்வதேச அரசுகளை ஏமாற்றும் நோக்கம் கொண்டவை எனவும் கூறி அதன் செயற்பாடுகளை முற்றாக நிராகரித்துச் செல்ல முடியாது

"இராணுவக் கெடுபிடிகளில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் 'மக்கள் படை' தாமே எனவும் மக்கள் தமது உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து செயற்படவேண்டும் எனவும் பணிவான கட்டளைகள் வழங்கப்பட்டன. உத்தரவுக்குக் கீழ்ப்படியாதவர்கள் என்ற பெயரில் மாற்று அரசியல் கருத்துடையோர் - குழுக்கள் · இயக்கங்கள் என்பன படிப்படியாக ஒழிக்கப்பட்டன."

என்பது எமது கருத்தாகும். அதன் போக்கிலும் உள்கட்டுமானங்களிலும் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் போதியனவாக இல்லை என்பதை ஏற்றுக் கொண்டாலும், நாட்டில் காணப்படும் அரசியல்சூழ்நிலை அவற்றை ஓர் எல்லைக்கு அப்பால் நகர்த்த முடியாமல் தடுத்திருப்பதையும் நாம் அவதானிக்க வேண்டும்.

எனவே, தற்போது இடம்பெற்று வரும் போருக்கும், சமாதானத்திற்கும் ஓர் வரலாறு உண்டு என்ற வகையில், போரைத் தணிக்கவும் சமாதானத்தை ஏற்படுத்தவும் உதவக்கூடிய வழிகள் எவை என்ற கேள்விகள் எழுகின்றன.

கடந்த 25 ஆண்டுகாலப் போர்நிலைமைகள் சிங்கள சமூகத்தில் ஒரு சாராரை ஓர் ஆதிக்க நிலைக்கு எடுத்துச் சென்றது போலவே, தமிழ்ச் சமூகத்திலும் இவ்வாறான ஓர் போக்கு வளர்ந்துள்ளதைக் காணலாம் சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகள், பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான தன்மை, சிறுபான்மை மக்களுக்கான சுயநிர்வாகம் என்ற அடிப்படைக் கோட்பாடுகளை மையமாகக் கொண்டே அரசியற் தலைமைகள் தமிழ்ப் பகுதிகளில் தோன்றின. இயக்க அரசியலுக்கு முற்பட்ட காலத்தில் ஜனநாயகச் சூழல் காணப்பட்டதால் போட்டி அரசியல் காணப்பட்டது. இப்போட்டி அரசியல் சமூக முன்னேற்றத்துக்கு அவசியமானது என்றபோதிலும் அதிற் காணப்பட்ட, முரண்பட்ட தன்மைகள் சமூக முன்னேற்றத்திற்குத் தடை எனச் சிலரால் கருதப்பட்டது. இது சமூகத்தின் பலவீனத்தை உணர்த்துவதாக வாதிக்கப்பட்டது. போட்டி அரசியலானது பேரம் பேசும் அரசியலைப் பலவீனப்படுத்துவதாகவும் பலமான ஒரே தலைமை இருக்குமாயின் பேரம் பேசும் ஆற்றல் அதிகரிக்கும் என்றும் கருதப்பட்டது. இவ்வாறான ஒரு கருத்து நிலையே புலிகள் மத்தியில் நிலவியது. பல கட்சிகள், பல குழுக்கள் என்பன பலவீனத்தின் தோற்றப்பாடாக எதிரியால் கணிக்கப்படுமெனவும் இதனால் இலக்கை நோக்கிச் செல்வதில் தடங்கல்கள் ஏற்படும் எனவும், இவ்வாறான போக்கைத் தவிர்க்க வேண்டுமெனில்,

“தமிழ்ப் பிரதேசம் முழுஅளவில் தமது கட்டுப்பாட்டுக்குள் உத்தியோகபூர்வமாக வரும்வரை போர்நிலைமைகளைத் தொடர்ந்து வைத்திருப்பது இவர்களுக்கு அவசியத் தேவையாக இருந்தது. புலிகளைப் பொறுத்தவரையில் தமது அதிகார இருப்பை மையப்படுத்தும் முயற்சிகள் ஏற்பட்டால் மாத்திரமே அவர்களால் சமாதானம் பேச முடியும் என்ற நிலை காணப்படுகிறது.”

பலமான ஒரு இயக்கம் கட்டப்பட்டு எதிரிக்குச் சமமான பலத்தில் உருவாக்கப்பட்டால் எதிரிகள் எம்மை நோக்கிப் பேச வருவார்கள் என்ற கோட்பாட்டை முன்வைத்து ஏனைய அரசியல் சக்திகளை ஒழித்துக் கட்டினார்கள்.

புலிகளின் இந்த அரசியல் அணுகுமுறைக்கும் ஓர் தொடர்ச்சி உண்டு. தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் காங்கிரஸ் கட்சிக்குமிடையே பலத்த மோதல்கள் ஏற்பட்டன. மக்கள் கட்சிகளின் பின்னால் அணி திரட்டப்பட்டார்கள். தமிழ்க் காங்கிரஸ் அரசை ஆதரித்தால் தமிழரசுக் கட்சி அதை எதிர்த்து வந்தது. இந்த நிலை தொடர்ந்து காணப்பட்டதால் பாராளுமன்ற அரசியற் பலம் பிரிந்து காணப்பட்டது. இது ஜனநாயகத்தின் வளர்ச்சி என்பதைவிட பலவீனம் என்றே மக்கள் முன் கூறப்பட்டது. அரசை ஆதரிப்பவர்கள் துரோகிகளாக்கப்பட்டார்கள். இவ்வாறான அரசியல் சூழல் தனிக் கட்சிக்கான பலம் சேர்க்கும் வாதத்திற்கு நியாயமாக்கப்பட்டது. ஒரே கட்சியைச் சார்ந்த அனைவரையும் பாராளுமன்றம் அனுப்பினால் பேரம் பேசும் ஆற்றல் அதிகரிக்கும் எனவும் இதன் மூலம் ஆட்சியை அமைப்பது யார் என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக நாம் அமைவதால் எமது கோரிக்கைகளை வெல்ல அதிக வாய்ப்புக் கிடைக்கும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

இதேபோன்ற வாதமே புலிகள் தரப்பாலும் முன்வைக்கப்பட்டது. பல்வேறு குழுக்கள், இயக்கங்கள் என்பன பலவீனத்தின் அறிகுறி எனவும் பேரம் பேசும் ஆற்றலை அதிகரிப்பதாயின் ஒரே இயக்கமே இருத்தல் வேண்டும் என்ற வாதம் தமிழரசுக் கட்சியின் போக்கின் தொடர்ச்சியாக இருப்பதை அவதானிக்கலாம். அன்று அவர்கள் மக்களின் பலத்தினை ஒருமுகப்படுத்த அத்தந்திரத்தை மேற்கொண்டார்கள். மக்களைப் பக்க பலமாக வைத்திருந்தார்கள். ஆனால் இங்கு மக்களுக்குப் பதிலாக ஆயுதமே பேரம்பேசும் ஆற்றலைத் தீர்மானித்தது. அன்றைய தலைவர்கள் மக்களை ஒருமுகப்படுத்தினார்கள். ஆனால் ஒருமுகப்படுத்தப்பட்ட அரசியல் வேலைத்திட்டத்தை அவர்களால் முன்வைக்க முடியவில்லை. நாட்டின் அரசியல் அமைப்பு வரையறைகளுக்கு அப்பால் அவர்கள் செல்ல முயற்சிக்கவில்லை. ஏனெனில் அதற்கு மீறிய செயல்கள் அவர்களின் நலன்களையே பாதித்துவிடும் என்பதை உணர்ந்திருந்தார்கள். அதன் தொடர்ச்சியே இன்றும் உள்ளது. பலமான ஆயுதக்குழுவை உருவாக்க முடிந்ததே தவிர, பொருத்தமான அரசியல் இலக்கை இவர்களால் தீர்மானிக்க முடியவில்லை. பலமான ஆயுதக் குழுவின் உருவாக்கம் ஆரம்பத்தில் சிறுஅளவில் இருந்ததால் இவை சிறுசிறு தாக்குதல்களாக அமைந்தன. இச்சிறு தாக்குதல்களின் பதிலடி பலமானதாக இருந்ததால் ஆயுதக்குழுவின் பரிமாணமும் விஸ்தரிக்கப்பட்டது. தாக்குதல்களும் பதிலடிகளும் சிறு அளவில் இருந்தபோது அது மக்களைப் பெருமளவில் பாதிக்காததால் அவர்கள் வெறும் பார்வையாளர் நிலையில் இருந்து இவற்றையிட்டு மகிழ்ச்சியடைந்தார்கள். காலப்போக்கில் தாக்குதல்கள், பதிலடிகள் விரிவடைய விரிவடைய அவை மக்களைப் பாதிக்கத் தொடங்கின. இப்பாதிப்புக்களின் ஆழங்கள் மிகவும் உணர்ச்சியூட்டப்பட்ட நிலையில் மக்கள்முன் பிரச்சார வடிவில் எடுத்துச் செல்லப்பட்டன. இராணுவக் கெடுபிடிகளில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் ‘மக்கள் படை’ தாமே எனவும் மக்கள் தமது உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து செயற்படவேண்டும் எனவும் பணிவான கட்டளைகள் வழங்கப்பட்டன. உத்தரவுக்குக் கீழ்ப்படியாதவர்கள் என்ற பெயரில் மாற்று அரசியல் கருத்துடையோர், குழுக்கள், இயக்கங்கள் என்பன படிப்படியாக ஒழிக்கப்பட்டன.

மக்கள்மீது பிரயோகிக்கப்பட்ட அதிகாரக் கட்டுப்பாடு காலப்போக்கில் அரசின் விதிமுறைக்கு உட்பட்டு செயற்படுவது என்ற படிமுறைக்குள் எடுத்துச் செல்லப்பட்டது. ஓர் அரசின் ஆணைக்கு உட்பட்டுச் செயற்படுபவர்கள் என்ற மனோநிலைக்கு நாளாந்தப் பிரச்சாரங்கள் மக்களை வழிநடத்திச் சென்றன.

இவ்வாறான அதிகாரப் பிரயோகத்திற்கு இராணுவத்திற்கு எதிரான போர் நிலைமைகளே அதற்கான பின்புலத்தை வழங்கின. எனவே, போர் என்பது தற்போது இன்றியமையாத தேவையாக மாறிவிட்டது. அரசியல் நடவடிக்கைகள் மட்டுமல்ல, மக்களின் குடும்ப வாழ்க்கை வரை இச் செயற்பாடுகள் ஊடுருவின. கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் பொருளாதார உறவுகள் இவர்களாலேயே தீர்மானிக்கப்பட்டன. உளவுத் துறைகள் வலைப்பின்னல் போன்று செயற்பட்டன. இவை யாவற்றையும் சமாதான சூழலில் செய்ய முடியாது. அங்கு மக்களைக் கட்டுப்படுத்துவது மிகவும் வில்லங்கமானது.

சிறுசிறு அளவில் ஏற்படுத்தப்பட்ட இச்சமூக ஒடுக்குமுறைக் கருவிகள், போர் ஆண்டுக் கணக்கில் நீடித்ததால் சமூகத்தை முழுஅளவில் கட்டுப்படுத்தும் அளவுக்கு வளர்ந்துள்ளன. தமிழ்ப் பிரதேசம் முழுஅளவில் தமது கட்டுப்பாட்டுக்குள் உத்தியோகபூர்வமாக வரும்வரை போர் நிலைமைகளைத் தொடர்ந்து வைத்திருப்பது இவர்களுக்கு அவசியத் தேவையாக இருந்தது.

இதுவே தமிழ்ப்பகுதிகளில் போர் நிலைமைகள்

தொடர்ந்திருப்பதற்கான அடிப்படைக் காரணமாகும். எனவே சிங்களப்பகுதியில் செயற்படும் ஒரு சாராருக்கும் தமிழ்ப்பகுதியில் செயற்படும் ஒரு சாராருக்கும் போர் தேவையான அம்சமாகும். இவர்களே அதிகாரத்தின் உச்சியிலும் உள்ளார்கள். இந்நிலையில் சமாதானம் எவ்வாறு சாத்தியமாகும்? தென்னிலங்கையில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால், அதற்கும் தமக்கும் சம்பந்தமில்லை எனப் புலிகள் கூறுகின்றனர். ஆனால் இவர்கள் தமக்குப் பொருத்தமானவரோடு பேசுவதற்கு எப்போதும் தயாராகவே உள்ளனர். சிங்களத் தலைவர்களை நம்ப முடியாதெனக் கூறியபடியே, பிரேமதாசா அவர்களோடும் ரணில் அவர்களோடும் பேசுவதற்குச் சென்றார்கள். ஏன் இவர்கள் சென்றார்கள்? தமிழ்ப்பிரதேசத்தின் உத்தியோகபூர்வக் கட்டுப்பாட்டினைத் தமது கையில் எடுப்பதற்காகவே இவர்கள் சென்றார்கள்.

சமாதானத்தை அடைவதற்குச் சிங்கள அரசியல் சக்திகள் மத்தியில் காணப்படும் முரண்பாடுகள் மட்டுமல்ல, தமிழ் அரசியல் தலைமைகளுக்குள் குறிப்பாக, புலிகள் மத்தியில் காணப்படும் முரண்பாடுகளும் இதற்கு முக்கிய காரணமாகும். இதற்கு நாம் வரலாற்றில் இருந்து சில உதாரணங்களைப் பார்ப்போம்.

1989ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ம் திகதி சிங்களத் தமிழ் புதுவருட தினத்தை ஒட்டி தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றை அன்றைய ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் அறிவித்திருந்தார். இதற்கேற்ப, இந்திய சமாதானப் படையினரும் அதனை ஏற்றிருந்தனர். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் பிரேமதாசாவிற்குப் பகிரங்கக் கடிதமொன்றை எழுதினார்கள். அக்கடிதத்தில் இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் தமது பகுதியில் உள்ளவரை தாம் போர்நிறுத்தத்தை ஏற்கப்போவதில்லை எனத் தெரிவித்திருந்தனர். ஜே. ஆர். அவர்கள் மேற்கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை பிரேமதாசா அவர்கள் மிகவும் பகிரங்கமாக எதிர்த்த சூழலில் இக்கடிதம் அவருக்கு அனுப்பப்பட்டது. அதில் தமது இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தார். இக்கடிதத்தைத் தொடர்ந்து அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா புலிகளைப் பேச வரும்படி கடிதம் அனுப்பினார். இதற்குப் பதில் 1989ம் ஆண்டு ஏப்ரல் 15ம் திகதி லண்டனில் இருந்து தொலைநகல்மூலம் அழைப்பை ஏற்பதாக கடிதம் விரைந்தது.

இதைத் தொடர்ந்து புலிகளுக்கும் அரசுக்கும் இடையே துரித கதியில் உறவுகள் வளர்ந்தன. இந்தியப் படைகளை மூன்று மாதத்துக்குள் விலகுமாறு பிரேமதாசா அறிவித்தார். கொழும்பில் உள்ள இந்து ஆலயத்தில் விசேட பூசைக்கு ஏற்பாடு செய்தார். பாலசிங்கம் அவர்களையும் அடல் பாலசிங்கம் அவர்களையும் கொழும்புக்கு அழைத்தார். வெளிநாட்டில் இருந்த பிரபாகரன் அவர்களின் மனைவியையும் பிள்ளைகள் இருவரையும் இலங்கைக்கு அழைத்தார். புலிகளின் முக்கியஸ்தர்கள் தமது ஆயுதங்களுடன் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் தங்க ஏற்பாடு செய்தார்.

இவ்வாறு ஆரம்பமான சுமுகமான உறவுகள் பின்னர் சிக்கல் நிலையை அடைந்தன. இதற்கு முக்கிய காரணம் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கும்படியும் அன்றிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். தலைமையிலான மாகாண அரசை நீக்கும்படி கோரியமையுமே ஆகும். இந்திய சமாதானப்படை வெளியேறியதும் மாகாண நிர்வாகத்தைக் கைப்பற்றி தமது அதிகார இருப்பை உத்தியோகபூர்வமாக்க எடுத்த முயற்சியின் காரணமாகவே அப்பேச்சுவார்த்தை முயற்சி தோல்வியடைந்தது.

இன்னொரு சம்பவத்தையும் பார்ப்போம்.

1994ம் ஆண்டு நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப் போவதாகக் கூறி சந்திரிக்கா அவர்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். எதிர்க்கட்சியின் ஆதரவு இல்லாவிடினும் புலிகளுடன் பேசி முடிவு செய்யப் போவதாகத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து போர்நிறுத்தத்தை மேற்கொள்வதாக புலிகள் ஒருதலைப் பட்சமாக அறிவித்தனர். இப்போர் நிறுத்த ஒப்பந்தம் அறிவித்த காலப்பகுதியில் இலங்கைக் கடற்படையின் பாரிய போர்க்கப்பல் மன்னாருக்கு அண்மையில் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசுக்கும் புலிகளுக்கும் பேச்சுவார்த்தை ஆரம்பமாக இருந்த நாளுக்கு முதல்நாள் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசநாயக்க கொல்லப்பட்டார். புலிகளுடன் அரசு பேச எடுத்த முயற்சிகளுக்கு இவை பெரும் தடையாக அமைந்தன. இருந்த போதிலும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்த போது அரசு தரப்பில் பங்குபற்றியவர்கள் அரசின் உயர் மட்டத்தில் இருந்து வரவில்லையென்றும் இது தம்மை அவமதிப்பதாக இருப்பதாகவும் முறையிட்டார்கள். தம்மைச் சமமாக மதிக்கவில்லை என்பதே இவர்களுடைய பிரச்சினையாக இருந்தது.

இந்த இரு சம்பவங்களும் தமிழ்ப்பிரதேசங்களின் அதிகார இருப்பினை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கச் செய்யும் உத்திகளாகவே அமைந்தன. இந்நிலை அடையப்படும்வரை போர்நிறுத்தம் ஏற்படுவ

“போர் - சமாதானம் என்பவை பற்றி அரசும் புலிகளும் மட்டும் பேசுவதால்தான் இந்த நிலை காணப்படுகிறது. இரு பக்கத்திலும் போருக்கான தேவை இருப்பது போல சமாதானத்திற்கான தேவையும் இருக்கிறது. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களின் அரசியல் எதிர்காலம் குறித்து அங்கு வாழும் மக்களுடன் பரந்தளவில் பேசப்படவேண்டிய தேவை உள்ளது.”

ஆயுத வன்முறையின் தொடர்ச்சியில் இனங்கள் மத்தியில் அவநம்பிக்கைகள் மிகவும் பலமாக வளர்ந்துள்ளன. வடக்கு - கிழக்கிற்கான தனித்தனி நிர்வாகம் அறிவிக்கப்பட்ட பின்னர் முஸ்லிம் மக்கள் சிங்களப் பேரினவாதமும் தமிழ் மேலாதிக்கவாதமும் திட்டமிட்டுச் தங்களுக்குச் சதிசெய்வதாக உணர்கின்றனர். தமது இருப்பை உறுதிப்படுத்த தாமும் ஆயுத வன்முறையைத் தேர்ந்தெடுப்பதற்குத் தள்ளப்படுவதாகக் கூறுகின்றனர். இந்நிலையில் இந்த இருசாராரிடமும் - குறிப்பாகப் புலிகளிடம் - சமாதான முயற்சிகளை ஒப்படைப்பதால் நிலைமை சீராகுமா?

தற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதும் போர் தொடர்ந்து நீடிப்பது அதிகார இருப்பைப் பேணுவதற்கு அவசியமாக அமைவதையும் காணலாம்.

பேச்சுவார்த்தை, சமாதானம் என்பவை குறித்து பேசப்படவேண்டுமாயின் இந்நிலைமைகள் பற்றிய தெளிவு அவசியமாகிறது. புலிகளைப் பொறுத்த வரையில் தமது அதிகார இருப்பை மையப்படுத்தும் முயற்சிகள் ஏற்பட்டால் மாத்திரமே அவர்களால் சமாதானம் பேச முடியும் என்ற நிலை காணப்படுகிறது. அவர்களால் முன்மொழியப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளும் அவர்களின் பெரும்பான்மையை உள்ளடக்கிய நிர்வாகம் ஒன்றினை நோக்கமாகக் கொண்டதையே முன்மொழிந்தார்கள்.

இதில் இருந்து புலப்படுவது என்னவெனில், புலிகளின் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டால் அல்லது புலிகளுக்கு உரிய இடம் வழங்கப்படக்கூடிய தீர்வு முன்மொழியப்பட்டால் மாத்திரமே சமாதானம் சாத்தியமாகும் என்ற நிலை காணப்படுகின்றது. புலிகளுக்கு உரிய இடத்தை வழங்கக்கூடிய தீர்வை அரசு வழங்குமா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு ஆம் என்றும் இல்லை என்றும் பதில் கூறலாம்.

இலங்கையின் பொருளாதாரம் இப்போர்நிலைமை காரணமாகத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்லுமானால் புலிகளுடன் பேசத் தீர்மானிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றாகிறது. இந்நிலையில் புலிகளின் பலம் வடக்கு கிழக்கில் விஸ்தரிக்கப்பட்ட நிலையில், அது அரசுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தக் கூடும். எனவே, புலிகளின் பலத்தைக் கிழக்கில் குறைத்து கிழக்கை விடுவித்தபின் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் கையில் குறிப்பிட்ட காலத்துக்கு நிர்வாகத்தை வழங்க அரசு சம்மதிக்கலாம். இதன் மூலம் போர்நிலைமைகளைக் கட்டுப்படுத்தலாம் என அரசு கருதலாம்.

போரின் மூலம் வெற்றிபெற முடியாது என்ற நிலையில் அரசின் போக்கு உள்ளது. இருப்பினும் புலிகளைக் கணிசமான அளவு பலவீனமாக்க வேண்டும் என்ற நிலை காணப்படுகிறது. இது சாத்தியமானால், வடக்குப் பகுதியில் ஏனைய அரசியல் சக்திகளைப் பயன்படுத்தி அங்கு தேர்தல் நடத்தி புலிகளை மேலும் பலவீனமாக்க முயற்சிக்கலாம். ஆனாலும், அரசு ஏனைய ஜனநாயக சக்திகளை பலப்படுத்துமா என்ற கேள்வி எழுகிறது. வடபகுதியில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் புலிகள் நடமாடும் அளவுக்கு ஏனையோர் நடமாட முடியாத நிலை காணப்படுகிறது. போர்நிறுத்த ஒப்பந்தத்தில்கூட அதற்கான வாய்ப்புகள் அழிக்கப்படவில்லை. புலிகளுக்கும் மக்களுக்கும் இடையே பெரும் இடைவெளி காணப்படுகிறது.

கடந்த 25 வருட காலப் போர் நிலைமைகளும், இவ் விடைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட படு கொலைகள், பொய்ப்பிரச்சாரங்கள் என்பவற்றின் தாற்பரியங்களும் மக்களால் புரிந்துகொள்ளப்பட்டன. அத்துடன் கடந்த 4 வருட கால போர்நிறுத்த காலமும், இக்காலத்தில் இடம்பெற்ற அரசியல் படுகொலைகளும் சமாதானம்பற்றிய நம்பிக்கைகளை இழக்கச் செய்தன. இதனால் மக்களுக்கும் புலிகளுக்கும் இடையே இடைவெளி ஏற்பட்டுள்ளது. இவ்விடைக்காலத்திலாவது மக்களைத் திரட்டி ஜனநாயகரீதியிலான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஊக்கமளிக்கவில்லை. இதுவே அரசு ஜனநாயகத்தில், குறிப்பாக, தமிழ்ப் பிரதேசங்களில் அவ்வாறான சூழ் நிலையை ஏற்படுத்த உதவுமா என்ற கேள்வியை எழுப்புகிறது.

போர், சமாதானம் என்பவை பற்றி அரசும் புலிகளும் மட்டும் பேசுவதால்தான் இந்த நிலை காணப்படுகிறது. இரு பக்கத்திலும் போருக்கான தேவை இருப்பதையும் அதேபோல சமாதானத்திற்கான தேவையையும் பார்த்தோம். ஆனால், தமிழர் தரப்பில் சமாதானம் என்பது அரசியல் அதிகார இருப்பை பலப்படுத்தும் நோக்கத்துடன் முயற்சிக்கப்படுவதால் தமிழ்ப் பிரதேசங்களின் அரசியல் எதிர்காலம் குறித்து அங்கு வாழும் மக்களுடன் பரந்தளவில் பேசப்படவேண்டிய தேவை உள்ளது.

25 வருட கால ஆயுத வன்முறை இனங்கள் மத்தியில் உள்ள நல்லிணக்கத்தை சீர்குலைத்துள்ளது. அவநம்பிக்கைகள் மிகவும் பலமாக வளர்ந்துள்ளன. இந்நிலையில், சமாதான முயற்சிகள் புலிகள் சம்பந்தமாக அமையுமானால் அவை மேலும் விரிசல்களையே ஏற்படுத்தும் அபாயங்கள் காணப்படுகின்றன. வடக்கு, கிழக்கிற்கான தனித்தனி நிர்வாகம் அறிவிக்கப்பட்ட பின்னர் முஸ்லிம் மக்கள் மத்தியிலே மிக அதிகளவில் விரக்தி ஏற்பட்டு வருகிறது. சிங்களப் பேரினவாதமும் தமிழ் மேலாதிக்கவாதமும் திட்டமிட்டுச் சதிசெய்வதாக உணர்கின்றனர். தமது இருப்பை உறுதிப்படுத்த தாமும் ஆயுத வன்முறையை தேர்ந்தெடுப்பதற்குத் தள்ளப்படுவதாகக் கூறுகின்றனர். இந்நிலையில் இந்த இருசாராரின் கையில் குறிப்பாகப்

புலிகளின் கையில் சமாதான முயற்சிகளை ஒப்படைப் பதால் நிலைமை சீராகுமா என்ற கேள்வி எழுகிறது.

நிலையான சமாதானத்தை நோக்கி நாம் செல்ல வேண்டுமெனில், அம்முயற்சிக்குத் தடையாகவுள்ள பிரதான காரணிகள் குறித்து மிகவும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் பேசப்பட வேண்டும். குறை களைப் பற்றிப் பேசுவது பலவீனத்தை ஏற்படுத்தும் என்ற வாதங்கள் அர்த்தமற்றவை. இவை நிவர்த்தி செய்யப் படவேண்டுமெனில், அவை பேசப்படவேண்டும். அந்த வகையில், புலிகளின் அணுகுமுறையில் காணப்படும் தவறுகள் சுட்டிக் காட்டப்படவேண்டும். அவர்களின் செயற்பாடுகளில் குறிப்பிட்ட மாற்றங்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற வற்புறுத்தல்கள் முன்வைக்கப்படவேண்டும். தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றத்தைத் தொடர்ந்தும் இவர்கள் தடுத்து வைத்திருக்க முடியாது.

தமிழ் அரசியல் வரலாற்றிலே எந்த ஒரு அரசியல் தலைமைக்கும் கிடைக்காத சகல வாய்ப்புகளும் புலிக ளுக்குக் கிடைத்தன. விரலசைத்தால் வாக்களிக்க மக்கள் தயாராக இருந்தார்கள். இலக்கை அடைவ தற்கு ஆயிரக்கணக்கில் தங்களைத் தியாகம் செய்யத் தயாராக இருந்தார்கள். சர்வதேச அரசுகள் ஆதரவ ளிக்கத் தயாராக இருந்தன. அரசு பேசத் தயாராக இருந்தது. ஆனால் இத்தனை வாய்ப்புகளையும் சரி யாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தை இவர்கள் இழந்தனர். எனவே தொடர்ந்தும் சமாதான முயற்சி களுக்குத் தடையாக இவர்கள் இருக்க முடியாது. 25 வருட காலம் வழங்கப்பட்டிருந்தும் அதைச் சரியாகப் பயன்படுத்தத் தவறி உள்ளனர். இந்நிலையில் சமூ கத்தின் எதிர்கால நலன் கருதி தமது போக்கை மாற்றுவதே பொருத்தமானதாகும்.

தமிழ் ஈழக் கோரிக்கை, தமது கையில் அதிகாரம் என்பன 21ம் நூற்றாண்டின் சமூக, அரசியல் தேவை களுக்குப் பொருத்தமானதாக இல்லை. இவ்விரு கோரிக்கைகளும் அடிப்படையில் ஜனநாயக விரோத மானவை. பல்லின மக்களைக் கொண்டுள்ள ஒரு சமூகத்தின் அரசியல் போக்கை தனி ஒரு அரசியல் இயக்கம் அல்லது கட்சி மக்களின் சம்மதமின்றித் தீர்மானிக்க முடியாது. சமூகத் தேவைக்கும் பொருளா தார நிர்மாணத்திற்கும் பொருத்தமில்லாத இக்கோரிக் கைகள் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டும். இக்கோ ரிக்கைக்கான நியாயங்கள் வலுவானதாக இருப்பினும் நியாயங்கள் மட்டும் பொருத்தமான தீர்வைத் தரப் போவதில்லை. அரசியல், சமூக, பொருளாதார சூழல் களுக்கு ஏற்பவே தீர்வுகள் அமைய வேண்டும்.

அந்த வகையில் ஐக்கிய இலங்கைக்குள் பொருத் தமான தீர்வை நோக்கி நகர்வதே ஆரோக்கியமான தாகும். 50 வருட காலத்திற்கு மேலாக கட்டி எழுப் பப்பட்ட சிங்கள பேரினவாத சிந்தனைகள் குறிப்பிட்ட இலக்கைச் சென்றடையவில்லை. அவை தேசத்தை சீரழித்துள்ளன. இதனைச் சிங்கள மக்களும் உணரத் தலைப்பட்டுள்ளார்கள். இதன் விளைவாகப் பல்வேறு தீர்வுத் திட்டங்கள் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து வெளிவருகின்றன. இவை நாம் எதிர்பார்த்தளவு மாற் றத்தை வெளிப்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் அடிப்படை மாற்றம் ஒன்றிற்கு சிங்கள சமூகம் தயாரா கின்றது என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சிங்கள சமூகத்தின் மத்தியில் இருந்து சந்திரிக்கா காலத்திலும் மகிந்த காலத்திலும் தீர்வுத் திட்டங்கள் வெளியாகின. ஆனால் இவற்றைப் பயனுள்ள விதத்தில் மாற்றி, அர்த்தமுள்ள விதத்தில் முன்னெடுத்துச் செல்ல புலிகள் தயாராக இல்லை. இதற்குக் காரணம், இவர்கள் தம்மைச் சுற்றி 'தமிழ் ஈழம்' என்ற போலிக் கோட்டையை எழுப்பி, அதனைச் சுற்றி பெரும் கற்பனை அரசியல் கனவுகளையும் புனைந்துள்ளனர். இதிற் காணப்படும் போலி அம்சங்களும் அதன் பலவீனங் களும் மக்கள் முன் வெளிப்படுத்தப்படவேண்டும்.

சமீபத்தில் இலங்கையின் சிறந்த கல்விமான்களால் முன்வைக்கப்பட்ட இனப் பிரச்சனைக்கான முன்மொழி வுகள் முழு அளவில் விவாதிக்கப்பட வேண்டும். இக்கல்விமான்களின் அறிக்கை மேலும் சீர்திருத்தப் பட்டு திஸ்ஸ விதாரண அவர்களால் மீளவும் சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. இவைபற்றிய விவாதம் முழுவீச்சில் தமிழ்ப் பிரதேசங்களில் நடத்தப்படவேண்டும். இலங் கையர் என்ற தேச உருவாக்கத்திற்கான அடித் தளங்கள் பலமான விதத்தில் போடப்படுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்ற இவ்வேளை, அதனைப் பயன்படுத்தி துரித மாற்றத்தை ஏற்படுத்த இலங்கையில் வாழும் சகல இனங்களும் முயற்சிக்க வேண்டும். நாம் எதிர்பார்க்கும் வகையில் முன்னேறாமல் இருக்கலாம். ஆனால் உண்மையான மாற்றத்திற்கான முன்னெ டுப்புகள் காணப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இலங்கையின் பொருளாதாரத்தில் தமிழ்ப் பிரதேசங்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளன. போரை உக்கிரப்படுத்தும் சக்திகள் மக்களின் எதிர் காலம் குறித்து சிந்திக்கத் தயாராக இல்லை. இந்நிலை யில் மக்களின் உண்மையான எதிர்காலம் குறித்து ஜனநாயக சக்திகளே குரல் கொடுக்க வேண்டும்.

எனவே நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்களின் ஜனநாயக உரிமைகள் பேணப்பட வேண்டுமாயின் அங்கு ஓர் ஜனநாயக சூழலை முதலில் ஏற்படுத்த வேண்டும். குழு நலன்களாக ஆரம்பித்து தற்போது வர்க்க நலனாக மாறியுள்ள தமிழ்த் தேசியக் கோரிக் கைகளின் பரிமாணங்களின் உள்ளார்ந்த வடிவங் களின் நோக்கங்களின் உண்மைகள் மக்கள் முன் வைக்கப்பட வேண்டுமெனில் அங்கு ஜனநாயகச் சூழல் தேவையாகிறது.

தமிழ் ஈழம், அதிகாரம் தமது கையில் என்ற போக்கு களுக்கு எதிராக மக்கள் தெளிவான விதத்தில் தமது எதிர்ப்பை முன்வைக்கவேண்டும். சமாதானம், பன்மைத் துவ ஜனநாயகம், மனித உரிமை எனப்படும் சர்வதேசக் கோட்பாடுகள் புதிய மாற்றத்திற்கான அடிப்படை களாக அமைதல் வேண்டும். தேசம் தழுவிய ஜனநாயக மாற்றம் ஒன்றிற்கான வேலைத்திட்டம் ஒன்றின் மூலமே சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும். இதற்கான மாற்றங்கள் நாடு தழுவிய ரீதியில் ஏற்பட்டு வரும் இச்சூழலில் இவற்றைப் பலப்படுத்தி புதிய மாற்றத்தை துரிதப்படுத்த சகல சிறுபான்மை இனங்களும் அதில் இணைவதே பொருத்தமானது.



The Forsaken Land (கைவிடப்பட்ட பூமி) திரைப்படத்தைச் சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் பாரிஸின் திரையரங்கொன்றில் பார்த்தேன். இத்திரைப்படம் என்னைக் கவர்ந்தது. என்னுடைய சில நண்பர்களுக்கும் இதை நிச்சயம் பார்க்கும்படி பரிந்துரை செய்தேன். நான் பரிந்துரைத்தேன் என்பதைவிட இப்படத்திற்கு 2005ம் ஆண்டு கான் திரைப்பட விழாவில், புதிய இயக்குநர்களின் முதலாவது திரைப்படத்திற்கான Camera d'Or விருது கிடைத்திருந்தது. நண்பர்களுடன் மீண்டும் நானும் இத்திரைப்படத்தைப் பார்க்கச் சென்றோம். படம் முடிந்தவுடன் திரையரங்கிற்கு வெளியே வந்தபோது ஒரு நண்பர் மிகுந்த ஆத்திரத்துடன் இது ஒரு போர்னோகிராபி எனக் கூறிவிட்டுப் போனார். இன்னொரு நண்பரைச் சந்தித்துப் பேசியபொழுது மிக அமைதியாக இது ஒரு பாதிப் போர்னோகிராபி என்றார். மற்றவர்கள் மௌனம் காத்தார்கள். இத்திரைப்படம் தொடர்பாக இந்த மனோநிலையே பரவலாகக் காணப்பட்டதை உணர்ந்தேன். அத்துடன் இலங்கையில் 3 நாட்கள் மட்டுமே திரையிடப்பட்டு நிறுத்தப்பட்ட செய்தியையும் அறிந்தேன். 'மூன்றாவது மனிதன்' சஞ்சிகையின் கடைசி இதழின் வாசகர் கடிதம் வரை இந்நிலை தொடர்கிறது. இவைகளிற்குப் பின்னர்தான் நான் இதை எழுதுவதற்குத் தள்ளப்பட்டேன்.

இந்தத் திரைப்படம் தொடர்பாக எழுந்த குற்றச் சாட்டுகளை முதலில் பாரத்தோமானால்,

1. இது ஒரு போர்னோகிராபி வகையான திரைப்படம்
2. கதைக்கரு அற்ற திரைப்படம்
3. மேலைத்தேயப் பார்வையாளர்களுக்கு எமது ரணங்களை வியாபாரப் பொருளாக்குதலை நோக்கமாகக் கொண்ட திரைப்படம்

உண்மையில் இந்தத் திரைப்படம் போர்னோகிராபி வகையைச் சார்ந்தது எனக் கூறுவது சரிதானா?

நேரடியான உடலுறவுக் காட்சிகள் படத்தில் இருக்கும் என்றால் அவை எல்லாம் போர்னோகிராபி என்று கூறமுடியுமா? அப்படியானால் உலக சினிமாவின் மிகச் சிறந்த இயக்குநர்கள் என்று கருதப்படுபவர்களில் பலர் போர்னோகிராபி இயக்குநர்களின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய அபாயம் ஒன்று இங்கே உள்ளது.

இத் திரைப்படத்தில் ஒரு காட்சியில் இராணுவச் சிப்பாய் ஒருவன் அவசரமாக சைக்கிளில் வந்து, அதை வீசி எறிந்துவிட்டு லதாவுடன் உடலுறவு கொள்வான்.

இந்தக் காட்சி ஒரு முட்கள் நிறைந்த புதருக்குள் தூர்க்காட்சியாக, திரைப்படுத்தப்பட்ட கோணத்திலும் மிகுந்த கவனத்துடன் காட்சிப்படுத்தப்பட்டு இருக்கும். ஆனால், இந்தக் காட்சிதான் இவர்களைப் போர்னோகிராபி என்றும் It's very dark and haunting என்றும் கூற வைப்பது.

சேகர் கபூரின் 'பண்டிற் குவீன்' திரைப்படத்தில் பிரதான பாத்திரம் வெட்டவெளி வறண்ட நிலத்தில் வைத்து வன்புணர்ச்சி செய்யும் காட்சி படமாக்கப் பட்டிருக்கும். நான் இந்தக் காட்சியை எனது பதினாறு வயதில் பார்த்திருக்கிறேன். அது ஏற்படுத்திய தாக்கம் என் மனதில் இன்னும் உறைந்து கிடக்கின்றது. ஆனால் இந்தக் கதாபாத்திரத்தின் உணர்வுநிலையைப் புரிந்து கொள்ளாமல் "அய்யோ! அய்யோ! கலி முற்றி விட்டது. வன்புணர்ச்சியை திரைப்படத்தில் காட்டுகிறார்கள்" என்று சொல்லி அதன் அரசியலுக்குள் புகமுடியாதவர் களால்தான் இந்தக் காட்சியை It's very dark and haunting என்று கூறமுடியும்.

நம் மத்தியில் உள்ளவர்கள் வேற்று மொழிப் படங்களில் இப்படியான காட்சிகள் வந்தால் அதைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. தாம் சார்ந்த கலாச் சாரப் பின்னணி கொண்ட பெண்களின் நிர்வாணத்தை திரையில் காண்பதைத் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. இவர்கள் எதை நம்ப விரும்பு கின்றார்கள் என்றால், அவர்கள் வாழும் சமூகத்தில் தம்மைச் சூழ வுள்ள பெண்கள் எல்லாரும் அந்தச் சமூகம் யாருடன் உறவு கொள்வதைச் சம்மதிக்குமோ அவர்களுடன் மட்டும் வெட்கத்துடன் விளக்கை அணைத்து விட்டு போர்வைக்குள் உறவு கொள்ள வேண்டும் என்பதை. யதார்த்தமாக எடுக்கப்பட்ட இவ்வாறான காட்சிகள் இவர்களின் நம்பிக்கையை உடைத்தெறிகிறது.

இத்திரைப்படம் சம்பவங்களூடாக நகரும் மரபான கதைத் தளத்தைக் கொண்டதல்லதான். இப்படத்தில் கையாளப்பட்டிருக்கும் திரைக்கதை உத்தி ஒன்றும் புதிய முயற்சியும் அல்ல. இதுபோன்ற பல திரைப்படங் களை சர்வதேச சினிமா கண்டுதான் வந்திருக்கிறது. காட்சிகள் மிகப் பூடகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு நவீன சினிமாவுக்கான அம்சங்களுடன் கூடியது.

இந்த சினிமா மொழியைப் புரிந்து கொள்ள விரும்பாதவர்களும், இன்னும் "நவீன ஓவியம் என்ன ஓவியம்? நானும்தான் வரைவேனே! துணி யையும் தூரிகையையும் வண்ணக் கலவைகளையும் தாருங்கள்" என விதண்டாவாதம் பேசுபவர்களுக்கும் நிச்சயம் இந்தச் சினிமா மொழி புதிரானதுதான். சாப்ளினின் திரைப் படங்களைப் பார்த்து வெறுமனே சிரித்துவிட்டு மட்டும் போகும் பார்வையாளரின் மனோநிலை போன்றதே.

திரையில் காட்டப்படும் நிலம் எங்கு உள்ளது? இதில் தோன்றும் மனிதர்கள் எல்லாம் எந்தப் பூமிப் பரப்பின் மாதிரிகள்? என்பதே திரைப்படம் வைத்தி ருக்கும் வினாக்கள். இதற்குப் பதில் தேட எம்மைத் தூண்டுவதே இத்திரைப்படத்தின் நோக்கமாக இருக்க முடியும். வறண்ட பூமி, உள்நாட்டு யுத்தம், இராணுவ வீரனின் காம இச்சை, இராணுவத்தின் அடாவடித்தனம், இனம் தெரியாத உயிரற்ற உடல், விரக தாபத்தால் அவதியுறும் வயதான ஆண், பாலியல் உறவற்ற நடுத் தர வயதுப் பெண், கணவனால் பாலியல் திருப்திக்கு உள்ளாகாத பெண், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக வாய்ப்புள்ள சிறுமி, அவளின் எதிர்காலம் என ஒரு நிலத்தின் அரசியல், கலாச்சாரம், பாலியல், பொருளாதார கருதுபொருள்களின் நிலையைப் பிரதிபலிக்கும் நோக்கிலேயே காட்சிகள் நிர்ண யிக்கப்பட்டு அடுக்கப்பட்டிருக்கிறது.

நம் மத்தியில் ஒரு படைப்பு சர்வதேச அங்கீகாரம் பெற்றுவிட்டாலோ அல்லது மேற்குலக மக்களால் பாராட்டப்பட்டாலோ நாம் உடனே இது மேற்குலகத் திற்கான படைப்பு. எமது ரணங்களைப் பெரிதுபடுத்திக் காட்டி நாம் சார்ந்த சமூகத்தை





அவமானப்படுத்துகிறோம் என்று விமர்சனம் கூறிவிடுவோம். உண்மையில் நாம் எமது ரணங்களை மூடிமறைத்து சீழ்வடிய வைத்தாலும் வைப்போமேயன்றி அதற்கு மாற்றுகளை எப்போதுமே தேடுவதில்லை.

பல ஆயிரம் ஆண்டுகளாகக் கட்டிக் காத்து வந்த கலாச்சாரம் என்னாவது?

அது வெளியில் தெரிந்தால் எம் கௌரவம் என்னாவது?

நாம் தீக்குளித்தும் நகரத்தை எரித்தும் எமது புனிதத் தன்மையைக் காத்துக் கொள்வோம்.

சினிமா பல தளங்களைக் கடந்து பல சோதனை முயற்சிகளைக் கடந்து பல வெற்றிகளைக் கண்டு நம்முன் பலவிம்பங்களை விட்டுச் சென்றிருக்கின்றது.

ஆனால் நாம் இன்னும் குடும்பத்தோடு அமர்ந்து பார்க்கத் திரைப்படங்களைத் தேடுகின்றோம். தமிழ்த் திரைப்படங்களில் தொப்புளை tight closeupஇல் ஆட்டிக் காட்டும்போது பூரித்துப் போகிறோம். பாடல் காட்சிகளில் உடலுறவுக்கான முத்திரைகள் போல் இடுப்பை இடுப்பை ஆட்டும்போதும், போர்வைக்குள் படுத்துக்கொண்டு ஆளுக்குமேல் ஆள் புரளும்போதும் நாம் குடும்பத்தோடு இருந்து பார்ப்போம். சிறுபிள்ளை களை அதைப் போன்று ஆடவைத்து ரசிப்போம். ஆனால் 16 வயதிற்கு மேல் பார்க்க வேண்டும் என்று கூறி ஒரு படத்தை ஆக்கபூர்வமாக எடுத்தால் நாம் குழம்பியடிக்கிறோம். நாம் இன்னும் அந்தளவிற்கு வளர்ச்சியடையவில்லை.

இதுபோன்ற படமெடுப் பவர்கள் இனி 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு என்று கூறாமல் இப்படியான திரைப்படங்களைப் பார்ப்பதற் குரிய வளர்ச்சி அடைந்தவர்கள் மாத்திரம் எனக்கூற வேண்டும் எனப் பரிந்துரைக்கிறேன்.

ஏனென்றால், அரசியல் பொருளாதார கருது பொருள்கள் குறித்த விசாலமான பார்வையைக் கொண்டிருப்பவர்கள்கூட, கலாச்சாரம், பாலியல் போன்ற கருதுபொருள்களுக்கு வந்து சேருகின்றபோது மிகமோசமான பழமைவாத, பிற்போக்கு அமசங் களையே வரித்துக்கொண்டிருப்பது வருத்தத்திற் குரியது.

விமுக்தி ஜயசுந்தர என்றொரு துரதிர்ஷ்டசாலி சில வருடங்களை புனே பிலிம் இன்ஸ்ரிரியூட்டில் கழித்து உதவி இயக்குநராகப் பணி புரிந்து தனது முதல் சினிமாவுக்கே உலகின் சினிமா மேதைகள் அலங் கரித்த மேடையில் விருதையும் பெற்று நின்றும், அவன் எந்த சமூகத்திற்காக தனது படைப்பைச் செய்தானோ அதே மக்களால் புறக்கணிக்கப்பட்டு, விமர்சகர்களால் அவமானப்படுத்தப்பட்டு, படத்தைப் பார்க்காதீர்கள் என்று ஊடகங்களில் பகிரங்க அறிவித்தல் செய்யப் பட்டு மிகக் கேவலமாக புண்படுத்தப்பட்டு இருக்கிறார்.



அய்ரோப்பிய அவதானிப்புகள்

சச்சிதானந்தன் சுகிர்தராஜா

பாப்பாண்டவரின் விரிவுரையும் விபரீதங்களும்

போப்பாண்டவர் 16ம் பெனடிக்ட் பவரிய பல்கலைக்கழகம் ஒன்றில் ஆற்றிய விரிவுரை சர்ச்சைக்குள்ளாகி இருக்கின்றது. ஒரு இடைக்காலப் பேரரசரின் இஸ்லாமிய மதத்திற்கு எதிரான கருத்துக்களை 16ம் பெனடிக்ட் அவருடைய உரையில் எடுத்தாண்டதுதான் இதற்குக் காரணம். ஆச்சரியம் என்னவென்றால், புரளி கிளம்பி இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் 16ம் பெனடிக்ட் மன்னிப்புக் கேட்டிருக்கிறார். இது கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் பெரும் சாதனை. பழைய தவறுகளுக்கு கத்தோலிக்க சபை மன்னிப்புத் தெரிவிக்கப் பல நூற்றாண்டுகளாகும்.

நினைவுக்குச் சட்டென்று வரும் உதாரணங்கள்: காலிலேயோ, உலகம் உருண்டைசம்பவம். மற்றது இடைக்கால புனித சண்டையில் கிறிஸ்தவ படைகள் செய்த அட்டுழியங்கள்.

இறைதூதர் முகமது பற்றிய டேனிஷ் கேலிச் சித்திரங்கள் உலகளவில் ஏற்படுத்திய விபரீதங்கள். இந்த விரைமன்னிப்புக்குக் காரணமாக இருக்கலாம். இந்த மன்னிப்புக்கூட பூரணமானதல்ல. இஸ்லாமிய மக்களின் மனதைப் புண்படுத்தியதுக்குத்தான் கேட்கப் பட்டதே தவிர, இடைக்காலப் பேரரசரின் இஸ்லாமிய மதத்தைப் பழி கூறும் வார்த்தைகளுக்கு அல்ல. பைசான்திய பேரரசரின் சிதைந்த எண்ணங்களில் இருந்து போப்பாண்டவர் தன்னை விடுவித்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

போப்பாண்டவரின் வியாசத்தை முழுவதுமாகப் படித்துவிட்டு இதனை எழுதுகிறேன். இவருடைய மற்ற எழுத்துக்கள் போலவே இந்தக் கட்டுரையும் எளிமைக்கும் தெளிவுக்கும் உதாரணம் அல்ல. அவதானமாக இறையியல் வாசிப்பவர்கள்கூடத் திணறிப் போகும் பத்திகளும் வசன நடைகளும் நிறையவே உண்டு. நான் தரும் சுருக்கம், போப்பாண்டவரின் இறையியல் நுட்பங்களைச் சிதைத்துவிடக் கூடும். ஆகையினால் சாரத்தைத் தருவதைவிட இந்த உரையில் இழைந்து கிடக்கும் இஸ்லாமிய மறைமுகத் தாக்குதல்களை மட்டும் சுட்டிக் காட்டுகிறேன். அதற்கு முன் இந்த சர்ச்சைக்குக் காரணியாக இருந்த 14ம் நூற்றாண்டு பைசான்திய பேரரசர் 2ம் இம்மானுவேல் Palaialogos (1391-1425) சுழல் பற்றிச் சில வார்த்தைகள். இந்த 2ம் இம்மானுவேல் இஸ்லாம் மதம் பற்றிய நிதானமான விடய நோக்குப் பார்வையாளர் அல்ல. இவர் பதவி ஏற்றபோது ஒட்டமான் துருக்கியர்கள் சின்ன ஆசியாவைக் கைப்பற்றிவிட்டார்கள். இஸ்லாமிய ஆக்கிரமிப்பிற் கெதிராக மேற்கு கிறிஸ்தவ நாடுகளுடன் இருந்து எதிர்பார்த்த உதவி 2ம் இம்மானுவலுக்குக் கிடைக்க வில்லை. மானமும் கௌரவமும் இழந்த ஆட்சியின் கடைசிக் காலத்தில் இவருடைய இறுதிப்பணிகளில் ஒன்று ஒட்டமான் துருக்கியர்களுக்கு வரிகட்ட சம்மதித்ததுதான். இந்த இஸ்லாமிய ஆக்கிரமிப்புச் சூழலில்தான் ஒரு பாரசீகருடன் இந்த 2ம் இம்மானுவேல் கிறிஸ்தவ இறைநூல் மற்றும் திருக்குரான் பற்றியும் சமய சம்பந்தமான விஷயங்கள் பற்றியும் உரையாடுகிறார். ஒரு திருக்குரான் வசனம்கூட இந்த உரையில் 16ம் பெனடிக்ட் மேற்கோளாகக் கையாண்டிருக்கிறார்.

இந்தப் பாண்டித்திய வியாசத்தில் 2ம் இம்மானுவேல் மூன்று தரம் வருகிறார். மூன்று தடவையும் கிறிஸ்துவத்தின் மேன்மையையும் சிறப்பையும் எடுத்துச்

சொல்லவே 16ம் பெனடிக்ட் இவரைப் பயன்படுத்துகிறார். 2ம் இம்மானுவேலுக்கும் பாரசீகருக்கும் நடந்த ஏழாவது உரையாடலின்போதுதான் இஸ்லாமியரின் ஆட்சேபனைக்குரிய கூற்று நேரிடுகிறது. புனிதப் போர் பற்றிப் பேசும்போது பைசான்திய பேரரசர் இவ்வாறு கூறுகிறார். "முகமது புதிதாக ஏதாவது தந்திருக்கிறார் என்று காண்பியுங்கள். கொடியதும் மனிதத்தன்மை களற்றவைகளைத்தான் காண்கிறேன். அவர் பிரக



டனப்படுத்திய மதம் வாளின்னால்த்தான் பரப்பப் பட்டது?"


16ம் பெனடிக்டின் உரையின் தலைப்பு: 'மதநம்பிக்கை, பகுத்தறிவுச் சிந்தனை, பல்கலைக்கழகம்' இந்த உரையில் இவர் சொல்ல வந்தது இதுதான். பல்கலைக்கழகங்களில் நடத்தப்படும் அறிவுபூர்வமான ஆய்வுகளினால் மதநம்பிக்கைகளுக்கு இடைஞ்சல்கள் இல்லை. மாறாக அவை மதங்களின் அடித்தளங்களை ஸ்திரப்படுத்துகின்றன. கிறிஸ்தவத்தின் விசேஷம் ஆரம்ப முதல் தன்னை இந்த அறிவு விசாரணைக்கு உட்படுத்தியதுதான். மேலும் இந்த உரையில் சொன்ன விஷயம்: உண்மையான விசுவாசம் புத்திபூர்வமான சிந்தனைகள் மூலம்தான் புலப்படும். வன்முறை மூலம் அல்ல. இந்தக் கருத்தை வலியுறுத்தவேதான் 2ம் இம்மானுவேலின் கூற்றை தன்னுடைய உரையில் 16ம் பெனடிக்ட் தேர்ந்தெடுத்தார்.

16ம் பெனடிக்டின் கருத்துப்படி இஸ்லாம் மோதிக்கும் கடவுள் வடிவங்களுக்கும் உருவங்களுக்கும் புத்திபூர்வமான ஆராய்ச்சிக்கும் கட்டுப்பட்டவையல்ல. இந்த உரையில் புதைந்து கிடக்கும் ஆழ்பிரதி (sub-text) இதுதான்: அறிவொளி இயக்கத்தின் பெரும் சாதனையான சிந்தனை சக்தி இன்னும் இஸ்லாமை வந்தடையவில்லை. அறிவைக் கொண்டு இஸ்லாமிய மதக் கருத்துக்களை பரிசீலனை செய்யாமல் திருக்குரானை தேவாக்காக ஏற்றுக் கொண்டமையால் இம்மதத்திற்கு இன்னும் மறுமலர்ச்சி ஏற்படவில்லை. கிறிஸ்தவத்திற்கு நடைபெற்றது போல் இஸ்லாமுக்கும் ஒரு மதச் சீர்திருத்தம் அவசியம் வேண்டும். இதே கருத்தைத்தான் மேற்குலக ஊடகங்கள் பெரும்பாலும் பிரதிபலிக்கின்றன.

போப்பாண்டவரின் உரையில் இரண்டு தப்பான அபிப்பிராயங்கள் உண்டு. சமயம், இறையியல் மற்றும் அறிவொளி இயக்கங்களை உன்னிப்பாகக் கவனிக்கிறவர்களுக்கு இது அறிந்த விசயமே. பலவந்தமாக மதத்தைப் பரப்புவது இஸ்லாமியருக்கு மட்டுமுள்ள தனி உரிமையல்ல. கிறிஸ்தவ திருச்சபை காலனிய காலத்தில் படைப்பலத்துடன் கிறிஸ்துவத்தைப் பரப்பிய சான்றுகள் சரித்திரத்தில் நிறைய உண்டு. "நான் சமாதானத்துடன் வரவில்லை கத்தியுடன் வந்திருக்கிறேன்" என்று யேசுநாதர் கூறிய வசனங்கள் கிறிஸ்தவர்களுடைய புதிய ஒப்பந்தத்தில் உண்டு. மற்றது இஸ்லாம் மதம் அறிவொளி சார்ந்த சிந்தனைகளுக்கு எதிரி என்பது தவறு. அய்ரோப்பிய அறிவொளி இயக்கத்திற்கு இஸ்லாமியக் கருத்துகள் நிறையவே பின்பலம் கொடுத்து வலுவு படிந்திருக்கின்றன. மேற்குலகப் பார்வையில் எழுதப்பட்ட நூல்களில் இச்செய்திகள் இருட்டடிக்கப்பட்டிருந்தாலும் இந்த விவரங்கள் இப்போது பொதுப்பார்வைக்கு கிட்டி இருக்கின்றன. 12ம் நூற்றாண்டு இஸ்லாமிய அறிஞர் Ibn Rushd (Averroes) மூலந்தான் அரிஸ்டாட்

பல்கலைக்கழகங்களில் நடத்தப்படும் அறிவுபூர்வமான ஆய்வுகளினால் மதநம்பிக்கைகளுக்கு இடைஞ்சல்கள் இல்லை. மாறாக அவை மதங்களின் அடித்தளங்களை ஸ்திரப்படுத்துகின்றன. கிறிஸ்தவத்தின் விசேஷம் ஆரம்ப முதல் தன்னை இந்த அறிவு விசாரணைக்கு உட்படுத்தியதுதான்.

16ம் பெனடிக்டின் உரையில் இருந்து...



Nasi al-Din al-Dusi

டிலின் தத்துவங்கள் மேற்கத்தைய வாசகர்களைக் கிட்டியது. 13ம் நூற்றாண்டு வானசாஸ்திர கணித வல்லுனர் Nasir al- Dinal - Tusi எழுந்திராவிட்டால் copernicas புரட்சியே ஏற்பட்டி ருக்காது.

16ம் பெனடிக்ட் மனம் நொந்து மன்னிப்புக் கேட்டதினால் முஸ்லிம்கள் சமாதானமடையப் போவதில்லை. இதற்குக் காரணம் போப்பாண்டவரின் பழைய செயற்பாட்டியலே. இந்த 16ம் பெனடிக்ட் ஒரு தொடர்ந்த மத வசைப்பாளர். சில ஆண்டுகளுக்கு முன் பௌத்தமதத்தை 'auto - erotic spirituality' என்றார். சமீபத்தில் யூதர்களைக்கூட சாடி இருக்கிறார். இந்த உரை எழுப்பிய மனவருத்தத்திற்கு மன்னிப்புக்கேட்கும் போது கிறிஸ்துவின் மரணம் பற்றிப் பேசிய இவர், தூய பவுலின் ஒரு வாசகத்தை எடுத்துக் காட்டி சிலுவை யூதர்களுக்கு இடைஞ்சல் என்றார். இதுமட்டுமல்ல மே மாதம் Auschwitzஇற்குப் போனபோது யூதர்கள் நாசி களால் திரட்டி அடைத்து வைக்கப்பட்ட முகாமில் பேசினார். Anti-semitism பற்றி மூச்சே விடவில்லை. யூதர் களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடுமைகளுக்கு ஜேர்மனி மக்கள் சார்பாகவோ அல்லது தன்னுடைய சொந்த சார்பாகவோ மன்னிப்புக் கேட்கவில்லை. நாசிகள் ஒரு கொள்ளைக் கும்பல் என்று அவர்களை மட்டும் தனிமைப்படுத்தி யூத அழிப்புக்கு அவர்கள் மட்டுமே காரணம் என்று மட்டும் கூறினார். மற்றும் துருக்கி நாடு ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவ அனுமதிக்குத் தடையாக இருக்கிறார். இத்த டைக்கு இவர் கூறும் பதில் இஸ்லாமியத் துருக்கி அங்கத்துவம் ஐரோப்பிய கிறிஸ்தவ அஸ்தி வாரத்துக்கு முட்டுக்கட்டையாய் இருக்கும். 16ம் பெனடிக்ட் கார்டினலாக இருந்தபோது சட்டாம் பிள்ளைத்தனமாக நடந்துகொண்ட காரியங்கள் நிறைய உண்டு. சமீபத்தில் பலருடைய கவனத் தையும் ஈர்த்த பிரசித்தி பெற்ற சம்பவம் சிறீலங்கா கத்தோலிக்க குரு திஸ்ஸ பாலசூரிய அன்னை மேரியை அவமானப்படுத்தி எழுதிவிட்டாரென்று அவரைத் திருச்சபையில் இருந்து விலக்கிவிட எடுத்த முயற்சி.

முடிவாகச் சில எண்ணங்கள் :

சல்மான் ருஷ்டி, 11/9 முன் இந்த உரையின் இஸ்லாமியத்தைச் சாடும் வசனங்களை ஒருவருமே பெரிதாக எடுத்திருக்க மாட்டார்கள். ஏதோ ஒரு பல்கலைக்கழகத்தில் ஆற்றிய மனித நடை முறைக்கு உதவாத வாக்கியங்கள் என்று உதாசீனப்படுத்தி இருக்கக்கூடும். கபடமில்லாத நாட்கள் எப்போதோ செத்துப் போய்விட்டன. ருஷ்டிக்கும் 11/9க்குப்பின்பும் இந்தப் போப்பாண்டவர் கூற்றை ஏதோ இறையியல் சார்ந்த கருத்துக்கள் என்று தனிமைப்படுத்திப் பார்க்க முடியாது. இந்த வார்த்தைகளை ஆப்கானிஸ்தான், ஈராக், பாலஸ்தீனம், பூசின் islamofacism மேற்குலகின் இஸ்லாமியப்பயங்கரவாதத்திற்கெதிரான போர் என்றவைகளுடன் ஒட்டுச் சேர்த்துப் பார்க்கும்போது போப்பாண்டவரின் கூற்றுக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் மதப்படிவார்ப்புகள் (religious stereotype) தெரியவருகின்றன.

16ம் பெனடிக்ட் ஒரு தலைசிறந்த இறையியல் வித்தகர். ஆகையினால், முஸ்லிம்களைப் பொறுத்த மட்டில் நபி முகம்மதும் non negociable என்று நன்றா கவே போப்பாண்டவருக்குத் தெரியும். இந்த முஸ்லிம் களைப் பாதிக்கும் விஷயத்தைப் பகிரங்கமாகப் பேசியதும் இஸ்லாம் மதத்தைப் புண்படுத்தியதும் போப்பாண்டவரை ஒரு நடுநிலையான சமயப் பார்வையாளர் என்ற தகுதியை இழக்கச் செய்கிறது. அவருடைய பதவிக்குரிய ஆன்மீகப் பலத்தை மட்டுமல்ல, அவருடைய சொந்த அதிகாரத்தையும் கூடப் பாதித்திருக்கிறது. இனி அவரைப் பாரபட்ச மற்றவர் என்று பார்ப்பது கொஞ்சம் கஷ்டம். சென்ற நூற்றாண்டில் கிறிஸ்தவர்களும் ஏனைய சமயத்தவர் களும் நவீனத்தின் தாக்கத்தால் சமயங்களிடையே காணப்பட்ட பொதுக் கருத்துகள், ஆன்மீகத் தொடர்புகள், திருப்பிரதிகள் பேசும்போது உண்மை களுக்கு மதிப்புக் கொடுத்து சமயக் கூட்டுறவையும் ஒன்றிணைந்த மனித குலத்தையும் உருவாக்க முயன்றார்கள். இன்று பின்நவீனத்துவமும் பின் காலனியத்துவமும் பன்மையையும் முரண்பாடுகளையும் முகியப்படுத்துகின்றன. நவீனத்தின் முழுமை நோக்கப் பார்வையினால் மறைக்கப்பட்டிருந்த 'மற்றதுகள்' (the others) இப்போது முன்னுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். சமூகங்கள்


சமயங்களிடையே மாறுபட்ட கருத்துக்களும் செய்கைகளும் அதிகரித்து வரும் சிக்கலான குழப்பமான இந்த நூற்றாண்டில் வேற்றுமைகளுக்கூடாகவும் வித்தியாசங்களுக்கூடாகவும் இணக்க முள்ள ஆக்கபூர்வமான தோழமை நிறைந்த சமுதாயத்தை உருவாக்குவதில்தான் மனிதகுலத்தின் சமீப்ம் தங்கியிருக்கின்றது.


இந்தக் கட்டத்தில் ரெம் பெனடிக்டின் உரை திருச்சபையை கிறிஸ்தவத்தின் மகாத்மியத்தைப் பறைசாற்றும் இடைக்காலத்திற்குத் திசைதிருப்பி இருக்கிறார். இது கிறிஸ்தவ திருச்சபை உலகிற்கு தரும் நல்ல சேதி அல்ல.

******

மறுவாசிப்பு - மறுபரிசீலனை

கல்விக் கருத்தரங்குகளில் வாசிக்கப்படும் கடினமான கட்டுரைகளைவிட அதிக கவனத்தை ஈர்ப்பவை. இந்த மகாநாடுகளுடன் இணைந்து நடாத்தப்படும் புத்தகக் கண்காட்சிகளாகும். சென்ற தடவை பிலடெல்பியா கருத்தரங்கில் கட்டுக்கட்டாக நூல்களை வாங்கி வந்தேன். Anne Fadiman பதிப்பித்த rereadings. இந்த Fadiman சில எழுத்தாளர்களை அவர்கள் இலக்கியப்பணிக்குள் பிரவேசிக்க காரணமாயிருந்த அல்லது அவர்களுடைய தொடக்க காலத்தில் பாதித்த நூலை இப்போது அவர்கள் பிரபலமான பின்






Pico Iyer

மறுவாசிப்புச் செய்யச் சொன்னார். அதன் விளைவு தான் இந்த rereadings. முதல் வாசிப்புக்கும் மறுபரிசீலனைக்கும் இடையே ஏற்பட்ட ரசனைமாற்றங்கள் தனி/பொது வாழ்வில் ஏற்பட்ட சந்தோஷங்கள் சலிப்புகள் அரசியல் ஏமாற்றங்கள் வெற்றிகள் மற்றும் அவர்களுடைய எழுத்தில் ஏற்பட்ட வளர்ச்சி பாராட்டுக்கள் பகைவுகள் பற்றிப் பகிரங்கமாக இந்த நூலில் பதிவுசெய்கிறார்கள். இரண்டு இந்தியர்களும் இதில் உண்டு. ஒருவர் நாடோடிகளின் நாடோடி PICO Iyer. மற்றவர் ஆங்கிலக் கவிதை எழுதும் விஷம் சேஷாத்திரி. இந்த நூலை வாசித்தபோது எனக்கொன்று தோன்றியது. இதேபோல் ஒரு நூலைத் தமிழிலும் கொண்டு வரலாம். நமது மூத்த தமிழ் எழுத்தாளர்கள் இலக்கியத் துறைக்கு வருமுன் துணைநின்ற. படித்த. பாதித்த நூலை மறுபடியும் வாசிக்கச் சொல்லலாம்.

அந்த முதல் வாசிப்புக்கும் இன்று அவர்கள் பிரபல மடைந்த நிலைக்கும் இடையே உள்ள இடைவெளியில் அவர்கள் வாழ்வில். இலக்கியத்தில். அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள். மலர்ச்சிகள். துக்கங்களை. நினைவு கூரச் சொல்லலாம். இந்தப் பத்தினையப் படிக்கும் பிரசுர உரிமையாளர்கள் இதனை முயற்சித்தால் நல்லது.



ஓவியம், கவித்துவம், நாடகம், நடனம், தத்துவம், விஞ்ஞானம், தொல்கதைகள், சமயம் என்பனவும் அவன் வாழ்வதற்கு முக்கியமானது. அவன் நேரடியாகச் செய்யும் வேலையல்லாது அவனது குறியீட்டு நடவடிக்கைகளே அவனது வேலைச் செயல்முறைக்கும் அதன் இறுதிப் பலனான உற்பத்திக்கும் நுகர்விற்கும் சாரம்சத்தைக்கொடுக்கிறது.

The condition of man (1994)


கணிதம், பௌதிக விஞ்ஞானம் இவையிரண்டும் தொழில்நுட்பத்தில் ஏற்படுத்திய தாக்கம் கடந்த நூற்றாண்டில் மனித வாழ்வியலில் ஏற்படுத்திய பாரிய மாற்றங்களை உணர்த்தும் அக்காலத்தில் வாழ்ந்தும் இருக்கிறோம். அனுபவ அறிவுடன் பாரம்பரிய சார்புடனும் கூடிய தொழில்நுட்பத்திலிருந்து, பரிசோதனை தொழில்நுட்பம், புதிது புதிதாக அணுச்சக்தி, ஒலியை விட வேகமான பயண வசதி, சைபனாற்றிக் இன்ரலிஜென்ஸ் (cybernetic intelligence), அதிவிரைவான தொலைத்தொடர்பு போன்ற புதிய கதவுகளை மனிதனுக்கு திறந்து விட்டது. பிரமிட்டுக்கள் காலத்தின் பின்பு ஒரு குறுகிய காலத்துக்குள் மாபெரும் மாற்றங்களை சமுதாயம் தன்னுள் வாங்கிக்கொண்டது இந்நூற்றாண்டாகத்தான் இருக்கும். மனித நாகரிகத்தின் ஆரம்பகாலத்தில் இயற்கையின் சக்திகளை வெல்வதற்காக ஆயுதங்களையும் கருவிகளையும் செய்தவன் பின்பு மாறி, அவன் இயற்கையை வெல்வதுடன் உயிர்பொருட்கூறான வாழ்வடிப்படையிலிருந்து வெகுதூரம் விலகிச் சென்றுவிடுவான் என்றுதான் பொதுவான கணிப்பீடு உள்ளது.

இந்த புதிய மெகா தொழில்நுட்பத்தினூடு ஒரு சிறிய அதிகாரக் குழு ஒரு சீராக எல்லாத் துறைகளையும் தன்னுள்ளடக்கிய புதிய உலக ஒழுங்கை கட்டியமைப்பார்கள். இவ்வொழுங்கு எவ்வித தங்கு தடையுமின்றி தன்னியல்பான தொழிற்பாட்டைக் கொண்டிருக்கும். உயிர்த் துடிப்பான சுய அடையாளங்களுடைய சமுதாயமாக அன்றி, மனிதன் அடங்கி நடப்பவனாகவும் குறிக்கோளற்றவனாகவும் இயந்திரங்களால் உற்பத்தி செய்யப்பட்ட உதிரிப்பாகம்போல் செயற்கை ஒழுங்குச் சமுதாயத்தில் தன் பங்கினை வகிப்பவனாகத்தான் இருப்பானென்று தொழில்நுட்ப வியலாளர்கள் நம்புகின்றார்கள்.

இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் சிந்தனையில் உருவான கணிப்புக்களையும், ஊகங்களையும் கேள்விக்குள்ளாக்குவதே இந்த நூலின் நோக்கம். இதற்கு ஆதாரமாக, முன்பு மனிதன் கருவிகளின் பங்கை மட்டுமீறிப் பார்த்ததைப் போலவே இன்றும் மனித முன்னேற்றத்தில் இயந்திரங்கள் வகிக்கும் பங்கினை பார்க்கிறான். என் முன்வைப்பு என்னவென்றால், மனித வளர்ச்சிக்கு உற்பத்திதான் முக்கியமானதென்று கார்ல் மார்க்ஸ் கூறியதையோ, அன்றேல் சிறிதேனும் என் சிந்தனைப் பக்கம் சாதகமாகவுள்ள Pierre Teilhard De Chardin மனித வளர்ச்சியை ஆரம்பத்திலிருந்து கூறிவந்து, இன்றைய

குறுகிய தொழில்நுட்பச் சிந்தனையை கையில் எடுத்து எதிர்காலத்தில் மனித வளர்ச்சி ஒரு முடிவுக்கு வந்துவிடும் என்றும், அந்த முடிவுப் புள்ளியை ஒமேகாப் புள்ளியென்று குறிப்பிட்டு மனிதனின் தனித்துவமானதும் மூலப்படிமநிலையிலிருந்தும் விலகி தொழில் நுட்பரீதியான உலகளாவி வடிவமைக்கப்பட்ட சிந்தனைதான் மீதம் இருக்கும் எனவும் கூறுகிறார். இந்த சிந்தனை உயிர்த் துடிப்போ, உணர்வுகளோ அற்ற தாகத்தான் இருக்கும். இவை இரண்டினையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

மனித இயல்பின் சரித்திரத்தை ஆழமாக ஆராயாமல் தொழில்நுட்பம் மனிதவளர்ச்சியில் என்ன பங்கை வகித்தது என்பதை நாம் சரியாக விளங்கிக் கொள்ள முடியாது. ஆனால் கடந்த நூற்றாண்டில் புதிய வருகை காலம், காலமாக வழங்கி வந்த நடைமுறைகளையும் அதனடிப்படையிலான ஒழுங்கமைப்பு முறைகள் என்பவற்றை துடைத்தெறிந்து விட்டதால்



சமூகச்சூழலில் ஏற்பட்ட மாற்றம் மரபுவழி எண்ணக் கருக்களையும் மாற்றியதோடு மனித சக்தியின் எல்லையை விரிவுபடுத்தியதுடன் தொழில்நுட்பத்தின் சாத்திய எல்லைகளையும் விரிவுபடுத்தின. மனித சரித்திரத்தை முன்பு பதிவு செய்தவர்கள் தங்கள் காலத்தில் இயந்திரங்களின் வருகையையும் மனித வளர்ச்சியையும் பிழையாக ஒப்பிட்டதுடன் தங்கள் அளவுகோலின்படி கருத்துக்களைப் பதிவு செய்தனர். பின்பு வந்தவர்கள் இந்த விக்ரோறியன் காலத்து நம்பிக்கையான மனிதனின் எல்லாத் தேவைகளையும் இயந்திரங்களே நிறைவேற்றி விடும் என்ற கொள்கையை நிராகரித்தனராயினும், வெறித்தனமாக விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்தான் மனித குலத்தைக் காக்கும் என்று நம்பி அதனைப் பின்பற்றினர். இன்று காணப்படும் தொழில்நுட்பத்தின் மீதான அதீத நம்பிக்கை, மேற்கூறியவாறு ஆரம்பத்திலிருந்து தொடர்ந்து வந்த பிழையான விபரணத்தின் விளைவே. மனிதகுலத்தின் வளர்ச்சியில் அரங்கேறிய நாடகங்களினூடு மீண்டும் ஒருமுறை பயணித்துப் பார்த்தால் தான் நாம் ஒரு சமநிலையை அடைய முடியும்.


மனிதனுக்கு கருவிகளின் தேவை வெளிப்படையானது. ஆயினும் கற்களினாலான கருவிகளின் வகிபங்கினை பல நூறாயிரம் வருடங்களுக்கு முன்பே அவற்றின் பல்தொழிற்பாடு, வினைத்திறன் மிகைப்படுத்தாது பார்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும். பல்வகை உயிரினங்கள் பல்வேறுபட்ட செயல்களில் மனிதனிலும் பார்க்க முன்பே அறிவுத்திறனைக் கொண்டவையாக இருந்தன. உயிரியலாளர்களும், மானிடவியலாளர்களும் இதனை ஒன்றில் குறைக் கணிப்பீடாக அன்றேல் முற்றாகப் புறக்கணித்தும் கருவிகள் செய்வதே ஆதிகால மனிதனின் முக்கிய நடவடிக்கை என்றும் அதனால்தான் மனிதச் சங்கிலி அறாமல் தொடர்ந்தது என்றும் பார்த்தார்கள். இந்தக் கருத்தியலுக்கு எதிரான ஆதாரங்களை R.U.Sayce, Daryll Forde, Andre Leroi, Gourhan ஆகியோர் வைத்திருந்தும் இன்றுவரை கருவிகளையும் இயந்திரங்களையும் தொழில்நுட்பத்துடன் ஒருபகுதியாகப் பார்க்கும் மனப்பாங்கே நிலவுகிறது.

தொழில்நுட்பத்தில் பொருட்களின் பங்கினை மாத்திரம் விபரிக்கும்போதுகூட மேற்கூறிய சிந்தனைப் போக்கானது முதன் முதலாகப் பாவிக்கப்பட்ட அடுப்பு, பொறிக்கிடங்குகள், கண்ணிகள், தொட்டிகள், தொழுவங்கள், வீடுகள் அத்துடன் சிறிது காலத்துக்குப் பின்பு தோன்றிய நீர்த்தேக்கங்கள், வாய்க்கால்கள், நகரங்கள் இவையனைத்தும் தொழில்நுட்பத்தில் முக்கிய பங்கு வைத்திருந்தும் அவற்றைக் குறிப்பிடாமல் தவிர்த்திருக்கின்றது. ஆனால் இவையனைத்துமே தொழில்நுட்பத்தில் மிக முக்கிய பங்கினை வகித்துள்ளது என்பதனை மறுக்க இயலாது. உயரழுத்த மின்மாற்றிகள் இரசாயன வடிகலன்கள், அணு உலைகள் போன்ற இன்றைய தொழில்நுட்பங்கள்கூட இவற்றின் பயன்பாடுகளை உள்ளடக்கித்தான் இயங்குகின்றன. பூச்சிகள், பறவைகள், பாலூட்டிகள் தங்கள் இருப்பிடங்களை அமைப்பதில் கொண்டுள்ள அறிவு மனிதனை விட மேம்பாடடைந்திருப்பது தெளிவானது. கடுஞ் சிக்கலான அமைப்பைக்கொண்ட கூடுகள், கொடிப் பந்தரமைப்பு, கேத்திரகணித அடிப்படைகொண்ட தேன்கூடு, பெருநகர அமைப்பினைக்கொண்ட எறும்பு, கறையான் புற்றுகள், நீர் நாய், நில நீர்வாழ்எலியுருவ விலங்கின் குடைவுத்துாறின் வடிவமைப்பு என்றிருந்த போதில் ஹோமோசாப்பியன்களின் வருகைக்கு முதல் இருந்த சமூகம் கருவிகளை ஆக்குவதில் கொண்ட அறிவிலும் மேலானது. சுருங்கக்கூறின், தொழில்

நுட்பந்தான் அறிவினைச் சேகரிக்கவும் வளர்க்கவும் உதவுமெனப் பார்த்தால் மனிதன் பறவைகள், பாலூட்டிகள் இவற்றைவிட பின்தங்கித்தான் இருந்திருக்கிறான்.

மனிதன் கருவிகளை தனது பாவனைத்தேவை மட்டும் கருதிச் செய்வதை விட்டு அழகுணர்வுடன் வடிவமைக்கத் தொடங்கினானோ, அன்றேல் சந்ததி சந்ததியாக வந்த அறிவினை கருவியாக்கத்தில் எப்போது நுழைத்துக் கொண்டானோ, அப்போதுதான் மனிதனுக்கும் மற்றைய உயிரினங்களுக்கும் வித்தியாசம் ஆரம்பமாகிறது. இந்த இடத்தில்தான் மனிதனின் கைகளல்ல, மனித மூளைதான் வித்தியாசமாகச் செயல்படுகிறது என்பது தெளிவாகிறது. எனவே மனித மூளை ஒரு உற்பத்திப் பொருளல்ல. ஏற்கனவே எலி போன்ற நான்கு கால் பிராணிகளிடம் முழுவளர்ச்சியடைந்த மூளை காணப்படுகிறது. அவைகளுக்கு விரல்களை மனிதனைப்போல அசைக்கக்கூடிய கைகள் இல்லை என்பதையும் நாம் பார்க்க வேண்டும். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு Thomas Carlyle மனிதனை ஒரு "கருவி செய்யும் மிருகம்" எனக் கூறியதால், ஏதோ கருவிகள் செய்தல்தான் மனிதனை மற்றைய உயிரினங்களிலிருந்து வளர்ச்சியடைய வைத்தது எனக் கருதினர். கருவிகள், ஆயுதங்கள், பொறி உபகரணங்கள், இயந்திரங்கள் இவைகள் எல்லாம் மனித சமுதாயத்தின் உண்மையான வளர்ச்சிப் பாதைக்குத் தடையாகத்தான் இருந்திருக்கின்றன. கருவி செய்யும் பிராணி என்பதை கருவி செய்தல் என்று மாற்றினாலும்கூட, கிரேக்க மானிடவியலாளர் பிளேட்டோவுக்கு வினோதமாகத்தான் இருந்திருக்கும். ஆனால், மனிதன் கருவிசெய்யும் பிராணி என்ற கருத்து மீண்டும் மீண்டும் ஆய்வாளர்கள் மனதில் ஆழமாகப் பதிந்ததால் அதனை நிரூபிக்கவே முயற்சித்தனர். Australopithecines – சரித்திரத்திற்கு முன் வாழ்ந்த ஒரு பிராணி ஆபிரிக்காவில் இதன் படிமம் கண்டெடுக்கப் பட்டது. ஹோமோசாப்பியனிலிருந்து மூன்று படிகள் மூத்த இவ்வுயிரினம் மனிதக் குரங்கைவிட குறைந்த அறிவுடையதாயிருந்தும் செதுக்குத்திறனைப் பயன் படுத்தியிருக்கிறது. கரடுமுரடான கருவிகளைப் பாவித் திருக்கிறது. புத்திக் கூர்மையுள்ள மனித இனத்தில் சேராத இன்னுமொரு உயிரினம் கருவிகளைப் பாவித்துள்ளதென நிரூபணமாகிறது. அதேபோலத் தான் கிளிகளும், மக்பீக்களும் தனித்துவமான பேச்சுத் திறமையில் பங்கு கோருகின்றன. Bower என அழைக் கப்படும் அவுஸ்திரேலிய நாட்டுப் பறவை தங்கும் மரக்கொடியெங்கும் வண்ண இறகுகளைப் பரப்பி அழகுபடுத்தும். தனிப்பட்ட மனித குணமென மனிதனை வேறுபடுத்த எதுவுமே இல்லை கருவி செய்தலுட்பட. உண்மையிலேயே மனிதனின் தனித்துவமும் விசேடமான குணமெனப்பார்த்தால் மிருகங்களின் பல்வேறுபட்ட குணங்களை தனது கலாச்சாரத்தினுள் புகுத்தி அதை மனித அடையாளமாக்கிக் கொண்டது தான்.

மனித சரித்திரத்தை ஆராய்ந்தவர்களின் முன்னோடிகள் மனிதனின் தனிப்பட்ட குணமாக கருவிகள், தளபாடங்கள் செய்வது மட்டுந்தான் காணக்கூடியதாக



Pierre Teilhard de Chardin

இருந்ததால் அதனை அவர்கள் மனிதனின் விசேட குணமாகக் கொண்டுள்ளார்கள். மனிதனின் தூரத்துச் சொந்தக்காரரான மனிதக் குரங்குகூட இலை, கிளைகளைப் பயன்படுத்தி சொகுசான படுக்கையை அமைத்துக் கொள்கிறது. ஆழமற்ற நீரோடைகளுக்குக் குறுக்கே மரக்கிளைகள் போட்டு தனது காலை நனைத்துக் கொள்ளாமல் நடந்து போகின்றது அல்லது தனது காலைத் தேய்த்துக் கழுவிக் கொள்கின்றது. பேசவும், சிந்திக்கவும், காரணப்படுத்தக்கூடிய ஐந்து வயதுக் குழந்தை கருவிகளைப் பாவிப்பதற்குப் பெரிதாக உற்சாகம் காட்டுவதில்லை. கருவிகளைச் செய்வதற்கு அதிலும் குறைந்த விருப்பத்தையே காட்டுகின்றது. எனவே கருவிகள் செய்வதுதான் மனிதன் என்றால் குழந்தைகளைக் கருவி செய்யத் தொடங்கிய பின்புதான் மனிதர்களாக அடையாளங் காணமுடியும்.

மனிதனின் தனிப்பட்ட குணங்களை நாம் ஆராயும் போது அவன் கல்லினாலான ஆயுதங்களைச் செய்ததை மாத்திரம் கருத்தில் கொள்ளக்கூடாது. ஒரே மாதிரியான பொருட்களும் ஒரே மாதிரியான தசை அசைவுகளையும் கொண்ட வாழ்க்கைக் காலத்தில் அவன் எதனைத் தேடினான், எதைச் செய்ய முயற்சித் தான் எனப் பார்க்கவேண்டும். ஆரம்பகால தொழில் நுட்பத்தில் விசேடத்தன்மைகள் எதுவுமிருந் ததாகத் தெரியவில்லை எனத்தான் கருதவேண்டும். நெருப்பைப் பாதுகாத்துக் கொண்டதை மட்டும் விசேடமாக எடுத்துக் கொள்ளலாம். என்றைக்கு மனிதன் தனது அவயவங்களை வித்தியாசமான தேவைகளுக்காக

வழமையிலிருந்து மாறான அசைவுகளுக்குத் தன்னை இயல்பாக்கிக் கொண்டானோ, குறிப்பாக, நான்கு கால்கள் நிலையிலிருந்து விடுபட்டு அவயவங்களை விசேட தேவைகளுக்காக, நகர்தலுக்கு மாத்திரம் பாவித்த அவயவங்களை ஏறுவதற்கு, பிடிப்பதற்கு, அடிப்பதற்கு, கிழிப்பதற்கு, இடிப்பதற்கு, தோண்டுவதற்கு, வீசிப் பிடிப்பதற்கு என்று மாற்றங்கள் நிகழ்ந்திருக்கலாம். ஆதிகால மனிதனின் வாழ்க்கையில் கருவிகள் முக்கிய பங்கினை வகித்தனதான். மேல் குறிப்பிட்டதுபோல் உணவைப் பறித்தெடுக்க, தூக்கிச் செல்ல, ஊற வைக்க முக்கிய பங்கினை வகித்தன. இந்தப் பங்களிப்புத்தான் மனிதனின் வாயைப் பேசத் தூண்டின.

மனிதன் கருவி செய்பவனாக இருந்தால் அவனிடம் ஆரம்பத்தில் ஒரேயொரு கருவிதான் இருந்தது. அது பின்பு வந்த எல்லாக் கருவிகளுக்கும் நிகரல்லாதது. அதுதான் அவனின் மூளையால் தூண்டப்படும் உடல். பின்பு அவன் செய்துகொண்ட முனை பெருத்த குண்டாந்தடி, கைக் கோடரிகள், மர ஈட்டிகளையும்விட அவனது அவயவங்கள் உயர்வானவை. ஆரம்ப காலத்துக் கரடுமுரடான ஆயுதங்களின் குறைகளை நிவர்த்தி செய்ய இன்னுமொரு சொத்து அவனிடமே இருந்தது. அது அவனின் தொழில்நுட்ப விரிவிற்கு உறுதுணையாக இருந்தது. மற்றைய மிருகங்களைவிட உயிரியல் ரீதியில் உயர்வான உடல் அவனிடமிருந்தது. அது எந்தவொரு குறிப்பான செயல்பாட்டிற்கு மாத்திரம் தனித்திறமை பெற்றதாக இல்லாதிருந்ததுடன் அவனது மூளை விரிவான சுற்றாடலை கவனத்திலெடுக்கக் கூடியதாகவும் தனித்தனியான அனுபவங்களை ஒன்றாகத் தங்க வைத்துக் கொள்ளும் திறனுடனும் இருந்தது. குறிப்பாக, தனித்துவமான குணவியல்பு, உணர்வியல்புகளால்தான் தனது வெளிப்புறச் சூழலையும் சிந்தையும் உடலும் சார்ந்த தன்மையினால் தன் மனதினாலும் பல காரியங்களைச் செய்ய அவனால் முடிந்தது.


மிகை வளர்ச்சியடைந்ததும், ஓயாது இயங்கும் மூளையின் காரணமாக மற்றைய மிருகங்களின் தராதரத்தில் அவனால் வாழ முடியாது போயிற்று. உணவுத் தேடல், இனப்பெருக்கம் என்று மட்டுப்பட்டு நிற்காது, மூளையின் சக்தியை வேறு விடயங்களுக்கு, தன் வாழ்முறையை வளப்படுத்தப் பாவித்ததன் மூலம் தன் சுற்றாடலுடன் ஒட்டிய கலாச்சாரத்தை, அடையாளங்களைத் தோற்றுவிக்க முயன்றான்.

கலாச்சாரத் தோற்றத்தில்தான் அவன் தனது மூளையின் சக்தியை அறிந்து கொண்டதுடன் அதனைக் கட்டுப்பாட்டினுள் வைத்துக் கொள்ளவும் முழுமையாகப் பாவிக்கவும் அவனால் முடிந்தது. கலாச்சார வெளிப்பாடுகள்தான் அவனது இயல்புத் தன்மை என்றும் அதுதான் அவனது சக்தியை முழுமையாகப் பயன்படுத்தும் தளமெனவும் அவன் புரிந்துகொண்டான்.

கலாச்சார வேலைகள் உடல் உழைப்பைவிட தேவை காரணமாக முதலிடம் பெற்றது. இந்தப் புதிய நடவடிக்கைகள் கருவிகள் செய்வதற்காகப் பழக்கப்பட்ட கண்கள், கைகள் போன்றவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டதொரு தேவையை அவனுக்கு வலியுறுத்தியது. அவனது இயல்பான இயக்கத்தினைக் கட்டுப்படுத்த, தனது கழிவு உறுப்புக்களை, தனது உணர்வுகளை, அவனது பாலியல் நடவடிக்கைகளை, அவனை அலைக்களிக்கும் ஆசை காட்டும் கனவுகள் என எல்லாவற்றையும் கட்டுப்பாட்டினுள் வைத்துக் கொள்ளவேண்டிய தேவை அவனுக்கு வந்தது.

ஏற்கனவே உடற்கூற்றியல் அடிப்படையில் இயங்கிய மூக்கு, கண்கள், காதுகள், நாக்கு, பால் உறுப்புகள் என்பவற்றிற்குப் புதிய வேலைகள் கொடுக்கப்பட்டன. கைகள்கூட முன்போல் வேலைக்காகப் பயன்படும் ஒரு கருவியாக அன்றி தடவுவதன் மூலம் காதலை வெளிப்படுத்தியது. குழந்தையை நெஞ்சுடன் அணைத்துக்கொண்டது. புதிய சமிக்ஞைகளைச் செய்தது. சடங்குகளில், நடனங்களில் பங்கேற்றது. வேறுவகையில் வெளிப்படுத்த முடியாத உணர்வுகளை, வாழ்க்கைபற்றியோ அல்லது சாவைப்பற்றியோ கடந்த காலத்தை நினைவூட்டவோ, வருங்காலத்தை அறிவிக்கவோ பயன்படத் தொடங்கியது. கருவித் தொழில்நுட்பம் உயிரியல் தொழில்நுட்பத்தின் ஒரு மிகச்சிறிய பங்கே.

மனிதமூளையின் சக்தி மனிதகுல முன்னோடிகளின் ஆரம்பத்திலேயே வெளிப்படத்தொடங்கிவிட்டது. Dr. Alison Jolly லெமுஅர்ஸ் மிருகத்தின் மூளை வளர்ச்சியினைச் சுட்டிக் காட்டியுள்ளார். அவை உணவு சேகரித்தல், கருவி தயாரித்தலில் வளர்ச்சி பெற்றவை



யல்ல. அவற்றின் விளையாட்டுக்கள் தீவிரமானவை. ஒன்றுடன் ஒன்று அன்பாக நடந்து கொள்ளும் காதலன் காதலி விடயங்களில் நளினத்தன்மை வெகுவாக வெளிப்படும். மனிதனின் அறியும் ஆவல், பார்த்துப் பின்பற்றும்பண்பு, எந்த நோக்கமோ, எதிர்பார்ப்போ இன்றிக் கையாளும்தன்மை எல்லாமே மனிதனின்

உறவான சிமியன் குரங்குகளில் காணப்படும் குணாம்சங்கள்தான். ஆதிகால கருவியாக்கத்தில் ஒரு குறிப்பிட்ட முறையே பின்பற்றப்பட்டது எனக் காணக் கூடியதாகவுள்ளது. ஒரே மாதிரியான திரும்பத் திரும்பச் செய்யப்படும் அசைவுகள் சடங்குகளிலும், பாடலிலும் நடனத்திலுமுள்ள அசைவுகள்தான் கருவி ஆக்கங்களுக்குப் பயன்பட்டன என நாம் ஏன் கேள்வி யெழுப்ப முடியாது. ஆதிகால மனிதர்களிடையே வெகுகாலமாகவே பாடல், நடனம், சடங்குகள் என்பன கருவிகளுடன் ஒப்பிடுகையில் மிக நேர்த்தியான தாகவும் முழுமைபெற்றதாகவும் இருந்ததென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சிறிது காலத்திற்கு முன்புதான் டச் நாட்டுச் சரித்திரவியலாளர் J.Huizinga தனது அறிக்கை \\Homo Ludens|| இல் வேலையல்ல விளையாட்டுத்தான் மனித

மனிதன் கருவிகளை தனது பாவனைத்தேவை மட்டும் கருதிச் செய்வதை விட்டு அழகுணர்வுடன் வடிவமைக்கத் தொடங்கினானோர் அன்றேல் சந்ததி சந்ததியாக வந்த அறிவினை கருவியாக்கத்தில் எப்போது நுழைத்துக்கொண்டானோர் அப்போதுதான் மனிதனுக்கும் மற்றைய உயிரினங்களுக்கும் வித்தியாசம் ஆரம்பமாகிறது.

நாகரிகத்தின் தோற்றுவாயாக அமைந்ததென்பதற்குப் பலமான சாட்சியங்களை வைக்கின்றார்.

மனிதனின் மிகமுக்கியமான நடவடிக்கைகள் சடங்குகள், நடிப்பு, விளையாட்டு, நாடகம் போன்றன வாகத்தான் இருந்தன. மனிதனுக்கும் மற்றைய மிருகங் களுக்கும் இடையிலான இடையறாத் தொடர்பிலிருந்து விடுபடும் முயற்சியாகத்தான் இதனை அவன் கையாண்டான். முந்தைய கால மனிதன் தனது சடங்கு களில் வேறொரு மிருகமாகத் தன்னைப் பாவனை செய்துகொண்டான். எனவே யதார்த்தச் சூழலை மாற்றும் கலையை அவன் எப்போதோ அறிந்துகொண்டு விட்டான். தனக்கென ஒரு சிறிய சூழலைப்படைக்கும் ஆற்றலை அவன் அப்போதே பெற்றுவிட்டான். குறியீடான நாடகங்கள், விளையாட்டுக்கள் வாழ்வின் ஒவ்வொரு அங்கமும் மனிதன் தனக்காக மீள்வடிவ மைத்துக்கொண்ட நடவடிக்கைகளாகக் கூடப் பார்க்கலாம்.

\\Homo Ludens|| கருத்துக்கோட்பாடு அதிர்ச்சி தருவதாக இருந்ததால் மொழிபெயர்ப்பாளர் வேண்டு மென்றே அவற்றில் மாற்றங்களைச் செய்தார்கள். எல்லாக் கலாச்சாரங்களும் நாடக வடிவங்கள்தான் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தான நாடகம் கலாச்சாரத்தினொரு வடிவம் என்பதுடன் மோதித் தெறித்தது. இதுபோல்தான் மனிதன் Homo sapiens அன்றேல் Homoludens அல்ல Homofaberதான் என்ற கருத்து மேற்குலக சிந்தனையாளர்களிடம் செல்வாக்கைப் பெற்றிருந்தது. Henri என்னும் சிந்தனை யாளர்கூட இதனை நம்பினார். 19ம் நூற்றாண்டின் புதைபொருள் ஆய்வாளர்கள் கல்லினாலான கருவி கள், ஆயுதங்கள் பற்றிய தங்கள் கருத்துச் சரியானது என்பதில் எவ்வித சந்தேகங்களும் இல்லையென உறுதியாக மறுத்தனர். 1879இல் ஸ்பெயின் நாட்டில் Paleolithicமுறை ஓவியங்கள் குகையில் கண்டு பிடிக்கப்பட்டபோது ஏமாற்று வேலையெனத் தகுதி வாய்ந்த குழுவினரால் நிராகரிக்கப்பட்டது. ஐரோப்பிய நிலப்பரப்பு நிரந்தரமாக உறைபனியால் மூடப்பட்டிருந்த காலத்து வேட்டைக்காரர்களுக்கு நேரமோ அன்றேல் அக்கலையினைப் படைக்கும் மனோநிலையோ இப்படி அழகான கலையினைப் படைக்கும்ஆற்றலோ இருந்தி ருக்காதென்பது அவர்களது வாதம்.

ஆனால் மனோநிலை என்பதுதான் ஹோமோ சேப்பியன்களிடம் இருந்ததொன்று. கைகளை மட்டு மல்ல, உடலின் எல்லா அவயவங்களையும் பாவிக்கும் திறமைதான் மனோநிலை. இன்றைய தொழில்நுட்பச் சூழலில் இன்னும் சிறிது ஆழமாகப் பார்த்தால் மனிதனின் ஒவ்வொரு கண்டுபிடிப்பும் அதனாலுண்டான மாற்றமும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கோ அல்லது இயற்கையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப் பதற்கோ அல்லாது தனது சக்தியைப் பாவிப்பதற்கும் தனது திறமையைச் சொல்வதற்காகவுமாகவே இருக்கின்றது. அத்துடன் மற்றைய உயிரினங்களிலும் பார்க்கத்தான் மேன்மையானவன் என்றும் தனது தேவைகளும் அவைகளிலும்பார்க்க மேன்மையானவை யெனவும் நிரூபணம் செய்து கொள்ளும் நடவடிக்கை யாகத்தான் இருந்தது.

மனிதன் இயற்கையின் இன்னல்களால் அவதிப் படாமல் இருந்திருந்தால் அவனது கலாச்சாரம் இயற்கையைக் கட்டுப்படுத்துவதற்கான தேவையினை பெருநோக்காகக் கொண்டிருந்திருக்காது. மொழியின் வளர்ச்சியைப் பார்க்கும்போது மனிதனின் உணர்வு களை வெளிப்படுத்த மற்றையவர்களுக்கு அதனைப் புரிய வைக்க எடுத்த முயற்சிகள் மலையினைக் கைக் கோடரிகளால் செதுக்கியதைவிட மிக முக்கியமான மனித வளர்ச்சிக்கான முயற்சியும் முதற்படியும் என்பது தெளிவானது. கருவிகளைத் தயாரிப்பதற்கான கோர்வையான அசைவுகளைவிட மிகச் சாதுரிய மானதும் மென்மையானதுமான பல அவயவங்களைப் பயன்படுத்திப் பேச்சினை அவன் வெளிக்கொணர்ந்தது ஒரு பெரிய வளர்ச்சி. இந்த முயற்சி ஆதிகால மனித னின் நேரம், சக்தி, சிந்தனைத் திறன் என்பவற்றின் பெரும்பகுதியை விழுங்கியிருக்கும். ஏனெனில், பேச்சுமொழியென்னும் இக் கூட்டு முயற்சி மனித நாகரி கத்தின் விடிகாலைப் பொழுதில் மிகச் சிக்கலானதும் அதிஉயர் தொழில்நுட்பமுமாக இருந்திருக்கும்.

இதனோடு ஒப்பிடுகையில் எகிப்திய, மொசப்புத்தேமி யாவின் கருவிகளை ஒன்றுமில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

மனிதனைக் கருவிகளைப் பாவிக்கும் விலங்காகப் பார்ப்பது மனித சமுதாயத்தின் முக்கிய அத்தியாயத் தைப் பார்க்காமல் விட்டுவிடுவதற்குச் சமன். இந்தக் கருத்துக்கெதிராக மனிதன் சிந்தனையை உரு வாக்கிய, தன்னைத்தானே உருவாக்கிக் கொண்ட விலங்கெனப் பார்க்கவேண்டும்.இந்த நடைமுறை களெல்லாம் அவன் மனதிலும் உடலிலும் புதைந்திருந் தவைதாம். தனது சமூக அமைப்பின் மூலம் அவனதனை முழுமையாக வெளிப்படுத்திக் கொள்கின்றான். மனிதன் தன்னில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளாமல் தன்னைச் சுற்றியுள்ள உலகில் மாற்றங் களை ஏற்படுத்திவிட முடியாது.

தன் திறமைகளைத்தானே அறிந்து கொள்ளல், மாற்றங்களை ஏற்படுத்தல் என்ற நடைமுறையில் கருவிகள் மனித சமுதாய மாற்றத்தின் முக்கிய காரணி யாகப் பயன்படவில்லை. அது ஒரு சிறிய பங்கினைத்தான் வகித்தது. தொழில் நுட்பம் எங்கள் காலம்வரை மனிதனை மனிதனாக வாழ முடியாது செய்து விடவில்லை. மனித கலாச்சாரத் திலிருந்து அவன் விடுபட்டுப் போகவு மில்லை. பழைய கிரேக்கச்சொல் \\tekne" வியாபாரத் திற்கான உற்பத்தியையும் மென் அல்லது குறியீட்டுக் கலையையும் ஒன்றாகத்தான் குறிப்பிடுகின்றது. மனித சமூகத்தின் பெரும்பகுதியில் இவற்றைப் பிரித்துப் பார்க்க முடியாதும் இருக்கிறது. ஒரு பகுதியில் வாழ்வினை சுலபமாக்க, மறுபகுதியில் வாழ்க்கையை இனிமையாக்கவென இரு பகுதியும் கலந்துதான் வந்திருக்கிறது.

ஆரம்பத்தில் தொழில்நுட்பம் என்பது மனிதனின் இயல்புடன் ஒத்ததொன்றாகத்தான் பார்க்கப்பட்டது. இயற்கை உற்பத்தியில் பெரும்பங்கினை வகித்தது. எனவே, தொழில்நுட்பம் அக்காலத்தில் வாழ்வின் அடிப்படையாகப் பார்க்கப்பட்டது. அது வேலை அடிப்படையாகவோ, அன்றேல் அதிகார அடிப்படை யாகவோ பார்க்கப்படவில்லை. இயற்கைச் சமநிலை யைப்போல் மனிதனின் எல்லாச் செயல்களுமே ஒன்றுடன் ஒன்று ஒத்திசைவாய் எந்தவொரு மனித நடவடிக்கையும் மற்றையதை மீறித் தேவையற்ற வளர்ச்சியைப் பெற்றுவிடாது இயல்பான இயக்கமாகத் தொழிற்பட்டு வந்திருக்கிறது. மொழி மனிதனின் அதி முக்கிய கண்டுபிடிப்பாக இருந்தாலும் அது பெறப்பட்ட அதே சூழல்கள்தான் இயந்திரங்களையும் தோற்று விக்க உதவியுள்ளன. முன்னைய அவனது சடங்குகள் ஒரேமாதிரியான அசைவுகளைத் திரும்பத் திரும்பச் செய்வது அவனை ஓர் ஒழுங்குமுறையைத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தோற்றுவிக்க வைத்தது. அவனது மூளையின் அபாரசக்தியை கட்டுக்குள் வைக்க அவனுக்கு ஓர் ஒழுங்குமுறை அத்தியாவ சியமாக இருந்தது.

இந்த ஒழுங்குமுறைச் சமூகத்தில் நிலைபெறத் தொழில்நுட்பம் மனித சக்தியின் வெளிப்பாட்டிற்கு உதவியாக இருந்தது. கருவிகளைச் செய்தல், பாவித் தல் இரண்டும் ஒழுங்குமுறையை மேம்படுத்தச் சரியான திருத்தமாக அமைந்தது. மொழியின் தோற்றம் அவனது ஈகோவை வேறுபாதையில் திருப்பாதிருக்க உதவியது. மொழி எனும் மனிதனின் கண்டுபிடிப்பு அவனை அவனது மிக நெருங்கிய ஆந்திரப்போயிட்டுக்களி டமிருந்து வேறுபட்டு நிற்க வழிவகுத்தது. இவன் தனது வாழ்க்கைமுறையைப் புதிதாக வடிவமைத்துக் கொண்டமை, தோற்றத்தில் வித்தியாசம், நடத்தையில் வேறுபாடு, வாழ்க்கை பற்றிய திட்டங்கள் என்பன அவனை அவனது உடனடி முன்னோர்களிலிருந்தும் கூட வேறுபடுத்திக் காட்டியது. இவ்வாறு வித்தியா சங்கள் கூடிவர மனித 'அடையாளங்கள்' தோன்றத் தொடங்க அவன் தனது கூர்ப்பினைத்தீவிரப்படுத்தத் தொடங்கினான். கலாச்சாரமூலம் வருடக் கணக்கு களிலேயே மற்றைய உயிரினங்கள் நீண்டகாலமாக சேதன முறை மூலம் பெற்றவைகளை அவன் ஒப்பீட்டு ரீதியில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொண்டான். ஏனெனில் மற்றைய உயிரினங்களின் கலாச்சாரமாற்றம் மிகமிக மெதுவானது அன்றேல் மாற்றக் கடினமான தாகவே இருந்து வந்தன.

எனவே மனிதனின் முக்கிய வேலை தன்னை மாற்றி யமைப்பதாகவே இருந்துள்ளது. குழுக்களாக, பிரதேச வாரியாக, ஒருகலாச்சாரத்திலிருந்து இன்னுமொரு கலாச்சாரமென மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே வந்தன. அடிப்படையில் மிருக குணத்தில் இருந்து அவனால் விடுபட முடியாதபோதும் தனது மூளையை அவன் மிருகநிலையிலிருந்து விடுவித்துக் கொண் டான். அவனது அவயவங்களில் அதிவளர்ச்சியடைந்த மூளையைத் தன்னைப் பாதுகாப்பதற்கு மட்டுமின்றி வேறு விடயங்களிற்கும் அதனைப் பயன்படுத்தினான். மனிதனின் முக்கிய தனிக்கூறு மனம், தனி அடை யாளம், தன்னை மாற்றிக் கொள்ளும்தன்மை இவைகளி

"மொழியின் வளர்ச்சியைப் பார்க்கும்போது மனிதனின் உணர்வுகளை வெளிப்படுத்த மற்றையவர்களுக்கு அதனைப் புரிய வைக்க எடுத்த முயற்சிகள் மலையினைக் கைக் கோடரிகளால் செதுக்கியதைவிட மிக முக்கியமான மனித வளர்ச்சிக்கான முயற்சியும் முதற்படியும் என்பது தெளிவானது."

னாடாகத் தன்னைப் புரிந்து கொள்ளலில் முடிவு றுகிறது.


கலாச்சாரங்கூட சடங்குகளிலிருந்து, பேச்சு, உடை, சமூகக் கட்டுமானம் எல்லாமே மனிதன் தன்னை வேறுபடுத்திக்கொள்ள எடுத்த முயற்சிகளே. ஆனால் தற்போதைய கலாச்சார நிலை, கலை, அரசியல், தொழில் நுட்பம் என்பனவற்றைப் பார்க்கும்போது எங்க ளுக்குப் பயமேற்படுகிறது. இந்த மனித அடிப்படைத் தனிக்கூற்றை நாங்கள் இழந்து விடுவோமோ என்ற பதட்டம் உண்டாகிவிட்டது. இவைகளை இழப்பதால் நாங்கள் மிருகமாக மாறமாட்டோம். அடையாளமற்ற எதிர்ப்புக் குணமற்ற ஏதோ ஒன்றாகப் போய்விடுவோம்.

மனித சமூகத்தின் வளர்ச்சியை மீளவாசிக்கும் போது உயிரியல் ரீதியானதும், மனித சந்ததி பற்றிய வேறுபட்ட தடயங்களை பெருவாரியாகப் பார்க்கக் கூடியதாகவும் இருக்கிறது. இந்தப் புதிய மீள்வாச னைக்கு எதிர்ப்புகள் வரத்தான் போகின்றன. பழமை வாதத்தைத் தூக்கிப் பிடிக்கும் மனித வரலாற்றை நான் வேறெதுவும்இல்லை என்பதற்காக ஏற்றுக் கொண் டேனா, இல்லை அதில் நவீன மனிதனின் தொழில் நுட்பப் பசிக்கான எந்த அடையாளங் களையோ சான்றுகளையோ காண முடிய வில்லை என்பதால்தான் என்னுள் பல கேள்விகள் எழுந்துள்ளன. இந்தத் தொழில் நுட்பப் பேராவலில் தனது உடல் பாதுகாப்பு, சிந்தனைச் சமநிலை அவனது பிந்தைய சந்ததிகளுக்கு எதை விட்டுச் செல்லப் போகின்றான் என எல்லாவற்றையும் அல்லவா பணயம் வைக்கின்றான். எனவேதான் தொழில் நுட்ப மாற்றங்கள் பற்றிய எல்லாவற்றையும் மீள ஆராயப் புகுந்தேன்.

மனிதனின் இயற்கையான கண்டுபிடிக்கும் குணாம்சத்தை ஆராய்வதோடு அவன் கருவிகள் செய்ததை விட்டுத் தனது உடல் அவயவங்களை எவ்வாறு மறுசீரமைத்துக் கொண்டான் எனவும் பார்க்க விரும்புகிறேன். அத்துடன் மனித வரலாற்றில் பின்னிப் பிணைந்தோடும் தவறான தகவல்களையும் கண்டறிய விரும்புகின்றேன். மனிதனின் அடிப்படைக்குணமான மென்மை, காரண காரியங்களுடன் செயல்படுவது அவனது மிருகவழி வந்தது. மற்றைய அந்திரோப் போயிட்டுக்களுடன் ஒப்பிடுகையில் மனிதன் காரணகாரியமின்றி தொழில்படுவதில் முதன்மை வகிக்கின்றான். உண்மையில் மனித சமூக வளர்ச்சி திரும்பத் திரும்ப பிழை செய்தல், பிழையாகச் செய்தல், வேண்டுமென்றே பிழையாகச் செய்தல், பிழையான கற்பனை, காட்சிப் பிழை 'முதல் பாவம்' சமூகக்கட்டுமானமென்ற பிழையான நடத்தை. உதாரணமாக, நரபலி கொடுத்தல்- தண்டனையாக துண்புறுத்துதலை சட்டம் நியாயமென நிலைப்படுத்தல் எனத்தான் தொடர்ந்துள்ளது.

மனிதன் தன்னை மிருகநிலையிருந்து விடுவித்துக் கொண்டபோது பல பிழைகள் நடந்துள்ளன. ஆனால் விடுபட்டதன் பலன் மிகப் பெரியது. தனது கற்பனைக் கலவைக்கு வடிவம் கொடுத்தல், வடிவமைப்பு, அவனது சித்தாந்தங்கள், அவனது நாளாந்த அனுபவங்கள் எல்லாமே அவனது படைப்புத் தன்மைக்கு அடி கோலியதை நாம் இன்று பார்க்கின்றோம். பகுத்தறி விற்கும் - முழுமையான பகுத்தறிவிற்குமிடையில் தெளிவான எந்தப் பிரிவுமில்லை அதனைக் கையாள்வதில் மனிதன் என்றுமே பிணக்குப்பட்டுக் கொள்கிறான். இன்று நுகர்வினை மையப்படுத்திய தொழில்நுட்பம், விஞ்ஞானமெல்லாம் ஆழமற்றவை என்றும் மனித வாழ்க்கையில் மாற்றத்திற்கும் அழிவிற்கும் அவை சமனான சந்தர்ப்பங்களைக் கொண்டுள்ளதெனப் பார்க்கத் தவறியதுதான். இன்றைய காலகட்டம்போல் என்றும் இது ஆபத்தான நிலையில் இருந்ததில்லை.

பகுத்தறிவுக்கொவ்வாத காரணிகள் சில வேளை களில் முற்றாக பாவனைப்படுத்தப்படுகின்றன. இவை குறுகியகாலத்தில் முன்னேற்றம்போல் தோன்றினாலும் நீண்டகால ஓட்டத்தில் மனித முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாகவே மாறுகின்றன. இதனை கிறிஸ்துவிற்கு முன் நாலாவது மிலேனியத்தில்



பலியோலித்திக், நியோலித்திக் கலாச்சாரங்களின் தோற்றுவாய்க் காரணிகளின் செயற்பாட்டில் காணக் கிடைக்கின்றது. 'நாகரீகத்தின் வளர்ச்சி' என வழமை யாகக் கூறுவது இயந்திரங்களின் புதிய கண்டு பிடிப்பல்ல, அவைகள் தீவிரமான புதிய சமூக அமைப் புக்கள். இந்த அமைப்புக்கள் தொன்மைக் கதைகள். சமயம், முழுமை எய்தாத வான்கோள் விஞ்ஞான அடிப்படைகளின் உற்பத்திகளே. மூர்க்கத்தனமான அரசியல் சக்தியின் உருவாக்கத்திற்கும் அதற்கு உதவிய தொழில்நுட்ப வசதிகளும் சாதாரணமான இயந்திரங்களின் கண்டுபிடிப்பும் கருவிகளும் நிச்சய

மாக காரணங்களாக இருந்திருக்க முடியாது, எகிப்திலும், மொசப்பத்தேமியாவிலும் இந்தியாவிலும் ஏற்பட்ட பிரமாண்டமான மாற்றங்களுக்கு சக்கரங்களோ, குயவரின் வனையும் சக்கரமோ, இராணுவக் குதிரை வண்டிகளோ காரணங்களல்ல. இம் மாற்றங்கள் அங்கெல்லாம் உருவாகி அலையலையாய் உலகம் முழுவதும் பரவவில்லையா?

'சரித்திரத்தின் நகரம்' எனும் புத்தகத்தை எழுதுவதற்கான வாசனையில் பிரமிட்டுக்கள் காலப் பகுதியில் ஐரோப்பிய அதிகாரச் சமூகத்தையொத்த இன்னுமொரு சமூகம் கிழக்கிலும் இருந்தது தெரிய வந்தது. ஆனால் இன்றைய காலகட்டத்தினரோ மனித அறிவின் அதிஉயர் கண்டுபிடிப்பு புதிய தொழில்





தற்போதைய கலாச்சார நிலை - கலை - அரசியல் - தொழில்நுட்பம் என்பனவற்றைப் பார்க்கும்போது எங்களுக்குப் பயமேற்படுகிறது. இந்த மனித அடிப்படைத் தனிக்கூற்றை நாங்கள் இழந்து விடுவோமோ என்ற பதட்டம் உண்டாகிவிட்டது. இவைகளை இழப்பதால் நாங்கள் மிருகமாக மாறமாட்டோம். ஆனால் அடையாளமற்ற எதிர்ப்புக் குணமற்ற ஏதோ ஒன்றாகப் போய்விடுவோம்.



நுட்பமென்றும் அது இதுவரையில் எங்குமே காணப்படாத முற்றிலும் புதிதானதொன்று எனவும் கருதுகின்றனர். பொருளாதாரவாதிகள் இயந்திர யுகம் அல்லது சக்தியின் யுகமென வர்ணிக்கும் யுகம் 'தொழில்புரட்சி'யுகமெனப் புகழாரம் சூட்டிய காலமான 18ம் நூற்றாண்டில் ஆரம்பித்ததல்ல. அதற்கு வெகு காலம் முன்னதாகவே மனிதனின் அவயவங்களை மாதிரியாகக் கொண்டு இயந்திரங்களை வடிவமைக்கத் தொடங்கிய காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது.

இன்று சமூகம் இயங்கும் தன்மையை இரண்டு விடயங்களில் அடக்கிவிடலாம். அவை சரித்திர காலத்திலிருந்து இன்றுவரை இடையறாது தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. இயந்திரங்களை வைத்து ஆதிக்கம் செலுத்துபவன் தனது மாதிரியை விண்வெளியில் இயங்கும் கோள்களிலிருந்து கற்றுக் கொள்கிறான். விண்வெளியிலிருக்கும் ஒழுங்கு முறையே இன்றைய புதிய மனிதசமூகத்தின் ஒழுங்கு முறை. கோள்களின் ஒன்றுக்கும் மற்றையதற்குமான இடைவெளி ஒருசீரான உணர்ச்சிகள், பிரதிபலிப்போ உயிர்த்துடிப்போ அற்ற இயக்கம், இவையெல்லாம் மனித சமூகத்தை 'மெகா இயந்திரம்' போல் இயங்க வைத்துக் கொண்டிருக்கின்றது. வான்சாஸ்திரத்திலும் விஞ்ஞான கணிதக் கணக்கீடும் இந்த ஒழுங்கினை உருவாக்கியிருக்கின்றது. எந்தவித நெகிழ்வுத்தன்மையுமற்ற முன்கூட்டியே கணக்கிடக்கூடிய தன்மையை முதலில் கலண்டரிலும்(நாள்காட்டி) பின்பு அதனை மனித சமூகத்தின் மேலும் புகுத்தப்பட்டது. முன்னைய சடங்குமுறை சமூகத்தில் மனித நிர்ணயமிருந்தது. இப்போது அவனுக்குப் புறம்பானதொன்று ஏற்கனவே திட்டமிட்டு அட்டவணையைக் கொடுத்துவிடுகிறது. கோள்களிலிருந்து அதிகாரத்தைக் கற்றுக் கொண்டவன் காட்டுமிராண்டித்தனமான இராணுவத்தின் உதவியுடன் மக்களின் பெரும்பாலான பங்கினரை அதீத வறுமையிலும் கட்டாய வேலையிலும் புத்தியை மழுங்கடிக்கச் செய்யும் ஒரே விதமான வேலையைத் திரும்பத் திரும்பச் செய்ய நிர்ப்பந்தித்தான். இவற்றை 'வாழ்க்கைச் செல்வச் செழிப்பு, உடல் நலம் பேணல்' என்ற போர்வையில் தனக்கும் தனது இரண்டாம் நிலையினருக்கும் தனது பரிவாரங்களுக்கும் சாதகமாகப் பாவித்துக் கொண்டான்.

இரண்டாவது, 'மெகா மனித இயந்திரம்' தனது கண்டுபிடிப்புக்களால், உற்பத்தி, நீர்க்கட்டுப்பாடு என்ற அன்றைய மனிதனின் அதிஉயர் கண்டுபிடிப்புக்களே அவனது சமூக அமைப்பை நிலை குலையச் செய்தது. இதே கண்டுபிடிப்புக்கள் அதன் மற்றைய பகுதிகளான என்றென்றும் மனதில் அழியாதிருப்பதற்காகக் கலையை நினைவுச் சின்னத்திற்குப் பாவித்தல், அடைமொழியில் எழுதப்பட்டசட்டங்கள், திட்டமிட்டு ஒரு சிந்தனையைப் பரப்பி அதனை மனங்களில் நிரந்தரமாகப் பதிய வைத்தல் என எல்லாச் சமூகத்தினரின் திறமைகளையும் ஒன்று சேர்ப்பதென்ற முயற்சியில் செய்யப்பட்ட நடவடிக்கைகள் பல்வேறுபட்ட பின்னணிகள், பிராந்தியங்கள், தொழில் பிரிவினைகளையுடைய சமூகத் தினரை ஒன்று குவித்த முதல் நாகரீகம் மெசப்புத் தேமியாவிலும் எகிப்திலும் தோன்றி பின்பு இந்தியா சீனா

பேரிசியா மாயாக் கலாச்சாரங்களும் அதனை விருத்தி செய்து கொண்டன. மனித மெகா இயந்திரம் மீள் சீரமைப்புச் செய்யும்வரை இந்நாகரீகம் தொடர்ந்து வந்திருந்தும் அச்சமூகங்களுக்கிடையே எழுந்த எதிர்ப்புக்கள் அவற்றினை நிலைகுலையச்செய்தன.

ஒழுங்கு, அதிகாரம், சமூகத்தின் நடவடிக்கையை முன்கூட்டியே சொல்லக் கூடிய கணிக்கும்தன்மை இவை எல்லாவற்றிற்கும் மேலாக கட்டி ஆளல் இவை எல்லாமே ஐந்தாயிரம் வருடங்களுக்கு முன்பே எண்ணக் கருவாகத் தோன்றிவிட்டன. ஏற்கனவே ஐந்தாயிரம் வருடங்களின் முன் மனித நடவடிக்கைகள் தேவைகளில் நின்று அவனைப் பிரிக்கத் தொடங்கி விட்டது. விஞ்ஞான தனித்துவம் வாய்ந்த சித்தாந்தம் தன்னியல்பாகவும் தன்னிறைவுடனும் இயங்கிய சமூகத்தை 'மனிதவளக் கட்டுப்பாடு' பொதுக் கலாச் சாரமென மேலும் இழிவுபடுத்தத் தொடங்கியது. மனித மெகா இயந்திரத்தின் பிரமாண்டமான படைப்புத்தான் எகிப்தின் பிரமிட்டுகளும் அதனுள் புகுத்தப்பட்ட பதப் படுத்தப்பட்ட உடல்களும். பின்பு அசிரியாவில் தொடர்ந்த இக்கலாச்சாரம் இன்றுவரை தன் எல்லை களை விரிவுபடுத்தும் ஒவ்வொரு சாம்ராச்சியமும் செய்து வருகிறது. அழிவுற்ற கிராமங்கள், நகரங்கள் நஞ்சாக்கப்பட்ட நிலங்களையும் தனது தொழில் நுட்பத்திற்குச் சான்றாக வைக்கின்றன. எகிப்தின் பிரமிட்டுக்களும் இன்றைய றொக்கற்றுகளும் என்ன? இரண்டுமே ஒருசிலருக்கு மோட்சத்திற்குப் போவதற் கான வழியைத் தமக்காக்கிக் கொள்வதற்கான முயற்சியே.

இந்த பிரமாண்ட அதிகார மைய அமைப்புக் கொண்ட மனித இயல்புகளே அற்ற அரசியல் கலாச் சாரம் என்ன செய்தது சரித்திரத்தின் பக்கங்களை வார்சோ, றொட்டடாம், டோக்கியோ, ஹிரோஷிமா என கறைபடுத்திக்கொண்டே வந்துள்ளது. இந்தக் கட்டுப்பாடும் உற்பத்தியும் ஒரு நாளில் அராஜகமும் அழிவுமாக மாறுமாயின் அது தற்செயல்தானா என நம்மை நாமே வினவிக்கொள்ளும் துணிவு நமக்கி ருக்கின்றதா என இந்தப் பகுப்பாய்வு நம்மைக் கேட்கின்றது.

தகவல்:
Technics and Human development
The Myth of the Machine - 1966-67
Lewis Mumford
ISBN-0—15-662341-2

பெரு வெளி (காலாண்டிதழ்)

இதழ் - 02

நவம்பர் 2006

செயற்பாட்டாளர்கள்:

எம்.ஐ. எம். றஊப்
மஜீத்
முழுமதி எம். முர்தளா
அப்துல் றஸாக்
றியாஸ் குரானா
மிஹாத்
ஐ. எல். காலித்
றபியூஸ்
எஸ்.எம்.றிஜால்டீன்

தொடர்புகளுக்கு:


107 மாவடி ஜங்சன்
அக்கரைப்பற்று-06
ஸ்ரீலங்கா.

மின்னஞ்சல்: peruvelli@hotmail.com
தொலைபேசி: 0091714333188

சந்தா விபரம்:

தனி இதழ் 60 இலங்கை ரூபா
வருடசந்தா: 200.இலங்கை ரூபா

வெளிநாடு வருடசந்தா 10$



சந்தா செலுத்துவதற்கான வங்கி விபரங்கள்:

Ismalebbe Kalith
HNB
Akkaraipatru
A/C N°: 7402019



ஏன் 1?

மண் திரைப்பட இயக்குநர் புதியவன், இப்படத்தை ரொறன்ரோ திரையரங்கில் கடந்த வருட பிற் பகுதியில் திரையிடத் திட்டமிட்டிருந்தார். பின்பு அவரது குடும்பத்தில் இடம்பெற்ற துயரச் சம்பவம் ஒன்றினால், இதனை இவ்வருட முற்பகுதிக்கு ஒத்திவைத்திருந்தார். ஆனால் ரொறன்ரோ தமிழ் கள்ளச்சந்தையின் ஊடாக இப்படம் ரொறன்ரோ தமிழ்க் கடைகளில் கிடைக்கின்றது. இக்கள்ளச் சந்தையில் 'ஆணி வேர்' படத்தையோ அல்லது In the name of Buddha வையோ பெறமுடியாது.

ஏன் 2?

புதியவன் இப்படத்தை தன்னுடைய சொந்த ஊரான கனகராயன் குளத்தில் காட்சிப்படுத்த விரும்பினார். ஆனால் விடுதலைப்புலிகள் அனுமதி கொடுக்க மறுத்ததனால் புத்தளம் பகுதிகளில் படமாக்க வேண்டி ஏற்பட்டது.

'ஆணி வேர்' படத்திற்கு ஏன் இந்த விதிவிலக்கு?

ஏன் 3?

மலையக மக்கள் பற்றிய பதிவு ஒன்றை, கனகராயன் குளத்தில் பதிவு செய்ய மறுத்ததன் மூலம் தமிழ்த் தேசிய எல்லைகள் தெளிவு படுத்தப்பட்டிருக்கின்றன.

புதியவன் ஏற்கனவே 'மாற்று', 'கனவுகள் நிஜமானால்' ஆகிய இரு குறும்படங்களை நெறியாள்கை செய்துள்ளார். மாற்று படத்தில் லண்டனில் வாழும் மனநோயாளி மணமகனிற்கு, இலங்கையில் இருந்து ஒரு பெண் திருமணத்திற்காகக் கொண்டு வரப் படுகிறாள். அப்பெண்ணிற்கு மணமகனின் நிலைபற்றி எதுவும் தெரியாது. ஆனால் அவள் மணமகனுடன் வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறாள்.

'கனவுகள் நிஜமானால்' படமானது புலம்பெயர் பெற்றோர்கள் மீதான ஒருவகை விமர்சனமாக அமைகின்றது.

மண்

பிழைப்பிற்காக கனகராயன் குளம் வரும் மலையகக் குடும்பம் ஒன்று பல இன்னல்களையும், அவமானங்களையும் சந்திக்கின்றது. அவர்களின் மகள் லக்ஷ்மிக்கும் உயர்சாதியைச் சேர்ந்தவன் எனப் படுகின்ற பொன்ராசுவிற்கும் காதல் ஏற்படுகின்றது. இறுதியில் தன்னுடைய பெற்றோரின் விருப்பிற்கு ஏற்ப பொன்ராசு இங்கிலாந்து சென்று விடுகின்றான். சுமார் 18 வருடங்கள் கழித்து போரை விபரணமாகப் பதிவு செய்யும் நோக்குடன் கனகராயன் குளம் வருகின்றான் பொன்ராசு. அவன் வரும்போது லக்ஷ்மி இறந்து விட்டாள். தனது தாய்க்குச் செய்த கொடுமைக்காக அவர்களுடைய மகன் அவனைச் சுட்டுக் கொன்று விடுகின்றான்.

இத்திரைப்படம் புலம்பெயர், இலங்கைத் தமிழ்த் திரைப்பட மொழியைக் கொண்டிருக்கத் தவறிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். இந்திய வர்த்தக சினிமாவுடன் சமரசம் செய்தமை வருந்தத்தக்கது. வகுப்பறைக் காட்சிகள் இந்திய அரைகுறைத் தமிழ் சினிமாவையே நினைவுபடுத்துகின்றன.

திரைக்கதையின் நேர்த்தியின்மை பல கேள்வி களை எழுப்புகின்றது. உதாரணத்திற்கு, 18 வருடம் கழித்து தனது மண்ணிற்கு வருபருக்கு அங்கு இதுவரை காலம் என்ன நடந்துள்ளதென அறியாமல் வருவது ஆச்சரியம். அதுவும் விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிக்கு விபரணம் ஒன்றை பதிவ தற்காக எந்தவித விசாரணையும் இன்றி வருவது ஆச்சரியமே.

தனது சொந்த உறவைத் தவிர்த்து பொன்ராசுவுடன் லக்ஷ்மிக்கு ஏற்படும் காதல் யதார்த்தமானதே. ஆனால் இவர்கள் இருவரும் உடலுறவு கொண்ட பின்னர், லக்ஷ்மிக்கு தனது குடும்பம் எதிர் நோக்கும் பிரச்சி னைகள், துயரங்கள் தெரிந்தும் இதனைச் சாதார ணமாக எடுத்துக்கொள்வது ஆச்சரியமாகவுள்ளது.

பொன்ராசு தப்பிச் செல்வது, பொதுவாக உயர்சாதி எனப்படுபவரிடையே நடைபெறுவது. ஆரம்பத்தில் உணர்வுடனும், உரிமையுடனும் பழகும் இவர்கள், பின்னால் நழுவுவதில் கெட்டிக்காரர்கள். இந்தத் தப்பித்தல் குணாம்சம் சிறப்பாக பதியப்பட்டுள்ளது.

உயர்சாதி எனப்படுபவர்கள் மற்றும் மலையக மக்களது சமூகப் பின்தளம் யதார்த்தமாக படைக்கப் பட்டுள்ளது. சமூக யதார்த்தத்தை வர்க்கரீதியாக விமர்சிக்க முற்படுகின்றார் புதியவன்.

இப்படத்தில் தமிழகக் கலைஞர்களுடன், எமது கலைஞர்களும் பங்குபற்றியுள்ளனர். கதாநாயகன், கதாநாயகி இருவரும் இலங்கையர்களே. இசை ஜேர்மனி விஜய். துணை இயக்கம் உட்பட, பல சிங்கள தொழில்நுட்பவியலாளர்களும் இதில் கடமையாற்றி யுள்ளார்கள். ஒளிப்பதிவு, எடிட்டிங் என்பவற்றை முறையே சி. ஜே. ராஜ்குமார், சுரேஸ் அர்ஸ் ஆகியோர் செய்துள்ளனர். இப்படத்தின் சிறப்பம்சம் ஒளிப்பதிவே. தெளிவான, காலமாறுதலுக்கு நிற வேறுபாடு என சிறப்பாக பதியப்பட்டுள்ளது. - (பிரசன்ன விதானகே போரின் உக்கிரத்தை காட்ட கடும் மஞ்சள் நிற ஒளி-மத்தியான வெயிலை தனது படங்களில் காட்டியுள்ளார்)- டப்பிங் திருப்தியானதாக இல்லை.

இனி, படத்தின் மிக முக்கிய கருவிற்கு வருவோம். இப்படம் மலையக மக்களை. உயர்சாதி எனப்படு கின்றவர்கள் ஆண்டாண்டு காலமாக ஒடுக்கும் வன்முறைகள், அட்டூழியங்களை மையப்படுத்தியுள்ளது. போர்ச்சூழலில் குண்டுகளை தவிர்த்து, மேற்தட்டு வர்க்கமானது சாதியைக் குண்டாக பாவித்த, மலையக மக்களின் பதிவை முன்னிலைப்படுத்தியுள்ளார். படத்தின் இறுதியில் ஏமாற்றியவனை சுட்டுக் கொன்ற பின்னர், திரையில் எழுந்துள்ள வாசகங்கள் " கும்பிட மட்டுமே கைகள் தூக்கிய கூட்டத்தின் நடுவே, துப்பாக்கி தூக்கிய இவன் கரங்கள்".

துப்பாக்கிகள் மலிந்துள்ள கலாச்சாரத்தில், ஒரு சமூக ஒடுக்கு முறைக்குத் தீர்வு துப்பாக்கி தானா எனக் கேள்வி எழுவது நியாயம். இது ஒரு புற நிலைத் தீர்வே. இந்த ஒரு வேட்டுடன் இந்தப் பிரச்சினைக்கு 'தீர்வு கிடையாது.

எத்தனை ஆயிரம் சூடுகள், கொலைகள். இழப் புக்கள், அதனால் தமிழீழம் கிடைத்து விட்டதா? இந்தச் சூடு சமூகத்தின் மீது வைக்கப்பட்டுள்ள விமர்சனம் எனவும் கருதமுடியாது. அப்படிக் கருதின் அது சமூகப் புரட்சியின் மீது நம்பிக்கையற்ற தன்மை யையே காட்டும். தனிமனிதக் கொலைகள் ஒரு பொழு தும் சமூக-அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது.

உயர்சாதி ஒழுக்க நெறிகள் குற்றம் புரிதலையும், அதற்கான காரணங்களையும் சமூக ஒழுக்கமாக, நெறிகளாக கொள்பவை. சமூக இயந்திரங்களை (மதம், கலாச்சாரம், அரசியல் போன்றவை) இந்த ஒழுக்க நெறிகள் மூலமாகவே இயக்குகின்றன. எமக்கு சாதகமானவற்றை அல்லது சார்ந்திருப்பவற்றை ஏற்றுக் கொள்கின்றோம். ஏனையவற்றை நிராகரிக் கின்றோம். எமது புதிய சந்ததியும் இந்த ஒழுக்க நெறிகளையே தொடர்கின்றன.

சிங்களவரின் அடிமைத்தனத்துக்கு எதிராகக் குரல் உயர்த்திய அரசியல்வாதிகள், தங்களது சமூகம் அடிமைகளாக, எந்தவித அடிப்படை வசதியும் (பழஞ் சோறு, கல்வி மறுப்பு, நீண்ட நேர உழைப்பு, பாலியல் கொடுமை) அற்று தாங்கள் ஒடுக்கிய மக்களை கவனிக்கத் தவறி விட்டார்கள். (அவர்களது குடியு ரிமைக்கு எதிராக வாக்களித்தவர்களாயிற்றே)

"கும்பிட மட்டுமே தூக்கிய கைகள்" இது புதியவனின் இறுதி வரிகள். புதியவன் மலையக சமூகச் சார்பாக இப்படத்தை படைக்க முடியாது. புதியவன் ஓர் பார்வையாளனாக அல்லது அச்சமூகத்துடன் நெருக்கமானவன் என்ற ரீதியிலேயே படைக்கலாம்.

புதியவன் இந்தச் சமூகம் மீது கொண்டுள்ள அக்கறையும் தன் சமூகம் மீது கொண்டுள்ள கோபமும் பாராட்டத்தக்கது. ஆனால், தனது முடிவை அங்கு திணிப்பது தீர்வாகாது. குறிப்பாக, அச் சமூகத்தைச் சேர்ந்த மகனே கொலை செய்வது, அரசியல் பேச்சில் 'ராஜ தந்திர' தீர்வாகும். ஆனால், இந்த மலையக மக்கள் மீதான வன்முறைக்கு இன்றுவரை நாம் வருந்தியது கிடையாது. இன்றுவரை அரசியல் தீர்வை முன் வைக்கவில்லை.(எழுத்தில் கூட)

அந்த மனோபாவம் இருப்பின் முஸ்லீம் மக்களை வெளியேற்றியிருப்போமா?

புதியவனின் தீர்வு கொலை எனின், புதியவன்கூட வன்முறை, கொலை தீர்வை ஏற்றுக்கொள்கின்றாரா?

'ஆணி வேர்' வெளிவந்த காலகட்டத்தில் வெளி வந்துள்ள இப்படம் இருபத்திஐந்து வருடங் களின் பின்னர் திரைப்பட ஒளிப்பதிவுக் கமாராவால் எடுக்கப்பட்டுள்ள படம் என்ற நிறைவைத் தருகின்றது.

1/7/2007 11:27:18 PM

http://www.nowrunning.com/film/slideshow1.asp?movieNo=3572
http://www.kollywoodtoday.com/gallery/search.php?search_keywords=puthiyavan&sessionid=ffd96f65f546a04264089a3ab5ce0b82
http://movieearth-ha.blogspot.com/2006/11/r_11641634412978817 4.html
http://www.123srilanka.com/news/directory.php?id=871

நினைவில் நிறுத்தப்படுபவர்களாக...

தோழர் மகா உத்தமன்


29.10.2006

வைத்தி

ஈழத் தமிழர் விடுதலைச் சிந்தனை வானில் ஒளிர்ந்து கொண்டிருந்த, 'உத்தா' எனத் தோழர்களால் அழைக்கப்பட்ட ஒரு நட்சத்திரம் இன்று மறைந்து விட்டது.
தனது சிந்தனை முழுவதும் விடுதலை வேட்கையை வளர்த்துக் கொண்டவர்.
விடுதலைக்காகப் போராட வேண்டியதன் அவசியத்தை
எப்போதும் வலியுறுத்திக் கொண்டவர். தன் வாழ்வையும் அதற்காகவே
அர்ப்பணித்தவர்
தோழர் மகா உத்தமன்!
ஈழத் தமிழ்ச் சமூகத்தில் சுதந்திர விடுதலையைச் சாதிக்க வேண்டும் என்பதற்காய்
தனது வாழ்நாள் முழுவதும் அதற்கான சாத்தியப்பாடுகளைத் தேடிய
ஒரு போராளியாக இருந்தார்
தோழர் மகா உத்தமன்!

ஈழத் தமிழர் போராட்ட வரலாற்றில், முதல் விடி வெள்ளியாய் உரும்பிராய் மண்ணில் தோன்றிய சிவகுமாரனின் பால்ய தோழன் மகா உத்தமன், தன் வாழ்நாளின் பெரும் பகுதியை லண்டனில் கழித்திருந்தாலும் ஈழ விடுதலை இயக்கங்களின்,தேர்ப் பாகன்களில் ஒருவராய் முன்னின்று உழைத்தார். விடுதலை இயக்கங்களுக்குள் அராஜகம் கோலோச்சத் தொடங்கியபோது மிகவும் வேதனை கொண்டார். விடுதலைப் பயணத்தில் மாற்று சக்திகளின் தலையீட்டை வலியுறுத்தி தொண்ணூறுகளில் 'தமிழீழக் கட்சி' தோன்றுவதற்கும் முன்னின்று உழைத்தார். லண்டனை மையப்படுத்தி வெளிவந்த 'உயிர்ப்பு' கோட்பாட்டுப் பத்திரிகையில் இவரது பங்களிப்பு காத்திரமாகவே இருந்தது.

உலகின் இயங்கு நிலையிலுள்ள பல்வேறு அரசியல்களின் முரண்களின் முடிச்சுக்களை அவிழ்க்கும் தந்திரோபாயங்களை மார்க்சிய மூலவர்களில் இருந்து தொடங்கி நவீன சிந்தனையாளர்களிடமும் தேடிக் கற்றுக் கொள்ளத் தயங்காத புரட்சிகர மாணவனாகவும் இருந்தார்.



மகா உத்தமனை ஒரு சிறிய விடுதலைச் சிந்தனை வட்டத்துக்குள் சுட்டிவிட முடியாது. அவரோடு உரையாடி வாழ்ந்து களித்த தோழர்கள் அறிவர் அவரின் விடுதலைச் சிந்தனையின் பிரகாசம்!

வாழ்தல் மகத்தானது!
சராசரி
மனித ஆசாபாசங்களுடன்
அலைக் கழிந்து அல்லலுற்று
சாவதை ஒதுக்கி
தனது சமூகத்துக்காய் தேசத்துக்காய்
தேசத்தை உறுதி செய்யும்
பிராந்திய ஒருமைப்பாட்டுக்காய்
இந்தப் பிராந்தியங்களின் ஒருமைப்பாட்டை
சிதைத்து பிய்த்துத் தின்னத் துடிக்கும்
மேலாதிக்க வல்லரசுகளுக்கு
எதிராகப் போராடும்
புரட்சியாளனாக
வாழ்தல் மகத்தானது!

நினைவில் நிறுத்தப்படுபவர்களாக...


தோழர் இரத்தினசபாபதி

பி. ஏ. காதர்

எனது பார்வையில் தோழர் இரத்தினசபாபதி

ஈழத்தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தின் திசைமார்க்கம் தொடர்பான தத்துவார்த்த பிரச்சினையில் ஆழமாகத் தனது தடத்தைப் பதித்த ஒரு மகத்தான புத்திஜீவின் மறைவை நன்றியுடன் நினைவு கூரும் இந்நிகழ்வில் எனது கருத்தையும் உணர்வையும் பகிர்ந்து கொள்கிறேன்.

தோழர் இரத்தினசபாபதி அவர்களை நான் முதன்முதலாக 1983ம் ஆண்டு அப்போது சென்னையில் இயங்கிய தமிழ்த் தகவல் நிலையத்தில் சந்தித்தேன். அதன்பின் அண்ணாநகரிலும் வள்ளுவர் கோட்டத்திலும் நாம் இருவருதம் பல தடவைகள் சந்தித்து உரையாடிய ஒவ்வொரு நிமிடமும் இன்னும் எனக்கு நினைவிருக்கிறது. அக்காலகட்டத்தில் ஏனைய எந்தத் தமிழ் தலைவரிடமும் காணப்படாத இரண்டு அம்சங்களை நான் அவரிடம் கண்டேன்.



முதலாவதாக : யாழ்குடாநாட்டின் குறுகிய எல்லைக்குள் முடக்கப்பட்டிருந்த தமிழ் மக்களின் விடுதலைச் சித்தாந்த வேலியை உடைத்து வன்னி - கிழக்கு மாகாணம் - மலையகம் - முஸ்லிம்கள் ஆகிய அனைத்துத் தமிழ்பேசும் மக்களையும் உள்ளடக்கியதாக அப்போராட்டம் அமையவேண்டும் என்ற கருத்தை விதைத்த முன்னோடித் தலைவர் என்ற பெருமை தோழர் இரத்தினசபாபதியையே சாரும். அதைவிடவும் அவர் வகித்த உன்னதமான பாத்திரம் ஒன்றுள்ளது. அதுதான் விடுதலைப்போராட்டத்தில் மலையகமக்கள் தொடர்பாக அவர் கொண்டிருந்த கண்ணோட்டம். அதுவரை மலையகத் தொழிலாளர்கள் மலிவான அந்நியக் கூலிகளாக மாத்திரமே பார்க்கப்பட்ட வேளையில் அவர்களைப் போராட்ட உணர்வுள்ள பாட்டாளிவர்க்கமாக சரியாக இனம் கண்டு விடுதலைப் பொராட்டத்தின் ஜீவநாடியாக அவர்கள் முன்னணிப் பாத்திரம் வகிக்கக்கூடிய விதத்திலே அரசியல் அமைப்புப் பணிகளை விஸ்தரிக்க முயன்ற முதலாவது தலைவர் அவர்தான். இவரது இந்த இடதுசாரிப்பார்வை மிகவும் முற்போக்கானது. இவரது இந்த முற்போக்கான சிந்தனைதான் ஸ்ரீஇருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம் என்ற பெயரில் மலையக மக்களின் வரலாறு முதல் தடவையாக வெளிவரக் காரணமாக இருந்தது

இரண்டாவதாக:

1983 வன்செயலின் பின்னர் எமது விடுதலைப் போராட்டம் தனது இயல்பான வளர்ச்சிக்கு அப்பால் வீக்கம் கண்டபோது பல்வேறு குழுக்கள் உதயமாகின. அவற்றிடையே பகைமை உணர்வே மேலோங்கி இருந்தத. அச்சமயத்தில் ஒவ்வொரு

அமைப்பின் காரியாலயத்திற்கும் மெய்க்காப்பாளர் துணையின்றி நிராயுதபாணியாகப் போய் கதவைத்தட்டி சகல தலைவருடனும் எந்த நேரத்திலும் கதைக்கக்கூடிய ஒரே ஒருவர் தோழர் இரத்தினசபாபதியாகத்தான் இருந்தார். அவர் சகலராலும் மதிக்கப்பட்டு வரவேற்கப்பட்ட ஒரே ஒரு மாமனிதனாகத் தகழ்ந்தார். அவர் சகல அமைப்புகளையும் இணைத்து பொதுவான ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்க முயன்றார். பல்வேறு காரணங்களால் அவரது அந்த முயற்சி வெற்றிழ பெறவில்லை. அம்முயற்சி மட்டும் வெற்றி பெற்றிருந்தால் எமது போராட்டத்தின் பல பின்னடைவுகளும் அழிவுகளும் தவிர்க்கப்பட்டிருக்கக்கூடும்.

இறுதியாக: தோழர் இரத்தினசபாபதி அவர்கள் தனது முற்போக்குக் கருத்துக்க செயல்வடிவம் கொடுக்க முயன்றார். ஆயினும் அதனை நடைமுறைப்படுத்தக் கூடிய வலுவான அமைப்பைக் கட்டியெழுப்ப அவரால் இயலாமற் போனமை எமது போராட்டத்தின் துரதிரஷ்டம். தலைமைப் பண்புகளுக்கு ஒவ்வாத சில பழக்க வழக்கங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் தறியமை அவரது உடல் ஆரோக்கியத்தையும் ஆளுமையையும் பாதித்தது. அது எமது போராட்டத்திற்கு நேர்ந்த பெரும் துரதிர்ஷ்டமாகும். எனினும் அவர் எமது போராட்ட சித்தாந்தத்தின்மீது பாய்ச்சிய முற்போக்குப் பார்வை அவரை நிரந்தரமாக நினைவு கூரும்.

நன்றி


பி. ஏ. காதர் (இலண்டன்)

இவர் இருபதாம் நூற்றாண்டின் நவின அடிமைத்தனம் - ஆசிரியர்

மலையக மக்கள் முன்னணி முன்னாள் செயலாளர்

ஆயிரத்தோராவது வேதனையின் காலை

பைசால் கவிதைகள்



முதற் பதிப்பு : செப். 2006

ஏ. ஏ. பைசால்
பழைய தபாலக வீதி
பொத்துவில் 15
இலங்கை

வெளியீடு : மூன்றாவது மனிதன் வெளியீட்டகம்
617 அவிசாவெல ரோட்
வெல்லம்பிட்டிய
இலங்கை

என்கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை!

பெண்ணியா கவிதைகள்



முதற் பதிப்பு : ஒக். 2006

நஜிபா றூபி
11, அப்துல் ஜவாட் அலிம் மாவத்த
காத்தான்குடி 06
இலங்கை

வெளியீடு : ஊடறு (udaru@bluewin.ch)

நினைவில் நிறுத்தப்படுபவர்களாக...

ஏ. ஜே. கனகரட்னா

11.10.2006

சி. ஜெயசங்கர்

ஏ.ஜே. என்றொரு மனிதர்

ஏ.ஜே.கனகரட்னா என்ற பேரறிஞர் இன்று இல்லை, தமிழர்தம் சமூகங்களில் சில பகுதிகளில் அவரது இழப்பு நினைவு கூர்தலுக்கும், உரையாடலுக்கும் உரியதாகி இருக்கிறது.

ஏ.ஜே. அவர்கள் நினைவு கூர்தலுக்கும், உரையாடலுக்கும் உரியவராகியிருப்பது அவரது புலமைத்துவ பகிர்வு முறைமையாலேயாகும். அறிவைப் பகிர்தலில் ஏ.ஜே. தயக்கங்கள் எதுவும் அற்றவராக இருந்தார். அவரது வாசிப்பும் யோசிப்பும் எந்தவித தயக்கங்களும் அற்ற பகிர்தலுக்கானதாக இருந்தது. அதுவே அவரது இயல்பாகவும் இருந்தது. ஆனால் அவர் ஒருபொழுதும் கதைப்பதற்காகவும் அல்லது அச்சுறுத்துவதற்காகவும் வாசிக்கவில்லை என்பது தான் அறிந்து கொள்வதற்கு அவசியமானதுமாகும்.



ஏ.ஜே. உடனான அறிவுப் பகிர்தல் அள்ளித் தெளித்தல்களாக இருக்கவே இருக்காது. சந்தேகமானவற்றையும், தெளிவற்றவைகளையும் ஏ.ஜே. பகிர்ந்து கொள்ள மாட்டார். உறுதிப்படுத்திவிட்டுச் சொல்வதாக நேரடியாகவும் அழுத்தம் திருத்தமாகவும் தெரிவித்து, தான் உறுதிப்படுத்திக் கொண்டதன் பிற்பாடே உரியவர் மறந்தாலும் அவரைத் தொடர்பு கொண்டு, நினைவுபடுத்தித் தெளிவுபடுத்துபவராக ஏ.ஜே. இருந்தார்.

ஆங்கிலச் சொற்களைக் கூட, சந்தேகம் எனில், அகராதியை பார்த்து உறுதிப்படுத்திய பின்புதான் அர்த்தம் சொல்லுவார். அவ்வாறாக இருக்கலாம் அல்லது இவ்வாறாக இருக்கலாம் எனத் தெளிவின்றிக் கதைப்பது அவரது அகராதியில் கிடையாது

நிகழ்ச்சிகளின் அழைப்பிதழ்கள், நிகழ்ச்சி நிரல்கள், கையேடுகளை அச்சிடும் வேளைகளில் ஆங்கிலப் பதங்களை சரி பார்க்க அச்சகங்களில் இருந்து அவசர அவசரமாக ஏ.ஜே.யிடம் சென்றால் ஏ.ஜே.யும் தற்செயலாக ஏதாவது சந்தேகம் கொண்டார் என்றால் அவரும் அகராதியை புரட்டிப் புரட்டிப் பார்க்கத் தொடங்குவார்.

ஏ.ஜே. தனக்கு சந்தேகமானவற்றை எவருக்கும் சொல்லமாட்டார். அறிஞர் என்பாரின் மெய்யான தன்மையை மிக எளிமையாகவும் இயல்பாகவும் வழக்கப்படுத்தி இருந்தார். அறிஞர் என்பவர் எப்படியானவர் என்பதற்கு ஏ.ஜே. உரைகல்லாக இருந்தார். தெரியாததைத் தெரியாது என்று சொல்லும் புலமைத்துவ நேர்மை ஏ.ஜே.யிடம் நிறைந்திருந்தது. இதுதான் ஏ.ஜே. வெகு சிலர் மத்தியில் மாத்திரம் அறியப்பட்ட, அவரது பெறுமதி உணரப்பட்ட அறிஞராக இருந்ததற்குக் காரணமாகவும் இருக்கலாம்.

ஆழமான புலமையை உடைய ஏ.ஜே. தெளிவாகவும் சுருக்கமாகவும் மட்டுமல்லாது மிக அருந்தலாகவும் எழுதுபவராக இருந்தார். இது அவரது இயல்பாகவே இருந்தது. அதுவே ஒரு சாராரால் விமர்சிக்கவும் படுவதாயிற்று.

ஏ.ஜே. எப்பொழுதும் தான் வாசிப்பவற்றை, கிரகிப்பவற்றை மிகவும் சுவாரசியமாகக் கலந்துரையாடுவதில் விருப்புடையவராக இருந்தார். கலந்துரை

யாடுவதனூடாகவும் அறிவு பகிரப்படுவதும், பரவலாக்கப்படுவதும் அறிவுப் பகிர்வு முறைமை என்பது நவீன எழுத்து மைய, அச்சு மைய அறிவியல் உலகில் மறந்துபோன ஒன்றுமட்டுமல்ல. மறுக்கப்பட்ட ஒன்றாகவும் இருக்கிறது.

இதனால் எழுதாத அல்லது எழுத முடியாத அறிஞர்கள் பொதுமக்கள் மத்தியில் அறிஞர்களாக அறியப்பட்டிருக்கவில்லை அல்லது படிப்பறிவற்றவர்களாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இதுதான் நவீன அறிவியல் சமூகத்தின் அதிகார கட்டமைப்பாக இருக்கிறது.

ஆனால் ஏ.ஜே. நவீன அறிவியல் விடயங்களை வாய்மொழி மூலம் அதிகளவில் பரவலாக்கியவராக இருக்கிறார். இத்தகைய அறிவியல் பரவலாக்க முறைமையின் ஆளுமைகளின் உருவாக்கம் காலத்தின் தேவையுமாகும்.

ஏனெனில் சமூகங்களின் அறிவுருவாக்கத்தில் எழுத்து மைய, அச்சு மைய அறிவுப் பகிர்வின் அல்லது பரவலாக்கத்தின் மட்டுப்பாட்டையும், கட்டுப்பாட்டையும் விளங்கிக் கொள்வதும் மிகவும் அவசியமாகும்.

அதிகாரங்களுக்கு மாற்றான செயற்பாடுகளில் வாய்வழி அறிவுப் பகிர்வின் முக்கியத்துவம் அதிகம் உணர்ந்து கொள்ளப்பட்டிருப்பதும் பயன்படுத்தப் பட்டிருப்பதும் வரலாறாகவும் நடைமுறையாகவும் இருக்கின்றது. இதனால்தான் அதிகாரமையங்கள் வாய்வழி அறிவுப் பகிர்வை அங்கிகரிப்பதில்லை.

இதன் மிகப் பொருத்தமான உதாரணந்தான் வாய்வழிச் செய்திகளை 'வதந்திகள்' என்றும், தகவல் ஊடக வழிச் செய்திகளை 'செய்திகள்' என்றும் கருத்துருவாக்கம் செய்யப்பட்டிருப்பதாகும்.

'வதந்திகள்' என்றால் பொய்யென்றும், 'செய்திகள்' என்றால் மெய்யென்றும் சிந்தனையில் பதியப்பட்டிருக்கிறது. ஆனால் நாங்கள் எல்லோருமே 'வதந்தி'களில் உள்ள மெய்மைத் தன்மையையும் 'செய்தி'களில் உள்ள பொய்மைத் தன்மையையும் நன்கு உணர்ந்திருக்கிறோம்.

இலக்கிய வரலாற்றில் வாய்மொழி இலக்கியங்களை அவதானிக்கும்போது அங்கு பெண்களின் குரல்கள் வலுவாகக் காணப்படுவதையும் தொடர்புபடுத்திப் பார்ப்பதும் பொருத்தமானதாக இருக்கும்.

ஏ.ஜே. யுடனான உரையாடல்கள் நூலகங்களிலும், புத்தகசாலைகளிலும் நூல் தலைப்புக்களை, நூலாசிரியர் பெயர்களை பளிச்சிட்டு காட்டி தெரிந்தெடுக்க வைக்கும்.

அவற்றை எமக்கு பரிச்சயமானவையாக உணர வைக்கும். இது புத்தகத்தை எடுத்து வாசிப்பதற்குத் தூண்டுவதாக இருக்கும்.

வாசிப்பதற்கு சிரமமான புத்தகங்களின் சாராம்சத்தை ஏ.ஜே. விளங்கப்படுத்தி விடுவார். அதன் பின்னர் வாசிப்பதற்கு இலகுவாக இருக்கும். வாசித்து விளங்கிக் கொண்டதை ஏ.ஜேயுடன் பகிர்ந்து கொள்ளும் பொழுதுகளில் விளங்கிக் கொள்ளப்பட்டவற்றின் சரி, பிழை பார்த்துக்கொள்ளப்படும்.

நூலாசிரியர்களை, நூல் தலைப்புக்களை குறிப்பாக ஆங்கிலம்வழி அறியப்படுகின்ற அறிஞர்கள் மற்றும் கலைஞர்களை அவர்களது எழுத்துக்களை மிகவும் இயல்பாகவும், எளிமையாகவும் ஏ.ஜே கலந்துரையாடுவார். விடயங்களையும் நபர்களையும் ஒன்றுடனொன்று தொடர்புபடுத்தி உரையாடும் ஏ.ஜே.யின் ஆற்றல் பரந்ததும் ஆழமானதுமான அவரது வாசிப்பையும் அது சார்ந்த அவரது யோசிப்பையும் புலப்படுத்துவதாக இருக்கும்.

ஏ.ஜேயின் நண்பர்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கிறார்கள். ஏ.ஜேயை அவரது வாசிப்பை அவர்கள் அறிந்தவர்கள். எனவே எந்த முற்றுகைக் காலங்களிலும் ஏ.ஜேக்கு புதிய நூல்கள், சஞ்சிகைகள் கிடைத்து விடும். ஏ.ஜேக்கு கிடைப்பவை தேவைப்படும், வேண்டப்படும் ஏனைய அனைவருக்கும் கிடைப்பதாக இருக்கும்.

ஏ.ஜேயின் காலடிகளைப் பின் தொடர்ந்து நூல்களைத் தெரிந்தெடுத்துக் கொள்வது வீண் விரயங்களைத் தவிர்ப்பதாக இருக்கும். ஆனால் அது ஒரு பொழுதும் ஒற்றையடிப் பாதையில் பயணிப்பதாக இருக்காது. ஏனெனில் ஏ.ஜே.யின் வாசிப்பு பல பரிமாணங்கள் கொண்டது. எதிரெதிர் நிலைப்பாடுகள் கொண்ட, வித்தியாசமான நோக்குகளை உடைய முக்கியமான நூல்களை அவர் தேடித் தெரிந்து வாசிப்பார்.

இதன் காரணமாக, அவரது உரையாடல்கள் குறித்த ஒரு விடயம் சார்ந்து வெவ்வேறு கோணங்களில் பார்ப்பதாக இருக்கும். இதுதான் அவரை வரட்டுத் தனங்களுக்கும் வெட்டி விவாதங்களுக்கும் ஆட்பட்டுப் போவற்கு ஒருபொழுதும் இடமளிக்கவில்லை என்பது வெளிப்படையானது.

எண்பதுகளின் பிற்பகுதிகளில் குடாநாடு முற்றுகைக்குட் பட்டிருந்த காலகட்டங்களில் பின்காலனியம், பின்நவீனவாதம் பற்றியும் தமிழில் அவை அறிமுகப்படுத்தும் முறைபற்றியும், அதாவது நாங்கள்தான் முதன்முதலில் அறிமுகப்படுத்துகிறோம் என்று எம். ஜி. ஆரின் புதுப்படத்தை முதல்நாள் முதல் காட்சியில் பார்த்து பெருமிதப்படும் விடலைப் பருவ மனநிலை சூழல்களை கலந்துரையாடினோம். இதன் ஒரு பகுதியாக சுரேஸ் கனகராசா அவர்கள் பின்நவீனவாதம் தமிழில் அறிமுகப்படுத்தும் முறைமை பற்றிய ஒரு கட்டுரையையும் எழுதியிருந்தார்.

நாங்கள்தான் முதன் முதலில் பாடல்களை ஒலிபரப்புச் செய்கின்றோம் என்ற பாணியில் அறிவியல் விடயங்களையும் அவசர அவசரமாக அறிமுகப்படுத்துவதன் ஆபத்தை எப்போதும் எச்சரிப்பவராகவும் ஏற்றுக் கொள்ளாதவராகவும் ஏ.ஜே. இருந்தார். மேலும் எங்களது கலந்துரையாடல்கள் கலந்துரையாடல்களுக்கானதாக மட்டும் இருக்க முடியவுமில்லை. ஏனெனில் அவ்வாறு இருக்க விடுகின்ற சூழ்நிலையை காலம் எங்களுக்கு வழங்கவில்லை.

எனவே மனிதர்களாக நாங்கள் வாழ வேண்டுமெனில் எவற்றை, எப்படிச் செய்ய வேண்டும் என்பதை சிந்தித்தே ஆகவேண்டியிருந்தது. செயற்பட்டே ஆக வேண்டியிருந்தது. நாங்கள் வாழ்வதற்காக சிந்திக்கவும், செயற்படவும், கலந்துரையாடினோம். அந்தச் செயற்பாட்டின் ராணித் தேனியாக ஏ.ஜே வாழ்ந்தார்.

நினைவில் நிறுத்தப்படுபவர்களாக...

கவிஞர் சு. வில்வரத்தினம்

09.12.2006

ந. சுசிந்திரன்

கவிஞர் சு. வி.
(07. 08.1950 - 09.12.2006)

மனிதர்களைப் பற்றிச் சொல்வ தற்குப் பதில் மரணத்தைப் பற்றி அடிக்கடி சொல்வதாகத்தான் கடந்து செல்லும் எங்கள் அபாக்கிய காலங் கள் கரைகின்றன. இந்தக் கவிஞனது காலங்கள் இவ்வளவு குறுகியதாக இருக்குமென்று யாரும் நினைத் திருக்கவில்லை.

அகங்களும் முகங்களும்
காற்று வழிக் கிராமம்
காலத்துயர்
நெற்றிமண்


ஆகிய கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டபின், அவரது அனைத்துக் கவிதைகளும் 'உயிர்த்தெழும் காலத் திற்காக' என்ற தலைப்பில் விடியல் பதிப்பகத்திற்கூடாக வெளியானது. அரசியல் வஞ்சிப்பும், அவலங்களும், சிறுபான்மை இனங்களின் மீதான மூர்க்கத்தனமான தாக்குதல்களும், மனித அழிவு களும் மலிந்த கடந்த முப்பது வருட காலங்களைத் தான் இவன் போன்ற கலைஞர்கள் வாழ்ந்து கழிக்க வேண்டியிருந்தது. உயிர்த்தெழுகின்ற காலமொன் றைக் கனவு கண்டபடி, அதற்காக என்னைத் தருவதெ னினும் இசைவேன் என்று எழுதி ஈழத்தின் காலத் துயரைப் பாடியபடியே மறைந்தனன் அவன்.



1975ம் ஆண்டின் நடுமாதமொன்றின் மாலை வேளை. புங்குடுதீவின் பெருங்காட்டுச் சந்தியில் சிறீ சுப்பிர மணிய வித்தியாசாலையில் சு. வில்வரத்தினம் அவர் களின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. எதற்காகவென்று இப்பொழுது என் நினைவில் இல்லை. ஆனால், ஈழத்துச் சிவானந்தன் அவர்கள் அக்கூட் டத்தில் பேசியதும், ஆ.வை. லோகநாதன், வி. ரி. இளங்கோவன் போன்றோருடன் நானும் கலந்து கொண்ட அன்றுதான் ஒரு இலக்கியக்காரனாக சு. வில்வரத்தினத்தை அறிந்து கொண்டேன். பின்னர் சுமார் இருபது வருடங்களின் பின்னரே அவருடன் நேரில் பேசவும், பலவற்றை கலந்துபேசவும் சந்தர்ப்பம் உருவானது.

கொழும்பில் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். சோலைக்கிளியின் கவிதைகள் பற்றிய பேச்சு வந்தது. சிறிது காலம் செல்ல அவரது கவிதை ஊற்று வற்றி விடும் அபாயம் உண்டு என்று சு.வி. குறிப்பிட்டார். சு.வி. தன் மனதை எப்போதும் சோதனைக்கு உட்படுத்திய படியே இருப்பார். கண்களில் ஒரு தீட்சண்ய ஒளியும் நேர்ப் பார்வையில் ஒரு கூரிய கதிரும் அவரிடம் இருப்பதாக நான் நினைத்துக் கொள்வேன். பழந் தமிழ் இலக்கியத்தினதும் பக்தி இலக்கியத்தினதும் மொழித் தொன்ம விழுமியக் கூறுகளை வில்வத்தின் கவிதை களில் காணலாம்.

'எனது கவிதைகளினிடை அடையாள வரிகளாக இடைப் பெய்து நீண்ட எமது பாரம்பரிய பண்பட்டு அடையாளங்களைப் படிமப்படுத்திக் காட்ட முயல்வது எனது கவிதை ஆக்கத்தில் ஒரு பகுதி போலாகி விட்டது. இதை நான் தெரிந்தே, தேவை கருதியே,



பிரக்ஞைபூர்வமாகவே கையாள்கிறேன்"என்று தன் முன்னுரையில் அவரே குறிப்பிடுகின்றார். இதனால் தான் ஆண்டாள் பற்றிய க. கைலாசபதி அவர்களின் மதிப்பீட்டின்மீது மிகுந்த விசனம் கொண்டிருந்தார் வில்வரத்தினம்.

2000 ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற 'தமிழ் இனி' மகாநாட்டுக்கு வில்வரத்தினம் வந்திருந்தார். மண்டப முன்றலின் மரநிழல் ஒன்றில் புதுச்சேரி எம். கண்ணன், விடியல் சிவா, வ. கீதா மற்றும் நான் எல்லோரும் சம்மணமிட்டு உட்கார்ந்து வில்வத்தின் தெளிந்த மொழி உரையாடலையும் ஈழத்தின் கவிதை இலக்கிய வெளிப்பாடுகள் பற்றிய வில்வத்தின் கருத்துக்களையும் கேட்டதன் பின்னால் கவிஞர் நிலாந்தனின் 'முல்லைக் காடே! முல்லைக் காடே! மலர்ந்து மணம் பரப்பும் முல்லைக் காடே!' என்ற பாடலைப் பாடிக் காட்டினார். வில்வம் தான் சென்ற இடமெல்லாம் தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளையும் பாடலையும் உணர்ந்து பாடித் திரிந்தார். இசை அவருக்கு இயல்பாக வசப்பட்டிருந்தது.

எஸ். வி.ராஜதுரை, சகு ஆகியோரது வீட்டில் சென்னையில் சற்றே சுகவீனத்துடன் தங்கியிருந்த போதும் 'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா'என்ற பாரதிதாசனின் பாடல் 'மார்கழிக் குமரி கார்முகச் செல்வி ஊர் களி கொள்ள உலா வருகின்றாய்' என்ற மு. பொன்னம்பலம் அவர்களின் பாடல், மற்றும் நீலாவணனின், நிலாந் தனின் பாடல்கள் என்று இராமுழுவதும் பாடியபடியே சென்னை இரவுகளைக் கழித்தோம். பேராசிரியர் வீ. அரசு, மங்கை அவர்கள் தங்கள் வீட்டில் கொடுத்த விருந்து, வி. பி. சந்தோஷம் அவர்கள், காலஞ்சென்ற இலங்கை நயினார் தலைமையில் மலையக இலக்கிய நூல் வெளியீட்டின் பின் ஈழத்தின் பேராளர்களுக்கு ஹோட்டல் Breez இல் வழங்கிய விருந்து என்று வில்வத்துடன் நான் கழித்த நாட்களை இன்று எண்ணிப் பார்க்கிறேன். புதுச் சேரியில் எம். கண்ணன் வீட்டில் அவர்களது விருந்தோம்பலை வில்வரத்தினம் பலமுறை என்னிடம் விதந்து விதந்து சொல்லிப் போனார்.

ஜெர்மனியின் பெர்லின் நகரத்தில் இருந்து ஐரோப்பாவின் சில நாடுகளை ஊடறுத்து நோர்வேயின் ஒஸ்லோ ஊடாக பெர்கன் என்ற மலைகளைக் கடல் கவ்வும் நகரம் வரை வில்வம், கலைச்செல்வன், அ. யேசுராசா, இன்பா ஆகியோருடன் பயணித்த இனிய நினைவு சோகம் பரவி நிற்கிறது.

எமது கவிஞர்களின் கவிதைகளில் வில்வரத்தினத்திற்கு இருந்த ஈடுபாடு அபாரமானது. பாரதியின், நீலாவணனின், மு. பொன்னம்பலத்தின், சி. சிவசேகரத்தின், பிரமிளின் மற்றும் பல தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளைப் பயணம் முழுவதும் பாடியபடியே, நகைச் சுவையில் கழிந்த அந்த நாட்களைக் எண்ணத் துக்கம் கனக்கிறது. காற்றுக்கு வந்த சோகம், வேரோடி விழுதூன்றிய வாழ்வு தொலைத்து விறைத்த கட்டை யெனக் கிடக்கின்ற கிராமங்கள், பொருக்குலர்ந்த மக்களின் போக்கறியா வாழ்வின் பொறி தளங்கள் அவர்கள் உள்ளப் பொரு மல்கள் என்று பாழும் மனிதப் பிறவிபடும் பாடெல்லாம் பாடிவைத்துள்ளான் வில்வம்.

அவனது கவிதைகளைப் பாடி வியக்கும் உலகம் ஒன்றைக் காணுமுன்னரே அவன் போய்விட்டான்.

நினைவில் நிறுத்தப்படுபவர்களாக...

நடராஜா ரவிராஜ் (எம்.பி.)

10.11.2006

எஸ். எம். எம். பஷீர்

ரவிராஜ் என்னும் மனிதனின் அரசியல் சதிக்கொலை
(Political Assassination)

அரசியற்படுகொலைகள் என்பது கீழைத்தேய வரலாற்றிலும் புதியதல்ல. சாணக்கியனின் அர்த்த சாஸ்திரம் அரசாட்சியின் ஒரு தவிர்க்கவொண்ணா உபாயமாக அரசியற்படுகொலை - சதிக்கொலை - குறித்து நியாயம் கற்பிப்பதனைக் கடந்து ஈராயிரம் வருடங்களுக்கு மேல் சென்றுவிட்டபோதும் ஜனநாயக விழுமியங்கள் உலகின் சட்டவாட்சியின் (rule of land) அம்சங்களாக இன்று உறுதிப்படுத்தப்பட்டும் அவற்றிற்கெதிரான மீறல்கள் தண்டிக்கப்பட வேண்டியதாக அடையாளப்படுத்தப்பட்ட காலகட்டத்தில் பல சதிக்கொலைகள் இன்னும் உலகின் ஏதோ ஒரு பாகத்தில் இடம்பெறுவது சர்வ சாதாரணமாகும். இலங்கையில் ரவிராஜின் படுகொலை இடம்பெற்ற கால கட்டத்தில் லெபனானிலும் ரஷ்யாவிலும் இடம்பெற்ற அரசியல் வாதியினதும் பத்திரிகையாளியினதும் கொலைகள் அவற்றின்மீதான தீர்க்கமற்ற விசாரங்கள் பின்னணி குறித்த ஊகங்களாக முடிவுற்றது துரதிர்ஷ்டவசமானவையே. நீண்ட காலத்தில் குற்றவாளிகள்போல் இழப்புக்களும் மறைந்தும் மறந்தும் போய்விடுகின்றன. ஆயினும் ரவிராஜின் மகளின் ஆதங்கம் எனது மனதை உலுக்கிற்று. உலகம் மறந்துவிடும். ஆனால், அந்தக் குழந்தைகள் தங்களது தந்தையை இழந்துவிட்டமை மறக்கப்படாது. இந்தக் குரலின் விளைவே எனது இந்த வெளிப்பாடு.

மாற்றுக் கருத்து, பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை என சுதந்திர வெளிப் பாடுகள் அடிப்படை உரிமைகளாக அரசியற் செயற்பாடுகளின் மூலாதாரங்களாகவும் இருக்கின்ற மையால் அரசியல் செயற்பாடு சார்ந்த தனிமனித சதிக்கொலை நேரெதிர் விளைவுகளை ஏற்படுத்துவதாகப் பார்க்கப்படுகின்றது.

எனினும் ரவிராஜின் சதிக்கொலை இலங்கையின் ஜனநாயக அரசியற் செயற்பாடுகளை கேள்விக்குட்படுத்த வேண்டிய தேவையை மீண்டும் ஏற்படுத்துகின்ற அண்மைக்கால சம்பவமாகும். இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான பவுத்த தீவிரவாத அரசியற் படுகொலையான சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஸ்தாபகர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கவின் படுகொலையுடன் தொடக்கி வைக்கப்பட்ட அரசியற் படுகொலை இன்று சர்வ சாதாரண நிகழ்வாக இலங்கையில் மாறிப் போய்விட்டது. குறிப்பாக, சமாதான காலத்திலும் யுத்தகாலத்திலும் எனத் தமிழர் தீவிரவாத போராட்டம் தொடங்கிய காலம் முதல் இன்றுவரை நூற்றுக் கணக்கான அரசியற்படுகொலைகள். பல்வேறு நாமகரணங்களுடன் நியாயங்களுடன் அரங்கேறுகின்றன.

இந்தப் பின்னணியில், எனது நண்பர் ரவிராஜின் படுகொலை குறித்து நிலவி வரும் பல்வேறு ஊகங்களுக்கு அப்பால், எனது நட்புடன் நான் கண்ட ஒரு மனிதனை நினைவுகூர விரும்புகிறேன். நாங்கள் இருவரும் சமகாலத்தில் சட்டக் கல்லூரியில் பயின்றவர்கள். ஒன்றாகப் பலவேளை களில் தொழில் புரிந்தவர்கள். மாறுபட்ட அரசியற் சிந்தனைகளை ஒருபுறம் வைத்துவிட்டு மனிதர்களாக, நண்பர்களாக பயில, பழக சட்டக் கல்லூரி போன்ற பல்லின சூழலில் பயிற்சி பெற்றவர்கள். பேராதனைப் பல்கலைக்கழகச் சூழலில்கூட தமிழ்த் தேசிய வேறுபாடுகள் தமிழ், சிங்கள மாணவர்களை பரஸ்பரம் சந்தேகிக்கக் காரணமானாலும் சட்டக் கல்லூரி மூவின மக்களை மிக நெருக்கமாக தர்மத்தின் சட்டத்தின் காலங்களாக செயற்படுகின்ற புரிந்துணர்வை ஏற்படுத்தும் ஒரு நல்ல அனுபவ கல்விக்கூடமாக திகழ்ந்தது. முதல் முதலில் நானும் ரவிராஜும் சட்டத்தரணிகளாக தொழிற்படத் தொடங்கியபோது பிரபல குற்றவியல் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. ஆர். ஈ. தம்பிரட்ணம் அவர்களுடன் கூடவே நாங்கள் இலங்கை ஏர்லங்கா விமானக் குண்டுவெடிப்பு ஸ்தலத்தில் 1988ம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜரான காலங்கள்

மிகவும் பசுமையானது. பின்னர் கொழும்பிலே ரவிராஜ் அரச சட்டத்தரணியாக நியமனம் பெற்ற பின்பும் நானும் ரவியும் நட்பைப் பேணியதால் பல தடவைகளில் ரவிராஜ் கொழும்பில் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்களின் விடுதலை தொடர்பாக என்னைப் பரிந்துரைத்துமுண்டு. நான் கொழும்பில் வாழ்ந்த காலத்தில் எமது நட்பு கெட்டியாக இருந்தது. நான் இலண்டனுக்கு வந்த பின்னர் தொடர்பற்றுப் போய்விட்டோம். ரவிராஜ் இலங்கையில் தனது ஆரம்பகால சட்டத்தரணி வாழ்க்கையில் தமிழ் மனித உரிமை சம்பந்தமாக சேவியர் (சட்டத்தரணி) நிறுவிய மனித உரிமை நடவடிக்கைகளுடன் தொடர்புற்றிருந்தார். மறுமுறும் நான் LHRD எனும் மனித உரிமைகளுக்கும் அமிலிருத்திக்குமான சட்ட வாதிகளின் ஸ்தாபனத்துடன் செயற்பட்டு வந்தேன். பொதுவாக அரசியற் கருத்துரீதியாக எங்களுக்குள் வேறுபாடு இருந்தது. குறிப்பாக, வடமாகாண முஸ்லிம்களின் வெளியேற்றம் குறித்து புலிகளை நோகத் தயாராக ரவிராஜ் இருக்கவில்லை. மேலும் புலிகளின் ஜனநாயக மறுப்பினை ஆதரித்தார். ஆயினும் அவர் நாகரிகமான விவாதங்களை மேற்கொள்பவராகக் காணப்பட்டார். காட்டமாக எமக்குள் கருத்துப் பரிமாற்றல்கள் இடம்பெற்றாலும் நல்ல நட்பு எமக்குள் எப்போதும் நிலவியது. அதிகமதிகமாக ஆதாரங்களுடன் கதைத்தால் சிலவேளை மௌனமாகி வேறு தடத்திற்குத் திரும்பி நட்புடன் தனிப்பட்ட விடயங்கள் குறித்து கருத்துகள் பரிமாறுவார்.

1990களின் ஆரம்பத்தில் நான் இலண்டன் வந்து சில வருடங்களின் பின்னர் புலிகள் ரவிராஜினைத் தண்டிக்கவுள்ளார்கள்! என்று ஒரு முக்கியமான எனது நண்பர் கூறியபோது நான் அதிர்ச்சியடைந்தேன் எனினும் துரதிர்ஷ்ட வசமாக என்னிடம் அவருடைய புதிய தொலைபேசி இலக்கங்கள் இருக்கவில்லை என்பதுடன் ஏனைய நண்பர்களின் தொடர்புகளில் இருந்தும் நான் விடுவிக்கப்பட்டிருந்தேன். ஆனால் மனதில் ஒரு பயமும் துக்கமும் இருந்தது. பின்னர் ரவிராஜ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான பின் அவரது உத்வேகமான பேச்சு, செயற்பாடுகள் கவனத்தை ஈர்த்தன. ரவிராஜ் எப்படி இருக்கிறான் என ஒரு தடவை ஹக்கீமைக்கூட (சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்) சில வருடங்களுக்கு முன் இலண்டனில் கேட்டேன்.

திடீரென்று இந்த வருடம் (2006) செப்டெம்பர் மாதத்தில் எனக்கொரு தொலைபேசி அழைப்பு வந்தபோது "மச்சான்... ரவிராஜ் என்டா?" பழைய சிநேகிதத்துடன் உரையாடல்கள். பின்னர் அரசியல் குறித்த கருத்தாடல்கள். நான் கதைக்கவில்லை. அவர் (ன்)தான் கதைத்தான். ஒரு கம்பியினையும் இருமுறமும் திருக நடுவில் முறிந்து விடும். அதுபோல்தான் இன்று முறிந்து விட்டது. (பலப்பரீட்சை தோல்வி) சமாதானம்தான் ஒரே வழி என்பதை லியுறுத்தினான். JVPயும் JHUஉம்தான் இன்று பிரபாகரன் இருப்பதற்குக் காரணம் என்றுகூடச் சொல்லி வைத்தான். மறுமுறும், "பார்த்தாயா இந்தியாவை? தமிழர் தேசியக் கூட்டமைப்பை இந்தியப் பிரதமர் சந்திக்கப் போகிறார். இந்தியா இறங்கி வருகிறது" என்றெல்லாம் குறிப்பிட்டான். முழுமையாக



பஷீர் - ரவிராஜ்

அரசியல் தெளிவு ஏற்படும் நாள் தொலைவில் இல்லை என்பதை உணர்ந்து கொண்டேன். மனம் திறந்து கதைத்தான். தனது எல்லாத் தொலைபேசி இலக்கங்களையும் தந்தான். கொழும்பு வந்தால் தவறாமல் சந்திக்கும்படி ஏசிக் கட்டளையிட்டான். தனது நீண்ட பரந்த விடுமுறை குறித்தும் சிலாகித்தான். துரதிர்ஷ்டவசமாக இருவருக்கும் நேரம் போதாததால் நேரில் கதைக்க நாளில்லாது போய்விட்டது.

ஊருக்குப்போய் பிரபாகரனின் குழந்தைகளை தாயகக் குழந்தைகளுடன் ஒப்பிட்டுக் கதைக்கிறான். ஏன் அவனைச் சந்திக்காமல் விட்டேன்? யாரையேனும் பிறகு சந்திக்கலாம் என்று பிற்போட்டு விடாதே என்று எனக்கும் உங்களுக்கும் சொல்லிக் கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்ற சூழல் ஒருபுறம் ஜனநாயகத்தின் குரல்கள் நெரிக்கப்படுகின்ற சூழல் இன்னும் ஒரு புறம் எத்தனை பேரை பலிகொள்ளப் போகிறது?

ரவிராஜ் குறுகிய கால அரசியல் வரலாற்றில் நீண்ட பதிவுகளை மாறுபட்ட அரசியல் முகாமிலிருந்தாயினும் விட்டுச் சென்றுள்ளார்.

கறுப்பாலான வெளி

பாலைநகர் ஜிஃப்ரி

மிகக் கறுப்பாலானதும்
மௌனம் கவிழ்ந்ததுமான
வெளியொன்றில் தனித்து விடப்பட்டிருக்கிறேன்
எனது வானில் நிலவில்லை, விண்மீன்கள் இல்லை
ஒளி தரும் எதுவுமற்ற இந்த
இருள்வெளியில் நான் தனித்தலைந்து
திரிகிறேன்

தூரத்தே தொலைதூரத்தே
என்னைப் போன்றதொரு தனித்த பறவையின்
பாடலைக் கேட்கிறேன்
அதன் வலியை உணர்கிறேன்
அதன் கனவுகளை காண்கிறேன்
அதன் அழைப்பைக் கேட்கிறேன்

வெளியெங்கும் அலைந்து திரியும்
பாடலின் பறவையே
என் சோகத்தை கேட்பாயா?

காற்றின் பேரோசையில் நீயுன்
சோகத்தை உரைப்பாய்
மரங்களில், மலைகளில், நீர்நிலைகளில்
மோதித் தெறிக்கும் உனது பாடல்
உனது சிறகுகள் உன் தனிமைக்குத் துணை
உனது பாடலும், உனது குரலும்
உனது கோரிக்கையாய் ஒலிக்கும்

கறுப்பாலான இந்த வெளியில்
தனித்து விடப்பட்ட எனது கனவுகளை
எடுத்துச் செல்ல என்னிடம் காற்றில்லை
எனது பாடல்களை ஒலிக்க
என்னிடம் குரலில்லை

சூழ்ந்திருக்கும் அச்சத்தையும்
மௌனத்தையும், இருளையும்
விட்டுவிடுதலையாகி தூரப் பறக்க
சிறகுகளுமற்றிருக்கிறேன்

உண்மையில் நான் எனது
மரணத்தை விரும்பவில்லை
உண்மையில் நான் எனது துயரத்தை
விரும்பவில்லை
எனக்கு விதிக்கப்பட்ட காலத்தை
வாழவே விரும்புகிறேன்
எனது உலகத்தை ரசிக்கவே விரும்புகிறேன்
சூழ்ந்திருக்கும் அச்சத்தையும்,
அடக்குமுறையையும் விட்டுவிடுதலையாகி
தூரப்பறக்கவே விரும்புகிறேன்

2006.06.06.

பிரத்தியேக நாட்குறிப்பொன்றில் இருந்து...

லக்ஷ்மி



19.11. 2006 - ஞாயிற்றுக்கிழமை
கலைவண்ணம் 2006 - திருமறைக்கலாமன்றம்
பாரிஸ்

20.11.2006 - திங்கட்கிழமை
குழந்தைகள் உரிமை தினம்
பிரான்ஸ்

இது குறித்து இன்று பிரான்ஸில் வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளில்:

குறிப்பாக, பெற்றோரின் விவாகரத்தினால் குழந்தைகளின் மனநலம் பாதிக்கப்படுகின்றது. அதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட வேண்டும். அந்தக் குழந்தைகள் பெற்றோர்களின் உறவினர்களுடன் சகஜமாக பழகுவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இது போன்ற பரிந்துரைப்புகள், குழந்தைகளின் மனநலம் எப்படி எப்படிப் பாதிக்கப்படும் என்ற ஆராய்ச்சிகள் பல்வேறு விதமாக பல வடிவங்களில் நடந்து கொண்டும், தொடர்ந்து கொண்டும் இருக்கின்றன. இதுபற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகளில் இருந்து மட்டும்தான் கருத்துச் சொல்ல முடியும் என்று நான் நம்பவில்லை.

20.11.2006 - திங்கட்கிழமை
அதிகாலை 2.00மணி
பாரிஸ்

இப்போது மூன்று மணித்தியாலங்களிற்கு முன்பாக திருமறைக்கலாமன்றத்தின் கலைவண்ணம் 2006இன் கலைநிகழ்ச்சிகளைப் பார்த்துவிட்டுத் திரும்பி இருக்கிறேன். அதாவது, 19.11.2006 ஞாயிற்றுக் கிழமையன்று கலைவண்ணம் நிகழ்ச்சிகள் பாரிஸில் நடைபெற்றன. பாரிஸில் திருமறைக் கலாமன்றம் தனது தொடர்ந்த செயற்பாட்டில் நாடக வளர்ச்சிக்கு (நாடகங்களை மேடையேற்றுவதில்) பிரத்தியேக கவனத்தைக் குவித்துச் செயற்பட்டுவருகின்றது என்பதும், திருமறைக் கலாமன்றம் மேடையேற்றும் நாடகங்கள் ஒரளவு பிரக்ஞையுடன் செய்யப்படுகின்றன என்னும் ஒரு எண்ணத்தை எனக்குள் ஏற்படுத்தி இருக்கின்றது என்பதும், அதனால் தவிர்க்க முடியாத காரணங்கள், தடங்கல்கள் இருந்தாலன்றி, அவர்களின் நிகழ்ச்சிகளைத் தவறவிடுதில்லை. இந்தத் தொடர்ச்சியில்தான், நேற்று அவர்களின் கலைநிகழ்ச்சிக்குச் சென்று திரும்பி இருக்கின்றேன். பிரான்ஸில் நிகழும் புகலிடத் தமிழர்களின் ஏனைய நிகழ்ச்சிகள் போலல்லாது மற்றவர்களின் நேரம் குறித்து விசேட பிரக்ஞை கொண்டிருப்பவர்கள். அந்த வகையில் நிகழ்ச்சி அவர்கள் குறிப்பிட்டிருந்தபடியே மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி விட்டது. நான் அரை மணி நேரம் கழித்துத்தான் சென்றேன். நிகழ்ச்சிகள் ஆரம்பித்துவிட்டபடியால் அரங்கில் வெளிச்சம் குறைவாக இருந்தது. ஒரு மாதிரித் தட்டித் தடவி ஒரு இருக்கையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தேன்.

சங்கீதம், கவிதா நிகழ்வு, நாடகம், கௌரவிப்பு, அஞ்சலி, நடனம் என்று நிகழ்ச்சிகளின் பட்டியல்.

நிகழ்ச்சிகள் முடிவதற்கு ஒரு அரைமணித்தியாலத்திற்கு முன்பு வெளியே வந்துவிட்டேன். வரும்வழியில்

நண்பர்களுடன் நான் பேசிக் கொண்டு வரும்போது மற்றவர் களின் அபிப்பிராயத்தில் "பாட்டு நன்றாக இருந்தது. கவிதைகள் பரவாயில்லை...." இதெல்லாம் இருக்க, என்னை ஆத்திரப் படுத்திய அல்லது உணர்ச்சி வசப்படுத்திய நிகழ்வும் ஒன்று அங்கே இருந்தது.



மண்டபத்தை விட்டு வெளியேற முன்னேறுகையில் எதிர்ப்பட்ட நண்பர் ஒருவர் "எப்படி நிகழ்ச்சியெல்லாம் பிடிச்சுதோ?" என்று கேட்டார். "ஓம் பிடிச்சுது. பிறகு சந்திப்பம்" என்று சொன்னபடியே நகர்ந் தேன். ஆனால், "என்னால் அதற்கு மிஞ்சியும் இருக்க முடி யாமல் பக்கத்தில் இருந்த நண்பியையும் இழுத்துக் கொண்டு போகிறேன்" என்று அந்தக் கூட்டத்தில் வைத்து அவரிடம் சொல்ல முடிந்திருக்கவில்லை.

இந்தக் குறிப்பை எழுதும்போது, இப்படியும் ஒரு யோசனை தோன்றுகிறது. நடந்த நிகழ்வு குறித்த நல்ல விடயங்கள் எதையும் எழுதாமல் இதை மட்டும் எழுதுகிறேனோ என்று. ஆனால் எனக்கென்ன தோன்றுகின்றதென்றால் நல்ல விடயங்கள் என்று படுபவைகளை நான் சொன்னால் என்ன, சொல்லா விட்டால் என்ன தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கப் போகின்றது. அப்படியென்றால் நல்லதில்லை என்று சொல்லும் விடயங்கள் மட்டும் என்ன நான் எழுதுவதனால் மாறிவிடுமா என்று. எதுவும் மாறாது என்ற நம்பிக்கை திட்டவட்டமாக என்னிடம் இல்லா திருப்பதானால் இதனைச் சொல்வதன் அவசியத்தை நான் உணருகின்றேன். பெண் குழந்தைகள் - சிறுமிகள் - பெண்பிள்ளைகள் - பெண்கள் - பாலியல் துஷ்பிர யோகம் இச்சொற்பதங்கள் இந்த நிகழ்ச்சி அக்கணம் மனவீச்சில் எழுப்பிய அலைகளில் மிதந்தவை.

இந்த இடத்தில் எனக்கு முக்கியமான சம்பவம் ஒன்று ஞாபகத்தில் வருகின்றது. கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு சந்திப்பொன்றில், "இங்கு வாழும் வளருகின்ற பிள்ளைகளுக்கு பாலியல் ரீதியான உறவுகள் பற்றியும் அவர்களுடைய உடல் ரீதியாக ஏற்படுகின்ற மாற்றங்கள் பற்றியும் பெற்றோர் கள் தெளிவாகக் கதைக்க வேண்டும். பிள்ளைகள் அதுபற்றிய சந்தேகங்களைப் பெற்றோரிடம் இருந்து தெரிந்து கொள்வதற்கு அனுசூலமான சம்பாஷணைப் போக்கை பெற்றோர் - பிள்ளைகள் உறவு கொண்டிருக்க வேண்டும். இவைகள் பற்றி விரிவாகப் பேசாது இருப்ப தனால் பிள்ளைகள்மீது பெற்றோர்கள் சந்தேகம் கொள்ளுதல், பூடகமாகப் பேசுதல், அளவுக்கதிகமான கண்டிப்பு என்பன நிகழ்கின்றன. அத்துடன் வளரும் பிள்ளைகள் வெளியில் கொள்ளக்கூடிய உறவுகளி னால் பாதிக்கப்படுவது பெண்பிள்ளைகளாக இருப்பது தான் அதிகம். பாலியல் பற்றிய கல்வியைப் பெற்றோர் கள் அதனை ஒரு மந்திரப்பொருளாக்காது இயல்பாகப் பேசிக் கொள்ளவேண்டும். அப்போதுதான் அவர்கள் பாது காப்பான உறவை ஏற்படுத்திக் கொள்வார்கள்."

இப்படி ஏன் அந்தச் சந்திப் பில் நான் சொல்லவேண்டி வந் ததென்றால், அந்தக் கூட்டத்தில் பேசிய ஒரு நண்பர் "வெளி நாட்டுக் கலாச்சாரச் சூழல் சரியில்லாததால் பெண்பிள்ளை கள் திடீரென்று வயிற்றில் பிள்ளையுடன் வந்து நிற்கின் றார்கள். பெற்றோர் என்ன செய்வ தென்று தெரியாமல் முழிக்கின் றார்கள். சிலவேளைகளில் இப்படி நடக்கும் சம்பவங்களின் பின் பெற்றோரின் அவமதிப்புத் தாங்க முடியாமல் அப் பெண் பிள்ளைகள் தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபடு கின்றார்கள்" என்று கவலைப்பட்டார். இந்தக் கூற்றுக்குப் பின்தான் என்னுடைய வெளிப்பாடு மேல்வருமாறு அமைந்தது. அப்போது சந்திப்பில் கலந்துகொண்டிருந்த ஒரு பெண் என்னை நோக்கி "அப்ப என்ன! எங்கடை பொம்பிளைப் பிள்ளையளுக்கு எப்பிடிப் படுக்கிறதெண்டு இப்பவே சொல்லிக் குடுக்கச் சொல்லுறியளோ? இதென்ன அநியாயம்!" என்று சீறிப் பாய்ந்தார். "அவர்கள் எப்படிப் படுக்கக் கூடாதென்று சொல்வதுதான் எனது நோக்கம்" என்பதை அந்தக் கூட்டத்தில் என்னால் புரிய வைக்கக்கூடிய வல்லமை என்னிடம் இருக்கவில்லை என்பதை நான் ஒத்துக் கொண்டேதான் ஆகவேண்டும்.


எந்த விடயங்கள் பற்றியும் தெளிவான விளக் கங்கள் இருப்பது ஒன்றும் வரலாற்றுக் குற்றமில்லை என்பதில் எனக்குத் தெளிவு இருக்கின்றது.

பெண்களின் ஆளுமைக்கு முதல் எதிரியாக இருப்பது அவர்களுடைய உடற்கூற்றமைப்புத்தான். இதனைப் பெண்கள் மிகவும் அவதானத்துடன் கையாள வேண்டிய தேவை இருக்கின்றது.

* * *

இவைகள் எல்லாம் ஏன் இந்த இடத்தில் என் மீள்சிந்தனைக்கு வருகின்றதென்றால், நேற்றைய விழாவில் என்னைப் பாதித்த நிகழ்ச்சிதான். அந்த நிகழ்ச்சி- சினிமாப் பாடல்களுக்கு சிறுமிகள், சிறுவன்கள், பெண்பிள்ளைகள், ஆண்பிள்ளைகள் ஆடுவது. ஆடுவது என்பதை அபிநயத்துடன் ஆடுவது என்று திருத்திச் சொல்லலாம். இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சி தொடங்கியபோது திரை விலக, ஒரு சிறுமி அரங்கில். சிறுமியின் அபிநயத்துடன் ஆரம்பமாகியது நடன நிகழ்ச்சி. அந்தச் சிறுமி அபிநயித்த பாடல் மிகவும் விரசமான, பால்இச்சையைத் தூண்டுவதை நோக்காகக் கொண்ட வரிகளோடு கூடியது. அச்சிறுமி அதற்குச் செய்த அபிநயத்தில் யாருமே லயித்துத்தான் போவார்கள். இந்த வரிகளைக் கொண்ட பாடலுக்கு இந்தச் சிறுமியால் எப்படி இப்படி அபிநயம் பிடிக்க

முடிந்தது என்பது எனக்கு இன்னமும் ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது. எனக்கு இங்குள்ள பிரச்சினை என்னவென்றால் கலாச்சாரம், பண்பாடு என்பவைகளை உன்னதமாக எண்ணிக்கொண்டு, எங்களுடைய கலாச்சாரத்தினை இங்குள்ள வெளிநாட்டுக் கலாச்சாரம் சீரழிக்கின்றது என்று பெருமை பேசும் தேசியக் கலாச்சாரப் பாதுகாவலர்கள் இதனை எப்படிச் சகித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான். அங்கு கூட்டத்தில் அந்த நடனத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களில் பலர், பெண்களின் இடுப்பு மடிப்பில் தங்கள் இதயத்தைத் தந்து விடுபவர்களாகத்தான் இருக்க முடியும். திரையில் சினிமாப் பாடல்களின் ஆட்டத்தின் உடல சைவுகளின்போது தங்களை ஐக்கியப்படுத்தி உணர்ச்சிச் சிதறல்களை அனுபவிக்கும் ஆண்கள் ஏராளம். அதே உணர்ச்சிப் பெருக்கைத் தூண்ட ஒரு சிறுமியை இவர்கள் அங்கே பணயம் வைத்தது போல்தான் தெரிந்தது. (இதில் முக்கியம் என்னவாக எனக்கு இருக்கின்றதென்றால், சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்யும் சட்டத்தின்கீழ் இவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதுதான்)



பெற்றோர்களுக்கோ, உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ, ஒரு சிறுமி இந்த வயதில் கூச்சமில்லாமல் ஆடுகிறார் என்பதும், அவர் பலரின் கைதட்டல்களைப் பெறுகிறார் என்பதும்தான் முக்கியமாகப் படுகின்றதேயன்றி அதற்கப்பால் வேறெதுவும் இல்லை. அவர்கள் இதற்கு மேல் எதையும் சிந்திக்கப் போவதில்லை. ஏனென்றால், எங்கள் பிள்ளைகளின் கெட்டிக்காரத் தனத்துக்கு கைதட்டல்களையும் விருதுகளையும் பெற்றால் போதும் என்று போதையேறிப் போய்விடுபவர்கள் நாங்கள்.

பிள்ளைகள் எப்போதும் எங்களை விடக் கெட்டிக்காரர்கள் என்பதில் எனக்கு எப்போதுமே சந்தேகம் இருந்ததில்லை. ஆனால், அவர்களுக்கு சில வழிகளைச் சொல்லிக் கொடுப்பதற்கான முயற்சியைப் பெற்றோர்கள் எடுப்பதில் எந்தத் தவறுமில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

சிறுவன்கள் தமிழ் சினிமாப் படங்களில் வரும் வீர(வெட்டருவா/வீச்சருவா) வசனங்களைப் பேசும் போது பெற்றோர்கள், "தம்பி எப்பிடித் தமிழ் பேசுகிறான் கேளுங்கோ" அல்லது "அந்த திருப்பாச்சி வசனத்தை ஒருக்கா அன்ரிக்கு (மாமாவுக்கு)ச் செய்து காட்டு" என்று பிள்ளைகளின் அரங்காடலில் பூரித்துப் போகிறார்கள். தமிழ்த் திரைப்படச் சானல்கள் வீடுகளை ஆக்கிரமித்திருப்பதும், பெற்றோர்கள் இத்திரைப் படங்கள் விதைக்கும் வன்முறைகளையும் விரசங்களையும் கண்டுகொள்ளாமல் இருப்பதும் விசனத்துக்குரியதே. பின்பு சிறுவர்கள் வளர்ந்து பெற்றோர்களுடைய விருப்பத்திற்கு மாறாக எதையாவது செய்துவிட்டால், "எங்கை இருந்து இதெல்லாத்தையும் பழகிக் கொண்டு வாறாய்?" என்று பிள்ளைகளைத் திட்டுகிறார்கள். 'பெற்றோர்கள் எப்போதும் சரியாகத்தான் இருப்பார்கள். பிள்ளைகள்தான் எப்போதும் தவறு செய்வார்கள்' என்ற ஆதிக்க மனப்பான்மை நிலையில் இருந்துதான் இந்த முரண்பாடுகள் ஏற்படுகின்றன என்பதையும் இவர்கள் கண்டு கொள்வதில்லை. ஆனால், இந்தத் தகவல் சொரி சூழலில் தாங்கள்தான் முட்டாள்களாக இருக்கிறோம் என்றும் எத்தனையோ பெற்றோர்களுக்குத் தெரிவதில்லை.

* * * *

இந்த இடத்தில் இன்னுமொரு சம்பவமும் நினைவுக்கு வருகின்றது. அண்மையில் ஒரு நண்பனுக்கு சில சிடிக்களும், ஒரு குறிப்புப் புத்தகமும், ஒரு தமிழ்ச் சஞ்சிகையும் அனுப்பினேன்.

நான் அந்தப் பார்சலைச் சாதாரண தபாலில்தான் அனுப்பியும் அவனுக்கு அது கிடைப்பதற்கு, கிட்டத்தட்ட ஐந்து கிழமைகள் எடுத்தன. அந்த நாட்டு இரகசிய பொலிஸ் அதிகாரிகள் அந்த நாட்டுக்குள் வந்து சேரும் தகவல்கள்மீது பிரத்தியேகக் கட்டுப்பாடுகளை வைத்திருப்பவர்கள்.

இந்தப் பார்சல் அங்கு சென்று சேர்ந்ததும் அந்த சிடிக்களைப் போட்டுப் பார்த்து அந்தப் பாடல்களின் கருத்துகளைக் கேட்டார்களாம். அந்தச் சஞ்சிகையின் சில பகுதிகளைக் காட்டி விளக்கம் கேட்டார்களாம். குறிப்புப் புத்தகத்தை அல்ட்ரா வயலட் ஒளியில் பிடித்துப் பார்த்தார்களாம்.

இப்படிப் படாதபாடுபடுத்தி இறுதியில் அந்தப் பார்சலை ஒருவாறு நண்பனிடம் சேர்ப்பித்து விட்டார்கள். நண்பனும் பொறுமையாக இருந்து பார்சலைப் பெற்றுச் சென்றுவிட்டான்.

அந்த அதிகாரிகளுடன் தான் இருந்த நேரத்தில் அவர்களைப் பார்த்து மனதிற்குள் சிரித்துக் கொண்டிருந்தானாம் 'இன்ரநெற்றில் வந்து குவியும் தகவல்களுக்கெல்லாம் இவர்கள் என்ன செய்வார்கள்' என்று.

எனக்கும் இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்திருந்தால் அவனுக்கு அப்படியொரு பார்சலையே அனுப்பி இருக்கவேண்டாம் என்றிருந்தது.

* * *

என்ன சமாச்சாரமென்றால்,

நாங்கள் இப்படித்தான் சின்னச் சின்ன விடயங்களில் மயிர் பிடுங்கி, பெரிய பெரிய விடயங்களில் கோட்டை விட்டு விடுகிறோம்.

மரணத்தின் வாசலில் வாழ்வின் குரல்...

மமியா அபு-ஜமால்



இராணுவத்தின் கட்டளைத் தளபதி என்னும் தனது தகைமையினால் ஈராக்கின் எதிர்ப்பு அதிகரிக்கும் பகுதிகளுக்கு மேலதிக துருப்புகளை அனுப்பி வைப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் முடிவெடுத்துள்ளார். அதற்குச் சிறிது முன்பு தான் அமெரிக்காவின் யுத்தத்தின் குறியீடாக விளங்கியவரும் அமெரிக்க இராணுவத்தால் வீழ்த்தப்பட்ட ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன், தனது வாஷிங்டனிலுள்ள ஏகாதிபத்திய கொடை வழங்கிகளால் மன்னிப்பு மறுக்கப்பட்டு ஷியா மஹ்தி இராணுவத்தால் அவமானப்படுத்தப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

அவரது குற்றங்கள்?

தனது எதிரிகளான ஷியா முஸ்லிம்களை கொன்றதற்காகவோ அல்லது தனது நாட்டு மக்களை சித்திரவதை செய்தமைக்காகவோ நிச்சயமாக தூக்கிலிடப்படவில்லை. நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட இந்தச் சம்பவங்கள் நடைபெற்ற பின்னர், அமெரிக்காவில் இருந்து அனுப்பப்பட்டவர்கள் அவருடன் குதூகலமாக கை குலுக்கி, கட்டியணைத்து ஜோக்கடித்தனர். பாக்தாத்தில் மிக விரும்பப்பட்ட இவ்விருந்தினர்களில் ரோனால்ட் றீகனின் அரசாங்கத்தில் இருந்த (அங்கம் வகித்த) டோனால்ட் ரம்ஸ்வெல்ட்டும் இருந்தார். இவர் சதாம் ஹுசைனுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு அமெரிக்கத் தயாரிப்புகளான போர் ஆயுதங்கள் முதல்

25 வருடங்கள் சிறையில்...

ராகவன் (பேர்லின்)

ஆபிரிக்காவிலிருந்து அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட மக்களின் உழைப்பில் செழிப்புற்ற வெள்ளை அமெரிக்காவானது, அவர்தம் சந்ததியை, தொடர்ந்து சமூக வளர்ச்சியினின்று தடுத்தும், இனவெறிப் பாகுபாட்டினும் நடாத்தியது. இதற்கெதிரான ஆபிரிக்க அமெரிக்கர்களின் (ஆபிரிக்காவிலிருந்து கொண்டுசெல்லப்பட்டோரின் சந்ததியினர்) மனித உரிமை இயக்கங்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பங்களிலேயே செயற்பட்டு வந்தாலும், அறுபதுகளின் ஆரம்பத்தில்தான் முனைப்புப் பெற்றது. இனவெறி, சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கெதிராக 'கறுப்பர்களை' பெருமளவில் ஒன்று திரட்டி மக்கள் போராட்டமாக மாற்றுவதற்கு மார்ட்டின் லூதர் கிங்கின் மனித உரிமைகள் அமைப்பும், எலிஜா மொகமட்டின் இஸ்லாம் தேசமும் (Nation of Islam) முக்கிய பங்காற்றியுள்ளன. எலிஜா மொகமட்டின் அமைப்பில்தான் மல்கம் எக்ஸ் இணந்து செயற்பட்டார். அவரது தீவிர கருத்துப் பிரசாரத் திறமையால் பல இளைஞர்கள் கவரப்பட்டனர். அவர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அவரின் கருத்துக்களால் உந்தப்பட்டவர்கள் கரும் சிறுத்தைகள் (Black Panthers) என்னும் அமைப்பை உருவாக்கினர். இது இடதுசாரி கொள்கைகளுடனான தற்பாதுகாப்புப் போராட்ட அமைப்பாகும். பொலிஸாரின் மோசமான வன்முறைகள், நீதியமைப்பு, பாடசாலை மற்றும் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் நிலவிய இனவெறி, பொருளாதார ஏற்றத்தாழ்வு, வறுமை என்பவற்றால் 'கறுப்பர்கள்' மிகவும் பாதிக்கப்பட்டார்கள்.

அக்கால கட்டத்தில் உலகெங்கும் தனது நலனுக்கு எதிரான கம்யூனிஸ்ட்டுகள், பல 'மூன்றாம் உலக நாடுகள்' மீது தனது நேரடி மற்றும் மறைமுகப் போரை அமெரிக்கா நடாத்திக் கொண்டிருந்தது. உள்நாட்டில்



இது எம் காலத்தில் அறத்தைக் கேள்விக்குள்ளாக்கும் ஒரு குறியீடு. எந்தத் தேசமானது சதாம் ஹுசைனை ஈரானுக்கெதிரான யுத்தத்தைத் தூண்டியதோ, அயல்நாட்டுக்கெதிரான கொடிய யுத்தத்தைப் புரிவதற்கு தொடர்ந்த ஆயுதத் தேவையை பூர்த்தி செய்ததுவோ, பெரும்பான்மை ஷியா மக்களை தனது அச்சம் தரும்அதிகாரத்தால் ஒடுக்கும் போது கண்டுகொள்ளாமல் இருந்ததுவோ அதுவே அவருக்கு மரண தண்டனையை விதித்தது.(அவரிடமிருந்து எதிர்பார்த்ததையெல்லாம் அவர் செய்த போதும்)

1982இல் சதாமால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறலுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டது. அப்படியாயின் ஏன் அமெரிக்கா 1984இல் ஈராக்குடன் இராஜ தந்திர ஒப்பந்தங்களைச் செய்தது. 2003ம் ஆண்டு நியூயோர்க்கில் 'ஈராக் யுத்தத்தின் பின்னணியில்' (Behind the Iraq War) எனும் குறிப்பிடத்தக்க நூல் வெளியாகியது. இந்திய செயற்பாட்டாளர் குழுவான RUPE (Research Unit for Political Economy) வெளியிட்ட நூல். ஈரான் துருப்புக்

பேரழிவு ஆயுதங்கள்வரை அனுப்பி வைத்தார்.


சதாம் ஹுசைன் மனிதத்திற்கெதிரான குற்றச் செயல்களை ஒத்துக் கொள்வாராயின், அதற்கு உதவி செய்தும் தூண்டுதலாகவும் இருந்த அமெரிக்கர்களின் நிலை என்ன? ஈராக்கை ஆயுதபலமாக்கியவர்களின், இவ்வாயுத வியாபாரம் மூலம் மிகப் பெரிய இலாபமீட்டிய முக்கியமாக மேற்குலகின் ஆயுதக் கொம்பனிகளை என்ன செய்வது?

பல அமைப்புக்களை, தனி மனிதர்களை கண்காணித்தும், கைது செய்தும், இரும்புக்கரம் கொண்டு அழித்தும் கொண்டிருந்த காலமது.



* * * *

1954ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதி, பென்சில்வேனியா மாநிலத்திலுள்ள பிலடெல்.்.பியாவில் பிறந்த வெஸ்லி குக் (மமியா அபு-ஜமால்). 'கறுப்பர்களுக்கும்' பொருளாதாரநிலையில் பின்தள்ளப்பட்டோருக்குமான குடியிருப்பொன்றில் வாழ்ந்து வந்தார். தனது 15வது வயதில் பிலடெல்.்.பியாவின் கரும்சிறுத்தைகள் (Black Panthers) அமைப்பில் இணைந்து உதவி பத்திரிகை பேச்சாளராக மாறினார். எழுபதுகளின் ஆரம்பங்களில் ஆபிரிக்க அடையாளம், இயந்திர மயமாதலுக்கு எதிர்ப்பு, இயற்கையுடன் வாழ்தல், பொலிஸ் வன்முறைக்கு எதிர்ப்பு என்று தொடங்கப்பட்ட MOVE என்னும் அமைப்புடனும் இணைந்து செயற்பட்டார். பிலடெல்.்.பியா ஊடகவியலாளர் கூட்டமைப்பான Association of Black Journalistsஇன் தலைவராகவும் இருந்தார். கல்லூரியில் ஆபிரிக்கக் கலாச்சாரம் படிக்கும்போது வகுப்பறைப் பெயராக மமியா அபு - ஜமால் என்னும் பெயரைத் தெரிவு செய்தார். ஊடகவியலாளராகவும், அரசி



களுக்கெதிராக ஈராக் இராணுவம்இரசாயன ஆயுதங்கள் பாவித்ததை ஐ.நா. குழுவானது உறுதிப்படுத்தியிருந்தும், அமெரிக்கா இதுபற்றி அறிந்திருந்தும் ஈராக்குடனான இராஜதந்திர உறவுகள் மீண்டும் உருவாக்கப்பட்டதைக் கூறுகிறது. உண்மையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஈரானிய இராணுவத்திற் கெதிராக இரசாயன வாயு (நச்சுவாயு) எதிர்த்துத் தீர்மானம் கொண்டு வருவதை 1986இல் அமெரிக்காவானது தனது வீட்டோ அதிகாரத்தால் தடுத்திருந்தது.

ஈரானிற்கெதிரான யுத்தத்தில் ஈராக்கிற்கு ஆயுத விற்பனையானது எவ்வாறு நல்ல வியாபாரமாக இருந்ததென்பதை RUPE எழுதுகிறது. "அது ஒரு உற்சாகமான வியாபாரம். அது ஈராக்கையே அழித்தது. இங்கிலாந்தும் பிரான்சும் அதன் முக்கிய ஆயுத விநியோகஸ்தர்கள். போர்த்துக்கல், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட யூரேனியத்தில் இருந்து ஜேர்மனிய உதவியுடன் ஈராக்கானது செறிவூட்டிய யூரேனியத்தைப் பெற்றுக் கொண்டது. ஐக்கிய அமெரிக்க குடியரசானது அதிகரித்து வரும் யுத்த செலவுகளை ஈடு செய்ய சவூதி அரேபியா, குவைத் ஆகிய நாடுகளில் இருந்து பெரிய அளவில் கடனை ஈராக் பெற்றுக்கொள்ள உதவியது. அத்துடன் அமெரிக்காவானது பூச்சி நாசினி தெளிக்கும் ஹெலிகொப்டர்களையும் வழங்கியது. (இதுவே 1988இல் நச்சு வாயுத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டது) Dow Chemicals கம்பனியால் வழங்கப்பட்ட இரசாயனம் பின் மனிதர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. (1986இல்) அமெரிக்க விமானப் படையினரால் ஈராக் விமானிகளுக்கு பயிற்சி,

---

யல் செயற்பாட்டாளராகவும் இயங்கி வந்த இவர் தனது 25வது வயதில் உள்ளூர் வானொலியொன்றிலும் பணியாற்றினார். இவரது திறமை, குரல், முயற்சி என்பவற்றால் விரைவில் நன்கு அறியப்படலானார்.

குடும்பத்திற்காக பல்வேறு பகுதிநேர வேலைகளையும் செய்து வந்த இவர் டாக்சி ஓட்டும் போது 1981ம் ஆண்டின் இறுதிப் பகுதியின் ஒரு அதிகாலையில் கைது செய்யப்பட்டு கொலைக்குற்றம் சுமத்தப்பட்டார். இவரது தம்பி வெளிச்சம் இல்லாமல் பிழையான வீதியால் கார் ஓட்டியபோது பொலிஸார் மறித்தாகவும் அந்நேரத்தில் எதேச்சையாக அந்த வீதியால் டாக்சியில் வந்த அபு - ஜமால் பிரச்சினைப் பட்டதாகவும், அப்போது பொல்க்னெர் (Faulkner) எனும் பெயருடைய பொலிஸை அவர் சுட்டபோது போலிஸும் திருப்பிச் சுட்டதாகக் கூறப்பட்டது. இதில் அந்த பொலிஸ்காரர் இறந்து விடுகிறார். காயத்துக்குள்ளாகி, மருத்துவமனையில் இருந்து பின் அபு - ஜமால் சிறையில் அடைக்கப்படுகிறார். அபு - ஜமால் நீதிமன்றத்தில் இல்லாமலேயே பெரும்பகுதி விசாரணை நடந்து 1982ம் ஆண்டு ஜூலை மாதம் 3ம் திகதி இவருக்கு மரண தண்டனை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. தொடர் எதிர்ப்புகள், போராட்டங்கள் காரணமாக மரணதண்டனை நிறைவேற்றப்படவில்லை. ஆனால், இன்று சர்வதேச ரீதியில் பல கலைஞர்கள், எழுத்தாளர்கள், தெரிதா போன்ற புத்திஜீவிகள் அபு - ஜமாலின் மரணதண்டனைக் கெதிராகவும் வழக்கு விசாரணை நடந்த முறைக்கு எதிராகவும் குரல் எழுப்புகின்றனர். உலகு தழுவிய எதிர்ப்புகளால் 1995ல் நிறைவேற்றப்பட இருந்த மரணதண்டனை இருமுறை ஒத்திவைக்கப்பட்டது. 2001ல் நீதிபதி ஜோன் (Yohn) இவர்மீதான மரணதண்டனையை திருப்பி எடுத்தாலும் வழக்கு மீள்விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்மீதான குற்றச்சாட்டு அப்படியே இருக்க அரசுதரப்பு சட்டத்தரணிகள் மரணதண்டனையை நிறைவேற்றும்படி விண்ணப்பித்துள்ளனர். எனவே அபு - ஜமால் மீதான மரணதண்டனை ஆபத்து தொடர்ந்தபடி உள்ளது.


ஐக்கிய அமெரிக்க குடியரசில் (USA) மரண தண்டனை வழங்குவதென்பது பெருமளவில் நடைமுறையில் உள்ளதொன்றாகும். 1936ல் கடைசியாக இருபதினாயிரம் பார்வையாளர்கள் மத்தியில் Rainey Bethea ஒரு 'கறுப்பர்' ஆபிரிக்க - அமெரிக்கர் தூக்கிலிடப்பட்டார். அதன் பின்னர் மக்கள் மத்தியில் தூக்கிலிடப்படுவதில்லை. இன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் டெக்ஸாஸ் மாநிலத்தின் கவர்னராக 5வருடங்கள் இருந்தபோது 150 ஆண்களினதும், 2 பெண்களினதும் மரண தண்டனைக்கு ஒப்புதல் வழங்கிச் சாதனை படைத்துள்ளார். அபு ஜமாலுக்கு மரண தண்டனை வழங்கிய நீதிபதி அல்பெர்ட் சபோ (Albert Sabo) தனது பதவிக் காலத்தில் 31 பேருக்கு மரணத்தைத் தீர்ப்பாக வழங்கியுள்ளார். இதில் இருவரே வெள்ளையர்கள். இன்று அமெரிக்காவின்

தொழில் நுட்ப ஏற்றுமதிக்கு அங்கீகாரம், அதன்மூலம் ஈராக்கிய ராக்கெட்டுகளின் தாக்கும் தூர அதிகரிப்பு (1988இல்). அது மட்டுமல்ல 1987ஒக்டோபரிலும் 1988 ஏப்ரலிலும் அமெரிக்க இராணுவமானது ஈரானியக் கப்பல்களையும் எண்ணெய்த் தளங்களையும் தாக்கியது"

இதனைச் சேர்ந்து உதவியதாகவோ தூண்டியதாகவோ எடுக்க முடியாதென்றால்!

ஆனால், எவர் முன்பு ஈராக்கை ஆயுதங்களால் நிறைத்தனரோ அவர்களே ஒன்று சேர்ந்து ஈராக்கை குற்றம் சுமத்தி, நாட்டை மூன்று துண்டுகளாக்க விரும்பினர். ஷியா முஸ்லிம் களுக்கு ஒன்று. குர்திய மக்களுக்கு ஒன்று. மற்றையது சுன்னி முஸ்லிம்களுக்கு. இதன்மூலம் ஈராக்கிய மக்களின் எதிர்காலம்பற்றியோ, பத்திரிகைகளில் சொல்லப்பட்டதுபோல் 'ஜனநாயகத்தை நிலைநாட்டுதலை'ப் பற்றியோ கவலைப்படவில்லை. ஈராக்கிய மக்களின் விருப்பங்களிற்கு மதிப்பளிப்பதை விட அமெரிக்க மற்றும் மேற்குலகின் நலன்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது.

ஈரானுக்கு எதிரான யுத்தத்தில் இருபக்கமும் 10 இலட்சம் மக்கள்வரை அழிக்கப்பட்டபோது அமெரிக்கா சதாமுக்குப் பின்னால் நின்றது. இக்காலத்தில் ஈராக்கிய ஜனாதிபதி மிகப் பலமானவராகவும் தன்னை யாரும் தண்டிக்க முடியாதென்றும் நம்பிக்கை கொண்




டார். இவ்விசேட சலுகையானது உலகில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு மட்டும் உரித்தானது என்பதை அவர் உணர்ந்திருக்கவில்லை. ஒரு யுத்தத்தை இந்த வகையில் நடாத்துதற்கும் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமானோரின் சாவிற்கு காரண மாயிருப்பதற்கும், ஒரு அந்நிய நாட்டின்மேல் போர் தொடுப்பதற்குரிய போலிக் காரணங்களைக் கண்டு பிடிப்பதற்கும், அதன் குடிமக்களை சித்திரவதை செய்வதற்கும், பலூட்ஜா போன்ற நகரங்களை நிர்மூலமாக்குவதற்கும், நாட்டை மூன்று துண்டுகளாக்கி ஆபத்துக்குள்ளாக்குவதற்கும், சுற்றியுள்ள முழுப் பிரதேசத்தையே நிர்மூலமாக்கவும், இவை எல்லாவற்றையும் 'விடுதலை'யின் பெயரில் ஏற்பதற்கும் அமெரிக்காவால் மட்டுமே முடியும்

சிறைச்சாலைகளில் 3500 பேருக்குமேல் மரணதண்டனை விதிக்கப்பட்டோர் தமது நாட்களை எண்ணிய படியுள்ளனர். இவர்களில் 42 சதவீதமானோர் 'கறுப்பர்'களாவர். அமெரிக்க மொத்த சனத்தொகையில் இவர்கள் 12சதவீதம் மட்டுமேயுள்ளனர். இன்றைய இனவெறி, போலிஸ் வன்முறை, பொருளாதார ஏற்றத் தாழ்வு, வறுமை போன்றன நிலவுகிற அமெரிக்காவில் நீதியான விசாரணை என்பது சாத்தியமற்றதே. அரசு சார்பற்ற அமைப்புக்களும், ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவையும் உலக நாடுகளிலிருந்து மரணதண்டனை முறையை இல்லாது செய்யுமாறு தொடர்ந்து குரல் எழுப்புகின்றன. உலகில் இன்றும் 70 நாடுகளில் இம்முறை அமுலில் உள்ளது.

Hinter diesen Mauern (documentary film 1995/96) 'இந்தச் சுவர்களுக்கு பின்னால்' எனும் விவரணப் படமானது விசாரணையில் நடந்த முறையிலுள்ள முறைகேடுகளையும் அபு - ஜமாலின் நேர்காணலோடும் வெளிக்கொணர்ந்தது. ஆனால் இதை ஜேர்மனியில் ஒளிபரப்ப எந்தத் தொலைக்காட்சியும் முன்வரவில்லை. 2000ம் ஆண்டில்தான் 3sat எனும் தொலைக்காட்சி நிலையம் முதன்முதலில் இவ்விவரணப் படத்தை ஒளிபரப்பியது. பாரிஸ் நகரமானது 2003ல் அபு-ஜமாலுக்கு கௌரவப் பிரஜை எனும் பட்டம் வழங்கியது. அப்போது நடந்த வைபவத்தில் 1981இல் பிரான்சில் மரண தண்டனை முறை நிறுத்தப்பட்டதை மேயர் நினைவு கூர்ந்தார். 2006ல் பாரிஸின் அண்மைய நகரமான சென்ற் டேனிஸ் (Saint Denis)ம் அவருக்கு கௌரவப் பிரஜை விருதைக் கொடுத்தது. அத்துடன் அங்கு கட்டப்பட்டு வரும், ஐரோப்பாவிலேயே பெரியதாக அமையவிருக்கும் மண்டேலா விளையாட்டரங்குக்கு செல்லும் பாதைக்கு அபு - ஜமாலின் பெயரைச் சூட்டிக் கௌரவித்துள்ளனர்.

சிறையிலிருந்தபடியே அபு- ஜமால் எழுதியவை We want Freedom: A Life in the Black Panther Party, Death Blossoms, All Things Censored, Faith of Our Fathers நூல்களாக வந்துள்ளன.



இன்று மமியா அபு - ஜமால் மீதான மரணதண்டனைக்கு எதிரான போராட்டமென்பது இனவெறிக்கு எதிரானதாக, இடதுசாரித் தன்மையுடைத்ததாக, உலகமயமாதலுக்கு எதிரானதாக, மரணதண்டனைக்கு எதிரானதாக என்று பல்வேறுபட்ட பரிமாணங்களுடன் கூடிய ஒரு குறியீடாகி யுள்ளது.

புகலிட நிகழ்வுகள்

தோழர் ரட்ணசபாபதிக்கு நினைவுக் கூட்டம்	14.01.2007	94
பொ. கருணாகரமூர்த்தியின் நூல்கள் வெளியீடு	28.12.2006	95
இலங்கை அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த கலந்துரையாடல்	10.12.2006	99
ரவிராஜ் நினைவுக் கூட்டம்	09.12.2006	100
இலண்டன் தமிழ்க் குறுந்திரைப்பட விழா	25.11.2006	101
திருமறைக்கலாமன்றம் — கலைவண்ணம் 2006	19.11.2006	103
ஏ.ஜே. நினைவுக் கூட்டம்	18.11.2006	104
இலண்டன் தமிழ் நாடக விழா — 2006	17.11.2006	106
வீ.ஆனந்தசங்கரி அவர்களுக்கு யுனெஸ்கோ விருது வழங்கல் வைபவம்	16.11.2006	108
ஸ்ருட்காட் கருத்தரங்கு	11.11.2006	111
மகாஉத்தமன் நினைவு நிகழ்வு	05.11.2006	112
25 வது பெண்கள் சந்திப்பு	04.11.2006	112
புலம்பெயர்ந்தோரும் சமாதானமும் கருத்தரங்கு	27.10.2006	113
முஸ்லிம் மக்களும் பொது இணக்கப்பாட்டிற்கான வேலைத்திட்டமும் கலந்துரையாடல்	01.10.2006	114

புகலிட நிகழ்வுகளின் தொகுப்பு

தெருக்கூத்தன்

புதிய திசைகள்

தோழர் ரட்ணசபாபதிக்கு நினைவுக் கூட்டம்

14.01.2007 — ஞாயிற்றுக்கிழமை

கார்ஜ் சார்செல் (பிரான்ஸ்)

இளஞ்சேய்

2006ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் திகதியன்று தனது 68வது வயதில் மறைந்த, ஈழப்புரட்சி அமைப்பின் ஸ்தாபகர் தோழர் ரட்ணசபாபதியின் மறைவை யொட்டிய நினைவுக்கூட்டம் 14. 01. 2007 ஞாயிற்றுக் கிழமை மாலை ஈரோஸ் அமைப்பினரின் பிரான்ஸ் கிளையினரால் கார்ஜ் சார்செலில் நடாத்தப்பட்டது. ஈரோஸ் அமைப்பின் தோழர் ரட்ணசபாபதியின் நினைவாக இடம்பெற்ற இக்கூட்டத்திற்கு ஈரோஸ் அமைப்பின் தோழர்களும் ஆதரவாளர்களும் அத்துடன் மாற்று இயக்கங்களைச் சேர்ந்த தோழர் களும் கலந்து கொண்டு தமது அஞ்சலியை தெரிவித்தனர். இந்நிகழ்வுக்குத் தோழர் அழகிரி தலைமை தாங்கி நெறிப்படுத்தினார். சுவிஸ், இங்கி லாந்து போன்ற நாடுகளிலும் இருந்து தோழர்கள் வருகை தந்திருந்தனர். இலண்டனில் இருந்து பி. ஏ. காதர் அனுப்பி வைத்த அஞ்சலிக்குறிப்பு வாசிக்கப் பட்டது. பிரபா, யேசுரத்தினம், சுகன், பாலகிருஷ்ணன், அசோக், யோகரட்ணம், ஜென்னி, ரயாகரன், மனோ, தேவதாஸ், குகன், எம்.ஆர்.ஸ்ராலின், மோகன் ஆகியோர் தோழர் ரட்ணசபாபதியின் ஈழவிடுதலைப் போராட்டத்தின் மீதான பங்கு குறித்துத் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.



சுகன் - அழகிரி - ஜெனனி

போராட்டத்தின் ஆரம்பகாலங்களில் இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்ட இயக்கங்கள் தோன்று வதற்குக் காரணமாக இருந்தவரும் மலையக மக்களின் பிரச்சனைகள் மீது பிரத்தியேகமான அக்கறை செலுத்திப் போராடியவரும் என்னும் தளங்களில் தோழர் ரட்ணசபாபதியை நினைவு கூர்ந்தனர். ஈழம், தர்க்கீகம் ஆகிய இதழ்களை ஆரம்பித்து வைத்தவர். அத்துடன் தோழர் ரட்ணசபாபதி அனைத்து இயக்கங் களும் சர்வதேச பயிற்சிபெறக் காரணமாய் இருந்தார் என்பதுடன் விடுதலை இயக்கங்களிடையே ஐக்கி யத்தை ஏற்படுத்த உழைத்தவர்களில் தோழர் ரட்ணசபாபதியின் பங்களிப்பு காத்திரமானது எனவும் நினைவு கூரப்பட்டது.

இந்த நினைவுக் கூட்டத்தின் இறுதியில் தோழர் ரட்ணசபாபதியின் நினைவு நூல் ஒன்றும் ஈரோஸ் அமைப்பின் பிரான்ஸ் கிளையினரால் வெளியிடப் பட்டது.

பொ. கருணாகரமூர்த்தியின் நூல்கள் வெளியீடு

28.12.2006 — வியாழக்கிழமை

பெர்லின் (ஜேர்மனி)

இரா. றஜீன்குமார்

இரு நூல்களும் கூடவரும் தமிழ் மனமும்

நூல்கள்:
பேர்லின் இரவுகள் (விரணம்)
கூடுகலைதல் (சிறுகதைகள்)
ஆசிரியர்: பொ. கருணாகரமூர்த்தி
காலம்: 28. 12. 2006
இடம்: மகாராணி - இலங்கை இந்திய உணவகம், பேர்லின்

காலம் எல்லோரையும் துரத்துகிறது. கலைஞர்கள் காலத்தைத் துரத்த முயற்சிக்கிறார்கள். புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களில் சமகாலத்தில் பலராலும் அறியப்பட்ட எழுத்தாளரான பொ.கருணாகர மூர்த்தியின் இருநூல்கள் வெளியீடு கலாரஞ்சினியின் முன்நடாத்தலில் இனிதே நடந்தது. 'பேர்லின் இரவுகள்' விரணத் தொகுப்பை சுரீந்திரன் வெளியிட்டுவைத்து அறிமுகவுரையாற்ற. 'கூடு கலைதல்' சிறுகதைத் தொகுப்பை உமா அறிமுகப்படுத்தி எழுத்தாளரின் அனுமதியுடன் அறிமுக - விமர்சனவுரையாற்றினார். தொடர்ந்து தனபாலன், சந்தூஸ், பரமசிவா, வரத ராஜன் மற்றும் றஜீன்குமார் ஆகியோர் விமர்சனவுரை களையாற்றினர். முதற்பிரதியை நவரத்தினராசாவும், இரண்டாம் பிரதியை சிவஞானமும் பெற்றுக் கொண்டனர். ஆவணப்படுத்தலின் முக்கியம் கருதி அவரவராற்றிய உரைகளின் சாராம்சத்தை மேற்கொண்டு அறிக.

சுரீந்திரன்:

அண்மையில் காலமான கவிஞன் சு. வில்வரத் தினம், மலையகக் கவிஞன் தமிழ்மோவியன், எழுத்தா ளரும் இலக்கியப் பணியாளருமான வரதர் ஆகியோரின் நினைவுகூரலினூடே, எழுதுவதிலும் வெளியிடுவதிலு முள்ள சிரமங்களைச் சுட்டிக்காட்டி நேரத்தை யொதுக்கி, தன்னையொதுக்கி இந் நூல்களை வெளிக் கொணர்ந்திருக்கும் கருணாகரமூர்த்தியை கௌர விக்க வேண்டிய கடப்பாட்டை வலியுறுத்தி, ஒரு வாடகைக்கார்ச் சாரதியின் இரவு நேர அனுபவங் களை, வாடிக்கையாளர்களின் குணாம்சங்களை, கதையாடல்களை, பெர்லின் பற்றிய தகவல்களை, தொழில் சார்ந்த பிறர் அறியா நுணுக்கங்களை தனக்கே உரிய நகைச்சுவையோடு கேட்போருக்கு ஏற்ற முறையில் சுவாரஸ்யமாகச் சொல்லும் திறன் கருணாகரமூர்த்திக்கு வாய்த்திருப்பதாகக் கூறி இந்த நூலில் அவர் பல நல்ல தமிழ்ச் சொற்களையும் உருவாக்கம் செய்திருப்பதாகக் கூறினார்.

மேற்கொண்டு குறிப்பிடுகையில் ஜெர்மன் சுற்றுலாத் துறை இதையறிந்தால் மொழிபெயர்த்து, விநியோகம் செய்யக்கூடிய அளவுக்கும் ஒரு குறுந்திரைப்படமாக எடுக்கக் கூடிய அளவுக்கும் தகுதி வாய்ந்த இந்த நூல், அவரது இதுவரை வெளிவந்த படைப்புக்களில் உச்ச நிலையில் இருப்பதாகவும் எழுத்து லாவகம் கைவரப் பெற்ற இவரின் எழுத்துக்களினூடே ஒரு தமிழ் மனம் சேர்ந்து வருவதாகவும் தமிழ் இலக்கிய உலகில் மிகவும் பேசப்படுகின்ற கருணாகரமூர்த்திக்கு உறு துணையாகிய அவரது மனைவிக்கு நன்றி கூறியும் அவரது தொடர் வெளியீடுகளில் அனைவரும் தொடர்ந்து பங்கு கொள்வோம் என்றும் கூறி முடித்துக் கொண்டார்.









கலாரஞ்சனி - சுசீந்திரன் - உமா

உமா:

நாட்காட்டிகளின் துணையோடு நகரும் வாழ்வை போர்ச்சூழலில் மக்களின் கனவுக் கூடு கலைக்கப்பட்டதையும் காலக்கெடு விதித்தும் விதிக்காமலும் 1990 இல் முஸ்லிம்கள் கலைக்கப்பட்டதையும் இதுவரை தொடர் நிகழ்வாய் மக்கள் கலைக்கப்படுவதையும் சிறுவர்களை இராணுவமயப்படுத்தல், சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம், அனைத்தினதும் யதார்த்தத்தின் குறியீடாக 'கூடு கலைதல்' அமைகிறது என்றும் அதில் 'ஆத்தி', 'கூடு கலைதல்' என்பவை தன்னைக் கவர்ந்த சிறுகதைகள் என்றும் சில இடங்களில் இவரது எழுத்துக்கள் வறுமையை, இயலாமையை, அங்கக் குறைபாடுகளை எள்ளி நகையாடுவதாகவும் கூறி, இத்தகைய புண்படுத்தல்கள் இன்றி நல்ல சிந்தனைக்குரிய நகைச் சுவையை வழங்கிய சார்லி சப்ளினையும் நினைவு கூர்ந்தார். 'கதறினா' என்ற சிறுகதையில் பெண்களை கார்களுக்கு ஒப்பிட்டு இருப்பது மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என்றும் ஆண் எழுத்தாளர்களின் முதல் இலக்கு பெண்களே என்றும் கூறி வைத்துக் கருணாகரமூர்த்தியின் தொடர் வெளியீடுகளில் நாம் அனைவரும் பங்குபெறவேண்டுமென்றும் கூறி முடித்தார்.

தனபாலன்:

வாசிப்பின் முக்கியத்துவத்தையும் வாசிப்பினூடே எழுத்தாளர்களோடும் படைப்பில் வரும் கதாபாத்திரங்களோடும் உரையாட முடியுமென்றும் தேர்ந்த வாசகனே நல்ல விமர்சகனாக முடியும் என்றும் வலியுறுத்தி கருணாகரமூர்த்தியின் 'பெர்லின் இரவுகளி'னூடே நாம் இதுவரையறியாத தகவல்களையும் கலாசார முரண்களையும், கலைச்சொற்களையும் அறிய முடிகிறது என்றும் கூறி வெள்ளையரல்லாத ஒருவர் வெள்ளையர்களைச் சந்திக்கும் தொழில் செய்கின்றபோது தம்மை நல்லமனிதர்களாகக்காட்ட வேண்டிய தேவை எல்லோருக்கும் இருக்கிறது என்றும் அதை, தான் பெர்லின் இரவுகளில் தரிசிப்பதாகவும் தொழில் மகத்துவம் பேணப்படவேண்டும் என்றும் கூறி நூலின் சில சுவாரஸ்யமான பகுதிகளை நினைவு கூர்ந்தார்.

சந்துரஸ்:

பார்வைகள் மனிதருக்கு மனிதர் வேறுபடும் என்றும் புள்ளி விபரங்களில் இருந்து புள்ளிவிபரங்களை எடுப்போர் பற்றி அறிந்துகொள்ள முடியுமென்றும் அதைப்போலவே படைப்புகளில் இருந்து படைப்போரை அறிந்து கொள்ள முடியும் என்றும் யதார்த்தம் என்பது புறவயமாகப் பார்க்கப்படுவது அல்ல என்றும் எழுத்தாளர்கள் தமது அனுபவங்களை எப்படி மொழிபெயர்க்கிறார்கள் என்பது முக்கியம் என்றும் நீண்டகாலமாகவே தமிழ்ச் சிறுகதைகள், நாவல்கள் அதற்குரிய நிலப்பரப்பு மொழியை விட்டு நடுத்தர வர்க்க மொழியை வரித்துக்கொண்டிருப்பதாகவும் கே.டானியலின் எழுத்துக்கள் குறிப்பிட்ட நிலப்பரப்பில், குறிப்பிட்ட மனிதர்களின் வேறுவகையான வாழ்வை வெளிக்கொண்டு வருவதாகவும் கூறி கருணாகரமூர்த்தியின் 'பெர்லின் இரவுகள்' இல் வரும் ஒரு முஸ்லிம் பயணி கருணாகரமூர்த்தியை ஒரு முஸ்லிம் என நினைத்து அரைது டாக்சியில் ஏறி, "எனது பணம் ஒரு முஸ்லிமுக்கே சேரட்டும்" என்று கூறியதை வைத்து, "இது போன்ற சின்னச் சின்ன செயல்கள் தான் யூதருக்கு எதிரான நாசிகளின் மனோபாவத்தை வளர்த்தது" என்ற வாசகம் ஒருவித வெறுமனே மீள ஒப்பித்தல் என்றும், அது ஆரோக்கியமானதல்ல என்றும் கூறினார். 'என்னினமே என் சனமே' என்ற சிறுகதையில் சாதியம் மேலோட்டமாகப் பார்க்கப்பட்டதென்றும் சாதியம் இன்று வேறு வடிவில் ஆயுத பலத்தில் கட்டிக் காக்கப்படும் நிலைக்குச் சென்றுள்ளது என்றும் குறிப்பிட்ட சந்துரஸ், அந்தக் கதையில் வரும் தமிழனின் மனைவியான ஆயிஷாவை தமிழ்ப் பெண் என்று வரையறை செய்வது மிகவும் நிதானமான ஆழ்மையவாதம் எனவும் சுட்டிக் காட்டினார்.

தனது பார்வை இப்படித்தான் இருக்கும் என்று தெரிந்தும், தன்னை விமர்சனம் செய்ய அழைத்தமைக்காக கருணாகரமூர்த்திக்கு நன்றி கூறினார்.

பரமசிவா:

வளர்ந்துவரும் விமர்சகரான சிவா, கருணாகரமூர்த்தியின் எழுத்துக்கள் இலங்கை, இந்தியப் பேச்சு

மொழியில் கட்டமைக்கப்பட்டிருப்பதாகக் கூறி, கருணாகரமூர்த்தியின் எழுத்தில் கல்வியை வைத்து மக்களைப் பேதம் பிரித்திருப்பதைச் சுட்டிக் காட்டி, சமூகச் சிக்கல்களினால் தான் உயர் கல்வியைக் கற்க முடியவில்லை என்றும் அதனால் இந்த நூலை விமர்சிக்கும் தகுதி தனக்கு இல்லையா என்றும் கேள்வி எழுப்பினார். 2001ம் ஆண்டு திருமறைக் கலாமன்றக் குழுவாக யாழ்ப்பாணம் சென்றிருந்த போது அங்கு ஒரு வீட்டில் தங்களுக்குச் சிரட்டையில் தண்ணீர் கொடுத்ததை நினைவுகூர்ந்த சிவா, சமத்துவம் அற்ற சமூகத்தில் கோரிக்கப்படும் 'தேசிய ஐக்கியம்' பற்றி ஆதங்கப்பட்டார். விசாவுக்காக வெளிநாடுகளில் தம்மிலும் வயது கூடிய பெண்களை இளைஞர்கள் திருமணம் செய்வது ஒருவகைச் சோரம் தான் என்னும் கருணாகரமூர்த்தியின் கதை மாந்தரின் மொழியைச் சர்ச்சித்த சிவா சீதனத்திற்காக, விசாவுக்காகத் தம்மிலும் பல குறைந்த பெண்களைத் திருமணம் செய்தால் அது சோரமில்லையா என்றும் எழுத்தாளரிடமும் கூடியிருந்த சபையோரிடமும் கேட்டுவிட்டு நன்றி கூறி அமர்ந்தார்.

வரதராஜா:

தக்க தயாரிப்பின்றித் தான் வந்து விட்டதாகவும் கொஞ்ச நஞ்சத் தயாரிப்பையும் தனக்கு முன் பேசியவர்கள் அள்ளிக்கொண்டு போய் விட்டதாகவும், நேர்மையாகக் கூறிச் சுருக்கமாக முடித்துக் கொண்டார்.



இரா. ரஜீன்குமார்

ரஜின்குமார்:

ஒரே மூச்சில் படித்து முடிக்கப்பட்ட கருணாகரமூர்த்தியின் இரண்டு நூல்களும் மிகவும் அழகான வேலைப்பாடுகள் கொண்ட படைப்புக்கள். இவரது படைப்புக்களில் வரும் கதைமனிதர்கள், புதிய சொற்கள், தகவல்கள் போன்றவற்றில் இவர் கொண்டிருக்கும் சுயமதிப்பீடுகள் நிதானமாக ஆய்வு செய்யப்பட வேண்டியவை.

1. தியான மாலையுடன் கேளிக்கை விடுதிக்குச் செல்லும் முஸ்லிம்
2. நாசிகளுக்கு யூதர்கள் மீதான வெறுப்பை தூண்டக் கூடியதாக இருந்த காரணங்கள் எனக் கற்பித்தல்
3. ஒரு ஆபிரிக்கனைப் போல் பாவனை செய்த தமிழ் இளைஞனும் தமிழ்ச் சமூகம் மீதான அவனது கசப்பும் இரைதுபரிதலும்
4. கள்ளம் நிறைந்த கண்கள் கொண்டதாக இவர் கண்ட ஒரு செக்ஸ் தொழிலாளி
5. முஸ்லிம் அல்லாது செய்யப்பட்ட ஆயிஷா
6. கால் வளைந்த இயக்கக்காரன்
7. காட்டிக் கொடுப்புகள்
8. இயக்கங்களின் கூட்டமைப்பும் அதன் அழிப்பும்
9. திருமணம், சோரம் போதல், விபச்சாரம் பற்றிய இவரது கருத்தியல்
10. பூவிற்கும் பாக்கிஸ்தானி
11. யுத்தத்தாலும் சுனாமியாலும் அழிந்த தமிழ்க் குழந்தைகளின் எண்ணிக்கையை எடுகட்ட, புலம்பெயர் தமிழர்கள் நிறையப் பிள்ளைப் பெறுதல்
12. புராணகால இராட்சசியாக ஒரு ஓராங் ஊட்டானாகக் சித்தரிக்கப்பட்ட வியாளி என்னும் எழுத்தமிழ் விளிம்புநிலைப்பெண்

இப்படியாக "இரவில் ஜொலிக்கின்ற நட்சத்திரங்களைவிட அவற்றினின் இடையே உள்ள இருள் அதிகமாய்ப் பேசுகிறது" என்கின்ற பிரமிளின் கவிதை வரிகளைப்போல், நிறையவே பேசுகின்ற கருணாகரமூர்த்தி அவர்களது அநேகமான ஆக்கங்கள் அவரது out line ஆல் தீர்மானிக்கப்படுவன. மிகவும் ஆழமான படைப்புக்கள் அல்லது மகா படைப்புக்கள் எல்லாம் கதைக்களத்துள் கதை மாந்தர்களை உள்இறக்கி, அவர்களை எழுதுபவர்களின் சுய மதிப்பீடு இன்றி சுதந்திரமாக நடமாட விடுபவை. இவ்வகை முயற்சிகளை எதிர்காலத்தில் கருணாகரமூர்த்தி செய்வாராயின் தமிழுக்கும் நவீன படைப்புலகிற்கும் மேலும் உரம் சேர்ப்பார். இவரது சில படைப்புக்களைச் சாதியப்படுமாயின் தனித்த விமர்சனம் எழுதலாமென்றிருக்கிறேன்.

கருணாகரமூர்த்தி:

முடிவில் ஏற்புரையாற்றிய கருணாகரமூர்த்தி அவர்கள், முன் வைக்கப்பட்ட விமர்சனங்களை இன்முகத்துடன் எதிர்கொண்டார். தான் விமர்சனங்களை உள்வாங்கியுள்ளதாகவும் தான் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன்தான் என்றும் தன்னால் அப்படித்தான் எழுத முடியும் என்றும் கூறினார்.

(கார்ல் மார்க்ஸ் கூட நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர் தான். நாங்கள் எல்லோரும் தான். ஆனால் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் பார்வை என்பதும் வேறுவேறானவை.)

முடிவில் அனைவருக்கும் நன்றி கூறினார் கருணாகரமூர்த்தி.

பெர்லின் இரவுகள் (கட்டுரைகள்)
ஆசிரியர்: பொ. கருணாகரமூர்த்தி
வெளியீடு: உயிர்மை பதிப்பகம்
11/29 சுப்பிரமணியம் தெரு
அபிராமபுரம்
சென்னை 600 018
தமிழ்நாடு. இந்தியா.
e-mail: uyirmmai@yahoo.co.in
தொலைபேசி: 00914424993448

கூடு கலைதல் (சிறுகதைகள்)
ஆசிரியர்: பொ. கருணாகரமூர்த்தி
வெளியீடு: கனவுப்பட்டறை
3 பிரகதாம்பாள் தெரு
நுங்கம்பாக்கம்
சென்னை 600 034
தமிழ்நாடு. இந்தியா.
e-mail: kanavuppattarai@kanavuppattarai.com
தொலைபேசி: 00914428216373

♣ ♣ ♣ ♣ ♣

இலங்கை அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த கலந்துரையாடல்

10.12.2006 — ஞாயிற்றுக்கிழமை

(இங்கிலாந்து)

இளவேந்தன்

அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக இலங்கை ஜனாதிபதியினால் அமர்த்தப்பட்ட 18 பேர் கொண்ட வல்லுநர் குழுவின் 11 உறுப்பினர்கள் (6 சிங்களவர்கள், 4 தமிழர்கள், 1 முஸ்லீம்) பெரும்பான்மை அறிக்கையை (Majority Report) டிசம்பர் 6ம் திகதியன்று வெளியிட்டுள்ளனர். இந்நிபுணர்கள் குழு பிரிவினைவாதத்திற்குத் துணை போவதாகக்கூறி டிசம்பர் 12ம்திகதியன்று All Party Representative Committee (APRC) இருந்து தாம் வெளியேறுவதாக ஜேவிபி இன் தலைவர் சோமவன்ச அமரசிங்க செய்தியாளர்களுக்குத் தெரிவித்து உள்ளார்.

இலங்கையைப் பல்லின, பல்வேறு மதங்கள் கொண்ட தீவாக கணித்துள்ள இவ்வறிக்கையானது மாகாண சபைகள், உள்ளாட்சி சபைகள் மூலமாக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளவும் பரவலாக்கவும் வழிவகைகளைக் கண்டுள்ளது. சிறுபான்மையினருடன் அதிகாரங்களைப்பகிர்ந்து கொள்ளாததே நிலைமை இவ்வளவு மோசமடைந்ததற்குக் காரணமெனக் குறிப்பிடும் இவ்வறிக்கை முழுமையான அதிகாரப்பரவலாக்கலை ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தி உள்ளது. மேலும் ஜனாதிபதியாக உள்ளவரின் இனத்தைச் சாராத இரு வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் துணை ஜனாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வறிக்கை தொடர்பான அரசியல் கலந்துரையாடல் தமிழ் சமாதான ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. றைஸிலிப்பில் 2006ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் திகதியன்று இடம்பெற்ற இச்சந்திப்பிற்கு அரசியல் ஆய்வாளர் வி. சிவலிங்கம் தலைமை தாங்கினார்.

இந்நிபுணர்களின் தீர்வுத் திட்டத்தில் சில பலவீனமான அம்சங்கள் இருந்தாலும் கட்சி அரசியல் வேறுபாடுக்கு அப்பால் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று எனப் பெரும்பாலும் அனைவரும் அதனை வரவேற்றனர்.

மேலும் இத்தீர்வுத் திட்டத்தினை சகல தரப்பினரும் ஏற்றுக் கொண்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண்டும் என்பதும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

ரவிராஜ் நினைவுக் கூட்டம்

09.12.2006 – சனிக்கிழமை

கனடா

வினோதன்

படுகொலை ஒன்றின் 31ம் நாள் நினைவு

படு கொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் 31ம் நாள் நினைவு தினம், அவருடன் கல்வி கற்ற, யாழ். பரியோவான் கல்லூரி மாணவர்களால் Scarborough Borrws Hall இல் மார்கழி 09ம் நாள் நண் பகல் 11:00 மணிக்கு நடைபெற்றது.

அன்ரன் பாலராஜ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முன்னாள் யாழ்.பரியோவான் கல்லூரி ஆசிரியர் திரு. தவராஜலிங்கம், மூத்த பத்திரிகை யாளர் டி.பி.எஸ். ஜெயராஜ், சக மாணவன் ம.ரகுநாதன் (ரதன்) ஆகியோர் உரையாற்றினர். சுமார் 75 மாணவர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோருடன், படு கொலை செய்யப்பட்ட முன்னாள் யாழ்.பரியோவான் கல்லூரி அதிபர் ஆனந்தராஜாவின் துணைவியாரும் கலந்து கொண்டனர்.

திரு குமார் பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கி ரஸில் கொழும்பு மாநகரசபை வேட்பாளராக தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த ரவிராஜ், பின்னர் யாழ் மாநகரசபை உதவி மேயராக, மேயராக, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தார்.

தனித்தமிழ் ஈழத்தை ஆதரிக்காத ரவிராஜ், சிங்கள மக்கள் மத்தியில் ஒன்றிணைந்த இலங்கையில் மாநில சுயாட்சிக்கான பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்தார். இவ்வாறு செயல்பட்ட ஒரே தமிழ் பா.உ. ரவிராஜ் ஆகத்தான் உள்ளார்.

எந்தத் தனிமனித கொலையும் ஏற்றுக் கொள்ள முடியாது. இக் கொலைகள் குளத்தில் எறியும் கல் போன்றது. ஓர் அதிர்வை ஏற்படுத்திவிட்டு அடங்கிவிடும். ஒருவனின் மரணத்தில் எமது வெற்றியை "மண்டையில் போட்டுவிட்டார்கள்" எனக்கூறி கொண்டாடுகின்றோம். இது தான் எமது பகுத்தறிவின் கூர்ப்பு.

ரவிராஜ் தனது மரணத்தை யாழ் மேயராக இருந்த காலங்களில் இருந்து எதிர்பார்த்தார். யாழ் மேயராக இருந்தவர்களில் இவர் ஒருவர் தான் உயிருடன் இருந்தார். இப்பொழுது அதுவும் இல்லை. தனது விட்டு



வாசலில் தனக்காக மரணம் காத்து நிற்கிறது என்று தெரிந்தும், மரணத்தை எதிர்கொண்டார்.

அவரது மகள் கூறியது போல்,

இவரது கொலையை உலகம் சில காலங்களில் மறந்து விடும், ஏனெனில் மற்றொரு கொலை காத்து நிற்கின்றது.

சவப்பெட்டிகளுக்கு
பிணம்
யாருடையது
என்பதில்
அக்கறையில்லை

இலண்டன் தமிழ்க் குறுந்திரைப்பட விழா - 2006

25.11.2006 — சனிக்கிழமை

இங்கிலாந்து

இளவேந்தன்

இலண்டன் 'விம்பம்' கலை இலக்கிய அமைப்பினரின் மூன்றாவது குறுந்திரைப்பட விழா 25.11.2006 சனிக் கிழமை அன்று இலண்டன் புறநகர்ப் பகுதியில் உள்ள லூஷியம் என்னுமிடத்தில் நடைபெற்றது. இதில் திரையிடலுக்குத் தெரிவு செய்யப்பட்ட 11 குறுந்திரைப் படங்கள் ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா, நெதர்லாந்து, கனடா, டென்மார்க் போன்ற நாடுகளில் இருந்து வந்திருந்தன.

நா. சபேசன் அவர்களின் அறிமுக உரையுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. இக்குறுந்திரைப்பட விழா வானது தரமான சினிமாத்துறை பற்றிப் பேசப்படாத ஒரு காலத்தில் தமிழில் திரைப்படம் குறித்த கருத்தாடல் களை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைத்த அண் மையில் மறைந்த ஏ. ஜே. கனகரட்னா என்னும் விமர்சகருக்கு காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்விழாவில் விம்பம் அமைப்பைச் சேர்ந்த மு. நித்தியா னந்தன் அவர்கள் தனது சிறப்புரையில், " 'வேதாந்தி கள் கைக்குள் சிக்கிக் கொள்ளாத கடவுள்' என்று புதுமைப்பித்தன் சொன்னது போல, குறும்பட மொழி யானது இவர்கள் பிடிக்குள் அகப்பட மறுத்துள்ளது. எய்ப்பாடாகிப் போய்விட்ட திரைப்படச் சட்டகச்சோறு குறும்படத் தயாரிப்புகளிலும் நிறையவே அப்பிக் கொண்டுவிட்டது. வாழ்க்கைத் தரிசனமும், கதை சொல்லும் நேர்த்தியும், ஒளிப்பதிவும், பாத்திரங்களின் நகர்வும், நறுக்குத் தெறித்த உரையாடலும் இணைந்து பலம் சேர்க்க வேண்டிய குறும்பட மொழி இன்னும் நமது கலைஞர்களுக்குப் பூரணமாக வசப்படவில்லை என்றே தோன்றுகின்றது" என்று கூறிய அவர், மேலும், "இந்தக் கலைஞர்களின் முயற்சிகள் சரியான வகையில் ஊக்கு விக்கப்படும்போது அவை தரமான திரைப்படங்களைத் தயாரிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும் என்ற எங் களின் நம்பிக்கை வீண்போகாது என்று நம்புகிறோம்" என்றும் தெரிவித்தார்.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக வருகை தந்தி ருந்த க. பேரின்பநாதன் அவர்கள், "விம்பம் அமைப் பானது சீரிய கலை, இலக்கிய முயற்சிகளில் அக்கறை காட்டி வருவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். மணக்கால் எஸ். ரங்கராஜன் போன்ற இசை மேதை களை வரவழைத்தும், குறுந்திரைப்பட விழாக்களை மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து நடாத்தியும் விம்பம் சாதனை புரிந்திருக்கின்றது" என்று தனதுரையில் குறிப்பிட்டார்.

இக் குறுந்திரைப்பட விழாவுக்காக வெளியிட்ட கையேட்டில் யமுனா ராஜேந்திரன் எழுதிய 'விளிம்பு





மறைபொருள்

நிலை மக்களின் உலகு' என்னும் கட்டுரையில் இருந்து சில பகுதிகளை இவ்விடத்தில் தருவது, விம்பம் அமைப்பினரின் குறுந்திரைப்பட இயக்கம் பற்றிய நோக்கை ஓரளவு கண்டுகொள்ள உதவும்.

அவர் இப்படிக் குறிப்பிடுகின்றார்:


"புகலிட நாடுகளின் குறும்படங்கள் அதிகமும் விமர்சன அரசியல் கொண்டவர்களிடமிருந்தே வருகின்றன."

"தமிழ்க் குறும்படங்களின் அறுதியான குணாம்சம் என ஒரு விஷயத்தை நிச்சயமாகச் சொல்லமுடியும். தமிழ் வெகுஜன சினிமாவினால் புறக்கணிக்கப்படும் விளிம்புநிலை மக்களின் பிரச்சினைகளை, அவர்களது வாழ்வின் துயரை இந்தப் படங்கள் பேசுகின்றன. கடந்த பத்து ஆண்டுகளாக நான் பார்த்த காத்திரமான தமிழ்க் குறும்படங்கள் அனைத்துமே விளிம்புநிலைத் தமிழ் மக்களது வாழ்வு பற்றியவை. அவை தலித் மக்களது ஆவேசம் குறித்தவை, கையறுநிலைக் குழந்தைகள் பற்றியவை, கோபமுற்ற பெண்கள் பற்றியவை, உரிமைக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர் துயர் பற்றியவை, அகதி வாழ்வின் துன்பம் பற்றியவை, அநாதைப் பிணங்கள் பற்றியவை, அரவாணிகளின் சோகம் குறித்தவை. இவர்களது வாழ்வு வெகுஜன தமிழ் சினிமாப் படங்களில் பிரதிநிதித்துவப்படுத்தப் படுவதில்லை என்பதை நாம் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

புகலிடப் படங்கள் தமிழ்மொழிப் பரப்பில் புதிதாக உருவாகிவரும் ஒரு போக்காகும். புகலிட சினிமா என்பது ஈழத்தமிழர்களின் சினிமாவின் இன்னொரு பிரிவு எனலாம். ஏனெனில் ஈழத்தில் விடுதலைப் போராட்டம் சார்ந்த பிரச்சினைகளை மையம் கொண்டதாக இன்று குறும்படங்களும் விவரணப் படங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. புகலிடப்படங்கள் ஐரோப்பாவுக்குக் குடிபெயர்ந்தவர்களின் அகதி வாழ்வின் துயர் பற்றிய படங்களாகும்."

"அரசு அனுசரணையுடனும் பெரும் நிறுவனங்களின் ஆதரவிலும் ஹொலிவுட் சினிமாவின் ஆதிக்கத்துடனும்தான் இன்று பெரும்பாலான திரைப்பட விழாக்கள் நடந்தேறுகின்றன. இந்த வகையில் கலைநோக்கும் சமூகப் பிரக்ஞையும் கொண்டவர்கள் தமக்கேயான திரைப்பட விழாக்களை உருவாக்கி வருகிறார்கள். நேபாளத்தில் இயங்கும் ஹமல் திரைப்பட விழா அதற்கொரு உதாரணம். தம்மீது தணிக்கை திணிக்கப்பட்டதால் இந்தியாவில் அதிகாரபூர்வ ஆவணப்பட விழாவிலிருந்து வெளியேறி ஆவணப்பட இயக்குநர்கள் தமக்கேயான விழாவொன்றை ஏற்பாடு செய்துகொண்டார்கள் என்கிற செய்தியினையும் நாம் குறித்துக்கொள்ள வேண்டும்.

ஹமல் அமைப்பின் விழா இப்போது மேற்கத்திய நாடுகளிலும் பரவி வருகிறது. 'நிழல்' நடத்தும்



க. பேரின்பநாதன் - பி. எஸ். சுதாகரன்

குறும்படப் பட்டறைகள், காஞ்சனை திரைப்பட இயக்கத்தின் முயற்சிகள் இத்தகைய தன்மை கொண்டவை. புகலிட நாடுகளிலும் இலண்டனில் இயங்கும் 'விம்பம்', கனடாவில் இயங்கும் 'சுயாதீன திரைப்படக் கழகம்' போன்றவை இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன."

இந்த குறுந்திரைப்படங்களின் விருதுகளுக்கான தெரிவுக்குழுவில் யமுனா ராஜேந்திரன், மு. நித்தியானந்தன், மு. புஸ்பராஜன், றஜிதா சாம், தோழர் வேலு, மீனாள் நித்தியானந்தன், புதியவன், யூட் இரட்ணசிங்கம், சாம் பிரதீபன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

இவ்விழாவில் பரிசு பெற்றவர்களின் விபரம் வருமாறு:

சிறந்த திரைப்படம்:
மறைபொருள் (பொன் சுதா (இந்தியா))
புகலிடத்தின் சிறந்த திரைப்படம்:
மனசு (பி. எஸ். சுதாகரன் (கனடா))
சிறந்த இயக்குநர்:
பி. எஸ். சுதாகரன் (மனசு, கனடா)
சிறந்த தொகுப்பாளர்:
எஸ்.வி.ஜெயராஜ் (ஈழத்துப்பூக்கள், லண்டன்)
சிறந்த ஒளிப்பதிவாளர்:
ரவி அர்ச்சுதன் (மனசு - கனடா)
சிறந்த திரைப்பிரதி:
எஸ்.சண்முகம் (தொடரும்நாடகம், டென்மார்க்)
சிறந்த நடிகை:
யசோதா கந்தையா (கழுவாய், கனடா)
சிறந்த நடிகர்:
பி. எஸ். சுதாகரன் (மனசு, கனடா)

க.கிருஷ்ணராஜா (ஒளியர்), சி. சாந்தகுணம் (புகைப் படக் கலைஞர்) இவர்களுடன் போல் நரேஷ், எஸ்.சங்கர், பத்மநாப ஐயர் ஆகியோரும் இணைந்து விம்பம் குறுந்திரைப்பட விழாவைக் கச்சிதமாக நடத்தினர்.

கனடாவில் இயங்கிவரும் சுயாதீன திரைப்பட மையமும் இலண்டன் தீபம் தொலைக் காட்சியும் இக் குறுந்திரைப்பட விழாவிற்கு ஆதரவளித்தன.

* * * * *

திருமறைக்கலாமன்றம் - கலைவண்ணம் 2006

19.11.2006 — ஞாயிற்றுக்கிழமை

ஒபவில்லியே — பிரான்ஸ்

மரியதாஸ்

உலகெல்லாம் கிளை பரப்பியதோடு மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்களிலும் கிளை பரப்பி காலத்தால் அழியாமல் புடமிட்டு, பழைய கலைவடிவங்களைப் பாதுகாத்து வருகின்ற திருமறைக்கலாமன்ற பாரிஸ்கிளையின் கலைவண்ணம் 2006, கார்த்திகைத் திங்கள் 19ம் நாள் ஒபவில்லியே (பாரிஸின் புறநகர்ப் பகுதி) என்னுமிடத்தில் மாலை 5.00 மணிக்கு நேரம் தவறாமையை மெய்மையாகக் கடைப்பிடித்து குத்து விளக்கு ஏற்றும் நிகழ்ச்சியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பாரிஸ் கிளையின் தலைவர் திரு. வரதராஜா அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

திருமறைக்கலாமன்றத்தின் கீதம் இசைக்கப்பட்டதும் கடந்த வருடம் அகால மரணமடைந்த ஆர்மோனியக் கலைஞர் றொபேட் அவர்களுக்கு அஞ்சலி நிகழ்ச்சியொன்று இடம் பெற்றது. பாரிஸ் கிளையின் உறுப்பினரும் மன்றத்தின் பாரிஸ் கிளையினர் மேடையேற்றிய நாட்டுக் கூத்துகள், இசை நாடகங்கள் போன்றவற்றிற்கு ஆணிவேராக இருந்து பல புதிய கலைஞர்களை உருவாக்கி, ஐரோப்பா எங்கும் ஈழத்துத் தமிழ் பாரம்பரியக் கலைகளை மேடையேற்ற பக்க பலமாக இருந்தவர். அவரால் பயிற்றுவிக்கப்பட்ட பாடல்களைப் பாடிச் சமர்ப்பித்தனர்.

இவைகளைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. ஒலி ஒளி அமைப்புக்கான வாய்ப்புகள் மண்டபத்தில் இருந்தபோதும் அவை சரியாகப் பாவிக்கப்படாமை வருத்தத்திற்குரியது.

கவிதா நிகழ்வொன்று நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பெண்பிள்ளைகளின் கர்நாடக இசை நிகழ்ச்சி மேடையேறியது. புலம்பெயர் வாழ்வில் பரதக் கலையைப் பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பயிற்றுவிப்பதன் மூலம் சமூகத்தில் ஓர் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுவிடலாம் என்ற ஒரு மனப் பான்மையில் பல்லாயிரம் யூரோ செலவில் பயிற்றுவித்து அரங்கேற்றத்துடன் அதை மறந்துவிடுகின்றார்கள். கர்நாடக சங்கீதமும் அப்படி ஆகாமல் பெற்றோர் பார்த்துக் கொள்வார்களா?

இளைஞர்களின் தொடர் நடன நிகழ்ச்சி இடம் பெற்றது. இளைஞர்கள் இதனை உற்சாகத்துடன் வரவேற்றனர். திருமறைக்கலாமன்றத்தின் வழமையான பார்வையாளர்களை இது சங்கடத்தில் ஆழ்த்தியதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. காலமாற்றமும் கட்டாயத் தேவையும் விரும்பியோ விரும்பாமலோ வாழ்க்கையில் புகுந்து விடுகின்றது. உதாரணமாக, மரபுக் கவிதையில் இருந்து புதுக் கவிதை பிறந்த போதும், கர்நாடக சங்கீதத்தில் இருந்து மெல்லிசைப் பாடல்கள் வந்தபோதும், பின் மெல்லிசையில் இருந்து துள்ளிசை பொப் பாடல்கள் என்று வந்தபோதும் ஏற்பதற்குத் தயங்கிய சமூகம் இன்று அவற்றை ஏற்றுக் கொண்டுள்ளது. அதைப்போலவே நாட்டுக் கூத்து, இசை நாடகமாக, சமூக நாடகமாக, மௌன நாடக மாக, குறியீட்டு நாடகமாகப் பரிணாமமடைந்ததை இன்று ஏற்றுக்கொண்டுதான் இருக்கின்றது.

அடுத்து, ஓசை மனோவின், எட்டு குறுஞ் சித்திரங்கள் அடங்கிய கதம்ப நிகழ்ச்சி இடம்பெற்றது. முதலாவதாக இரு பெண்களும் ஒரு ஆணும் ஒரு சினிமாப் பாடலுக்கு அபிநய நடனம் புரிந்தனர். பாவிக்கப்பட்ட உத்திகள் பலரின் பாராட்டையும் பெறச் செய்தது. பின் மூத்த கலைஞர்கள் பங்குகொண்ட கவிதா நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இன்னும் அதிக மான பயிற்சியுடன் மேடையேற்றம் கண்டிருக்கலாமோ என்றெண்ண வைத்தது. தொடர்ந்து இல்வச தொலை பேசியினால் ஏற்படும் பாதகமான அம்சங்களை மட்டும்எடுத்துக் காட்டிய ஒரு குறியீட்டு நாடகம் இடம்பெற்றது. பின்னர், பந்து விளையாட்டும் கலவரமும் என்ற கருத்தில் ஓர் நிகழ்வு.

இன்று வன்முறைகள் இல்லாத சினிமாவே இல்லை என்ற நிலை மலிந்து கிடக்கின்றது என்று ஏங்கிப் போய்க் கிடக்கும் காலத்தில் மேடை நிகழ்ச்சிகளிலும் வன்முறைகளா? தவிர்த்திருக்கலாம். தொடர்ந்து நாட்டுக்கூத்துப்பாடல் இடம்பெற்றது. பொருள் விளங்காவிட்டாலும் இளைய தலைமுறையினரும் ரசிப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அடுத்த நிகழ்ச்சியாக (மிமிக்கிரி) மாற்றுக் குரல் நிகழ்வொன்று இடம்பெற்றது. பரவலாக இன்று மிமிக்கிரி வடிவம் வளர்ந்து கொண்டு வருகின்றபோதும், அன்றைய நிகழ்ச்சி இன்னொரு நாட்டு மக்களின் பேச்சு வழக்கை அதுவும் தமிழை கொச்சைப்படுத்தியதாகத் தான் கருத முடிந்தது. ஒரு சமூகத்தை கொச்சைப் படுத்தும் நிகழ்ச்சியை இனிமேலும் தவிர்ப்பது நல்லது.

திருமறைக்கலாமன்றத்தின் பாரிஸ் கிளையின் 2006 கலைவண்ணம் ஓர் புதிய மாற்றத்தை எடுத்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. குறிப்பாக, மன்றத்தில் இருக்கின்ற கலைஞர்களே பொதுவாக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள். இம்முறை பல புதிய இளைய கலைஞர்கள் உள்வாங்கப்பட்டுள்ள தோடு, மன்றத்திற்கு வெளியில் இருந்தும் நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. இது திருமறைக்கலாமன்றத்தின் எதிர்கால வாசல்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகக் கருத இடமுண்டு. மூத்த கலைஞரும், நாடக, சினிமாப் படங்களின் நடிகரும், தயாரிப்பாளருமான திரு. ஜெயசிங்கம் அவர்கள் கௌரவிக்கப்பட்டமை ஓர் சிறப்பு அம்சமாகும். அவரின் ஆற்றல்களும் திறமைக ளும் அவரினால் அங்கு வெளிப்படுத்தப்பட்டமையும் அவருடைய கௌரவிப்புக்குச் சான்றாகும்.

* * * * *

ஏ.ஜே. நினைவுக் கூட்டம்

18.11.2006 — சனிக்கிழமை

இலண்டன் (இங்கிலாந்து)


இளவேந்தன்

ஏ. ஜே. என்றொரு சகாப்தம்

அண்மையில் ஈழத்தில் மறைந்த விமர்சகரும் அறிஞருமான ஏ. ஜே. கனகரட்னா அவர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று இலண்டனில் உள்ள வால்தம்ஸ்ரோவில் 18.11. 2206 சனிக்கிழமையன்று நடைபெற்றது. இந்த அஞ்சலிக் கூட்டத்தை விம்பம் கலை இலக்கிய அமைப்பினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

சபேசன், மாலி, யமுனா ராஜேந்திரன், நிர்மலா ராஜசிங்கம், புஷ்பராஜன், நித்தியானந்தன், பத்மநாப ஐயர், சிவரஞ்சித், பாலசுகுமார் ஆகியோர் ஏ. ஜே. பற்றிய ஆளுமைகளையும், அவருடனான தங்கள் அனுபவங்களையும், அவரோடு கூட இருந்த நாட்கள் பற்றியும் கனத்த இதயத்துடன் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வினையொட்டி விம்பம் கலை இலக்கிய அமைப்பினரால் சிற்றேடொன்று வெளியிடப்பட்டது. இதில் இடம்பெற்றிருக்கும் 'ஏஜே : அகலத் திறந்த ஆழக் கண்கள்' என்னும் பாக்கியநாதன் அகிலனின்



கட்டுரை யில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஏஜேயின் மிக முக்கியமான பண்பு, அவர் தமது காலத்தின் மேலாண்மை அலைகளால் அடித்துச் செல்லப்படாதவர் என்பது மட்டுமன்றி, அவற்றிற்கு வெளியே தனக்கான தனித்துவமான நிலைப்பாடு களுடன் இருந்தாரென்பதுமாகும். குறிப்பாக, 1960, 1970களில் மார்க்சிய - இடதுசாரிச் சிந்தனைப் பேரோட்டம் முதன்மை பெற்றோடிய நமது சூழலுக்குள் ஏஜேயின் எழுத்துகளும் அவற்றைப் பிரதி பலித்தன. ஆயினும் ஏஜே ஒருவகையில் அந்தப் பேரோட்டத்தின் முதன்மை அலையெறிவுக்கு வெளியிலேயே இருந்தா ரெனக் கூறலாம். அவர், தமது சகபாடிகள் - மார்க்சிய அறிஞர்கள் என அறியப்பட்டோர் மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் நிலைப்பாட்டிலிருந்து அதிகம் விலகியே இருந்தார். அவரிடம் பண்டித மார்க்சியம் இருக்க வில்லை. அது அவருக்கு 'ஆப்த வாக்கியம்' அல்ல. அவரது வாசிப்பும் - பண்பும் அதற்கு அனுமதிக்கவு மில்லை. பதிலாக அவர் மார்க்சியத்தை விமர்சன பூர்வமாகப் பார்த்தவராக - அதன் புதிய, மாறும் சிந்த னைகளை வரவேற்கும் தமிழ் முன்னோடிகளில் ஒருவராகவும் இருந்தார். குறிப்பாக, தமிழ்ப் பண்பாட்டு வட்டகையில் கலை - இலக்கியம் தொடர்பாக மார்க்சியம் கொண்டிருந்த கட்டுப்பெட்டித்தனங்களை தகர்க்கத்தக்க, 'அடிக்கட்டுமானம் - மேற்கட்டுமானம்' தொடர்பான செந்நெறி மார்க்சிய அடிப்படைகளை கேள்விக்குள்ளாக்கும் எழுத்துகளை, பண்டித மார்க் சியம் கோலோச்சிய காலத்தில் ஏஜே அமைதியாக முன்வைத்துக்கொண்டிருந்தார். இது கோபர்ச்சேவின் 'பெரெய்ஸ்ரொய்கா - கிளாஸ்நொஸ்ற்' வரை தொடர்ந்தது. குறிப்பாக றெஜி சிறிவர்த்தனவிடமிருந்து அவர் தமிழுக்குக் கொணர்ந்த முதன்மையான கையிருப்பு இவற்றோடுதான் அதிகம் தொடர்புபட்டி ருந்தது. இதுபோலவே தேசிய இனப்பிரச்சினையில், மார்க்சியத்தின் கோட்பாட்டு நிலைப்பாடு தொடர்பாக ஈழத்தில் தமிழர் உரிமைப் போராட்டத்துடன் எழுந்த கேள்விகள் மத்தியில் ஏஜே கொண்டிருந்த நிலைப் பாடும், அது தொடர்பில் அவரது உழைப்புகளும் முக்கி யமானவை. குறிப்பாகப் பல்கலைக்கழக மறுமலர்ச்சி கழகத்திற்காக ஏஜே மொழிபெயர்த்த 'எல்லாளன் சமாதியும் வரலாற்று மோசடியும்' தொடக்கம் 'அலை' வெளியீடாக வந்த 'மார்க்சியவாதிகளும், தேசிய இனப் பிரச்சினையும்' என்ற நூல் வரை, சிலவேளை அவரது பெயர் தரிக்காது வந்ததாக அறிய முடிகின்ற, இது தொடர்பான வெளியீடுகள்வரை மிக முக்கியமானதே. மட்டுமன்றி இதே சுற்றுக்குள் அடித்த முற்போக்கு அலை வீச்சினுள்ளும் ஏஜேயின் எழுத்துகள் அதனை வற்புறுத்திய பலரது முறையிலிருந்தும் விலகியதும், சர்வதேசத்தன்மையான அளவுகோல்களை உடையது மாகும். 'தேசிய இலக்கியம்: சில சிந்தனைகள்' என்ற, 1961இல் 'மரகதம்' இதழில் எழுதிய அவர் கட்டுரை இதற்குத் தகுந்த சான்றாகும். எல்லோரும் ஒரே திசை யால், ஒரே மாதிரியாகக் கத்திச்செல்கையில் நிதான மாகத்தனது நியாயப்பாடுகளுடன் இருத்தலென்பது ஓர் அறிஞனின் மூலமான குணாம்சமாக இருக்கும். அது ஏஜேயிடம் இருந்தது. ஆகவேதான் ஏஜே எவ்வளவுக்கு எவ்வளவு தன்னைத் தாழ்த்திக்கொண்டாலும் உயரத் தில் தெரியும் தாரகைகளில் ஒருவராக உள்ளார்.

நினைவு ஒரு பாரம்;நினைவு ஒரு வலி. ஏஜே நினை வாகிப் போனார்.

சீனக் கவிஞர் பைஜிங்கின் (கி.பி. 7 - 8) சுயவுரு

பற்றிய கவிதை ஒருவகையில் ஏஜேயைப் பற்றியது போல எனக்குத் தோன்றியது.

பைஜிங்கின் அந்தக் கவிதையுடன் இந்தக் கட்டுரை விடைபெறுகிறது.

சிவந்த கன்னங்கள் - நரைத்த தாடி
இது வைன் குடித்த நான்
கடைசியில்
வருஷங்கள் எல்லாம் ஓடிக் கழிந்த பின்
இப்போதெல்லாம் வெறுமையாகத் தோன்றுகிறது.
நான் வயோதிகனாய்
நோய் கண்டவனாய்
ஒல்லியாய் இருந்த போதிலும்
கவிதைகள் மீதான காதல்
இன்னும் மீதமிருக்கிறது
பிரியமான ஒரு கனவான்
ஒரு திரையில் வரையப்பட்டதான
என் உருவ ஓவியத்தை வைத்திருக்கிறார்
என்றறிந்த போது கொஞ்சம் சிரித்தேன்.



* * * * *

இலண்டன் தமிழ் நாடக விழா - 2006

17.11.2006 — வெள்ளிக்கிழமை

இங்கிலாந்து

மணிவாசகன்

தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் நாடகவிழா 2006

இலண்டன் தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் வருடாந்த நாடகவிழா 2006, கடந்த நவம்பர் 17ம் திகதி வடமேற்கு இலண்டன் பகுதியில் அமைந்துள்ள வின்ஸ்டன் சேர்ச்சில் தியேட்டரில் நடைபெற்றது. க. பாலேந்திராவின் நெறியாள்கையில் திக்குத் தெரியாத காட்டில், மலைகள் வழி மறித்தால், அவசரக்காரர்கள், காத்திருப்பு, சர்ச்சை ஆகிய நாடகங்கள் மேடையேறின. மா. சத்தியமூர்த்தி, தர்சினி சிவசுதன் ஆகியோர் நாடகங்களைத் தொகுத்து வழங்கினர் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட நாடகங்களை ஒரே மேடையில் பார்க்கும் அனுபவம் தனித்துவமானது.

திக்குத் தெரியாத காட்டில்:

அண்மையில் மறைந்த அறிஞர் ஏ.ஜே. கனகரட்னாவுக்கு இந்த நாடகவிழா சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவருடைய நினைவுக்காக அவரால் 1976ல் 'அலை' சஞ்சிகையில் அறிமுகம் செய்ப்பட்ட வார்த்தைகள் ஏதுமற்ற குறுநாடகம் மேடையேறியது. 1969ல் நோபல் பரிசு பெற்ற அயர்லாந்தைச் சேர்ந்த சாமுவெல் பெக்கற் பிரெஞ்சுமொழியில் எழுதிய நாடகம் இது. இப்பிரதி 1978ம் ஆண்டு கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் பாலேந்திராவினால் மேடையேற்றப்பட்டது. தனிநடிப்பு டனான அபத்தப்பாணி நாடகம்.

இந்த உலகம் கொடுக்கக்கூடிய எல்லா நம்பிக்கைத் தோற்றங்களையும் எதிர்கொள்வதற்கும் எல்லா ஆசைகாட்டல்களையும் மறுப்பதற்கும் படிப்படியாகக்


கற்றுக் கொள்ளும் ஒரு மனிதன். உலகம் என்கிற நாடகமேடையில் வீசப்பட்டிருக்கும் ஒரு மனிதன் தனது இருப்பையும் உயிர்ப்பையும் தானாகத் தீர்மானிப்ப தில்லை. தனது எல்லைப்பாடுகள் குறித்தும் எந்த விதமான கட்டுப்பாடும் அவனுக்கில்லை.

இந்த மனிதனின் யதார்த்த நிலை, வாழ்க்கை நிலை, மானிட நிலை, அரசியல் நிலை என்பன அவனுக்கு அசௌகரியத்தையும் வெட்பத்தையும் தாகத்தையும் கொடுக்கிறது. பாலைவனத்தில் கண்களைக் கூசச் செய்யும் வெளிச்சத்தில் ஒரு மனிதன் தூக்கியெறியப்பட்டு விழுவதில் நாடகம் ஆரம்பமாகிறது. அவனுக்கு இந்தச் சூழல் பிடிக்க வில்லை. இருந்தும் வாழ்கிறான். வலப்பக்கத்தில் ஒரு சீழ்க்கை ஒலி அழைப்பு - ஆசைகாட்டல். இந்த வாழ்க் கையில் இருந்து தப்பித்துப் போகும் ஆசையை அவனிடத்தில் உருவாக்கும் அழைப்பு அது. அதற்கு எடுபட்டு அதன் வழி போகிறான். உடனே திரும்பவும் மேடைவெளியில் தூக்கி வீசப்படுகிறான். இவன் எங்கு செல்வான்? தன்னுடைய கட்டுப்பாட்டில் இல்லாத, தன்னை அலைக்கழிக்கின்ற வெளிவிசைகளினால் தனது வாழ்வு - இருப்பு கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதையும், இதிலிருந்து தப்பி ஓடிவிடமுடியாது என்பதையும் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறான். அடுத்த அழைப்பை அவன் சட்டை செய்வதில்லை. அலட்சியப்படுத்துகிறான். பாலைவனத்தில் நிழல் கொடுக்க ஒரு மரம் தோன்றுகிறது. அதுவும் தருணத்தில் நிழல்தர மறுக்கிறது. அலைக் கழிக்கும் ஆசைகாட்டல்களையும் ஏமாற்றங் களையும் அவன் எதிர்கொள்ள, எதிர்கொள்ள இவ்வுலகில் கிடைக்கக்கூடியவை எல்லாம் பலனற் றவை என்று உணர்ந்து கொள்கிறான்.

இந் நாடகம் பல்வேறு தளங்களில் புரிந்து கொள்ளப்படக்கூடியது. மனிதன் ஒரு குறியீடு. பல அரசியல் ஆசைகாட்டல்களுக்குள் இழக்கப்படும் ஒரு இனத்தையும் குறிக்கும் மனிதன். அன்றாட வாழ்வில் மனிதனை அழுத்தும் பல்வேறு விருப்புகள் மீதான ஈர்ப்புகள் ஏமாற்றமாகிப்போகும்போது கற்றுக் கொள்ளும் மனிதன். இலண்டன் நாடகப் பள்ளியைச் சேர்ந்த சந்தோஷ் ஆனந்தனின் நடிப்பு மனம் கொள்ளத்தக்கது.

மலைகள் வழிமறித்தால் :

கடந்த மூன்று வருடங்களாக தமிழ் அவைக் காற்றுக் கலைக்கழகத்தின் சார்பில் பாலேந்திரா, ஆனந்தராணி ஆகியோரால் நடத்தப்பட்டு வரும் நாடகப்பள்ளியைச் சேர்ந்த 25 சிறுவர்கள் நடித்த 'மலைகள் வழிமறித்தால்' இடம்பெற்றது. இது சீனப் பழங்கதை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. மாஓசேதுங் காலத்தில் தன்னம் பிக்கைக்கும் விடாமுயற்சிக்கும் எடுத்துக்காட்டாக



புதிய திசைகள்



அவரால் அடிக்கடி பேசப்பட்ட கதையை ஒரு இசை நாடகமாக ஆக்கியிருந்தனர். சிவசேகரம் அவர்களின் பாடல்களுக்கு ஆ. வேந்தனின் இசையமைப்பில் உயிர் கொடுத்துப் பாடினர் அனுபவம் மிக்க இசைக்கலைஞர்கள். சிறுவர்கள் வார்த்தைகளின் அர்த்தம் உணர்ந்து அது வெளிப்படும்படியாக நன்றாக நடித்தனர். ஆச்சியாக நடித்த சிந்து பசுபதியின் நடிப்பு குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது.

அவசரக்காரர்கள்:


அவுஸ்திரேலியாவில் பாரதி பள்ளியை நடத்தி வரும் மாவை நித்தியானந்தனின் நாடகப் பிரதியான 'அவசரக்காரர்கள்', அவசர புத்தியால் நட்பை இழக்கும் இரு வரின் கதை. அரங்கம் முழுவதும் சிரிப்பினால் அதிர்ந்தது.

காத்திருப்பு:

இடைவேளையைத் தொடர்ந்து ச. வாசுதேவன் எழுதிய 'காத்திருப்பு'. தாயகத்தில் தற்போது காணாமல் போவது அன்றாட நிகழ்வாகி விட்டது. வெள்ளை வான் ஆட்கடத்தல்களும் கொலைகளும் யார் எதற்காகச் செய்கிறார்கள் என்று தெரியாமல் நடந்து வருகிறது. பல்வேறு நாடுகளில் இந்தக் காணாமற் போவோர் பிரச்சினை இருந்தபோதும், தற்போது ஈழத்தில் இது உக்கிரமடைந்திருக்கின்றது. இருந்தும் இந்த நாடகம் நடக்கும் காலம் இந்திய இராணுவம் இலங்கையில் இருந்தபோது நடந்ததாகச் சொல்லப்படுகின்றது. உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட நாடகம். காணாமல் போன மகன் திரும்பவும் எப்போதாவது வருவான் என்று காத்திருக்கும் ஒரு தாயின் மனவேதனையைச் சொல்கிறது. தாயாக ஆனந்த ராணியும் தகப்பனாக மனோ மனுவேற் பிள்ளையும் மேடையில் அந்தந்தப் பாத்திரங்களாகவே வாழ்ந்தனர். பார்வையாளர்கள் அனைவரையும் உருக்கிய நாடகம் அது.

சர்ச்சை:

இறுதியாக ஒரு குறியீட்டு பரீட்சார்த்த குறுநாடகம் 'சர்ச்சை'.



ஒரு வார்த்தை மட்டுமே திரும்பத் திரும்ப பேசப்படும். இதில் பா. சத்தியேந்திரன், கணேசலிங்கம், வாசுதேவன், வேந்தன், சந்தோஷ், பிரசாந்த் ஆகியோர் நடித்தனர்.

அர்த்தமற்ற ஒரு முரண்பாடுகூட பூதாகரப்படுத்தப்படும்போது அழிவுக்கு இட்டுச் செல்கிறது என்பதை பல்வேறு தளங்களில் சொல்லும் காத்திரமான ஒரு படைப்பாக அமைந்திருந்தது.


மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, தீவிர நாடகங்களைத் தொடர்ந்தும் மேடையேற்றி வரும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்திற்கு தமிழ் நாடக வரலாற்றில் ஒரு தனியிடம் உண்டு.

வீ. ஆனந்தசங்கரி அவர்களுக்கு யுனெஸ்கோ விருது வழங்கல் வைபவம்

16.11.2006 — வியாழக்கிழமை

பிரான்ஸ்

இளஞ்சேய்




புகைப்படங்கள்: பிரதீபன்

அகிம்சையும் சகிப்புத்தன்மையையும் முன்னிலைப் படுத்தும் அகில உலகத் தலைவர்களுக்கு வழங்கப் படும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அதி உயர் சர்வ தேச யுனெஸ்கோ விருது தமிழர் விடுதலைக் கூட்ட ணித் தலைவரும், நீண்டகால அரசியல் வரலாற்றைக் கொண்டவருமான திரு வீ. ஆனந்தசங்கரி அவர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது வழங்கல் நிகழ்வு பாரிஸில் உள்ள யுனெஸ்கோ மண்டபத்தில் 16.11.2006 வியாழக்கிழமையன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆனந்தசங்கரி அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி பின்வருமாறு:

இன்று உலகெங்கணும் நிகழும் வன்முறைகள் பற்றியும் குறிப்பாக எனது சொந்த நாடான இலங்கை யில் நிகழும் வன்முறைகள் பற்றியும் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன்.

பொதுவாக எல்லா வன்முறைகளும் மனித உரிமை கள் மீறல், அநீதி, சகிப்புத்தன்மை அற்ற நிலை, பார பட்சம் காட்டப்படுதல் ஆகியவற்றையே அடிப்படை யாகக் கொண்டுள்ளன. ஒருவரின் உரிமைக்காக போராடுவதில் எவ்வளவு தான் நியாயங்கள் இருப்பினும் வன்முறையென்பது மேலும் வன்முறைக்கே வித்திடும் என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட ஓர் உண்மை யாகும். ஒரு முறை வன்முறை ஆரம்பிக்கப்பட்டால் அது வெறுப்பு, அவநம்பிக்கை என்பனவற்றை உருவாக்கி அது நீண்டதோர் போராட்டமாக மாறக்கூடியது. அதுமட்டுமன்றி வன்முறையாளர்களை மிகவும் பலம் பெற்றவர்களாகவும் மாற்றி விடுவதோடு அவர்கள் வழமைக்கு திரும்புவதென்பது இயலாததொன்றாகி விடும். அவர்கள் தங்கள் செயற்பாடுகளை முன்னெ டுத்துச் செல்வதற்காக ஆயுதக்கடத்தல், போதைப் பொருட்கள் நிதி சேகரிப்பு ஆகிய முயற்சிகளில் ஈடுபடுவர். இது ஒரு பெரும் தொழிலாகி இதனை நிறுத்துவதென்பது இயலாத ஒன்றாகிவிடும். இதுவே இன்று இலங்கையில் நடக்கிறது. ஒருபுறம் எம்போன்ற சில நடுநிலையாளர்கள் பொது மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் போராடிக் கொண்டிருக்கும் அதேநேரத்தில் இலங்கையிலுள்ள தமிழ்ச் சமுதாயத்தின் பெரும்பாலாரின் கருத்தைப் பிரதிபலிக்காத தமிழீழ விடுதலைப் புலிகள் என்று தம்மை கூறிக்கொள்ளும் ஆயுதக் குழுவொன்று தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ் மக்களை பிணைக் கைதிகளாக வைத்திருப்பதோடு மட்டுமன்றி தமது பயங்கரவாதத்தால் முழு நாட்டையுமே திகிலுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

இவர்கள் தமிழ் மக்களை விடுவிப்பதாக கூறிக் கொண்டு பெற்றோர்கள் ஏதும் செய்ய இயலாது இருக்கும் நிலையில் அவர் தம் பிள்ளைகளை வலுக்கட் டாயமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்துகின்றனர். இந்த அப்பாவிச் சிறுவர்கள் தீவிரவாதக் கோட்பாட்டா ளர்களால் மூளைச்சலவை செய்யப்பட்டு தற்கொலை குண்டுதாரிகளாகவும், பீரங்கிக்கு இரையாகவும் மாறு கின்றனர். அதேநேரத்தில் அவர்களின் குழந்தைகள் இவ்வாறு வலுக்கட்டாயமாக தற்கொலை குண்டுதாரி களாக மாற்றப்படாமல் வெளிநாடுகளில் பாதுகாப்பான வாழ்க்கை வாழ்கின்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய யூனியன், இந்தியா ஆகிய நாடுகளில் பயங்கரவாத இயக்கம் என தடைசெய்யப்பட்ட இந்த ஆயுதக் குழுவானது



பிராந்திய தேசிய மட்டங்களில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல தலைவர்களை குறிப்பாக முன்னாள் இந்தியப் பிரதமர், முன்னாள் இலங்கை ஜனாதிபதி, தமிழரான முன்னாள் இலங்கை வெளியுறவு அமைச்சர், பல நடுநிலையான சிங்கள, தமிழ் அரசியல் வாதிகள், புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள் என்போரை கொலை செய்துள்ளது. இந்த பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது.

இது தவிர எழுபதாயிரத்துக்கும் அதிகமான போராளிகளும், அப்பாவி பொது மக்களும் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்திற்கு இரையாகி உள்ளனர். விடுதலைப் புலிகளின் இனச் சுத்திகரிப்பின் காரணமாக முஸ்லீம் மக்கள் வடக்கிலிருந்து அமீதியான முறையில் விரட்டியடிக்கப்பட்டனர். சுனாமியின் பின்னரும் தமிழ் மக்களை விடுவிப்பதாகக் கூறிக்கொள்ளும் இவர்கள் சுனாமி நிவாரணத்தை பகிர்ந்தளிப்பதற்காக ஒரு இணைந்த அமைப்பு வேண்டுமென கூறி அதன் நிமித்தம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டிய உதவிகளை தாமே அபகரித்து தமது கட்டுப்பாட்டில் வாழும் மக்களுக்கு உரிய முறையில் நிவாரணம் சென்றடையாமலும் செய்தனர்.

ஏ-9 என அழைக்கப்படும் வட பகுதியை இணைக்கும் வீதியின் ஒரு பகுதியாலேயே யாழ் குடாநாட்டுக்கு பொருட்கள் எடுத்துச் செல்லப்



படும். அத்தனைப் பொருட்களுக்கும் கடுமையான வரி விதிக்கப்பட்டு வந்தமையால் உணவுப்பொருள், விவசாய சாதனங்கள் உட்பட சகல பொருட்களும் கூடுதலான விலைக்கே விற்கப்பட்டு வந்தன. இவ்வாறு சேர்க்கப்படும் பணம் புலிகள் தம்மை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டிய ஆயுதங்களை பெறவே உபயோகிக்கப்பட்டது.



2001ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் மிக அதிக விருப்புரிமை வாக்குகள் பெற்று மாவட்டத்தின் முதல் பிரதிநிதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட என்னை எனது சொந்த தேர்தல் தொகுதிக்கும் செல்ல முடியாது தடுத்து எனது உயிருக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தினர். அதன் பின்னர் விடுதலைப் புலிகள் வட பகுதியில் வாழும் மக்களுக்கு வாக்குரிமையை மறுத்த



தோடன்றி 2005 ல் நவம்பர் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடபகுதியைச் சேர்ந்த அனைத்து மக்களையும் வாக்களிக்கவிடாது செய்தனர். எனினும் நான் என் உள்ளம் ஏற்றுக் கொண்ட கருத்துக்களின்படி வாழ்வதிலிருந்து, அச்சம் என்னைத் தடுக்கும் வயதினை தாண்டிவிட்டேன் எனக் கொள்ளலாம்.

இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கும் ஏன் இந்த நாட்டிற்குமே இந்த அவலங்களை கொண்டு வந்த விடுதலைப் புலிகளின் அடக்கு முறைகளிலிருந்து இலங்கையிலுள்ள தமிழ் மக்களை மீட்டெடுக்க உதவும்படி சர்வதேச சமூகத்திடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே இந்த நாட்டு வருங்கால சந்ததியினருக்காக அமைதி, சமாதானம், அபிவிருத்தி ஆகிய விடயங்களையிட்டு நாம் மிகவும் தீவிரமாகவும் தாமதமின்றியும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். இதனை அடைவதற்கு இங்குள்ள யதார்த்த நிலைகளை பூரணமாக அறிந்திருக்க முடியாத சர்வதேச சமூகத்திடம் வெளிநாட்டிலுள்ள தமிழ் மக்களிடமும் நான் கேட்பது என்னவென்றால் வன்முறை வழிகளில் இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்ய விளையும் பயங்கரவாத அமைப்பிற்கு நிதி மற்றும் உதவிகளை செய்ய வேண்டாம் என்பதேயாகும். வட கிழக்கில் கடந்த 25 ஆண்டுகளாக மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் எனது கூற்றுக்கு சான்றாக அமையும். அவர்கள் அற்ப காரணங்களுக்காக பேச்சுவார்த்தைகளையும் சமரசங்களையும் ஒதுக்கி தள்ள விரும்புவார்கள். ஏனெனில் பேச்சுவார்த்தையின் பின் எடுக்கப்படும் இறுதித் தீர்வானது அவர்கள் இதுவரை காலமும் அடக்கு முறையின் பலனாக அனுபவித்து வந்த அதிகாரங்களையும் போதைவஸ்து, பயங்கரவாதம் மூலம் அவர்கள் பெற்று வந்த அதீதமான இலாபங்களையும் இல்லாது ஒழித்துவிடும். நிதி, அதிகாரம், கட்டுப்பாடு என அவர்கள் இதுவரை அனுபவித்து வந்த செல்வாக்குகள் அனைத்தையும் ஒரு சமரச தீர்வு இல்லாது ஒழித்து விடும். எனவேதான் வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்களையும், சர்வதேச சமூகத்தையும் இவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன்.

அதேநேரத்தில் இலங்கை அரசானது சிறுபான்மை மக்கள் ஏற்கக்கூடிய ஒரு சமஷ்டி அரசை முன்வைத்து அதிகாரப்பரவலாக்கலுக்கு வழிகோலும் தீர்மானத்தை விரைவில் முன் வைக்க வேண்டும். இதுவே இலங்கை மக்கள் அனைவருக்கும் நிலையான தீர்வை வழங்கக் கூடிய ஒன்றாகும்.

* * * * *

ஸ்ருட்காட் கருத்தரங்கு

11—12 நவம்பர் 2006 — சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை

ஸ்ருட்காட் (ஜேர்மனி)

இளஞ்சேய்

• • • • • • • • • • • • • • • • • • •

இலங்கையர் ஜனநாயக முன்னணி என்ற தமிழர் அமைப்பினால் 2006ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம், 12ம் திகதிகளில் ஜேர்மனியின் ஸ்ருட்காட் நகரத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

'இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும் புலம் பெயர்வாழ் தமிழ்பேசும் மக்களும்' என்ற தலைப்பில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில். இலங்கை, பிரான்ஸ், நோர்வே, சுவிஸ், இங்கிலாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளில் இருந்து பல மாற்றுக் கருத்தாளர்களும் மறுத்தோடிகளும் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைப் பரிமாறினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, வி.சிவலிங்கம் மற்றும் எஸ்.எம்.எம். பஷீர் உட்பட பல்வேறு ஜனநாயக சக்திகளுடன் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். மேற்படி கருத்தரங்குகள் போன்று பரவலாக புலம்பெயர் நாடுகளில் நடத்தப்படுதல் இன்றைய சூழலில் எமக்கு மிகவும் அத்தியாவசியமாகின்றது. இது ஒரு காத்திரமான நகர்வு என்று நாம் நம்பலாம்.

'இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும் புலம்பெயர்வாழ் தமிழ்பேசும் மக்களும்'

மகாஉத்தமன் நினைவு நிகழ்வு

05.11.06 — ஞாயிற்றுக்கிழமை

குரொய்டன் (ஐக்கிய இராச்சியம்)

இளவேந்தன்

தமிழ்த் தேசிய விடுதலையின் ஆயுதப் போராட்ட ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் புரட்சிகர சிந்தனை யாளருமான மாஉ, என்றழைக்கப்படும் மகாலிங்கம் மகாஉத்தமன் அவர்கள் 29.10.2006 அன்று இலங்கை யில் காலமானார்.

ஆரம்பக் கல்வியை யாழ். சென்யோன்ஸ் கல்லூ ரியில் பெற்றுக் கொண்ட மகாஉத்தமன் உயர்கல்விக் காக இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார். அங்கு அவர் சர்வதேச முற்போக்கு புரட்சிகர இயக்கங்களுடன் தொடர்பு களை ஏற்படுத்திக்கொண்டார். தன்னுடைய அனுபவங்களை ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு பங்களித்தார். எண்பதுகளின் இறுதிகளில் 'Journal of Eelam Studies' என்னும் சஞ்சிகையின் பிரதான ஆசிரி யராக இருந்தார். தத்துவ கோட்பாட்டுத் துறையிலும் போராட்டத்திற்குப் பெரும்பங்களிப்பை வழங்கினார். தமிழ்த் தேசியம் குறித்த கோட்பாட்டு விவாதங்களில் இவருடைய பங்கு காத்திரமாய் இருந்தது. தொண் ணூறுகளில் இங்கிலாந்தில் இருந்து வெளிவந்த உயிர்ப்பு சஞ்சிகையில் இவரின் பங்களிப்பு மகத்து வமானது.

எப்போதும் அமைப்பு உருவாக்கத்தில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். இயக்கங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக உடைந்து சிதறிக் கொண்டி ருந்த போதுகளிலும் இறுதிவரை நம்பிக்கை கொண்ட வராகச் செயற்பட்டார்.

இவருடைய நினைவாக 'தமிழ் மாணவர் பேரவை' நண்பர்களினால் ஐக்கிய ராச்சியத்தில் உள்ள குரொய்டன் என்னுமிடத்தில் உள்ள புனித சேவியர் தேவாலயத்தில் 05. 11. 2006 ஞாயிற்றுக்கிழமை அன்று ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவர் மாணவர் பேரவையின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

* * * * *

25 வது பெண்கள் சந்திப்பு

04.11.2006 — சனிக்கிழமை

ஸ்ருட்கார்ட் (ஜேர்மனி)

இளங்குயிலி

25 வது பெண்கள் சந்திப்பு 04.11. 2006 சனிக்கிழமை ஜேர்மனியிலுள்ள ஸ்ருட்கார்ட் நகரில் நடைபெற்றது. இச் சந்திப்பில் ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், இலண்டன், இலங்கை ஆகிய நாடுகளிலிருந்தும் பெண்கள் கலந்து கொண்டிருந்தனர். முக்கியமாக இலங்கையில் இருந்து சூரியா பெண்கள் அமைப்பைச் சேர்ந்த விஜய லக்ஷ்மியும் Future Peace அமைப்பைச் சேர்ந்த பத்மி லியனகே ஆகியோர் வருகை தந்திருந்தார்கள்.

மங்கை சந்திப்பை ஆரம்பித்து வைத்து உரை யாற்றினார். அதைத் தொடர்ந்து வழமையான சுய அறி முகம் இடம்பெற்றது. முதலில் பெண்கள் சந்திப் பின்வரலாறு பற்றி உமா பேசினார். பெண்கள் மீதான வன்முறைகளுக்கெதிராகப் பலத்த கண்டனங்களை தெரிவித்தது மட்டுமல்லாமல், அவற்றுக்கு எதிரான பல தீர்மானங்களையும் நிறைவேற்றி உரிய தரப்பினருக்கு இதுபற்றித் தெரிவித்தும் வருகின்றோம் என்றும் கூறினார். பெண்கள் தொடர்பான நிறைய விடயங்கள் பற்றி இந்தச் சந்திப்புகளில் கலந்துரையாடி இருக்கின் றோம் என்பது நிதர்சனமானது என்றும் குறிப்பிட்டார். இதுவரை 9 பெண்கள் சந்திப்பு மலர்களை எமது சொந்தச் செலவில் வெளியிட்டிருக்கிறோம் என்று தெரிவித்தார். கணிசமான பெண்களை எழுதுவதற்கும், துணிந்து நின்று கருத்துச் சொல்வதற்கும் இச் சந்திப்பு பக்கபலமாக அமைந்திருந்தது என்று கூறமுடியும் என்றும் சொன்னார்.

அதைத் தொடர்ந்து விஜயலக்ஷ்மி "யுத்தத்தில் பெண்கள், சிறுமிகளின் நிலை" பற்றி பேசினார். கைது கள், காணாமல் போதல், ஆட்கடத்தல், சுற்றி வளைப்புக்கள், இடம்பெயர்வுகள், ஆயுதப்பிரயோகங் கள். பாலியல் வல்லுறவுகள், உயிரிழப்புக்கள் போன் றன இடம்பெறுகின்றபோது ஏற்படும் பாதிப்புக்கு பல பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய

தாய் உள்ளது. இது இலங்கையின் ஒட்டுமொத்த சமூகத்தையுமே பாதிக்கின்றது.

அடுத்த நிகழ்வாக, பத்மி லியனகே "இனவொற்றுமையுடன் சமாதானம் நோக்கி ஒரு அனுபவப் பகிர்வு" என்ற தலைப்பில் பேசினார். எங்களுடைய அமைப்பினூடாக நாங்கள் சகல இனத்தவர்களுடனும் இணைந்து சமாதானத்திற்கான பணியில் ஈடுபட்டிருக்கிறோம். நாம் போராடுகின்றோம். இலங்கையில் இனவாதம் இன்று மேலோங்கியிருப்பதற்கு புத்தபிக்குகளும், ஜேவிபியும் தான் முக்கிய காரணமாக உள்ளனர் என்று கூறினார். மேலும், இலங்கையில் அரசகருமமொழியாக சிங்களமும் தமிழுமே உள்ளது. தமிழர்கள் சிங்கள மொழியையும் சிங்களவர்கள் தமிழ் மொழியையும் கற்றால் அவர்களுக்கான அடிப்படை பிரச்சினையை தாங்களே பேசி தீர்க்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் எனவும் சுட்டிக் காட்டினார். அங்குள்ள அன்றாட வாழ்வு யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

தொடர்ந்து ரஞ்சி, ஆழியாளின் 'துவிதம்', பெண்ணியாவின் 'என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்புவை', விஜயலக்ஷ்மியின் 'வானம் ஏன் மேலே போனது', செல்வியின் Stories from Tamil Women writing ஆகிய நூல்களை அறிமுகம் செய்தார்.

அடுத்து 'இலங்கைப் பெண்களின் எழுத்தும் தாண்ட முடியாத சிக்கல்களும்' என்ற தலைப்பின் கீழ் விஜயலக்ஷ்மியும் தில்லையும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இறுதி நிகழ்வாக, 'பெண்சிசுக் கொலை' பற்றி பரிமளா பேசினார். பெண்கள் சந்திப்பின் அடுத்த தொடர் பிரான்சில் நடைபெற முடிவாகியது. மேரி நன்றி தெரிவித்துப் பேசினார். இறுதியாக மூன்று குறும் படங்கள் திரையிடப்பட்டன.

25வது பெண்கள் சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்:

✸ இலங்கையில் பெண்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பற்ற நிலையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அரசு, மற்றும் சகல தரப்பினரையும் கோருகிறோம்.

✸ வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயுத இயக்கங்கள், யுத்தத்திற்காக சிறுவர், சிறுமியர்களைப் பிடித்துச் செல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

✸ இலங்கையில் சமாதானத்தை கொண்டுவர சகல மட்டங்களிலும் அழுத்தங்களை கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

✸ சமாதானப் பேச்சுவார்த்தைகளில், யுத்தத்தில் பெண்களின் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு, பெண் பிரதிநிதிகளையும் சேர்த்து கொள்ளும்படி கோருகிறோம்.

✸ இந்தியாவில் நகரச் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கைகளினால் மலம் அள்ளுவதைத் முற்றாகத் தடுக்கும்படி கோருகிறோம்.

✸ பெண் சிசுக்கொலைகளைத் தடுக்கும் நடவடிக்கைகளை எடுக்கும்படி இந்திய அரசிற்கு கோரிக்கை விடுகிக்கின்றோம்.

✸ பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் பெண்களைக் கொச்சைப்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்களை உபயோகிப்பதையும் பெண்களை இழிவு படுத்துவதையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம், எதிர்க்கின்றோம்.

✸ ✸ ✸ ✸ ✸

புலம்பெயர்ந்தோரும் சமாதானமும் கருத்தரங்கு

27—29.10.2006 — வெள்ளி, சனி, ஞாயிறு

பாட் பொல் (ஜேர்மனி)

இளஞ்சேய்

ஜேர்மனியின் தென் மாநிலங்களில் ஒன்று பாடன் வுற்றன்பெர்க். ஸ்ருட்கார்ட் என்ற பாரிய தொழில் நிறுவனங்கள் நிறைந்த பெரு நகரம் அங்கிருக்கிறது. அந்த இயந்திர சுறுசுறுப்பு இரைச்சல்களை விட்டு ஒதுங்கி சில குன்றுகளுக்கு அப்பால் இருக்கின்றது பாட் பொல் என்ற ஒரு குக்கிராமம். அங்கேதான் புரட்டஸ்தாந்து அக்கடமி கட்டி வைத்திருக் கின்றனர். இந்த அக்கடமி இருப்பதால் தான் அப்படி ஒரு கிராமம் இருப்பதாக வெளியுலகிற்குத் தெரிகிறது. "இலங்கையின் சமாதான ஒப்பந்தம்- இடம்பெயர்ந்தோர் எதிர்கொள்ளும் சவால்கள்" என்ற 3 நாட்கள் கருத்தரங்கு 2006 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ம் திகதி தொடக்கம் 29ம் திகதி வரை நடைபெற்றது. 'மோதல் தவிர்ப்பு, ஜனநாயகம் மற்றும் சிறுபான்மையினர் உரிமைக்கான சமூகம்', சுருக்கமாக கெகொடெம் என்கின்ற அமைப்பு, இடம்பெயர்ந்த இலங்கையரின் சர்வதேச வலைப்பின்னல் (INSD) மற்றும் ஸ்ருட்காட்ர்ட் இலங்கையர் சங்கம் ஆகியன இணைந்து இந்தக்

கருத்தரங்கினை ஒழுங்கு செய்திருந்தனர். ஐரோப்பாவின் பல நாடுகளில் இருந்தும் கலந்து கொள்வோருக்கிடையிலான தொடர்பாடல் வசதிகருதி ஆங்கில மொழியே கருத்தரங்கின் மைய மொழியாக இருந்த போதும், நேரடி தமிழ், சிங்கள மொழிபெயர்ப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கருத்தரங்கில் சிங்களத் திரைப்பட இயக்குநர் பிரசன்ன விதானகே, கிழக்கிலங்கை சூரியா பெண்கள் அமைப்பைச் சேர்ந்த விஜயலட்சுமி, சமாதான எதிர்காலம் என்கிற அமைப்பைச் சேர்ந்த பத்மி லியனகே, ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த சி. சிவகுருநாதன், மற்றும் பலர் இலங்கையில் இருந்து வந்து கலந்து கொண்டனர். சுதந்திரத்திற்குப் பின்னான இலங்கையில் அரசியல் வரலாறு, இன்றைய இலங்கை, இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சாத்தியமான முன்னெடுப்புக்கள், சுனாமி அனர்த்தத்தின் பின் மீள்நிர்மாணம், இனப்பிரச்சினைகளுக்கான சாத்தியமான தீர்வுகள் போன்ற தலைப்புக்களில் கருத்தாடல்கள் இடம் பெற்றன.

கருத்தரங்கு ஒழுங்கு, நிர்வாகம் போன்றவற்றில் நீண்டகால அனுபவம் மிக்க இந்த அக்கடமியில் இலங்கை பற்றிய கருத்தரங்கு கடந்த 2 வருடங்களாக நடைபெற்று வருகின்றது. இதன் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் ஆர்வமுள்ள இடம்பெயர்ந்த சமூகம் ஒன்றுகூடுவது மட்டுமல்ல சர்வதேச சமூகத்தை தீர்வைநோக்கிய ஆர்வத்திற்கு உட்படுத்துவதும் நடைபெறுவதற்கு இது போன்ற பல கருத்தரங்குகள் நடைபெற வேண்டும்.

முஸ்லிம் மக்களும் பொது இணக்கப்பாட்டிற்கான வேலைத்திட்டமும் கலந்துரையாடல்

01.10.2006 — ஞாயிற்றுக்கிழமை

றைஸிலிப் (இங்கிலாந்து)

இளவேந்தன்

2006ம்ஆண்டு ஒக்டோபர் 1ம் திகதி இலண்டனின் புறநகர்ப்பகுதியான றைஸிலிப்பில் 'முஸ்லிம் மக்களும் பொது இணக்கப்பாட்டிற்கான வேலைத்திட்டமும்' என்னும் தலையங்கத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு ராகவன் தலைமை தாங்கி நெறிப்படுத்தினார். இலங்கையில் இருந்து வருகை தந்திருந்த 'மூன்றாவது மனிதன்' சஞ்சிகை ஆசிரியர் பௌசர் இதில் சிறப்புப் பேச்சாளராக உரையாற்றினார்.

ராகவனின் தலைமையுரையுடன் ஆரம்பமாகிய இக் கலந்துரையாடலில் நாவலன், நிர்மலா, நீதிராஜா, நஸ்சாருதீன், உஸாகித், பாலா, போல், சிவலிங்கம், அசோக், அகிலன் ஆகியோர் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

தேசியவாதம் என்பதே குறுகிய நோக்கத்தைக் கொண்டதுதான் என்றும் அதற்கான முன்னெடுப்புகள் எப்போதும் மனித சமூகத்தை முன்நோக்கி நகர்த்தும் ஒரு தீர்வை அளிக்காது என்றும் அநேகமானவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

எப்படி இருப்பினும் தாங்கள் ஒடுக்கப்படுவதாக ஒரு இனம் அல்லது இனக் குழுமம் கருதுமிடத்து அதற்கான காரணங்களைப் புரிந்து கொள்வதற்கு ஏனைய சாரார் முயற்சிக்க வேண்டுமென்றும் நல்லிணக்கப்பாட்டுக்கான தீர்வுகளை முன்னெடுப்பதற்கான விடயங்கள் மீது கவனம் செலுத்துவது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புகலிட நிகழ்வுகளின் தொகுப்பு

தெருக்கூத்தன்



Art by Karuna

கைலாசம்

"...செல்லமாக ஓர் அடி வைத்துவிட்டு மீண்டும் பேய்த் தொடர் பார்க்க அமர்ந்தாள். அழகற்ற ஆண்பேய் உலவிக் கொண்டிருந்தது அங்கும் இங்கும், பெண்களின் ரத்தத்தை உறிஞ்ச. அலட்சியமாகப்பார்த்தாள் தொடரை.


கொஞ்சம் இளவயதுப் பேயாக இருக்கக்கூடாதா?

வழுக்கைத் தலையும் தொந்தியும் தொப்பையுமாய் இது என்ன பேய்?

பெண்பேயாக இருந்தால் மட்டும் அழகாய், இளம்வயதாய், மெல்லிய வெள்ளைப் புடவையுடன், உள்ளாடை தெரிய. கொலுசு குலுங்க நடந்து, பாட்டு வேறு பாடும் பெண்பேய்.

கைலாசத்திடமிருந்து ஓசையில்லை..."

- அம்பை -



வெளியிடுபவர்: ஆர். கிருஷ்ணமூர்த்தி,
பிளாட் எண் 7, ஹைப்ரீட் நகர், பாரதியார் சாலை, மேற்கு ஊரப்பாக்கம், பின்கோடு: 603 202